# குருவே சரணம் என்றும் நிறைவே தரணும் குரு பார்வையின் மகத்துவம்



உ

இராமாநந்தம் குருநாதா சரணம்
குருப்பிரம்மா குருவிஷ்னு குருதேவோ மகேஸ்வரா;
குருசாட்சாத் பரப்பிரம்மம் தஸ்மைம் குரவேநமஹ.




அவரவர் தமக்கும் உள்ள
ஆயுசும் தொழிலும் பொன்னும்
இவர்களின் வித்தை செல்வம்
எழில்மர ணங்கள் ஏழும்
தவமுடைய பிரம தேவன்
தனதுகைத் தொடங்கி முன்னஞ்
சிவனுடைய அருளி னாலே
கர்ப்பத்தில் நிச்ச யிப்பான்

(நீதிசாரம்)




ஓம் நம : சூர்யாய சோமாய
மங்களாய புதாய ச
குரு சுக்ர சனிப்யச்ச
இராஹவே கேதவே நம தத

அறிவு சார்ந்த வாசகர்களே

நமது இதழ்கள் உலகம் முழுவதும் உலா வருவதற்கென உங்கள் பேராதரவுடன் கடந்த 3.8.2015 அன்று புதிதாக வெப்சைட் தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது. இதில் எழுத்தாளர்களும் நமது விளம்பரதாரர்களும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டு வழங்கப்பட்டு உள்ளது. நீங்களும் இதில் பங்கு பெற்று பயன் அடைவதுடன் உங்கள் நல்லாதரவுடன் உங்கள் கருத்துக்களையும் எங்களுக்கு பதிவு செய்திட அன்புடன் வேண்டுகிறோம். இதில் மேலும் பல மாற்றங்களும் பல ஏற்றங்களுடன் எதிர்பாருங்கள்.

www.apsaraepublications.com

உலகில் உள்ள ஜீவராசிகள், மனித இனங்கள் அனைத்தையும் நவக்கிரகங்கள் தன் கட்டுப்பாட்டில் வைத்து உலக இயக்கம் ஒழுங்குற இயங்கி வருகின்றன. அதே சமயம் இந்த கிரகங்களை எல்லாம் குருவானவர் தன் கட்டுப்பாட்டில் வைத்து உள்ளார் என்பது ஜோதிட சித்தாந்தம் குரு பார்க்க கோடி பாவம் நிவர்த்தி என்பது சாஸ்திர சம்பிரதாயம். அனுபவ சித்தாந்தமும் அதுவே. குரு தன்தெசையில் நன்மையைச் செய்யாவிட்டாலும், குரு எந்த கிரகத்தைப பார்க்கிறாரோ அந்த கிரகத்தின் தெசையில் பல நன்மைகளைச் செய்கிறார். ஆனால் சுக்கிரனை குரு பார்த்தாலும் அல்லது சுக்கிரனுடன் குரு சம்மந்தப்பட்டு இருந்தாலும் தாம்பத்திய வாழ்க்கை சுகப்படாமல் கணவன் மனைவி உறவு நீடிப்பதில் கேள்விக்குறியாகி விடுகிறது. ஆண்ஜாதகத்தில் இந்த அமைப்பு அமையப் பெற்று இருந்தால் ஒரு தாரம் இருக்க மறுதாரம் அமைந்து விடுகிறது. அல்லது புதிய பெண் உறவு ஏற்பட்டு விடுகிறது.

பாபக் கிரகங்களாகிய சனி, இராகு — கேது இவர்களை ஜெனன காலத்தில் குரு பார்த்திருந்தால், அவர்கள் தெசை முற்பகுதியில் சுகப்படா விட்டாலும் பிற்பகுதியில் பிரபல யோகப் பலன்களைச் செய்கின்றனர். கிரகங்கள் நீச்சம் பெற்றோ அல்லது பகை பெற்று இருந்தாலும் பாதிப்பில்லை. குரு பார்வை ஒன்றே போதும் நல்ல பலன்களே நடைபெறும். கிரகங்கள் ஆட்சி உச்சம் பெற்று இருந்தால் மட்டும் போதாது. குரு பார்வை அவசியம் வேண்டும்.



பிரகஸ்பதியாகிய குரு நவகிரகங்களுக்கும் அதிபதி. குரு பார்வையால் ஆண் வர்க்கம் ஆயுள் பலம் அதிகம் பெறுகின்றனர். சனி ஆயுள் காரகன் என்பது உண்மை. அந்த ஆயுள் காரகனான சனியை ஜெனன காலத்தில் குரு பார்த்திருந்தால் இன்னும் தீர்க்காயுள், மற்ற எந்த கிரகங்களுக்கும்

குருவருள் ஜோதிடம்
ஜோதிடத் திறனாய்வு மாத இதழ்
செப்டம்பர் 2015
ஸ்ரீ குரு: 7 அருள்: 4

ஆசிரியர் குழுமம்
ஆசிரியர், வெளியிடுபவர்
சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜு
கௌரவ ஆசிரியர்
"ஜோதிட கலைமாமணி"
டாக்டர் முருகடிமை துரைராஜ்
சிறப்பு ஆசிரியர்கள்
பண்டிட். காழியூர் நாராயணன்
டாக்டர் ஏ. சரவணன்
கௌரவ ஆலோசகர்
ஆத்தூர். மு. மாதேஸ்வரன்
★ ★ ★
துணை ஆசிரியர்கள்
ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. ஜெகதீஸ்வரன்
கும்பகோணம் எஸ். அன்பழகன்
கொடிக்கம்பம் எஸ்.பி. சோமசுந்தரம்
ஐய்யம்பாளையம் இரா. அருள்வேல்
சற்குருதாசன் கே. இராமமூர்த்தி
★ ★ ★ ★
ஒருங்கிணைப்பாளர்
திருவருள் பா. சுசீந்திரநாத்
தலைமை நிர்வாகி
எம்.எஸ். கிருஷ்ணா

ஜோதிடக் கட்டுரைகளின் கருத்துக்கள் அனைத்தும், கட்டுரையாளர்களின் கருத்து களாகும். கட்டுரைகளைத் திருத்த, சுருக்க, தள்ளுபடி செய்ய ஆசிரியர் குழுவிற்கு முழு உரிமை உண்டு.

அனைத்துத் தொடர்புகளுக்கும்
அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்
நெ.18–67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014.
www.apsaraepublications.com
Ph. : 044-2811 6770
E-mail : apsarapublications@gmail.com

இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு குருவருள் ஜோதிடம் நிர்வாகம் பொறுப்பல்ல.

Owned - Published by C. Raju at 18, (New No.67), P.V. Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai-600 014. a nd Printed by Mrs. R. Radha at Apsara Art Printers, 18, (New No.67), P.V.Koil Ist Street, Pudupet, Royapettah, Chennai-14. Editor : Sidhar Adimai Sri C. Raaju

அட்டையில்

ஸ்ரீ பாலகிருஷ்ணன்

ஆயுளை நீடிக்கக் கூடிய வலிமை கிடையாது.

குரு 8ஆம் இடத்தில் இருந்தாலும் அல்லது 8ஆம் இடத்தைப் பார்த்து இருந்தாலும் அல்லது சந்திரனைப் பார்த்தாலும் அல்லது சந்திரனுடன சம்மந்தப்பட்டு இருந்தாலும் அல்லது இலக்கினத்தைப் பார்த்து இருந்தாலும் தீர்க்காயுள். இப்படி எல்லாம் அமையப் பெறாத ஜாதகர்களுக்கு அற்ப ஆயுளாக அமைந்து விடுகிறது. அசுர குருவாகிய சுக்கிரனுக்கு இந்த வலிமையுண்டு, ஆனால் குருவுக்கு முழு பலம் என்றால் சுக்கிரனுக்கோ முக்கால் பங்கு தான் பலமுண்டு. சுக்கிரனுக்கு முழுமையான சுப பலம் இல்லை. ஒரு மனிதன் பிரபல யோகத்தை வாழ்க்கையில் அடைய வேண்டுமென்றால் ஒன்று இராகு, அல்லது சனி, அல்லது செவ்வாய், அல்லது கேது இவர்கள் தெசையில் தான் அடைய முடியும். ஆனால் ஜெனன காலத்தில் இவர்களை குரு பார்த்திருக்க வேண்டும். அல்லது மேற்கண்ட பாப கிரகங்களுக்கு ஸ்தான பலமாவது இருக்க வேண்டும்.

சுக்கிரனை அவ்வளவாக ஏன் எடுத்துக் கொள்வதில்லை என்றால் சுக்கிரனுக்கு இரண்டு ஆதிபத்தியங்கள் இருப்பதால் ஒரு ஆதிபத்தியத்தில் நன்மையைச் செய்தால், மறு ஆதிபத்தியத்தில் கெடுதலைக் கொடுத்து விடுகிறது. அதிலும் மிதுன இலக்கினத்திற்கு அவன் பஞ்சம விரையாதிபத்தியம் நடைபெறும் காலங்களில் சொத்து சுதந்திரங்களை இழந்து ஓட்டாண்டியாக்கி விடுகிறது. ஆயுள் பாகமும் முடிவடைந்து விடுகிறது. இதேபோல் விருச்சிக இலக்கினத்திற்கும் சுக்கிரன் விரையாதிபதியாக இருப்பதால் மேலே சொன்ன நிலை தான் இதற்கும் பொருந்தும், சூரியனும் அவ்வளவாக நன்மையான பலன்களை நல்குவதில்லை. சூரியன் ஜெனன காலத்தில் இலக்கினத்திற்கு 3,6,11ஆம் இடங்களில் சூரியன் தெசையில் பல நன்மைகளை எதிர்பார்க்கலாம். இப்படி அமையப் பெற்றவர்கள் தாய் தந்தையரைக் கடைசி வரையில் காப்பாற்றுகின்றனர். சூரியன் மற்ற எந்த இடங்களில் இருந்தாலும் திருமணம் ஆன பிறகு தன் மனைவி, தன் மக்களைத் தான் காப்பாற்றுவதில் அக்கறையோடு ஈடுபடுவார்களேயன்றி தாய் தந்தையரை கவனித்துக் கொள்ள மாட்டார்கள். சூரியனை ஜெனன காலத்தில் குரு பார்த்து இருந்தால் கெட்ட பலன்கள் ஓரளவு குறைந்து காணப்படும்.

செவ்வாயை ஜெனன காலத்தில் குரு பார்த்து இருந்தால் உத்தியோகத்துறையில் நல்லதொரு முன்னேற்றம் ஏற்படும். செவ்வாய் பூமி காரகனானதால் உத்தியோகத்தில் இருந்து தன் சொந்த முயற்சியினாலும் சலியாத உழைப்பினாலும் பெரும் பணம் சம்பாதித்து சொந்த வீடு வாசல், வண்டி வாகன வசதிகளுடன் வாழ்க்கையை நடத்துவார்கள். செவ்வாயை குரு பார்த்து இருந்தால் பூமி வீடு, நிலம் இவைகளுக்கு பங்கம் ஏற்படுவதில்லை. ஆனால் செவ்வாயுடன் சூரியன் சம்மந்தப்பட்டு இருந்தால் மேலே சொல்லப்பட்ட பலன்கள் எல்லாம் தலைகீழாகி விடுகிறது.

இதேபோல் சனியை குரு பார்த்திருந்தால் தொழில் முறையில் அதிகம் சம்பாதிக்கின்றனர். அதிலும் சனி தெசை சுக்கிர புத்தியில் பெரும் பணம் சம்பாதிக்கின்றனர். சிலருக்கு

சனி தெசை சக்கிர புத்தியில் நன்மையைச் செய்யாதிருக்கலாம். ஏனெனில் சனிக்கு சுக்கிரன் 8ஆம் இடத்தில் இருந்தால் சஷ்டாஷ்டமாகி விடுகிறது. இப்படிப்பட்டவர்களுக்கு சனி தெசை இராகு புத்தி பிற்பகுதியிலும், குரு புத்தியிலும் பிரபலமான யோகத்தைக் கொடுக்கிறது. சனியை குரு பார்த்த ஜாதகர் எந்த முறையில், எந்த தொழில் செய்து பணம் சம்பாதிப்பார்கள் என்ற நிலையை வரையறுத்துக் கூறிட முடியாது. எப்படியோ எந்த விதத் தொழிலிலோ சம்பாதித்து விடுகின்றனர். சனிக்கு இரும்பு, எண்ணெய், கருமையான பொருள்கள் தான் ஏற்றவை என்று பொதுவாகக் கூறுவார்கள். இதுபோன்ற அமைப்பைப் பெற்ற பலர் மேலே கூறப்பட்ட தொழிலைச் செய்யாமல், வேறு தொழிலைச் செய்து இலட்சக் கணக்கிலும் கோடிக்ககணக்கிலும் சம்பாதித்து உள்ளதைக் கண்கூடாகக் காணமுடியும்.

எந்த ஒரு ஜாதகருக்கும் இலக்கினப்படியோ, அல்லது நடைபெறும், தெசையின்படியோ தொழில் அமைவதில்லை. ஜாதகத்தில் கிரகங்கள் அமையப் பெற்றபடி தான் தொழில் அமைகிறது. யோக திசை நடைபெறும் காலங்களில் அவர்கள் செய்யும் தொழில் மூலமாகவே பெருமளவில் சம்பாதிக்கின்றனர். அல்லது புதிதாக ஏதாவது ஒரு தொழிலைத் தொடங்கி அதன் மூலமாகவும் பெரும் பணம் சம்பாதிக்கின்றனர். அதனால் ஏற்றத்தைக் கொடுத்து விடும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு இது எப்படி பொருந்தும் என்ற சந்தேகம் ஏற்படலாம். ஒருவருக்கு யோக திசையானது ஆரம்பமானவுடன் உத்தியோகத்தில் இடமாற்றம், உயர்பதவி என வருவாய் உள்ள துறைக்கு மாற்றம் ஏற்படும். அதன் மூலமாக அவர்கள் அதிக அளவில் சம்பாதிக்கும் வாய்ப்பு தானாகவே தேடி வந்துவிடும். கொடுக்கிற கிரகம் எந்த விதத்திலாவது கொடுத்து உயர்த்தி விடும் உன்னத நிலையைப் பெற முடிகிறது. குரு பார்வையின் மகத்துவம் கோடிட்டு காட்டிடும் அவர் அருட்கடாட்சம். குரு பார்க்க கோடி பாவம் நிவர்த்தி, என்றும் கோலாச்சிடும் அவர் அருளாட்சி.

குருவே சரணம்! என்றும் நிறைவே தரணும்.


சித்தர் அடிமை **ஸ்ரீ சி.இராஜு**

**Cell : 97104 21880**





# வெள்ளை தழும்புகள்

எமது சிகிச்சை ஆரம்பித்த 20 மணி நேரத்தில் தழும்பின் நிறம் மாறத் தொடங்கி தோலின் அசல் நிறத்தை அடைந்து விடுகிறது. ஆயிரக்கணக்கானோர் பயனடைந்துள்ளனர். நீங்களும் நோயின் முழு விவரத்தையும் எழுதி ஒரு முறை அவசியம் பரிச்சித்து பார்க்கவும். மருந்து விலை ரூ.510/- பெற விரும்புவோர் உடன் நேரில் வரவும் அல்லது அஞ்சல் மூலம் தொடர்பு கொள்ளவும்.

# ரகசிய நோய் மருந்து

எமது மருந்து உபயோகித்தால் நித்திரையில் ஸ்கலிதம், சிறு நீர், மலம் கழிப்பதற்கு முன், பின் சக்தி வீணாதல், சிறுநீர் சம்பந்த நோய், சீக்கிர ஸ்கலனம், உயிர் அணு குறை, கனோரிய ஸிபிலிஸ் போன்ற நோய் அடியோடு அழிக்கப்பட்டு நிரந்தரமாக குணமாகிவிடும். உடலில் ஒப்பற்ற சக்தி ஓட்டம் பெற்று பாலுணர்ச்சியில் முன்னேற்றம் காணப்படும். ஆயிரக்கணக்கானோர் பயனடைந்ததாகும். பெற விரும்புவோர் நோய் விவரம் வயதுடன் எழுதவும்.

**மருந்து ஒரு கோர்ஸ் விலை ரூ. 625/—** **முழு கோர்ஸ் ரூ. 900/—**

**ஆண்மை குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரம் இலவசம் - புத்தம் புதிய கண்டுபிடிப்பு**

திருமணத்திற்கு முன் அல்லது பின் ஏற்பட்ட ஆண்குறி தளர்ச்சி, நரம்பு வீரியமின்மை அல்லது வளர்ச்சியின்மை, மெலிவு, வளைவு, முதலான குறைபாடுகள் இருந்தால் எமது புத்தம் புதிய கண்டுபிடிப்பில் உருவான ஆண்குறி குறைபாட்டை போக்கும் அற்புத இயந்திரத்தின் உபயோகத்தால் எப்பேர்பட்ட எவ்வயதுடையோரின் ஆண்குறி குறைபாடும் நிச்சயம் நிரந்தரமாக குணமடைந்துவிடும். இந்த இயந்திரம் ஒரு மெசின் போன்றதாகும். இதை உபயோகிப்பது மிக மிக எளிதாகும். இதன் உபயோகத்தால் 100% பயன் கிட்டுவது உறுதியாகும். விளம்பரத்திற்காக இந்த இயந்திரம் இலவசம். இன்றே அஞ்சல் மூலமோ அல்லது நேரிலோ தொடர்பு கொண்டு இயந்திரம் பெற்று பயனடைவீர். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

**VAIDYAR N.RAMESH NAIDU**
**PAKKAM DHARNAMPET-GUDIYATHAM, (VELLORE) 632601.**
**CELL-9865415652, 9994486669**

# எதிர்பார்த்த பணம் எப்போது கைக்கு கிடைக்கும்?

# (K.P.யில் ஓர் ஆய்வு)




ஜோதிஷ ஞான சிரோன்மணி
"புஷ்கராம்ஸம்"
**கடகம் இராமசாமி**
செல் : 94431 67046


கிருஷ்ண மூர்த்தி பத்ததி முறையில் 1லிருந்து 249க்குள் கொடுக்கப்பட்டுள்ள எண்ணிற்கான விடையை எந்த இடத்தில் ஆராய்கிறோமோ அந்த இடத்திற்குரிய அட்சராம்சம், ரேகாம்சத்தையே கணக்கில் கொண்டு கணிதம் செய்து கிரகம் பாவநிலைகளை வரைய வேண்டும். இதற்கு 2,6,11 ஆகிய வீடுகள் மிக முக்கியமாகும்.

கேள்வி எழுப்பிய நாள்: 16.11.1985 நேரம்: காலை 8.57 இடம் : இலங்கை. சந்திரன் ஒருவரது மனோநிலையைப் பிரதிபலிக்கும். கேள்வி எழுப்பிய காலத்தில் சந்திரன், பூராடம் நட்சத்திரலுள்ளது. அதிபதி சுக்கிரன் 6ஆம் பாவத்தில் உள்ளது. முதல் பாவத்திற்கும், சுக்கிரனே அதிபதி ஆதலால் கேள்வியின் தன்மை உண்மையானதும், சரியானதும் ஆகும்.

மற்றொரு வகையில் எண்ணங்கள் அபிலாஷைகளைக் குறிக்கும் வீடு இலாபஸ்தானமாகும் (11ஆம் வீடு) 11ஆம் வீட்டு நட்சத்திரம் (மீனம்) உத்திரட்டாதி, உபநட்சத்திரம், சுக்கிரன், குருஜி கிருஷ்ணமூர்த்தி ஆய்வின்படி 11ஆம் பாவம் 2,6,11 வீடுகளுடன் தொடர்பு கொண்டால் எதிர்பார்த்த பணம் கைக்கு கிட்டும் என்பது ஊர்ஜிதமாகும். இங்கு 11ஆம் பாவம் 1,6 வீடுகளோடு தொடர்பு கொள்வதால் காரியம் நடக்கும்.

### பணம் எப்போது கைக்கு கிடைக்கும்?

இதனை 2,6,11ஆம் பாவத்திலுள்ள கிரகம் (2) பாவங்களில் அமர்ந்த கிரக நட்சத்திரத்தில் உள்ள கிரகம் (3) பாவ அதிபதி (2,6,11) நட்சத்திரத்தில் நின்ற கிரகம் (4) பாவ அதிபதி கிரகம், இவர்களை கொண்டு அறிய வேண்டும்.

2ஆம் பாவத்தில் எந்த கிரகமும் இல்லை. 2ஆம் பாவ அதிபதி புதன். தனது சொந்த நட்சத்திரமான கேட்டையில் புதன் உள்ளது. வேறு எந்த கிரகமும் புதன் சாரத்தில் இல்லை.

6ஆம் பாவத்தில் சுக்கிரன், கேது, சூரியன், சனி உள்ளது. இராகுவும், சந்திரனும் சுக்கிரன் சாரத்தில் உள்ளது.

11ஆம் பாவ அதிபதி குருவாகும். சூரியன் விசாககம் நட்சத்திரத்தில் (குரு) உள்ளது.

எனவே 2,6,11ஆம் வீடுகள் குறிகாட்டும் கிரகங்கள் 1.புதன், 2.சுக்கிரன், 3.கேது, 4. இராகு, 5.சுக்கிரன், 6.குரு, 7.சூரியன் ஆகும்.

| | | | |
|---|---|---|---|
| XI 9.10 | XII 13.10<br>ராகு 14.42 | ல 13.53 | II 11.10 |
| X 7.10 | எண் : 32<br>8.57 AM<br>16-11,1985 | | III 8.10 |
| குரு 16.35<br>IX 8.10 | | | IV 7.10 |
| சந் 19.22<br>VIII 11.10 | புத 20.58<br>VII 13.53<br>சனி 06.21<br>சூரி 00.10 | சுக் 14.37<br>கேது 14.42<br>VI 13.10 | V 9.10<br>செவ் 18.40 |

### கேள்வி கேட்ட நேரத்தில் நின்ற ஆளுங்கிரகங்கள்

**தின அதிபதி – சனி**
**இராசி அதிபதி – குரு**
**நட்சத்திர அதிபதி – சுக்கிரன்**
**லக்கினாதிபதி – குரு**
**இலக்கின நட்சத்திர அதிபதி – கேது**

மேலே கண்ட குறி காட்டிகளுக்கும், ஆளுங்கிரகத்திற்கும் பொதுவாக உள்ள கிரகம், சனி, குரு, சுக்கிரன், கேது ஆகும்.

### காரியம் நிறைவேறும் காலம் அறிய

1.சந்திரன் மேற்கண்ட குறிகாட்டிகளின் சென்சிட்டிவ் பாயிண்ட்ஸ்ல் உலாவ வேண்டும்.

சந்திரன் மகரத்தில் 17.11.85 அன்று நுழைகிறது குறிகாட்டியின் நட்சத்திரம் மகரத்தில் இல்லை. சந்திரன் கும்பத்தில் சனி வீட்டில் குரு நட்சத்திரத்தில் உலாவரும் போது, தனுசு இலக்கினம் குரு வீடு, இலக்கினம் 22 டிகிரி பூராடம் (சுக்கிரன் நட்சத்திரம்) உதய காலத்தில் காலை 9.30 மணிக்கு (19.11.85) ஜாதகர் கைக்கு பணம் (செக்காக) வந்து சேர்ந்தது.

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போல பழக பழக கிருஷ்ணமூர்த்தி பத்ததி சுலபமாகிவிடும். ■

உ
மகா குரு சரணம்

# மகிழ்வித்து மகிழ் தெய்வீக மையம்

( உங்கள் தனிப்பட்ட எந்த ஒரு பிரச்சனைகளுக்கும் முழுமையான தீர்வு உண்டு )

மகிழ்வித்து மகிழ்
Web : mahilvithumahil.com

No.7, லைட் ஹவுஸ் காம்ப்ளக்ஸ்,
லிட்டில் பிளவர் ஸ்கூல் எதிரில்,
4 ரோடு, சேலம் – 636 009.

No. 3-A, சன்னிதானம்,
P. 54 விஷாகா அபார்ட்மெண்ட்,
6th- அவன்யூ, அண்ணா நகர், சென்னை–40.

**Cell : 98427-10545, 93677-10545, பெங்களூர் : 90350-10545**

சொர்ணாகர்சன சித்தர், பாம்பாட்டி சித்தர், போகர் வழி நடத்தும் பிரபஞ்ச சித்தர் குருஜி ஐயா, **S. ராஜகுமார்**

**"அரிது அரிது ஜோதிடராய் ஆவது அரிது - அதனிலும் அறிது நல்ல குரு அமைவது அரிது"**
**"வாருங்கள் குரு-சிஷ்யர் உன்னத பந்தந்திற்கு"**

## ஸ்ரீ நருத்ரா யட்சினி தேவதை உபாசனை ( வாக்கு கூற )

இக்கலையை திரிகால சக்தியை முற்றிலும் உணர்ந்த ஞானிகள், யோகிகள், மகான்கள் போன்றவர்கள் கிரகித்து வைத்திருக்கும் அபூர்வ சக்தி யட்சினி சக்தி. அப்படிப்பட்ட யட்சினி சக்தியானது பிரபஞ்ச சித்தரின் சித்தியாலும், சூட்சும ப்ரயோக முறைகளாலும் சைவ முறை பூஜை மேற்கொண்டு இந்த ஸ்ரீ நருத்ரா யட்சினி சக்தியை பெற்றுக் கொள்ள முடியும். பல ஜோதிடர்கள், நாம் சென்று உட்கார்ந்த உடன் எதற்காக வந்திருக்கின்றோம் என மிக துல்லியமாக கூறுவது நமக்கு ஆச்சர்யமாக இருக்கும். நமக்கு ஏற்படும் எதிர்கால நிகழ்வுகளை நாமே அறிந்து கொள்ளவும் உங்களால் முடியும். நடக்க போவதை முன்கூட்டியே அறியவும், ஒருவர் செய்திருக்கும் மாந்ரீக கோளாறுகளை நாமே அறியவும் பயன்படும் ஒரு அரிய கலை. பொதுவாக இச்சக்தியை வாக்கு கூறுவதற்கும், ஜோதிடர்கள் ஜோதிட துறைக்கு வரவேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள். ஆண்கள் மற்றும் பெண்கள் கற்றுக் கொள்ளக்கூடிய ஒரு உன்னதமான கலை. எந்தவித பயமும் இல்லாமல், குடும்பத்தில் இருந்து கொண்டு கற்றிடும் ஒரு அபூர்வ கலை ஆகும். இதற்கு எந்தவித கட்டுப்பாடுகளும் இல்லை. இறை சக்தியை உணர வேண்டும் என்ற ஆர்வம் இருந்தால் போதும்.

வாருங்கள், வித்தியாசமான அனுபவத்தை தீட்சையில் பெற்றிட, அபூர்வமான சக்தியை நீங்கள் பெற்றிட...

இன்னும் என்ன யோசனை? வாழ்வில் முன்னேறுவதற்கு?

பல ஜோதிடர்களை மாந்திரீகர்களை உருவாக்கிய பயிற்சி

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : 19.09.2015 சனிக்கிழமை |
| இடம் | : சேலம். |
| நேரம் | : காலை 9.30 மணி முதல் |
| சேவைக் கட்டணம் | : ரூ. 7700/- |

இதுவரை யாரும் அறிந்திடாத...

## சூட்சும உயர் சக்திகள்

ஒரு குறிப்பிட்ட வம்சாவளியில் இரகசியமாக கையாண்டு வந்த, உலகின் அதி சூட்சும இரகசியங்கள் தற்பொழுது பயிற்சி வடிவில்...

இக்கலையை தாங்கள் கற்பதன் மூலம் உங்களை கண்ட எதிரிகளும் விலகி ஓடுவர். வெளிநாடு செல்ல முயற்சி செய்தும் பலமுறை தோல்வி கண்டவர்கள், வெளிநாடு செல்லும் கனவை நனவாக்கும் பயிற்சி முறை. வாழ்வில் எல்லாம் இருந்தும் மன அமைதி இல்லையா? அதற்கு முற்றுப்புள்ளி வைக்கவும், பணத்தினால் வாழ்வில் ஏற்படும் பலவித இன்னல்களை போக்கி, இழந்த பொருட்களை மீண்டும் பெறுவதற்கும், வாழ்வில் பல சறுக்கல்களை கண்ட நீங்கள் மற்றவர்கள் முன் தலைநிமிர்ந்து நின்றிடவும், ஜாதகத்தில் ஏற்படும் சகல தோஷங்களை பரிகாரம் இல்லாமல் உயர் சக்திகள் மூலம் தீர்த்திடவும், படிப்பில் மந்தமான நிலை, ஞாபக சக்தி குறைவான நிலை, தேர்வில் தோல்வி மேல் தோல்வி என இருப்பவர்களை வெற்றி படிக்கட்டில் ஏற்றிவிடும் ஒரு கலை. திருமண தடை விலகி ஓடிடும். மாந்ரீகத்தில் ஏற்பட்ட பாதிப்புகள், வாஸ்து கோளாறினால் ஏற்பட்ட பாதிப்புகள், இப்படி நீங்கள் வாழ்வில் முன்னேற எது தடையாக உள்ளதோ அதனை தவிடுபொடியாக்கி வாழ்வில் உயர இப்பயிற்சி வழிவகுக்கும்.

இனிப்பு என்றால் சுவை தெரியாது, சுவைத்து பார்த்தால் மட்டுமே சுவை தெரியும். பார்த்துக்கொண்டே இருந்தால் பலன் தெரியாது. கற்றுக் கொள்ளுங்கள். பிறகு நீங்களே பரிகாரம் சொல்வீர்கள் மற்றவர்களுக்கு.

வாருங்கள்...
இன்னும் நிறைய கற்பதற்கு

ஆண்கள், பெண்கள் கற்றிடும் சைவ முறை பூஜை

| | |
|---|---|
| பயிற்சி நாள் | : 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை |
| இடம் | : சேலம். |
| நேரம் | : காலை 9.30 மணி முதல் |
| சேவைக் கட்டணம் | : ரூ. 5700/- |

Card Accepted
MasterCard
VISA

**இக்கலையை கற்க பிராப்தம் உள்ளவர்களுக்கே இது கண்ணில்படும்.**

உங்கள் பொன்னான நேரத்தை செலவு செய்து தேவையில்லாத கேள்விகளை கேட்காதீர்கள். வாழ்வில் முன்னேற ஆர்வமுள்ளவர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளவும்.

சென்னையில் பயிற்சி : நாள் : 16.09.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
கோவையில் பயிற்சி : நாள் : 23.09.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி
பெங்களூரில் பயிற்சி : நாள் : 30.09.2015 புதன்கிழமை, நேரம் : காலை 9.30 மணி

தனிப்பட்ட முறையில் VIP களுக்கு பயிற்சி அளிக்கப்படும். முன் அனுமதி பெற்று கற்கலாம்.

தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும் பிரபஞ்ச சித்தரை முன் அனுமதியோடு சந்திக்கலாம்.

பிரதி மாதம் சென்னை : 5, 15, 25. பெங்களூர் : 16, மலேசியா, சிங்கப்பூர் (Appointment Only)

வாருங்கள்... வித்தியாசமான சக்தியை உணர்ந்து பாருங்கள்... நீங்களே பிரமிப்பீர்கள்...
நல்லதிற்கு மட்டும் வாருங்கள், வாழ்வில் அனைத்தும் நல்லதாக மாறுவதை உணர்வீர்கள்
தோல்விக்கு சவால் விடு, முழ்ந்தால் என்னை தோற்கடி என்று...! - குருஜி ஐயா.

# சந்திரன் - இராகு இணைவு தரும் இராஜயோகம்



ஜோதிட கலாநிதி
**எஸ்.விஜயநரசிம்மன்** எம்.எஸ்ஸி
**அப்ளைடு அஸ்ட்ராலஜி**
**Cell: 94888 62923 / 97891 01742**

சந்திரன் — இராகு இணைவு சந்திர சண்டாள யோகம் எனப்படுகிறது. இது அஞ்சக் கூடிய இணைவு அல்ல. பல ஜாதகங்களை அலசியபோது இந்த இணைவு அனேகரை பிரதமராகவும், ஜனாதிபதியாகவும், அரசியல்வாதியாகவும், சினிமா ஹீரோக்களையும், தத்துவவாதிகளையும் உருவாக்கி உள்ளதைக் காணலாம். சுக்கிரன் — குரு இணைவு கூட அளிக்காத யோகத்தை அளிக்கவல்லது இந்த இணைவு.

ஆந்திரா, கர்நாடகா, கேரளா ஆகிய பகுதிகளின் பண்டைய இலக்கியங்களில் இராகு கடகத்துக்கும், சிம்மத்துக்குமான காரகராகக் கருதப்படுகிறார். இராகுவுக்கு சந்திரன் முதல் தர எதிரி ஆயினும், இவர்களின் இணைவு மிக சக்தி வாய்ந்தது. சந்திரனை வெல்லும் இராகு சக்தி வாய்ந்தவராகி யோகம் தருகிறார். மனசாகரியில் சுபரோடு கேந்திரத்தில் இணையும் இராகு மிகப் பெரிய இராஜயோகத்தை அளிப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



இராகு ஒரு மிகப் பெரிய சக்தி மிக்க, தந்திரக்கார கிரகம் ஆகும். அது விபத்து அல்லது திடீர் பிரச்சனைகளை ஏற்படுத்தி ஒருவரின் சூழ்நிலைகளை திடீரென மாற்றிவிடக் கூடிய பலம் மிக்கது. ஓர் ஏழையை திடீர் பணக்காரர் ஆக்குவதும், பணக்காரனை ஒரு நொடியில் ஏழை ஆக்கிவிடுவதும் அதற்குக் கைவந்த கலை ஆகும். திடீர் வடிவ மாற்றங்களையும் தரவல்லது.

மறுபுறம், சந்திரன் மனது, மனஅமைப்பு, எண்ண ஓட்டம், தாய், பூமி, சொத்து, சந்தோஷம், வீடு ஆகியவற்றிற்குக் காரகம் பெறுகிறது. எனவே, சந்திரன் இணைவு பெறும் போது ஜாதகரை மிகவும் உணர்ச்சி வசப்படக் கூடியவராகவும், மிக்க எச்சரிக்கை உடையவராகவும், அறிவு சார்ந்த முன்னேற்றம் உடையவராகவும், பெரிய தூதுவராகவும், சிறந்த தத்துவவாதியாகவும், மிகச் சிறந்த சிந்தனையாளராகவும், தந்திரம்மிக்க அரசியல்வாதியாகவும் ஆக்கிவிடுகிறது. எந்த வழியிலேனும், ஜாதகர் ஓர் அசைக்க முடியாதவராகவும், மற்றவர்களின் குணத்தையும், பலவீனத்தையும் கண்டு கொள்ளும் தனது சுய அனுபவத்தின் மூலமாக தன் நிலையைச் சீராக நிலை நாட்டிக் கொள்கிறார்.

சில சமயங்களில் அடிக்கடி அவர் தன் வாழ்க்கையில் எதிரிகளால் தொல்லை அடைதல், குழப்பமடைதல் மற்றும் அபாயங்களைச் சந்தித்தல் போன்ற மிகப் பெரிய கஷ்டங்களை சந்திக்க நேரும், இந்த இணைவுள்ள ஜாதகர், தனக்கே உரிய நல்ல, தீய குணங்களை உடையவராகவும், கயிற்றில் கட்டப்பட்டவராய் தனக்குள்ள எல்லைகளை அறிந்தவராகவும், தனக்குடைய ஆதாரங்கள், தன் பலம், பலவீனம், எதிரிகளின் பலம், பலவீனம், சகமனிதர்களின் பலவீனங்கள் ஆகியவற்றை அறிவதோடு தாக்குவதற்கு உரிய சரியான நேரத்தையும் அறிந்தவராய் இருப்பார். சில சிறிய சந்தர்ப்பங்களைக் கண்டுக் கொள்ளாமல் விட்டாலும், மிகவும் பொறுமையாக இருந்து, சரியான தருணம் வரும்போது வெற்றிகரமாக, ஓர் இராஜநாகம் போல் இலக்கைத் தாக்குவதில் வல்லவர். அவர் தனக்கென ஒரு நேர்மையான, நியாயமான, ஒழுக்கம் தவறாத வாழ்க்கையை வாழ்வார்.

இலக்கினத்துக்குக் கேந்திர, திரிகோண பாவங்களில் சந்திரன்—இராகு இணைவு ஏற்பட்டால் ஜாதகர், பேர், புகழ் பெற்று இராஜயோகத்தை அடைகிறார். இந்த யோகம் முக்கியமாக மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம் மற்றும் தனுசு இராசிக்காரர்களுக்கு மிகவும் நன்மை அளிப்பதாகவும், பலன் அளிப்பதாகவும் அமைகிறது.

இந்த இணைவு பெற்று இராஜயோகத்தை

அடைந்த நமக்குப் பரிச்சயமான சில முக்கிய நபர்களின் ஜாதகங்களை பார்க்கலாம்.

1. இந்தியாவின் முன்னாள் பிரதமர் சௌத்ரி சரண்சிங் — தனுசு இலக்கினம், 10ஆம் இடமான கன்னியில் ஏற்பட்ட இந்த இணைவோடு, செவ்வாயும் இணைந்து, 2 ஆம் வீடான மகரத்தில் இருந்து குருவாலும், சனியாலும் பார்க்கப்பட இராஜயோகம் அடைந்தார்.

2. இருமுறை இடைக்காலப் பிரதமராகவும், மத்திய உள்நாட்டு மந்திரியாகவும் இருந்த குல்ஜாரிலால் நந்தாவின் மேஷ இலக்கின ஜாதகத்தில் பாக்கிய பாவமான தனுசுவில் இந்த இணைவு ஏற்பட்டு, பாக்கியாதிபதி 6ஆம் இடமான கன்னியில் இருந்து பார்வை ஸ்கொயர் புரிவதால் இராஜயோகம் அடைந்தார்.

3. புகழ் பெற்ற ஹிந்தி கதாநாயகர் ராஜ்கபூர் அவர்களின் ஜாதகத்தில் இந்த இணைவு கடக இலக்கினம், இலக்கினத்திலேயே ஏற்பட்டது. சதுர்த்த கேந்திரமான துலாத்தில் சுக்கிரன், சனி இணைவும் ஏற்பட்டது. 10ஆம் அதிபதி செவ்வாய் 9ஆம் இடமான மீனத்தில் உள்ளது. சந்திரன் — இராகு இணைவே சினிமா உலகில் மிகப் பெரிய நடிகராக்கியது.

4. மைசூர் மஹாராஜா கிருஷ்ணராஜவுடையார் ஜாதகத்தில் சதுர்த்த கேந்திரம் துலாத்தில் இந்த இணைவு அமைந்தது. கடக இலக்கினம். இலக்கினத்தில் குரு, சுக்கிரன், சனி நல்ல நிலையில் உள்ளனர். தூய்மையற்ற இந்த இணைவு இராஜ வாழ்விலிருந்து அவரை சாதாரண பிரஜையின் வாழ்க்கையை வாழவைத்தது.

5. இங்கிலாந்து இளவரசர் சார்லஸ் — சந்திரன் — இராகு இணைவு தசம கேந்திரமான மேஷத்தில் ஏற்பட்டு குருவின் பார்வையும் பெற்றது. அத்துடன் சூரியன், புதன், கேதுவின் பார்வையும் இவ்விணைவிற்குக் கிடைத்தது.

6. பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர் பூட்டோ — 12ஆம் இடமான ரிஷபத்தில், இந்த இணைவு ஏற்பட்டு, பலம் மிக்க 6ஆம் அதிபதி செவ்வாயாலும், சுக்கிரன், சனி, கேதுவாலும் பார்க்கப்பட்டது. 10ஆம் இடமான மீனத்தில் குரு உள்ளார். மார்ஷல் டிட்டோவின் ஜாதகத்திலும் 12ஆம் இடத்தில் இந்த இணைவு இருந்தது. 12ஆம் இடத்தில் இவ்விணைவினால் ஏற்படும் யோகம் மோசம் இல்லை என்றாலும், சுக்கிரன், சனி, கேதுவுடன் இணைந்த பலம்மிக்க 6ஆம் அதிபதி செவ்வாயின் பார்வை பெற்றதால், அவரை சிறையில் தள்ளி, முடிவில் சாகும் வரை தூக்கில் இடப்பட்டார்.

மேற்கண்ட உதாரணங்களின் மூலமாக சந்திரன் — இராகு இணைந்து தரும் யோகத்தின் நன்மைகளை அறிந்துக்கொண்டோம். ■



அகத்திய ஜோதிட விஞ்ஞானி
பி.எஸ். தேவராஜ்

**அகத்தியர் சித்தா மூலிகை மருத்துவம்**

முற்றிலும் மாறுபட்ட சித்த மருத்துவ முறையில் பத்தியம் இல்லாமல் குறைந்த கட்டணத்தில்.
50 ஆண்டு அனுபவம் மிக்க சித்த மருத்துவ மாமணி இரா.சுப்பிரமணியம் அவர்களால்
குறைந்த கட்டணத்தில் நிறைந்த மருத்துவம் சேவை புரிகிறார்.

**குடியை நிறுத்த!**


Dr.இரா. சுப்பிரமணியம்
அரசு பதிவு பெற்ற
மருத்துவர் பதிவு எண்: 1794

**குடிப்பவருக்கு தெரியாமல் கொடுக்கலாம்**

**கை, கால், மூட்டு வலிகளை முற்றாக நீக்கி உடலுக்கு உரம் சேர்த்து மேனி எழிலை மேம்படுத்த சிறப்பு சிகிச்சை அளிக்கப்படுகிறது. நவமூலம், சொரியாசிஸ், நீரிழைவு, ஆண்மை குறைவு, ஆஸ்துமா. பெண்களுக்கு கர்ப்பப்பை கோளாறுகளை நீக்கி கர்ப்பம் தரிக்க சிறந்த சிகிச்சை அளிக்கப்படும்.**

**ஆண்மை சக்தி பெருக, யாத்திரைக்கு இன்ப மாத்திரை ஒன்று ரூ.5/**

**பைல்ஸ் மற்றும் சர்க்கரை நோய்க்கு சிறப்பு சிகிச்சை**

**பெண்கள் சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களுக்கும் நிரந்திர தீர்வு காணப்படும்.**

**நெ. 13, எ. முத்தையப்பர் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.**
**(பச்சையப்பன் கல்லூரி பின்புறம், நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில்)**

**போன்: 044 - 2668 0381. செல்: 99403 42800**

நூல் மதிப்புரை

# மகத்துவம் தந்திடும் மஹா மந்திர விஞ்ஞைகள்


**T.G.பாலசந்திரன்,**
வேத ஜோதிடர்
செல்: **94445 41239.**




மனிதன் தன் ஆன்மிக ஆற்றல் வளரவும், தெய்வீக தன்மை பெருகவும், பிரபஞ்ச சக்தியை உணரவும், பஞ்ச பூத செயல்பாடுகளை அறியவும், உறுதுணையாக உதவுவது, உபாசனை மற்றும் மந்திர, தந்திர, யந்திர பிரயோக வழிபாட்டு முறைகளாகும். இதில் யந்திரம் ஒன்றே இம்மூன்றையும் தன்னுள் உள்ளடக்கி பிரதானமாய் திகழ்கிறது. ஆண்டவன் ஆயிரமாயிர ஆண்டு காலமாய் ஆலய கர்ப கிரகத்துள் வீற்றிருந்து, நிலைத்து, என்றென்றும் மக்களுக்கு அருள் மாரி பொழியச் செய்விப்பது இரண்டு விஷயங்கள். ஒன்று சித்தர்களின் ஜீவசமாதி மற்றொன்று உருவேற்றப்பட்ட யந்திரங்கள். ஷண்மதத்தை தோற்றுவித்த ஆதிசங்கரர் பாரதம் முழுவதும் கால் நடையாகவே சுற்றி, பல ஆலயங்களுக்கு சென்று, தன் மந்திர சக்தியால் உருவேற்றிய யந்திரங்களை பிரதிஷ்டை செய்து ஆலயத்திற்கு உயிரூட்டினார். அழிந்து வரும் இக்கலையை குரு பரம்பரை மூலம் முதன் முறையாய் தமிழில் தன் அறுபதாண்டு கால வரசித்தியால், அருட் சக்தியால், தவ யுக்தியால், திருமுருகப் பெருமானின் கருணையால், சித்தர் பெருமக்களின் தரிசனத்தால், சித்தர் அடியார் டாக்டர் A.K.சந்தன இராஜா ஐயா அவர்களால் அருளப்பட்ட அற்புத நூல் தான் "**மகத்துவம் தந்திடும் மஹா மந்திர விஞ்ஞைகள்**".




இந்நூலில் பல்வேறு தெய்வ உபாசனை முறைகள், மந்திர தந்திர யந்திர பிரயோக சூட்சுமங்கள், சித்தர் நூலில் மறைக்கப்பட்டு, மறைபொருளாய் வைக்கப்பட்ட தெய்வ இரகசியங்கள், திருமந்திர பாடல்களின் ஆதார அனுபவங்கள், ஆன்மிக ஆராய்ச்சி தகவல்கள், ஒரு தெய்வத்தை அணுகி வேண்டியன வேண்டியபடி உபாசனை மூலம் பெறும் வித்தை, அதற்குரிய மூலமந்திரங்கள், பீஜாட்சர அர்த்தங்கள், வித்தெழுத்துக்கள், போற்றிகள், பூஜை முறைகள், யாக இரகசியங்கள், நித்திய பூஜை வழிபாட்டு முறைகள் மற்றும் அதன் பலன்கள், பயன்கள், அஷ்டகர்மம், அஷ்டசித்தி, அஷ்டாங்க யோகங்களின் முறையில் உடலையே ஆலயமாக்கி ஆண்டவனை உள்ளத்துள்ளே இருத்தி வைத்து வணங்கி வழிபட்ட சித்தர் மார்க்கங்கள் மற்றும் சித்தர்களின் சித்து விளையாடல்கள், வரலாற்று உண்மைகள், நூல் விளக்கங்கள், சித்தர்களுக்குள் நிகழ்ந்த நிகழ்வுகள் என எண்ணற்ற தகவல்களுடன், கிடைத்தற்கு அரிய அற்புதமான யநதிரங்கள் உள்ளடக்கி மந்திரங்கள் தாங்கி வெளி வந்துள்ள அரிய படைப்பு தான் "மகத்துவம் தந்திடும் மஹா மந்திர விஞ்ஞைகள்" ஆகும்.

இந்நூல் ஆன்மிக ஆராய்ச்சி அன்பர்கள், சித்தர்கள் வழி நாடும் பெருமக்கள், கர்மாவை கண்டு களையும் பரிகாரம் கூறும் ஜோதிடர்கள், வேத விற்பனர்கள், சைவ சித்தாந்திகள், ஆலய குருக்கள், மந்திர தந்திர யந்திர சாஸ்திர பிரயோக வல்லுனர்கள், அஷ்டகர்மத்தை தொழில்முறையில் நல்வினை கருதி குரு நிலையில் பயில்வோர், பயிற்றுவிப்போர், முக்கியமாக உபாசனையாளர்கள், மற்றும் கடவுள் எனும் பரம்பொருளான பிரபஞ்ச சக்தி, பஞ்சபூதம், நவகிரகம் மற்றும் ஒலி ஒளி வடிவின் மூலம் எப்படி அனைவரையும் ஆட்கொள்கிறது என தேடலில் திளைப்போர்கள், குருஉபதேசம் பெற்றவர்கள், மந்திர, தந்திர, யந்தரங்களின் மகிமையை உணர துடிப்பவர்கள் என அனைவரது கையிலும் தவழ வேண்டிய அற்புத நூல். இது ஒரு சித்தர் வழி ஆராய்ச்சி நூல்.

இந்நூல் மூலம் யாதொரு தெய்வத்தையும் முறையாக அனுதினமும் மந்திரங்கள், யந்திரம் மூலம் வணங்கி வியத்தகு சக்தியை பெற முடியும்.

# வாழ்த்துரை வழங்கிய வள்ளல்கள்

காலங்கள் செல்லச் செல்ல இந்த யந்திர சாஸ்திரம் பலருக்கும் தெரியாமலே போய்விடும் என்ற நிலையில் ஒளிவு மறைவு இல்லாமல் தேவதை உபாசனை விஞ்சைகளை வித்தியாசமான வழிபாட்டு முறைகைக் கையாண்டு டாக்டர் ஏ.கே.சந்தன ராஜா அவர்கள் இந்த மகத்துவம் தரும் மந்திர விஞ்ஞைகள் எனும் தலைப்பில் ஓர் அரும்பெரும் நூலை எழுதி இருக்கிறார்.



ஆலயம் போல் யந்திரத்தை அலங்கரித்து சுத்தமாய் காக்க வேண்டும். அப்போதுதான் யந்திரம் பலன் கொடுக்கும் பல செயல்களுக்கும். பல தெய்வங்களுக்கும் தனித்தனி யந்திரம் மந்திரம் உண்டு. இதை அறிவது தந்திரம். தந்திரம் அறிந்து மந்திரம் செபித்து யந்திரம் உயிர்ப்பித்தால் அளவிட முடியாத பலன் உண்டு. இதுபோல் இவர் இன்னும் பல நல்ல நூல்களை எழுதி நாட்டு மக்களுக்கு இன்னும் பல சேவைகளைச் செய்ய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**Dr. W. ஜோதி அக்பர் சாமி**

மந்திரம் என்பதற்கு மன்னும் திறம் நிலை பெற்றிருக்கும் திறன் என்று பொருள் கொள்ளலாம். யந்திரம் என்பது மந்திர சக்தி நிலைத்திருந்து இயங்கச் செய்யும் கருவி. புலனடக்கத்தோடு இறைவனை மனதில் இருத்தி உள்ளும் புறமும் நிலை நிறுத்திப் பூஜிப்பது யந்திரமுறை. யந்திரங்கள் இறைவனின் மறுவடிவாகவே போற்றப்படுகின்றன. யந்திரங்கள் எனப்படும் சக்கரங்கள் காகிதத்தில் வரையப்பட்டு கண்ணாடிச் சட்டத்திற்குள் வைக்கப்பட்டோ, மரம் அல்லது உலோகத்தில் கீறல்களாகச் செதுக்கியோ பயன்படுத்தப்படுகிறது. இச்சக்கரங்கள் தியானத்தின்போது மனதை ஒரு நிலைப்படுத்தப் பயன்படுகிறது.



இது போன்ற எண்ணற்ற இரகசியங்கள் கணக்கற்று அடங்கிய இந்த நூல் உபாசகர்களுக்கு மட்டுமல்லாமல் ஜோதிட தொழில் புரிபவர்களுக்கு வாக்குப்பலிதம் வகைபடும் வழிகளுக்கு சூட்சும இரகசியங்களை தெளிவுபட எடுத்தியம்பியுள்ளார் பாமர மக்களுக்கும் பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை.

**பண்டித காழியூர் நாராயணன்**

திரு ஏ.கே.சந்தனராஜா ஐயா அவர்கள் எழுதிய மகத்துவம் தந்திடும் மந்திர விஞ்ஞைகள் எனும் நூல் மனித சமுதாயம் நலனுறத் தேவையான மிக முக்கியமான நூலாகும். பல்வேறு யந்திரங்களையும், மந்திரங்களையும் கொடுத்து ஓர் ஆற்புத நூலை உருவாக்கி இருக்கிறார். மனிதன் ஒரு காந்தம். அவன் உடல் உறுப்புகளில் காந்த சக்தி உள்ளது என்பதைப் பகுத்தறிவாளர்கள் கூட மறுக்க முடியாது. ஏனென்றால், அது விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்ட உண்மை. யந்திரம் என்பது நமது உடலில் உள்ள ஆறு ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டது. பஞ்சபூத அடிப்படையில் இயங்கும் இறைவனை தத்துவரீதியான வரிவடிவில், எழுத்து வடிவில், செம்பு, வெள்ளி, தங்கம் போன்ற உலோகங்களில் வடிவமைத்து வணங்குகிறோம். நாம் உச்சரிக்கும் மந்திர ஒலியின் சக்திக்கு இணங்க யந்திரங்கள் ஆற்றலை வெளிப்படுத்துகின்றன. இந்த யந்திரங்களை பயன்படுத்தி பல நன்மைகள் செய்ய முடியும். இந்த புத்தகம் நிச்சயம் அனைவருக்கும் பயன்படும். அந்த இறைவனின் அருளால் அகிலம் சிறக்கட்டும்.



**குருவருள் நடராஜன்**

சித்தர் பெருமக்கள் கையாண்ட தந்திரப் பிரயோகங்கள் அஷ்டமா சித்தி அடைய கடைப்பிடிக்க வேண்டிய அனுஷ்டானங்கள் என அனைத்தையும் அற்புதமாய் தந்துள்ளார். பொதுவாக சித்தர்களின் பரிபாஷைகள் எளிதில் புரியாவண்ணம் எழுதப்பட்டு இருக்கும் ஆயினும் டாக்டர் கி.ரி.சந்தனராஜா அவர்கள் பல வருட காலம் பல நூல்களில் உள்ளவற்றை எல்லாம் ஆராய்ச்சி செய்து அவற்றை பரிசோதித்து பலனை உணர்ந்த பின்னரே பறைசாற்றியுள்ளார். இந்நூலில் கூறப்பட்டுள்ளபடி, உபாசகர்கள், ஜோதிடர்கள், கோயில் அர்ச்சகர்கள், புரோகிதர்கள், ஆன்மிகவாதிகள் என அனைத்து தரப்பினரும் தரமான முறையில் விதிமுறைகளை ஆகம முறைப்படி கடைப்பிடித்தால் இறைவனை அடைவது அறுதியான இறுதிநிலை. நவக்கிரகங்களையும் சாந்திப்படுத்தி அவைகளின் உக்கிரத்தைக் குறைத்து நம் வசப்படுத்தும் தந்திரங்களின் சூட்சும வடிவத்தை உணர்ந்து மோட்ச நிலையை முன்னிறுத்தி உள்ளார். உபாசனை தெய்வ அருளைப் பெறாமல் யாரும் நூறு சதவீதம் ஜோதிடத்தில் நிலைத்திட முடியாது என்பது உலகறிந்த உண்மை. தரமானவற்றை தரணியில் தந்து தன்னகத்தே தக்கத் திறனைப் பெற்றுக் கொள்வதை இலட்சியமாகக் கொண்டு ஆன்மிகப் பேரொளியை அண்டத்திலிருக்கும் அற்புதங்களை பிண்டத்திலுள்ள உயிரினம் யாவும் நற்கதி அடைந்து நன்னிலைப் பெற்று நல்வண்ணம் வாழ நல்லோர் கைகளில் மஹா மந்திர விஞ்ஞை தவழ்ந்து எல்லோர்க்கும் நலம் சேர்க்க இறைவனை இறைஞ்சுகின்றோம்.



**சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜ்**

மகத்துவம் நிறைந்த மந்திர விஞ்ஞைகள் எனும் இந்த நூல் திரு டாக்டர். ஏ.கே.சந்தனராஜா ஐயா அவர்களால் எழுதப்பட்டு அப்ஸரா பப்ளிகேஷன்ஸ் மூலம் வெளியிடுவதற்கு நமது ஸ்ரீஞானஸ்கந்தர் ஜீவ நாடியும் ஒரு காரணம் என்பதை இந்த நேரத்தில் சொல்ல வேண்டும் எனக் கருதுகிறேன். மன்மத ஆண்டில் ஐந்து நூல்களை வெளியிட வேண்டும் என்பது சித்தர் அடிமை ஸ்ரீ சி. இராஜீ ஐயா அவர்களின் எண்ணமாக இருந்தது. மற்ற நான்கு நூல்களும் யார் யார் எழுதுவது என்பது முடிவான உடன் சித்தர் அடிமை சி. இராஜீ ஐயா அவர்கள் அடுத்து யாருடைய நூலை வெளியிடலாம் என்று என்னிடம் கேட்டார். அப்போது ஸ்ரீஞானஸ்கந்தர் ஜீவ நாடியில் அதற்கு வழி கேட்ட போது இந்த மந்திர விஞ்ஞைகள் புத்தகத்தை வெளியிடுமாறு முருகனிடம் இருந்து உத்தரவு வந்தது. அந்த உத்தரவின் பேரில் உடனே இந்த புத்தகம் தயாராகி இப்போது உங்கள் கைகளில் தவழ்கிறது. இந்த நூலும் நமது ஸ்ரீஞானஸ்கந்தாஸ்ரமத்தில் வெளியிடப்படுவது முருகப் பெருமானின் பரிபூரண ஆசியோடு வெளிவருவதற்குச் சான்றாக இருக்கிறது. இந்த நூல் நிச்சயம் அனைவருக்கும் அதிசய மாற்றங்களைத் தரும் என்றால் மிகை இல்லை.



**ஸ்ரீ ஸ்கந்த உபாசகர் P.D.ஜெகதீஸ்வரன்**

இந்நூலில் உள்ள மூல மந்திரங்கள் மாபெரும் சக்தியை வழங்கக் கூடியதாகும். இதில் உள்ள யந்திரத்தை குரு உபதேசம் பெற்று பூஜைகள் தொடர்ந்து செய்து வந்தால் கடவுளை உணர முடியும். இது ஜோதிடத்தையும் தாண்டிய ஞானத்தை அருளும். ஜோதிடர்களின் வாக்கு பலிதாமாகும். வணங்கும் உபாசனை தெய்வமே மனதுள் துல்லிய பலனுடன், பரிகாரமும் கூறிடும் ஜோதிடர்கள் கர்மாவின் தாக்கத்தில் இருந்தும் உபாசனை மூலம் தங்களை தற்காத்துக் கொள்ள முடியும். யந்திர மந்திர வழிபாடு மூலம் எந்தொரு தீய சக்தியும் நெருங்காது. வணங்கும் தேவதையே நித்தம் காத்து நிற்கும்.

இந்நூலின் சிறப்பு ஒரு தெய்வத்தையே பல காரணகாரியத்திற்கு பல வடிவங்களில், விருப்பத்திற்கேற்ப வணங்கும் வண்ணம் இங்கு வெவ்வேறு மந்திரங்கள், காப்பு கவசங்கள் யந்திரங்கள் தரப்பட்டுள்ளன. உதாரணம் விநாயகப் பெருமானை எடுத்துக்கொண்டால் அருள்மிகு மேதகு ஓங்கார கணபதி மந்திர விஞ்ஞையை ஒருவர் தொடர்ந்து ஒரு மண்டலம் யந்திர மந்திரங்கள் கொண்டு முறைப்படி பூஜை செய்து வந்தால் ஓங்காரதின் ரீங்காரத்தின் அதி அற்புதத்தை உள்ளர்த்தத்தை ஒருங்கே உணர முடியும். உயிர்களின் பிறப்பு, மூப்பு, இறப்பு இரகசியத்தை, ஓம் என்னும் தத்துவத்தை அறிய முடியும். தொடர்ந்து வணங்கி வர பகைத்தோர் ஓடி மறைவர். பிறர் செய்யும் தீமைகள் நெருங்காது. தன்னலமின்றி பொது சேவையில் ஈடுபடுவோர்க்கு மக்கள் மன்றம் முன் நன்மதிப்பும், உயர் மரியாதையும், தரமான அங்கீகாரமும் நிலைக்கும். நவகிரகங்களின் தாக்கத்தில் இருந்து விடுபட்டு ஒழுக்கமுள்ளோர் வாழ்வு வளம் பெறும்.

இதேபோல விநாயகரின் ஸ்ரீ மஹா கணபதி காரிய சித்தி மாலை பூஜிப்போர்க்கு நினைத்த காரியம் உடனே சித்தியாகும். விநாயகக் கவசம் மற்றும் விநாயகர் அகவலுக்கு கூட தனிதனி மூல மந்திரங்கள், யந்திரங்கள் பூஜை முறைகள் தரப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒரே தேவதையை பல காரண காரியத்திற்கு ஒருவர் பூஜை முலம் மனம் இறங்கச் செய்து வசியம் செய்து வளம் பெற முடிகிறது. ஒருவர்க்கு உலகியலில் அருள், பொருள் பேதமின்றி வேண்டுவன யாவையும் கோரும் வண்ணம் சேரும் வகையில் சித்தர் அடியார் டாக்டர் A.K.சந்தன இராஜா ஐயா அவர்கள் அருமையான விளக்கங்களுடன் தனது அனுபவத்தையும் ஆதாரத்துடன் அருள் உலகுக்கு ஆற்றி பெரும் சேவை புரிந்துள்ளார்.

இவ்வாறு 51 சக்தி வடிவத்தில் வாலை முதல் புவனாபதி வரை பல மூலமந்திரங்கள் யந்திரங்கள் முதன்முறையாய் வெளியிடப்பட்டுள்ளது. அவ்வாறு கோடான கோடி மக்கள் நாள்தோறும் வணங்கி படித்து வரும் கந்த சஷ்டி கவசம், சண்முக கவசம், கந்தர்கலி வெண்பா, கந்தரனுபூதி என இன்னும் முருகப் பெருமான் வடிவங்களுக்கு யந்திரங்கள் மூலமந்திர பூஜை முறைகள் தரப்பட்டுள்ளன. சிவபெருமான், நாராயணன் என அனைத்து தெய்வங்களின் சூட்சுமங்கள், வணங்கி அருள் பெறும் எளிமையான விதங்கள் மற்றும் பலாபலன்களும் விரிவாய் கொடுக்கப்பட்டுள்ளது.

நோய் கானும் மருத்தவன் மருந்து கூறவும் குணம் பேணவும் வேண்டும் என்பது போல பலன் கூறும் ஜோதிடர்களின் வாக்கு பலித்தமாகவும், பரிகாரம் தகுந்த முறையில் பரிந்தளிக்கவும், பிறர் கர்மா மூலம் பாதிப்புறாது இருக்கவும். ஸ்ரீ நவகோள் சாப விலக்கு மகா மந்திர விஞ்ஞை, நவக்கோள் தாக்கம் தணிக்கும் மந்திர விஞ்ஞை, நவக்கோள் மகா மந்திர விஞ்ஞை, நலம் தரும் நவக்கோள் மந்திர விஞ்ஞைகள் என பல விஞ்ஞைகள் நவகிரகங்களை பூஜீத்து பலன் பெற, வாக்கு பலித்தம் பெற தரப்பட்டுள்ளது. இது தவிர இதுவரை வெளிவராத இரகசியங்களாய் நெருப்பாறும் மயிர் பாலமும், பூட்டிய வாசலும் அதன் திறவுக் கோலும், இறைவனின் எண் குண இயற்கை மந்திரம், ஐ எழுத்தும் ஐ விரலும், மானுட ஆவி இயல், ஆகாயம் ஆன்மிக உலகத்திற்கு சகாயம், மானுடத்தில் நவக்கோள் குடியிருப்பு என 48 தலைப்புகளில் படைக்கப்பட்டுள்ள அற்புதங்கள் ஒருவர் படித்திட நிச்சயம் மிகபெரிய குருவாகவும், சகல விதமான அருட் செல்வங்களும் பெற முடியும்.

சித்தர் அடியார் டாக்டர் A.K.சந்தன இராஜா ஐயா அவர்கள் இயற்றிய "மகத்துவம் தந்திடும் மஹா மந்திர விஞ்ஞைகள்" காலத்தால் அழியாத பொக்கிஷம். அவர்தான் கண்ட இறை சக்தியை யந்திர, மந்திர வடிவில் எல்லோரும் முறைப்படி பூஜைகள் செய்து வணங்கி எல்லா மேன்மையும் உலகியலில் பெற தன் வாழ்நாள் முழுவதையும் அற்பணித்துள்ளார். இந்நூல் ஒரு சரித்திரம் ஒரு சகாப்தம். எனவே ஆன்மிக அன்பர்கள், ஜோதிட பெருமக்கள், ஆலய குருக்கள், புரோகிதர்கள், நமபூதிரிகள், வேத விற்பனர்கள், சமயம் சார்ந்தோர்கள், மந்திர, தந்திர, யந்திர நிபுணர்கள் என பாகுபாடின்றி யாவரும் வாங்கி பரம்பொருளை பரிபூரணமாய் வணங்கி பயன் பெற வாழ்த்துக்கள்.

**நூலின் விலை ரூ.550/–**

மேலும் தொடர்புக்கு:

**அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்** நெ.18/67, பிரசன்ன விநாயகர் கோவில் முதல் தெரு, புதுப்பேட்டை, இராயப்பேட்டை, சென்னை – 600 014. போன்: 044– 2811 6770, செல்: செல்: 72999 21880

Email: apsarapublications@gmail.com | www.apsaraepublications.com

திடமான நம்பிக்கை | அன்னை காமாட்சியம்மன் துணை | தீர்க்கமான முடிவு

திருமணப்பொருத்தத்தில் பத்துப்பொருத்தங்களை ஒதுக்கிவிட்டு கிரகப் பொருத்தங்களின் புதிய முறையில் வெற்றி கண்டு 50க்கு மேற்பட்ட பயிற்சிகளின் மூலம் பல சோதிடர்களுக்கு நல்வழிகாட்டிவரும் நிலையில், பல்வேறு தோஷங்களைப் பற்றியும் அதற்கான பரிகாரங்களைப் பற்றியும் அளிக்கப்படும் ஓர் அரிய வகுப்புதான் இது.

# தோஷங்களும் எளிய பரிகாரங்களும்

30 ஆண்டுகள் ஜோதிடத் துறையில் ஆய்வு செய்து கோள்களின் அடிப்படையில் திருமணப் பொருத்தம் காணும் முறையைக் கையாண்டு சோதிடர்களுக்குப் பலன் தரும் பரிகாரங்கள் பலன் தராத பரிகாரங்கள் எவை எனக்கூறும் சிறப்பான பயிற்சி

## தோஷங்களின் வகைகள்

1. களத்திர தோஷம்
2. மாங்கல்ய தோஷம்
3. புத்திர தோஷம்
4. பிரம்மஹத்தி தோஷம்
5. புனர்பூ தோஷம்
6. விஷக்கன்னியா தோஷம்
7. சயனசுக தோஷம்
8. திருமணத்தடைக்கான தோஷம்
9. செல்வக்குறைபாடு தோஷம்
10. சொத்துக்குறைபாடு தோஷம்
11. ஆயுள் தோஷம்
12. காளசர்ப்ப தோஷம்
13. கடன் பிரச்சனை தோஷம்
14. பிதுர் தோஷம் இப்படிப்பல உள.

## தோஷப் பரிகாரங்கள்

1. பாவ கிரகங்களாகக் கருதப்படும் சூரியன், சனி, செவ்வாய், இராகு, கேதுக்களால் உண்டாகும் தோஷங்களுக்கான பரிகாரங்கள்
2. சுப கிரகங்கள் பாவிகளாகி உண்டாக்கும் தோஷங்களுக்கான பரிகாரங்கள்
3. தோஷம் தரும் கிரகங்களே தோஷம் தராத நிலை.

இவற்றிற்கான எளிய, சற்று கடுமையான பரிகாரங்கள்

**காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை**

| திருச்சியில் | மதுரையில் | காஞ்சிபுரத்தில் | சென்னையில் |
|---|---|---|---|
| **12-9-2015 சனி**<br>**ஹோட்டல் அருண் மினிஹால்**<br>24 ஸ்டேட் பாங் ரோடு, புதிய பேருந்து நிலையம் அருகில், திருச்சி - 1 | **13-9-2015 ஞாயிறு**<br>**ஹோட்டல் சுப்ரீம்**<br>மேற்கு பெருமாள் மேஸ்திரி சாலை மதுரை - 1 | **19-9-2015 சனி**<br>**ஸ்ரீ ராமா லாட்ஜ்**<br>20 நெல்லுக்காரத்தெரு பேருந்து நிலையம் அருகில் காஞ்சிபுரம் - 2 | **20-9-2015 ஞாயிறு**<br>**ரூட் லேண்ட் கேட்**<br>5வது தெரு தாஜ்ஹோட்டல் எதிரில், நுங்கம்பாக்கம் சென்னை - 6 |

**முன்பதிவு செய்ய மறவாதீர்கள்**

**பயிற்சிக்கட்டணம் ரூ.1200/- மட்டும் (நபர் ஒன்றுக்கு)**

இருவேளை தேநீர், மதிய உணவு, எழுதுகோல், குறிப்பேடு, பயிற்சிப் புத்தகம் இலவசம்.

கண்டு கேட்டவர்களின் பாராட்டுகளைப் பெற்ற, சோதிட ஆய்வாளர், வாஸ்து பயிற்சியாளர், திருமணப் பொருத்த வல்லுநர்

**புலவர் இளங்கோவன்.வி.** எம்.ஏ.எம்.எட்(தமிழ்) எம்.ஏ. (சோதிடம்)

**அனைத்து வகை தொடர்புக்கும்: 94433 10477**

# அரசாங்க வேலைக்கு அடிகோலும் ஜாதக அமைப்புகள்



ஜோதிட ஆராய்ச்சியாளர்
வேப்பலோடை
**K. விஸ்வநாத்**
செல்: 97158 55358

அரசாங்க வேலை கிடைத்துவிட்டால் காலம் முழுவதும் வாழ்க்கையை கஷ்டமில்லாமல் இல்லாமல் வாழ்ந்துவிடலாம் என்று தான் அனைவரும் அரசாங்க வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அதனால் தான் அரசாங்க வேலையில் 300 பேர் மட்டும் தேவைப்பட்டால் கூட மூன்று லட்சம் பேர் தேர்வு எழுதுகிறார்கள். இது தவிர அரசாங்க வேலை வாங்கித் தருகிறேன் என்று ஏமாற்றி பல பேர் பணம் பறித்துக் கொண்டும் இருக்கிறார்கள்.

அரசாங்க வேலைக்கு ஆசைப்படும் நிலை இப்பொழுது ஆரம்பித்தது அல்ல, அரசாங்க வேலைக்கு ஆசைப்படும் எண்ணம் காலம், காலமாக மக்கள் மனதில் ஊறிபோன ஒரு விஷயமாகும்.

அதனால்தான், அரசாங்கம் என்று ஆரம்பித்த காலத்திலேயே அரைக்காசு சம்பளம் என்றாலும் அரசாங்க வேலை வேண்டும். கால் காசு சம்பளம் என்றாலும், கவர்மெண்ட் சம்பளம் பெற வேண்டும் என்ற பழமொழி ஆரம்ப காலங்களிலிருந்தே மக்களிடம் நடைமுறையில் இருக்கிறது.

ஆனால் அரசாங்க வேலை கிடைப்பது அவ்வளவு எளிதான விஷயமல்ல. அரசாங்க வேலை என்பது ஒரு வகையான இராஜயோகமாகும். அதனால் வலுவான இராஜயோக ஜாதக அமைப்பு மட்டுமே அரசாங்க வேலையை ஜாதகருக்கு கிடைக்கச் செய்கிறது.

இதிலும் ஜாதகம் இராஜயோக அமைப்பில் இருந்துவிடுவது மட்டுமே அரசாங்க வேலையை கொடுத்துவிடுவதில்லை. இராஜயோக அமைப்பில் ஜாதகம் இருந்து சூரியன், செவ்வாய் இருவரும் குறிப்பிட்ட அமைப்பில் இருந்தால்தான் ஜாதகருக்கு அரசாங்க வேலை கிடைக்கும். அதாவது இராஜயோக அமைப்பில் ஜாதகம் இருந்து சூரியன், செவ்வாயும் குறிப்பிட்ட அமைப்புகளில் இருந்தால் தான் ஜாதகருக்கு அரசாங்க வேலை கிடைக்கும். இதிலும் சூரியன், செவ்வாய் இருவரும் குறிப்பிட்ட அமைப்பில் இல்லாமல், ஜாதகம் இராஜயோகம் வலிமை பெற்றால் ஜாதகருக்கு அரசாங்க வேலை கிடைக்காமல் போகலாம்.

ஆனால் ஜாதகர், தலைமைப் பதவியை பெறமுடியும், புகழ்பெற்றவராக திகழமுடியும். அரசியலில் ஈடுபடு முடியும். அதிக மக்களால் பாராட்டபட முடியும். இதுபோன்ற இராஜயோகங்கள் ஜாதகருக்கு அமையும்.

நாம் இதுவரை பார்த்த இராஜயோக அமைப்புகள் பணவசதிகளைக் கொண்டு நிர்ணயிக்கும் இராஜயோகம் கிடையாது. நாம் பார்த்த இந்த இராஜயோக வலிமை பெற்றவர்களில் பணவசதி இல்லாதவர்களும் உண்டு. அதிக பணவசதி படைத்தவர்களும் உண்டு.

பணவசதிகள் மூலம் கிடைக்கும் இராஜயோகங்களை வேறு முறையில் கணக்கிட வேண்டும்.

அரசாங்க வேலை கிடைக்க எந்த மாதிரியான இராஜயோக ஜாதக அமைப்பு ஜாதகத்தில் இருக்க வேண்டும் என்பதையும், அரசாங்க வேலை கிடைக்க ஜாதகத்தில சூரியன், செவ்வாய் இருவரும் எந்த அமைப்பில் இருக்க வேண்டும் என்பதையும் பார்ப்போம்.

சூரியன் செவ்வாய் இருவரில் ஒருவர் இலக்கினம் அல்லது இராசியில் அமரவேண்டும். நேர் எதிர்கூட அமரலாம். இருவரில் இன்னொருவர் 10ஆம் இடத்தில் அமரவேண்டும். இலக்கின 10ஆம் இடத்தில் அல்லது இராசிக்கு 10ஆம் இடத்தில் அமர வேண்டும். நேர் எதிர்கூட அமரலாம்.

சூரியன், செவ்வாய் இருவரும் இணைந்துவிட்டால் இலக்கினம் இராசி இரண்டையும் சூரியன் செவ்வாய் இருவரும் பார்த்துவிடுவது கூட அரசாங்கவேலை பெறவைக்கும். அல்லது இலக்கினம் அல்லது இராசியை இருவரும் பார்த்து 10ஆம் இடங்களில் ஒன்றையும் இருவரும் பார்த்துவிடுவதும் அரசாங்க வேலை பெற வைக்கும். இலக்கின 10ஆம் இடத்தை பார்க்கலாம் அல்லது இராசிக்கு 10ஆம் இடத்தை பார்க்க வேண்டும்.

இது தவிர சூரியனும், செவ்வாயும் இணைந்து 10ஆம் அதிபதிகள் இருவரையும் இணைந்து இலக்கினம் அல்லது இராசியை மட்டும் சம்மந்தப்படுவதும் அரசாங்க வேலையை பெறவைக்கும். அதே போல் சூரியன், செவ்வாய் இருவரும் இலக்கின அதிபதி இராசிக்கு அதிபதி இருவரையும் இணைந்து 10ஆம் இடங்களில் ஒன்று மட்டும் சம்மந்தப்பட்டு விட்டாலும் அரசாங்க வேலை அமையும்.

சூரியன், செவ்வாய் இருவரும் இணையாமல் இருந்தாலும் சூரியன், செவ்வாய் இருவரில் ஒருவரை இருவரில் இன்னொருவர் அமர்ந்த ஸ்தான அதிபதி இணைந்துவிட வேண்டும்.

மேலும் இணைந்தவர்கள் இருவரும் இலக்கினம் இராசி இரண்டையும் பார்த்துவிட வேண்டும். அல்லது இலக்கினம் இராசி இரண்டில் ஒன்றையும் 10ஆம் இடங்களில் ஒன்றையும் பார்த்துவிட வேண்டும். இந்த அமைப்புகள் ஜாதகத்தில் இருந்தாலும் அரசாங்க வேலை கிடைக்கும்.

இது தவிர இவர்கள் இருவரும் 10ஆம் அதிபதிகள் இருவரையும் இணைந்து இலக்கினம் அல்லது இராசியை பார்த்துவிட்டாலும் அல்லது இலக்கின அதிபதி இராசி அதிபதி இருவரையும் இணைந்து 10ஆம் இடத்தை பார்த்து விட்டாலும் அரசாங்க வேலை அமையும்.



இதுவரை நாம் பார்த்த அமைப்புகளில் சூரியன், செவ்வாய் இருவரும் அமர்ந்துவிட்டால் அவர்களுக்கு, அரசாங்க வேலை கிடைப்பதற்கு வாய்ப்புகள் இருக்கும்.

ஆனாலும் சூரியன், செவ்வாய் இருவரும் நாம் பார்த்த அமைப்புகளில் இருந்துவிடுவது மட்டுமே ஜாதகருக்கு அரசாங்க வேலையை கொடுத்து விடுவதில்லை.

நாம் பார்த்த அமைப்புகளில் சூரியன், செவ்வாய் இருவரும் இருந்து ஜாதகமும் இராஜயோக வலிமை பெற்றுவிட்டால், கட்டாயமாக அந்த ஜாதகர்களுக்கு அரசாங்க வேலை அமையும்.

இனி எந்த மாதிரியான கிரகநிலைகள் ஜாதகருக்கு இராஜயோகம் கொடுக்கும் என்பதை பார்ப்போம்.

இலக்கினம், இராசி, இலக்கின, 10ஆம் இடம், இராசிக்கு 10ஆம் இடம் ஆகிய இந்த நான்கு ஸ்தானங்களும் ஒரு ஜாதகத்தின் ராஜயோக ஸ்தானங்களாகும். அதே போல் இந்த ஸ்தான அதிபதிகள் நால்வரும் இராஜயோக ஸ்தான அதிபதிகள் ஆவார்கள்.

இராஜயோக ஸ்தான அதிபதிகள் இராஜயோக ஸ்தானத்தில் அமர்வது அல்லது இராஜயோக ஸ்தானத்தில் பரிவர்த்தனை பெறுவது தான் ஜாதகருக்கு இராஜயோகத்தை கொடுக்கும். இராஜயோக ஸ்தான அதிபதிகள் தங்கள் ஸ்தானத்தில் ஆட்சி உச்சம் பெற்று அமர்வது தான் இராஜயோக அமைப்பு என்று எண்ணிவிடக்கூடாது. அது தவறான கருத்தாகும்.

இராஜயோக ஸ்தான அதிபதிகள் எந்த இராஜயோக ஸ்தானத்தில் அமர்ந்தாலும் அந்த இராஜயோகஸ்தானம் வலிமை பெற்றுவிடும். அதே போல் இராஜயோக ஸ்தான அதிபதிகள் 6,8,12ஆம் இடங்களில் அமர்ந்து கூட இராஜயோக ஸ்தானங்களுக்கு பரிவர்த்தனம் பெற்றுவிட்டாலும் அந்த இராஜயோக ஸ்தானங்கள் வலிமை பெற்று விடும்.

இனி இராஜயோக ஸ்தான அதிபதிகள் எந்த மாதிரியான அமைப்பில் ஜாதகத்தில் அமர்வது ஜாதகருக்கு இராஜயோகத்தை கொடுக்கும் என்பதை பார்ப்போம்.

இராஜயோக ஸ்தான அதிபதிகள் நால்வரையும் இருபிரிவாக பிரித்துக் கொள்ள வேண்டும்.

இலக்கின அதிபதி, இராசி அதிபதி இருவரும் ஒரு பிரிவு. இலக்கின 10ஆம் அதிபதி இராசிக்கு 10ஆம் அதிபதி ஆகிய இருவரும் இன்னொரு பிரிவு.

இலக்கின அதிபதி, இராசி, அதிபதி இருவரும் எந்தமாதிரியான அமைப்பில் இருக்க வேண்டும் என்பதை பார்ப்போம்.

இலக்கின அதிபதி, இராசி அதிபதி இருவரும் இராஜயோக ஸ்தானங்களில் ஒன்றில் அமர வேண்டும் அல்லது பரிவர்த்தனை பெற வேண்டும். இருவரும் ஒருவரை மற்றவர் இணையாமல் இருந்தால், இருவரும் ஆளுக்கொரு இராஜயோக ஸ்தானத்தில் அமைர வேண்டும். இராஜயோக ஸ்தானங்களுக்கு நேர் எதிர்கூட அமரலாம். ஆனால் இருவரில் ஒருவர் இராஜயோக ஸ்தானம் எதிலும் அமரவில்லை என்றால் இருவரில் ஒருவர் மட்டும் இலக்கினம் அல்லது இராசியில் அமரவேண்டும். மேலும் 10ஆம் இடங்கள் ஒன்றிலும் அமரவேண்டும். நேர்எதிர் கூட அமரலாம். ஆனால் பரிவர்த்தனை பெற்றால் ராஜயோக ஸ்தானங்களில் தான் பரிவர்த்தனை பெற வேண்டும்.

இதிலும் இருவருமே, இராஜயோக ஸ்தானம் எதிலும் அமரவில்லை என்றால் பரிவர்த்தனை பெறவில்லை என்றால் இருவரும் இணைந்துவிட வேண்டும். இணைந்து ராஜயோக ஸ்தானங்களில் ஒன்றையாவது பார்த்துவிட வேண்டும். மேலும் அவர்கள் அமர்ந்த ஸ்தான அதிபதி இராஜயோக ஸ்தானத்தில் அமரவேண்டும். ஆனால் 10ஆம் அதிபதிகள் இருவருடனும் இணைந்து அமரவேண்டும்.

இனி 10ஆம் அதிபதிகள் இருவரும் எந்த அமைப்பில் இருக்க வேண்டும் என்பதை பார்ப்போம்.

10ஆம் அதிபதிகள் இருவரும் இராஜயோக ஸ்தானங்களில் பரிவர்த்தனை பெற வேண்டும் அல்லது அமர வேண்டும் நேர் எதிர்கூட அமரலாம். 10ஆம் அதிபதிகள் இருவரும் ஒருவரை

மற்றவர் இணையாமல் இருந்தால் இருவரும் ஆளுக்கொரு ராஜயோக ஸ்தானத்தில் அமர வேண்டும். இருவரில் ஒருவர் இராஜயோக ஸ்தானம் எதிலும் அமரவில்லை என்றால் 10ஆம் அதிபதிகளில் ஒருவர் மடடும் இலக்கினம் இராசியில் ஒன்றையும் 10ஆம் இடங்களில் ஒன்றையும் பார்தது விட வேண்டும்.

ஒரு ஸ்தானத்திலாவது அமர்ந்து, நேர்எதிர்கூட அமர்ந்து இன்னொரு ஸ்தானத்தை பார்க்க வேண்டும்.

10ஆம் அதிபதிகள் இருவரும் இணைந்தால் இராஜயோக ஸ்தானங்களில் ஒன்றை பார்த்துவிட்டாலும் போதும். அல்லது 10ஆம் அதிபதிகள் இருவரும் இணைந்துவிட, அவர்கள் அமர்ந்த ஸ்தான அதிபதி மட்டும் இலக்கின அதிபதி இராசி அதிபதி ஆகிய இருவரையும் இணைந்து இராஜ யோக ஸ்தானங்களில் இரண்டை சம்மந்தப்பட்டு விட வேண்டும்.

இது தவிர நாம் இதுவரை பார்த்த அமைப்புகள் ஜாதகத்தில முழுமையாக இருந்தாலும் கூட ஒரு சில ஜாதகங்களுக்கு, இராசிக்கு 10ம் இடம் இலக்கின 10ஆம் இடம், 10ஆம் இடங்கள் இரண்டும், இலக்கினம் இராசிக்கு, 8ஆம் இடமாகவும், 12ம் இடமாகவும் அமைந்துவிடுவது உண்டு. அந்த அமைப்புடைய ஜாதகர்களுக்கு சில விசேஷ நிலையில் இராஜயோக ஸ்தானங்கள் வலிமை பெற்றால் மட்டுமே, அரசாங்க வேலை அமையும்.

நாம் இதுவரை பார்த்த ராஜயோக வலிமைபெற்ற நிலையில் ஜாதகம் இருந்து, சூரியன், செவ்வாய் இருவரும் குறிப்பிட்ட அமைப்புகளில் ஜாதகத்தில் இருந்துவிட்டால் அந்த ஜாதகர்களுக்கு கட்டாயமாக அரசாங்க வேலை கிடைக்கும்.

இவற்றை சில உதாரண ஜாதகங்கள் மூலம் விளக்கமாக பார்ப்போம்

இந்த ஜாதகத்தைப் பாருங்கள் இலக்கின அதிபதி சந்திரன் இராசியில் அமர்கிறார். இராசி அதிபதி சுக்கிரன் இலக்கினம் 10ஆம் இடத்தில் அமர்கிறார். மேலும் இலக்கின 10ஆம் அதிபதி செவ்வாய் இலக்கினத்தில் அமர்கிறார். இராசிக்கு 10ஆம் அதிபதி இராசியில் அமர்கிறார் இராஜயோக ஸ்தான அதிபதிகள் அனைவரும் ஆளுக்கொரு இராஜயோக ஸ்தானத்தில் அமர்ந்துவிட்டார்கள். இது தவிர அரசாங்க வேலை தருபவர்களில் ஒருவரான செவ்வாய் இலக்கினத்தில் அமர சூரியன் 10ஆம் இடத்தில் அமர்ந்து விட்டார். இந்த அமைப்புகள் ஜாதகருக்கு அரசு வங்கியில் வேலையை அமைத்துக் கொடுத்தது.

| | | | |
|---|---|---|---|
| | சுக் சூரி<br>குரு கேது | புத | |
| | | | ல / சனி<br>செவ் |
| | | | |
| | | சந்<br>ராகு | |

இந்த ஜாதகத்தைப் பாருங்கள் இலக்கின அதிபதி செவ்வாய், இராசி அதிபதி சுக்கிரன் இருவரும் இராஜயோக ஸ்தானம் எதிலும் அமரவில்லை. ஆனால் அவர்கள் அமர்ந்த ஸ்தான அதிபதி புதன் இராசியில் ஸ்தானத்திலும் இலக்கினத்திற்கு நேர் எதிரும் அமர்ந்து விட்டார். மேலும் கூடவே இராசியில் இலக்கின 10ம் அதிபதி சூரியனும் நேர் எதிராக இலக்கினத்தில் இராசிக்கு 10ஆம் அதிபதி சனியும் அமர்ந்து விட்டார்கள்.

| | | | |
|---|---|---|---|
| குரு<br>ராகு | | புத சூரி<br>சந் | செவ்<br>சுக் |
| | | | |
| | | | |
| | ல / சனி | | கேது |

அதாவது 10ஆம் அதிபதிகள் இருவரும் இலக்கினம் இராசி இரண்டிலும் அமர்ந்துவிட்டார்கள். இதுபோல் ஜாதகம் இராஜயோகம் வலிமை அமைந்துவிட அரசாங்க வேலை தருபவர்களில் ஒருவரான சூரியன் இலக்கினம் இராசி இரண்டிலும் அமர்ந்துவிட்டார். ஆனால் செவ்வாய் இராஜயோக ஸ்தானம் எதிலும் அமராமல் இருக்க செவ்வாய் அமர்ந்த ஸ்தான அதிபதியான புதன் சூரியனுடன் இணைந்து அமர்ந்துவிட்டார். இந்த அமைப்புகள் தான் இந்த ஜாதகரை இராணுவத்தில் உயர்பதவியில் அமர வைத்தது.

இந்த ஜாதகத்தைப் பாருங்கள் இராசி அதிபதி சனி இராஜயோக ஸ்தானம் எதிலும் அமரவில்லை. ஆனால் இலக்கின அதிபதி செவ்வாய் இலக்கின 10ஆம் இடம் மற்றும் இராசி ஆகிய இராஜயோக ஸ்தானங்கள் இரண்டிற்கு நேர் எதிராக அமர்ந்துவிட்டார். இது தவிர இலக்கின 10ஆம் அதிபதி சனி அவர் இராஜயோக ஸ்தானம் எதிலும் அமரவில்லை. ஆனால் இராசிக்கு 10ஆம் அதிபதியான சுக்ரன் இராசிக்கு 10ம் இடத்தில் அமர்ந்துவிட்டார். மேலும் இலக்கினத்திற்கு நேர் எதிராக அமர்ந்து ஜாதகத்திற்கு இராஜயோக வலிமையை கொடுத்துவிட்டார். இது தவிர அரசு வேலை கொடுப்பவர்களில் ஒருவரான சூரியன் இராஜயோக ஸ்தானம் எதிலும் அமரவில்லை. ஆனால் செவ்வாய் இராஜயோக ஸ்தானங்கள் இரண்டிற்கு நேர் எதிராக அமர்ந்திருக்கிறார். மேலும் சூரியன் அமர்ந்த ஸ்தான அதிபதியும் இராஜயோக இந்த ஜாதகருக்கு ஸ்தானங்கள் இரண்டில் அமர்ந்துவிட்டார்கள் என்ற அமைப்பும் வந்துவிடுகிறது. இந்த அமைப்புகள் தான், அரசு வேலையை பெற்று தந்தது.

| | | | |
|---|---|---|---|
| கேது | ல / | | குரு |
| | | | செவ் |
| சந் | | | சனி |
| | சூரி புத | சுக் | ராகு |

வாழ்க ஜோதிடம்! வளர்க ஜோதிடத்தின் புகழ்!!

ஸ்ரீ வரசித்தி விநாயகர் துணை ஸ்ரீ லட்சுமி வெங்கடேசபிரசன்ன

பெருமை மிக்க உங்களின் பேராதரவோடு சாதனை படைக்க இருக்கும்

# 100வது ஜோதிட பயிற்சி வகுப்பு

## ஆண், பெண் மற்றும் ஆர்வம் உள்ள அனைவரும் கலந்துக் கொண்டு பயன்பெறும் இரண்டு ஜோதிட சூட்சும பயிற்சிகள்

**பயிற்சி: 1 ஜோதிடத்தில் ஏற்றத்தை தரும் ஜோதிட எண் கணிந்த சூட்சுமங்கள்**

**Numerlogoy**

| A | B | C | D | E | F | G | H | I | J | K | L | M | N | O | P | Q | R | S | T | U | V | W | X | Y | Z |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 3 | 5 | 1 | 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 | 1 | 2 | 3 | 4 | 6 | 5 | 6 | 5 | 1 | 7 |

மனிதன் பிறக்கும்போதே, பிறந்த நேரம் என்று எண்ணும், பிறந்த மாதம் என்ற எண்ணும், பிறந்த வருடம் என்ற எண்ணும் உருவாகிறது.

அதேபோல் பிறந்த நேரத்தில் ஜோதிடத்தில் நமக்கு லக்கனம், நட்சத்திரம், ராசி என்று நம் வாழ்க்கையை நிர்ணயம் செய்யும் ஜாதகமும் உருவாகி விடுகிறது.

1. **நாம் வாசம் செய்யும் வீட்டிற்கு எண்கள் உண்டு.**
2. **நாம் வாழும் ஊருக்கு பின்கோடு என்ற எண்கள் உண்டு.**
3. **நாம் பயன்படுத்தும் வாகனத்திற்கு எண்கள் உண்டு.**
4. **நாம் தொடர்புக்கொள்ளும் தொலைபேசிக்கு எண்கள் உண்டு.**
5. **நம்மோடு இருக்கும் செல்போனுக்கு எண்கள் உண்டு.**
6. **நம் வங்கிக் கணக்கிற்கு எண்கள் உண்டு.**

இப்படி நம் வாழ்க்கையோடு ஒன்றிப்போன எண்களை, நமக்கு நிர்ணயம் செய்யப்பட ஜாதகத்தோடு இணைந்து கிடைத்த வாழ்க்கையை வளப்படுத்திக் கொண்டு வளம் பெறும் ஏற்றத்தைத் தரும் ஜோதிட எண் கணித சூட்சுமங்கள் பயிற்சி வகுப்பு

**பயிற்சி : 2 ஜோதிடத்தில் வெற்றிக்கு வழிகாட்டும் பஞ்சபட்சி சூட்சுமங்கள்**



மனித வாழ்க்கையில் எத்தனையோ, நல்ல நேரங்கள், கெட்ட நேரங்கள் வந்து போய்க்கொண்டே இருக்கின்றன. அப்படிப்பட்ட நேரங்களில் காலம் அறிந்து, நேரம் அறிந்து செயல்பட்டால் வெற்றிக்கு வழியுண்டு என்று நம் முன்னோர்கள் பஞ்ச பட்சி சாஸ்திரம் மூலம் கூறியுள்ளார்கள்.

அவரவர்கள் ஜாதகப்படி எந்த, எந்த நேரங்கள், காலங்கள், பலமான நேரங்கள் என்று தெரிந்து வழி வகுத்து பயன்படுத்தி வெற்றி காணும் வெற்றிக்கு வழிகாட்டும் ஜோதிட பஞ்சபட்சி சூட்சுமங்கள் பயிற்சி வகுப்பு.

**காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை**

| திருச்சி 97வது வகுப்பு | மதுரை 98வது வகுப்பு | சேலம் 99வது வகுப்பு | சென்னை 100வது |
|---|---|---|---|
| நாள்: 12.09.2015<br>சனிக்கிழமை<br>**ரவி மினி ஹால்**<br>கலைஞர் அறிவாலயம் அருகில்<br>சத்திரம் பஸ்நிலையம்<br>திருச்சி - 2<br>செல்: 96297 17671 | நாள்:13.09.2015<br>ஞாயிற்றுக்கிழமை<br>**மீனாட்சி மஹால்,**<br>10, மேல மாரட் வீதி,<br>opp.ஜங்ஷன்<br>மதுரை<br>செல்: 96297 17671 | நாள்: 19.09.2015<br>சனிக்கிழமை<br>**ஸ்ரீ வாசவி சுபிட்ஷா ஹால்**<br>சுகவனேஸ்வரன் கோயில்<br>அருகில், சேலம் 636 001<br>செல்: 96297 17671 | நாள்: 20.09.2015<br>ஞாயிற்றுக்கிழமை<br>**ஆஷா நிவாஸ்**<br>ரூட்லேண்டு கேட் 5வது<br>வீதி, எதிர் தாஜ் ஹோட்டல்<br>நுங்கம்பாக்கம்<br>சென்னை 600 006,<br>செல்: 96297 17671 |

குறிப்பேடு, காலை, மாலை தேனீர், மதிய உணவு உள்பட சேவைக்கட்டணம் ரூ.1500 மட்டுமே



நடைமுறை "சூட்சும" ஜோதிடர்

**Dr.G.பட்டாபிராமன்.Ph.d.,**

**தொடர்புக்கு: 96297 17671**

திருமண தசப் பொருத்த சூட்சுமங்கள் பாடபுத்தகம் இலவசமாக வழங்கப்படும்

பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

**கண்டிப்பாக தொலைபேசியில் முன்பதிவு அவசியம்**

# அக்னி சிறகை விரித்து ஆகாயத்தில் மறைந்த

# ஏவுகணை நாயகன் அப்துல் கலாம்

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற தெய்வப் புலவர் திருவள்ளுவரின் வைரவரிகளுக்கு இலக்கணமாய் வாழ்ந்து மறைந்திருக்கிறார் இந்தியக் குடிமகன் APJ அப்துல்கலாம் அவர்கள். எந்த விண்வெளிச் சாதனையால் விண்ணை தொட்டாரோ அதே புகழோடு இந்தியத்தாயின் மலர் பாதங்களில் மண்ணில் கலந்துவிட்டார். சாதாரண ஏழைக்குடும்பத்தில் "சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்" என்ற தேசியக்கவி பாரதி பாடிய புனிதத்தலமான இராமேஸ்வரத்தில் 15.10.1931இல் பிறந்தார். விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதைப் போல ஆரம்பக்கல்வி, மேல்நிலைக்கல்வி உயர்நிலைக்கல்வி என்ற அளவில் முன்னேறி விண்வெளித் துறையில் காலடி வைத்தார். கல்வி பெற்ற காலம் முழுவதும் பொருளாதாரத்திற்கு மிகுந்த சிரமப்பட்டார் என்பதை அவரது வாழ்க்கை வரலாற்றால் அறிகிறோம். அப்படிப்பட்ட கலாம் விண்வெளியில் புதிய ஏவுகணை சாதனைகள் படைத்து உலக அளவில் இந்தியாவின் பலத்தை நிரூபித்தார்.



சாதனைகள் பலசெய்த கலாமுக்கு பட்டங்கள், பதவிகள், விருதுகள் என ஏராளமாய் கிடைத்தாலும் எள்முனை அளவு கூட தற்பெருமையோ, ஆணவமோ அவர் கொள்ளவில்லை. பின்னாளில் நாட்டின் மிக உயர்ந்த பதவியான முதல் குடிமகன் குடியரசுத் தலைவர் பதவி கிடைத்தபோதும் கூட வீண் ஆடம்பரங்களைத் தவிர்த்து எளிமையாக வாழ்ந்து அப்பதவிக்கு சிறப்புச் சேர்த்தார். சக மனிதனை மதிக்கத் தெரிந்தவர் 2020இல் இந்தியா வல்லரசாக வேண்டுமென்ற இலக்குடன் எதிர்கால சிற்பிகளான மாணவ செல்வங்களை சந்தித்து உரையாடி நாட்டுப் பற்றையும், கடின உழைப்பையும், முன்னேற்றத்தையும் வலியுறுத்தி அவர்களிடையே மறுமலர்ச்சியை இறுதி மூச்சுவரை செயல்படுத்தினார்.

இந்தியத் திருநாட்டை தன் உயிராய் நேசித்த கலாம் அவர்கள் இறுதிவரை திருமணம் செய்துக் கொள்ளவில்லை. பெருமையும், புகழும் அவரைத் தேடிவந்தன. அவர் எதையும் தேடிச்




தனுசு கணேசன்
செல்: 94423 07032

செல்லவில்லை. அதனால் இறுதிவரை அவரிடம் எதுவுமில்லை. புகழ் என்ற பொக்கிஷத்தை மட்டுமே பெற்றதனால் புகழுடம்பு எய்தினார். இக்கலிகாலத்தில் இப்படி ஒரு மனிதரா என வியக்கும் அளவிற்கு அவரிடம் இருந்த பணிவு, இரக்கம், எளிமை, பற்றற்ற மனம், தேசப்பற்று, மரியாதை போன்ற ஒப்பற்ற குணங்களை பெற்றதினால் ஜாதி, மதம், இனம் கடந்த இந்திய மக்களின் இதயங்களில் அணையா ஜோதியாய் என்றென்றும் விளங்கினார் எனலாம். இந்தியத் துறவி விவேகானந்தர் உதிர்ந்த பொன் மொழிபோல் முதலில் மனிதனாய் வாழக் கற்றுக்கொள், பின்னர் கடவுளைத் தேடலாம் என்ற வாக்கிற்கிணங்க வாழ்ந்து காட்டிய பெருந்தகை "பாரத் ரத்னா" அப்துல்கலாம் என்றால் மிகையல்ல. அதே வீரத்துறவி சொன்னதைப் போல "இந்த உலகத்தில் பிறந்து வாழ்ந்ததற்கு அடையாளமாக எதையாவது விட்டுச் செல்" என்றதைப் போல் தேசப்பற்று, முயற்சி, கடின உழைப்பு என எல்லாவற்றிற்கும் முன்னோடியாய் வாழ்ந்து காட்டிய பெருமகனார் அப்துல்கலாம் அவர்களின் ஜாதகத்தை சற்று ஆராய்வோம்.

**பிறப்பு : 15.10.1931 கேட்டை 4ஆம் பாதம்**

**ஊர் : இராமேஸ்வரம்**

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | |
| | இராசி அக் — 15 1931 | | ல / குரு |
| | | | |
| சனி | சந் | சுக் செவ் | சூரி புத கேது |

| | | | |
|---|---|---|---|
| சந் | கேது | செவ் | |
| குரு | அம்சம் | | |
| | | | புத |
| ல / சுக் | சனி | ராகு | சூரி |

திருவாளர் அப்துல்கலாம் அவர்கள் பெரும்பாலான பற்றற்ற துறவிகளெல்லாம் பிறவி எடுத்த ஆன்மிக இலக்கினமாக கடகத்தில் அவதரித்து ஞானகாரகன் கேது பகவானின் உச்சவீடான விருச்சிகத்தை ஜென்ம இராசியாக கொண்டு பிறந்தவர். அவர் பிறந்தது முதல் மறைந்தது—வரை வாழ்ந்த அர்த்தமுள்ள வாழ்க்கையை ஆராய்ந்தால் நாம் வாழும் பூமியை தாய்போல் சுற்றி வரும் சந்திரனின் இல்லத்தில் பிறந்து இலக்கினாதிபதி சந்திரன் திரிகோணத்தில் நீச்சம் பெற்ற அமைப்பு இலக்கினாதிபதி திரிகோண ஸ்தானத்தில் அமர்ந்தது ஒருவகையில் பலம் பெற்ற அமைப்பு எனலாம். எவ்வாறெனில் வீடு கொடுத்த செவ்வாய் ஆட்சிபெற்ற சுக்கிரனுடன் இணைந்து இலக்கினாதிபதி நீச்ச பங்கம், மற்றொரு முறையில் சந்திரனின் நட்சத்திர சார அதிபதி புதன் உச்சம் பெற்று அமைந்து சந்திரன் நீச்ச பங்கம் என்ற அளவில் பலம் பெற்றுவிட்டது.

இரண்டாவதாக இலக்கினத்தில் உச்சம் பெற்று அமர்ந்த குரு தனது 5ஆம் பார்வையில் ஜென்ம இராசியையும், இலக்கினாதிபதி சந்திரனையும் பார்வை செய்த யோகநிலை, அவர் தலை சிறந்த அறிவியல் அறிஞராய் உருவானதற்கான காரணம் ஞானத்தை வாரிவழங்கும் குரு பகவானும், கல்வியறிவுக்கு அதிபதி புதனும் வலுவான நிலையில் உச்சம் பெற்று அமைந்தது. மேலும், இலக்கினத்திற்கு 10க்குடையவர் செவ்வாய் ஆகி 10ஆம் இடத்திற்கு கேந்திரத்தில் சுக்கிரனுடன் இணைந்து, 10ஆம் இடத்தை பார்வை செய்வதாலும் 10க்குடையவரின் மற்றொரு வீடான விருச்சிகத்தில் இலக்கினாதிபதி சந்திரன் அமர்ந்ததுமாகும். 9ஆம் இடத்தில் இராகு அமர்ந்து குருவால் பார்க்கப்பட்டதால் இனம் புரியாத கண்டுகொள்ள முடியாத விஞ்ஞான சூட்சுமத்தை தோண்டித் துருவி கண்டு கொள்ள வேண்டுமென்ற ஞானத்தை கேதுவின் உச்ச வீட்டில் அமர்ந்த இலக்கினாதிபதி பெற்றதில் வியப்பென்ன. இதற்கு ஆதாரமாக புகழையும் கீர்த்தியையும் வாரி வழங்கும் 3ஆம் இடத்தில் கேது அமர்ந்து வீடு கொடுத்த புதன் உச்சம் பெறுவதால் உலக அளவில் புகழ் ஏற்படும் என்பது ஜோதிட விதிகளில் முக்கியமானதன்றோ? மேலும் இராஜ கிரகமான சூரியன், புதனுடன் இணைந்து பாக்கிய ஸ்தானத்தை பார்த்து மங்கள புகழைத்தந்ததை மறக்க இயலுமா?

அடுத்ததாக கடின உழைப்பிற்கு கட்டியம் கூறும் சனிபகவான் 3ஆம் பார்வையால் 8ஆம் இடத்தை பார்த்து பூரண ஆயுளையும் 7ஆம் பார்வையில் 12ஆம் இடத்தை பார்த்து ஓய்வில்லா உழைப்பையும், 10ஆம் பார்வையால் ஆத்ம காரகன் சூரியனையும் பார்வை செய்த சிறப்பு புத்திக்கு அதிபதி 5ஆம் இட செவ்வாய் சுக்கிரனுடன் இணைந்து 10ஆம் இடத்தை பார்த்ததால் உழைப்பிற்கு முதலிடம் கொடுத்தார்.

ஆராய்ச்சியில் புதிய புதிய கண்டுபிடிப்புகளை காண வேண்டுமென்று விரும்பினார். மேலும் இசை, கவிதை, கலைகளை ரசித்தார். புத்தகம் எழுதினார். தமிழ் பற்றாளராய் திகழ்ந்தார். திருக்குறள் காட்டிய வழியில் வாழ்ந்தார். இராஜயோக அமைப்பு என ஆராய்ந்தால் பஞ்சமஹாபுருஷ யோகம் என சொல்லப்படுகிற தலைசிறந்த யோகத்தில் முதல் வகை யோகமாக கடக இலக்கினத்தில் திக் பலம் பெற்ற குரு உச்சம் பெற்று அமைந்து உலகில் அழியா புகழைத் தந்தது. மேலும் புதனும், சூரியனும் இணைந்து புத ஆதித்ய யோகம் பெற்று சிறந்த தொழில் நுட்ப ஆராய்ச்சியாளர் ஆனார். எல்லாவற்றிற்கும் மேலாக ஞானகாரகன் கேது பகவான் தனது 3ஆம் பார்வையால் ஜென்ம இராசி, சந்திரனையும், 3ஆம் பார்வையால ஜென்ம இலக்கின குருவையும் பார்த்து ஒரு மனிதனுக்குள்ள குணங்களில் முதன்மை குணமான இரக்கம், கருணையை குறைவா கொடுத்ததால் இரக்கத்தின் ஊற்றாகவே கலாம் அவர்கள் திகழ்ந்தார். கலாம் ஜாதகத்தில்

இந்து இலக்கினம் தனுசாக அமைந்து அதன் அதிபதி குரு உச்சம் பெற்றது நாடாள வைத்தது. இறுதியாக இந்த இலக்கினத்தில் அமர்ந்த சனி தனது 7ஆம் பார்வையால் மோட்ச ஸ்தானத்தை பார்த்து அவரது பிறப்பு எப்படியிருந்தாலும் இறப்பை சரித்திரமாக்கியது எனலாம்.

இப்படி உலகளாவிய மக்களின் பேரன்பையும், மரியாதையையும் பெற்ற கலாம் அவர்களுக்கு அனைத்து சிறப்புகளையும் நீக்கமற வழங்கிய அதே கிரக மூர்த்திகள் அவரின் தனிப்பட்ட வாழ்க்கையில் சில இழப்புகளையும் தந்தன என்பதை ஆராய்ச்சி என்ற கோணத்தில் பார்க்கத்தான் வேண்டும். வாழ்நாள் இறுதிவரை திருமணம் செய்து கொள்ளவில்லை.

ஏனென்றால் பொறுமை, இரக்கம், பணிவு, அன்பு, பற்றற்றநிலை, நீங்காப்புகழ், எளிமை அனைத்தையும் வழங்கிய குருபகவானின் மற்றொரு ஆதிபத்தியம் 6ஆம் இடம் என்பதாலும் அவர் களத்திர ஸ்தானமான 7ஆம் இடத்தையும் உச்சம் பெற்று பார்வை செய்தது, 7க்கரிய சனி 6ஆம் இடத்தில் மறைந்தது. 7ஆம் இடத்தை பாதகாதிபதி சுக்கிரனுடன் இணைந்த செவ்வாய் பார்த்தது 9ஆம் இடத்தில் அமர்ந்த இராகு தனது 3ஆம் பார்வையால் 7ஆம் இடத்தையும், 11ஆம் இடத்தையும் பார்வை செய்தது போன்ற பலகாரணங்களால் களத்திர ஸ்தானம், வெகுவாக பாதிக்கப்பட்டது என்ற அளவில் திருமணம் மறுக்கப்பட்டது. ஆனால் அதற்கு மாறாக, இந்தியாவையும், இந்திய மக்களையும் தன் குடும்பமாய் பாவித்து அவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார்.

மேலும் 9ஆம் இடத்தில் இராகு அமர்ந்து 6க்குடைய குருவால் பார்க்கப்பட்டதாலும், மந்திர ஸ்தானமான 5ஆம் இடத்து செவ்வாய் 5க்கு விரையத்தில் அமர்ந்ததாலும் 3ஆம் இட தைரிய ஸ்தானாதிபதி புதன் உச்சம் பெற்று தைரியக்காரகன் செவ்வாய் பலம் பெற்றதாலும், விஞ்ஞானத்தால் அனைத்தையும் சாதிக்கலாம் என்ற தன்னம்பிக்கையின் விளைவால் அவரது கடவுள் பக்தி பெரிதாக பேசப்படவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அதே சமயம் உச்சம் பெற்ற குருவின் சுப ஆதிபத்தியமான 9ஆம் இடத்தின் பலனாய் விஞ்ஞானத்தில் வெற்றிக் கொடி நாட்டினார். கடமை தவறா கர்மத்தில் கடினமாக உழைத்தவனுக்கு கடவுள் பக்தி இரண்டாம் பட்சம் என்பதை வாழ்ந்து காட்டினார். புத்திரக்காரகர் குரு என்பதாலும் புத்திரஸ்தானத்தை பார்வை செய்ததாலும் பிள்ளைகள் மேல் குறிப்பாக மாணவ மாணவியரிடம் அதிக பிரியம் வைத்திருந்தார். ஆனால் அவரின் தனிப்பட்ட வாழ்க்கையில் அந்த பாக்கியம் கிடைக்கவில்லை என்பதும் அறியத்தக்கது.

இலக்கினாதிபதி சந்திரன் நீச்சம் பெற்று செவ்வாய் மற்றும் சனி இடையே சிக்கி பாப கத்தரி யோகத்தில் இருந்தாலும் கூட இலக்கின யோகர் குரு இராசிக்கும் யோகர் என்ற முறையில் அதிவலுவாய் அமைந்து அருட்பார்வையை சந்திரன் மீது வீசியதால் பாப கிரகங்களான செவ்வாய், சனி இருவரும் தங்கள் காரகத் தன்மையை காட்ட இயலவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இலக்கின கேந்திரத்தில் ஆட்சிபெற்ற சுக்கிரன் திருமண வாய்ப்பை தடுப்பதிலும், கை சொடுக்கினால் சடுதியில் வரும் வசதி வாய்ப்புகளை புறந்தள்ள வைத்த செயல்பாடுகளில் மட்டும் தனது கேந்திர ஆதிபத்திய தோஷத்தை காட்டி, எண்ணற்ற சுகங்களை அனுபவிக்காமல் வெறுக்க வைத்தது எனலாம்.

இராமேஸ்வரம் என்ற தீவில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்து இஸ்ரோ (ISRO)என்ற இந்திய விஞ்ஞானக் கழகத்தில் தலைமை விஞ் ஞானியாய் பணிபுரிந்து அணுகுண்டு சோதனை நடத்தி உலகத்தையே திரும்பி பார்க்க வைத்தார். இந்தியாவின் மிக உயர்ந்த பதவியான ஜனாதிபதி பதவியை அலங்கரித்தார் என்றால் உச்சம் பெற்ற குரு பகவான் கடாட்சத்தை என்னவென்பது உலகிற்கு வழிகாட்டக்கூடிய அவதார புருஷர்களை அரிதாக காணக்கூடிய தற்காலத்தில் நவயுக சிற்பியாய் வாழ்ந்த அப்துல் கலாம் காலத்தில் நாமும் வாழ்ந்தோம் என பெருமை கொள்வோம்.

இறுதியாக அவர் பிறந்த கேட்டை நட்சத்திரத்தில் $7_{1/2}$ சனியின் மூன்றாவது சுற்றில் சந்திரனின் ஆதிக்க தினமான திங்களில் இந்தியாவின் ஏவுகணை நாயகர் அப்துல்கலாம் மண்ணுலக வாழ்வை நீத்து இலக்கின உச்ச குருவின் ஒப்பற்ற தினமான வியாழக்கிழமையில் அவரது பூதஉடல் பிறந்த மண்ணிற்கு உரமானது.

அவர் பிறப்பு முதல் இறப்பு வரை சிற்றின்பங்களை புறந்தள்ளி சித்த புருஷராய் வாழ்ந்து காட்டியதால் சிற்றின்பங்களையே பேரின்பங்களாய் கருதும் நவீன யுகத்தில் கூட அவர் வாழ்ந்த வாழ்க்கை அழியாப் புகழை பெற்றுத் தந்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

எது எப்படியிருப்பினும் பிறவி எடுத்த இலக்கிண அப்பழுக்கற்ற முறையில் நிறைவேற்றி இந்திய மக்களின் குறிப்பாக தமிழக மக்களின் மனங்களில் இறவாப் புகழ் பெற்று மனித இனம் இப்பிரபஞ்சத்தில் உள்ள வரை சாகா வரம்பெற்றுவிட்டார். ஆனால் அவர் விடுத்த அறை கூவலான 2020இல் இந்தியா வல்லரசாகும் என்று தாரகமந்திரத்தை விதைத்தவன் தூங்கினாலும் விதைகள் தூங்குவதில்லை என்ற உறுதியுடன் நாமும் ஒவ்வொருவரும் உழைத்தால் அதுவே அவருக்கு நாம் செலுத்தும் சிறந்த அஞ்சலியாகும்.

**கலாம் அவர்களுக்கு சலாம்.**



ஓம் ஐம் ஹ்ரீம் ஸ்ரீம் அங்காளஈஸ்வரி நமஹ

# சித்தர்கள் அருளிய தெய்வீக
# யந்த்ர, மந்த்ர, தந்த்ர, சித்தயோக பயிற்சிகள்
## வெற்றி நிச்சயம்!




இடம் : **கொல்லிமலை** அரப்பளீஸ்வரர் கோவில் மண்டபம் **பயிற்சியளிப்பவர்** ஆன்மீக ஆசான் (30 வருட அனுபவ மற்றும் ஆராய்ச்சியாளர்)

நாள் : SEPTEMBER 26,27.2015 (சனி, ஞாயிறு) ஸ்வாமி **M.G.P**

## பயிற்சி கட்டணம் – ரூ.4500

**பயிற்சியில் அன்பளிப்பாக வழங்கப்படுபவை**

1. 96 பக்கம் கொண்ட பயிற்சி புத்தகம்
2. ஸ்ரீ மகா மேரு (அ) 9" x 9" கோல்டு பிளேட்டிங் ஸ்ரீ சக்கரம் எந்திரம் (தெய்வ சன்னதியில் சக்தியூட்டப்பட்ட சர்வ சக்தி நிறைந்தது)
4. இரண்டு நாட்களுக்கு மதிய உணவு
5. தங்கும் வசதி

## பயிற்சி கட்டணம் – ரூ.4000

**பயிற்சியில் அன்பளிப்பாக வழங்கப்படுபவை**

1. 96 பக்கம் கொண்ட பயிற்சி புத்தகம்,
2. இரண்டு நாட்களுக்கு மதிய உணவு
3. தங்கும் வசதி

## பயிற்சி காணிக்கை ரூ. 5,500

**பயிற்சியில் அன்பளிப்பாக வழங்கப்படுபவை**

தீட்சைதரப்படும் ( நியதிக்கு உட்பட்டது)

| | |
|---|---|
| 1. 96 பக்கம் கொண்ட பயிற்சி புத்தகம் | - ரூ. 3.000 |
| 2. ஸ்ரீ மகா மேரு (அ) 9" x 9" கோல்டு பிளேட்டிங் ஸ்ரீ சக்கரம் எந்திரம் (தெய்வ சன்னதியில் சக்தியூட்டப்பட்ட சர்வ சக்தி நிறைந்தது) | - ரூ. 2.000 |
| 3. ஸ்படிக மாலை ( தெய்வ சன்னதில் பூஜிக்கப்பட்டது) | - ரூ. 600 |
| 4. இரண்டு நாட்களுக்கு உணவு,டிபன் | - ரூ. 500 |
| 5. தங்கும் வசதி | - ரூ. 600 |
| 6. சுய ஜாதனம் பிரிண்ட் & பலன் (முன்பதிவு செய்பவர்க்கு மட்டும்) | - ரூ. 2.000 |
| 7. நத்தை சூரி மூலிகை ரட்சை (வசிய சக்தி உடையது) | - ரூ. 3.000 |
| அன்பளிப்பு (உத்தேச மதிப்பு) | 11.700 |

**18 வயதிற்கு மேற்பட்ட ஆண்/பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம் பாதுகாப்பான இடவசதி உண்டு, ஜோதிடர்களுக்கு மேலும் ஒரு வரப்பிரசாதம், ஒருவர் ஜாதகத்தை கையில் வாங்கி பிரார்த்தனை செய்தவுடன் அதில் உள்ள நுட்பங்கள் அனைத்தும் உங்களுக்கு தெரியும் அளவிற்கு வாக்குபலிதம் ஏற்படும். கடுமையான நியம நிஷ்டைகள் இல்லை, இரண்டாவது நாள் ஜலபூஜையின்போது இறைசக்தியை நீங்கள் உணரலாம் )**

1) ஓங்காரம் 2)கருட சித்து 3) வக்ரதுண்ட கணபதி 4) அஷ்ட விநாயகர் பூஜா முறை 5) நினைத்ததை தந்திடும் யந்த்ர மந்த்ர தந்த்ர பூஜா முறை 6) சஞ்சீவி மந்திரம் 7) மோகன வேலவன் மந்திரம் 8) மோகனம், வசியம், ஆகர்சனம், உஷ்சாடனம், ஸ்தம்பனம் யந்த்ர மந்த்ர பூஜா முறை 9) எதிரிகளை வெல்லும் வராகி மந்த்ரம் 10)பாமேஸ்வரி மந்த்ரம் 11) தேவதா வசிய, வேதாள வசிய மந்த்ர முறை 12) 100% அனைத்திலும் வெற்றி தரும் மஹா மந்திரம் 13) மோகன கணபதி 14)உச்சிஷ்ட கணபதி 15) பஞ்சமுக சக்திகளை ஆகர்சணம் செய்யும் பஞ்சமுக விஸ்வரூப ஸ்ரீ பஞ்சமுக ஆஞ்சநேயர் பூஜா முறை 16) கடன் தீர்ந்து செல்வம் தரும் ஸ்ரீ சொர்ண ஆகர்சன பைரவர் மந்திரம் 17) காலனை வெல்லக்கூடிய காலபைரவர் மந்திரம் 18) 16 செல்வங்கள் தரும் லங்காஷ்டகம் 19) சித்தர்கள் சாபம் போக்கும் முறை 20)அசாதாரண சக்திகள் தரும் எவராலும் வெல்ல முடியாத அர்க்கள மந்திரம் 21) கோர்ட் வழக்குகளில் வெற்றி தரும் மங்கல சண்டிகா மந்திரம் 22) தட்சிணகாளி மந்திரம் 23) ஸ்ரீ நவதுர்கா மந்திரம் 24) ஸ்ரீ சுதர்சனம், ஸ்ரீ காயத்திரி மந்திரம் மற்றும் **ம்(80 விதமான தோசங்கள் நீக்கி யோகம் தரும் ஜல பூஜை நேரிடை பயிற்சி மட்டும்)** ஸ்வாமி.**M.G.P. அவர்களால் மாணவர்களுக்காகவும் நாட்டு நலனுக்காகவும் கழுத்தளவு நீரில் நின்று ஓடும் நதி நீரில் நின்று இரண்டு மணி நேர ஜல பூஜை செய்யப்படும்.**

**Web.panditmgp.com** **Flicker; swamymgp**

## *பயிற்சியின் பலன்கள்*

1. நினைத்தது நிறைவேறும் 2) எதிரிகள் தானாகவே விலகிடுவர் 3) மற்றவர்கள் மனதில் உள்ளதை அறியலாம் 4) அரசாங்க, அரசியல் நன்மையும், உயர்பதவியும் அடையலாம். 5) தொழில் வசியம், ஜனவசியம், தேவதா வசியம் ஏற்படும் 6) மன அமைதியுடன் வடிய வாழ்க்கை 7) சகல செல்வங்களும் பெறலாம் 8) வாக்குபலிதம் உண்டாகம் 9) எத்தகைய தீய சக்திகளும் நெருங்காது. 10) தெய்வங்கள், தேவதைகளை நெருங்குவதற்கான கதவைத் திறக்கலாம். 11) அசாதாரணமான சக்திகளைப் பெறலாம், சகல தோசங்களும் விலகும். தேகத்தில் பிணிகள் அண்டாது. உத்தியோக உயர்வு பெறலாம். 12) 21 நாட்களில் உறுதியாக இரத்த அழுத்த நோய், சர்க்கரை நோய் கட்டுப்படும். 100% அனைத்திலும் வெற்றி பெறலாம். நாம் விரும்புபவர் நம்மை தேடி வருவர்.

உங்கள் கர்ம வினைகள் நீங்கி புதிய மனநிலையுடன் வெற்றி பெறக்கூடிய மனிதனாக உடல் அளவிலும், மன அளவிலும் வெற்றி வீரராக வீட்டிற்கு திரும்புவீர்கள் என்பது உறுதி,முறையாக பயிற்சி செய்தால் உங்களை யாராலும் வெல்ல முடியாத நிலை ஏற்பட்டு உங்கள் தொழில், வாழ்க்கையில், உறவுகளில் வெற்றியாளராக திகழ்வீர்கள் என்பது உறுதி! இறையருளால் வெற்றி நிச்சயம் இது சத்தியம்.

வாருங்கள் வரவேற்கின்றோம்.

**தொடர்புக்கு**
**G.முனீஸ்வரன்**
**சர்வ சாஸ்திர வித்யா பீடம்**
**34/20A, நாதன் காம்ப்ளக்ஸ், ஸ்கீம்ரோடு, பஸ்டாண்டு, திண்டுக்கல்-3.**

**ரூ. 2000/-செலுத்தி முன்பதிவு செய்து கொள்ளவும்**
G.MUNEESWARAN, Dindigul என்ற பெயருக்கு மணியார்டர் அல்லது D.D.அனுப்பவும்.
முன்பதிவு அவசியம். சுய விருப்பமுடையவர் மட்டும் கலந்து கொள்ளலாம்.
**செல் : 9842140131, 8903551587**

## திருமண முகூர்த்த நல்ல நாள் குறித்திட

# மூல நூல்கள் காட்டிடும் முத்தான வழி முறைகள்


கே.எஸ்.எம்.ஜெய்வேலு
M.A., D.A., M.A., M.Ed., M.A., (ஜோதிடம்)
செல் : 94428 75683


நமது அன்றாட வாழ்வில் எந்த ஒரு செயலைச் செய்யும் போதும் நல்ல நாள் பார்த்து, நல்ல நேரம் அறிந்து, சுப நிலைகளை உணர்ந்து, சூட்சும நிலைகளை தெளிந்து, உறுதியான வெற்றிக்கு, தரமான நிலைகளை பகுத்துப் பார்த்து செய்தால் எடுத்த காரியம் வெற்றி பெறும் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை. ஆண்டாண்டு காலம் அனுபவித்து ஆற்றொனா நிலைகளை அறிந்து நல்வழி வகுத்துக் கொண்டு வாழ்ந்த நம் முன்னோர்கள் நமக்கு கற்றுத் தந்த பாடம், தலைமுறைகள் மாறினாலும் வழிமுறைகள் மாறியதில்லை. இதற்கு எடுத்துக் காட்டாக எவ்வளவோ நிகழ்வுகள் நாம் நம் வாழ்வில் ஒவ்வொருவரும் உணர்ந்து இருக்க முடியும். இதே போன்று திருமணம் என்பதும் ஆயிரம் காலத்துப் பயிர் என்பதையும் அனைவரும் அறிந்ததே! அப்படிப்பட்ட திருமண நிகழ்வை அறைகுறை நிலையோடு அவசரக் கோலத்தோடு நிகழ்த்தி விட்டு வாழ்நாள் முழுவதும் வதைப்பட்டு, சிதைந்து விடும் குடும்பங்களின் துயரம் துடைக்க முடியாமல் துவண்டு விடுவது அன்றாடம் நிகழும் அவலங்கள்.

இன்றைய விஞ்ஞானிகள் யுகத்தில் மாறுபட்ட நிலையில் திருமணங்கள் நடைபெற்று குறைந்த கால இடைவெளியில் குடும்பம் நடத்தி விட்டு விவாகரத்துக்கு விடை தேடிக்கொண்டு இருப்பது, குடும்ப நல கோர்ட்டுகளில் குவிந்துக் கொண்டு இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கையே இதற்கு நற்சான்று இது போன்ற அவல நிலைகளை தவிர்ப்பதற்கு மூல நூல்களில் சிறந்த வழிகாட்டுதல்கள் குவிந்துக் கிடக்கின்றன. அவைகளை சீரிய முறைகளில் திறனாய்வு செய்து சீர்தூக்கிப் பார்த்து செயல்பட்டால் தோல்விக்கு வழியின்றி வெற்றிக்கு வழி வகுத்திடும்.

திருமணப் பொருத்தம் பார்ப்பதிலும் எண்ணற்ற வழிமுறைகள், கணக்கற்ற எண்ணிக்கையில் கால நிலைக்கு ஏற்ப மாறுபடாமல் மூலநூல்கள் இன்றும் நமக்கு வழி காட்டுகின்றன என்பது மறுக்க முடியாத உண்மை. இதே போன்று திருமண முகூர்த்தத்திற்கு நல்ல நாள் குறிப்பதிலும் எண்ணற்ற வழிமுறைகள் வகுக்கப்பட்டு வழங்கி உள்ளனர். அவற்றை தீர ஆராய்ந்து திறம்பட செயல்பட்டால் எதிர்கால வாழ்க்கைக்கு ஏற்றம் காண வழி மலர்ச்சி காணலாம். திருமண முகூர்த்தத்துக்கு நல்ல நாள் குறிக்க மூலநூல்கள் வழி காட்டும் சில அணுகுமுறைகளைச் சற்று அலசிப் பார்க்கலாம்.

**நாள்:** செவ்வாய், சனி தவிர ஏனைய நாட்களில் செய்யலாம்.

**மாதம்:** ஆடி, புரட்டாசி, மார்கழி, மாசி தவிர ஏனைய மாதங்களில் செய்யலாம். (கால விதான பததி விதி 132—134)

**திதி:** துதியை, திருதியை, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி திரயோதசி

**நட்சத்திரங்கள்:** அஸ்தம், ரோகிணி, உத்திரம், உத்திராடம், மிருகசீரிடம், மகம், மூலம், அனுசம், உத்திரட்டாதி, சுவாதி இங்கு குறிப்பிட்ட நட்சத்திரங்கள் மணமகன், மணமகள் ஆகிய இருவருடைய நட்சத்திரங்கட்கு ஏற்ற நட்சத்திரத்தை குறிக்கும். இதை ஜோதிடர்கள் தாரா பலன் என்பார்கள்.

**தாராபலன்:** கர்நாடகம், ஆந்திரா பகுதிகளிலும் வடநாடு ஜோதிடர்களும் ஆணின் நட்சத்திரத்திலிருந்து பெண்ணின் நட்சத்திரத்தை எண்ணி வரும் பொழுது வேறுபாடு 2,4,6,8,9,11,13,15, 18,20,24,26,27 எனில் அதை தாராபலன் என்பார்கள். ஆனால் தமிழகத்தில் ஜோதிடர்களும், ஜோதிட நூல்களிலும் பெண்ணின் நட்சத்திரத்தில் இருந்து ஆணின் நட்சத்திரத்தை எண்ணி வரும் பொழுது பெண்ணின் நட்சத்திரத்திலிருந்து ஆணின் நட்சத்திரம் 2,4,6,8,9,11,13,15,17,18,20,22,24,26,27 எனில் தாராபலன் உள்ளது என அறியலாம் இதை கீழ்கண்ட அட்டவணை மூலம் அறியலாம்.

# சுத்த திருக்கணித சர்வமுகூர்த்த பஞ்சாங்கம்

| நட்சத்திர தாராபலன் அட்டவணை | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அன்றைய நடப்பு நட்சத்திரம் | | | | | | | | |
| ஜென்ம கால நடசத்திரம் | அஸ்வினி மகம் மூலம் | பரணி பூரம் பூராடம் | கிருத்திகை உத்திரம் உத்திராடம் | ரோகிணி அஸ்தம் திருவோணம் | மிருகசீரிஷம் சித்திரை அவிட்டம் | திருவாதிரை சுவாதி சதயம் | புனர்பூசம் விசாகம் பூரட்டாதி | பூசம் அனுஷம் உத்திரட்டாதி | ஆயில்யம் கேட்டை ரேவதி |
| அசுவனி மகம் மூலம் | ஜென்மம் | சம்பத்து | விபத்து | க்ஷேமம் | பிரத்தியக்கு | சாதகம் | வதை | மைத்திரம் | பரம மைத்திரம் |
| பரணி பூரம் பூராடம் | பரம மைத்திரம் | ஜென்மம் | சம்பத்து | விபத்து | க்ஷேமம் | பிரத்தியக்கு | சாதகம் | வதை | மைத்திரம் |
| கிருத்திகை உத்திரம் உத்திராடம் | மைத்திரம் | பரம மைத்திரம் | ஜென்மம் | சம்பத்து | விபத்து | க்ஷேமம் | பிரத்தியக்கு | சாதகம் | வதை |
| ரோகிணி அஸ்தம் திருவோணம் | வதை | மைத்திரம் | பரம மைத்திரம் | ஜென்மம் | சம்பத்து | விபத்து | க்ஷேமம் | பிரத்தியக்கு | சாதகம் |
| மிருகசீர்ஷம் சித்திரை அவிட்டம் | சாதகம் | வதை | மைத்திரம் | பரம மைத்திரம் | ஜென்மம் | சம்பத்து | விபத்து | க்ஷேமம் | பிரத்தியக்கு |
| திருவாதிரை சுவாதி சதயம் | பிரத்தியக்கு | சாதகம் | வதை | மைத்திரம் | பரம மைத்திரம் | ஜென்மம் | சம்பத்து | விபத்து | க்ஷேமம் |
| புனர்பூசம் விசாகம் பூரட்டாதி | க்ஷேமம் | பிரத்தியக்கு | சாதகம் | வதை | மைத்திரம் | பரம மைத்திரம் | ஜென்மம் | சம்பத்து | விபத்து |
| பூசம் அனுஷம் உத்திரட்டாதி | விபத்து | க்ஷேமம் | பிரத்தியக்கு | சாதகம் | வதை | மைத்திரம் | பரம மைத்திரம் | ஜென்மம் | சம்பத்து |
| ஆயில்யம் கேட்டை ரேவதி | சம்பத்து | விபத்து | க்ஷேமம் | பிரத்தியக்கு | சாதகம் | வதை | மைத்திரம் | பரம மைத்திரம் | ஜென்மம் |

**அட்டவணையை பயன்படுத்தும் முறை:**

1. *முதலில் பெண்ணின் நட்சத்திரத்திலிருந்து ஆணின் நட்சத்திரத்தை எண்ண வேண்டும்.*
2. *அதை 9ஆல் வகுக்க வேண்டும்.*
3. *விபத்து 4 க்ஷேமம் (அ) சுகம் 5 பிரத்தியரம் 6 சாதகம் (அ) நன்மை 7 வதை 8 மைத்திரம் 9 பரம மைத்திரம் எனப்படும்.*
4. *இதில் ஜென்மம் விபத்து, பிரத்தியரம் வதை ஆகியவைகளில் திருமணம் செய்யக் கூடாது.*
5. *இந்த அட்டவணையில் மணமகள் மணமகன் நட்சத்திரங்களை இடது பக்கம் (அ) முதலில் தந்துள்ளார்கள். அன்றைய நட்சத்திரம் என்பதை அடுத்து தந்துள்ளார்கள். அன்றைய நட்சத்திர நிலை என்பது திருமணம் செய்யும் காலத்தில் வரும் நட்சத்திரத்தை குறிக்கும்.*

**விதி விலக்கு:** தற்பொழுது மணமகனோ, மணமகளோ வெளிநாட்டில் பணிபுரிந்து குறுகிய கால விடுமுறையில் வந்து திருமணம் செய்ய வேண்டிய நிலையில் இருப்பார்கள் அல்லது மணமகன் (அ) மணமகள் வீட்டில் வயதானவர்கள் உடல் நலகுறைவால் உடனடி திருமணத்தை விரும்புவார்கள். அதை எண்ணி நமது முன்னோர்கள் மணமகன், மணமகள் இருவருக்கும் தாரா பலன் இல்லை என்றாலும் கீழ்க்கண்ட

நட்சத்திரங்கள் திருமண நாளில் வந்தால் திருமணம் செய்யலாம் என குறிப்பிட்டுள்ளார்கள். மிருகசீரிடம், மகம், சுவாதி, அனுசம், நட்சத்திரங்களில் தாராபலன் இல்லாவிட்டாலும் திருமணம் செய்யலாம் என கால விதான பததி விதி 140 கூறுகிறது.

**விவாக சக்கரம்**

திருமண நட்சத்திரம் சூரியன் அடிப்படையில் என்ன பலனைத் தருகிறது என காலவிதான பத்ததி கீழ்கண்டவாறு குறிப்பிடுகிறது.

| | | |
|---|---|---|
| | | |
| | சூரியன் உள்ளது | |
| | | |

1. திருமணம் செய்யும் நாளில் சூரியன் உள்ள நட்சத்திரத்தை நடு கட்டத்தில் குறிக்க வேண்டும்.

2. அடுத்து மற்ற நட்சத்திரங்களை அம்புகுறி (Clockwise) இட்டபடி குறிக்க வேண்டும்.

3. பிறகு சந்திரன் உள்ள நட்சத்திரத்தை அறிய வேண்டும்.

4. அதற்குரிய பலன்களை கீழ்கண்ட எடுத்துக்காட்டின் மூலம் அறியலாம்.

திருமண நாள் : 14.04.2013 சித்திரை —1

நேரம் : காலை 7½ — 9

சந்திரன் உள்ள நட்சத்திரம் : அஸ்வினி

கிழக்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ஈசானம் | அஸ்தம் சித்திரை சுவாதி | விசாகம் அனுசம் கேட்டை | மூலம் பூராடம் உத்திராடம் | அக்னி |
| வடக்கு | மகம் பூரம் உத்திரம் | சூரியன் அசுவணி பரணி கிருத்திகை | திருஓணம் அவிட்டம் சதயம் | தெற்கு |
| வாயு | புனர்பூசம் பூசம் ஆயில்யம் | ரோகிணி மிருகசீரிடம் திருவாதிரை | பூரட்டாதி உத்திரட்டாதி ரேவதி | கன்னி |

மேற்கு

1. விவாக நட்சத்திரம் மத்தியில் இருந்தால் மணமகள், மணமகன் குடும்பத்தினருக்கு ஆகாது.
2. கிழக்கு பாகத்தில் இருந்தால் செல்வம் செழிக்கும்.
3. அக்னி மூலையில் இருந்தால் மணமகன் குடும்பத்திற்கு ஆகாது.
4. ஈசானத்தில் இருந்தால் நல்ல பலன் உண்டு.
5. வடக்கு திசையில் 3 நட்சத்திரத்தில் ஒன்று எனில் தனலாபம், புத்திரபாக்கியம் உண்டு.
6. வடமேற்கு பகுதி எனில் அபிசாரம் ஆகும்.
7. மேற்கு பகுதி திருமண நட்சத்திரத்தில் இருந்தால் வைதய்யம்.
8. நைனாதி (அ) தென்கிழக்கு பகுதியில் 3 நட்சத்திரத்தில் ஒன்று திருமண நட்சத்திரம் எனில் சகல செல்வம் உண்டு.
9. தெற்கில் உள்ள 3 நட்சத்திரங்களில் ஒன்றாக திருமண நட்சத்திரம் எனில் வறுமை ஆகும்.

மேற்கண்ட எடுத்துக்காட்டில் வரும் ரேவதி சூரியனுடைய கட்டத்தில் மணமகன், மணமகள் குடும்பத்திற்கு ஆகாது. இதே போல எந்த திருமணம் நாள் குறிக்கும்பொழுதும் சூரிய சந்திர நட்சத்திரத்தின் அடிப்படையில் பலனை அறியலாம். இதை கீழ்கண்ட கட்டத்தின் மூலம் சூரியன் உள்ள நட்சத்திரம், சந்திரன் உள்ள நட்சத்திரம் மூலம் ஏற்படும் பலனை அறியலாம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வடகிழக்கு (அ) ஈசானம் | பெண் சகல சௌபாக்கியம் | செல்வம் | மணபெண் குடும்பத்திற்கு ஆகாது | அக்னி(அ) தென்கிழக்கு |
| வடக்கு | தனம் செல்வம் | சூரியன் உள்ள நட்சத்திரம் இரு குடும்பத்திற்கு ஆகாது | வறுமை வைதவ்யம் | தெற்கு |
| வடமேற்கு (அ) நைனாதி | வியபிசாரம் | வைதவ்யம் | சகல செல்வம் | தென் மேற்கு |

மேற்கு

**இலக்கினம்**

1. துலாம், மிதுனம், கன்னி, கும்பம், தனுசு, ரிஷபம், கடகம் ஆகிய இராசிகளில் இலக்கினமானால் திருமணம் செய்யலாம்.

மற்ற இராசிகளான மேஷம், விருச்சிகம், சிம்மம், மகரம், மீன இராசிகளில் சுப கிரகங்கள் இருக்கும்பொழுது அதை இலக்கினமாகக் கொண்டு திருமணம் செய்யலாம்.

2. ஊர்தவ முக இராசிகளாகிய இராசிகள் இலக்கினமாக வரும் பொழுது திருமணம் செய்யலாம்.

**கிரக நிலைகள்**

1.4.7.10.4.5 ஆகிய இடங்களில் வளர்பிறை சந்திரன், குரு, சுக்கிரன், தனித்த புதன் இருக்க வேண்டும்.

- 7இல் எந்த கிரகமும் இருக்கக்கூடாது.
- 6, 8இல் புதன் சுக்கிரன் கூடாது.
- குரு (அ) சுக்கிரன் 8இல் கூடாது.
- பாபர்கள் 3,6,11இல் இருக்க வேண்டும்.

**விதிவிலக்குகள் :** சில நேரங்களில் அதுவும் வெளிநாடுகளுக்கு செல்லும் ஆண் பெண்கள் அவசரமாக திருமணம் செய்ய வேண்டும் என்னும் நிர்பந்தமாக நாள், நட்சத்திரம், திதி போன்றவைகள் சரியாக அமையாவிட்டால் அதற்கு கீழ்கண்ட விதிவிலக்குகளை காலவிதான பத்ததி கூறுகிறது.

**நாள்:** சனி, செவ்வாய் திருமணம் செய்யக் கூடாது. ஆனால் செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் விடியல் காலை 4½ — 6 மணி என்னும் பிரம்ம

முகூர்த்தத்தில் செய்யலாம். (139 கால விதானபத்ததி) திதிதோஷம் — அதே போல விடியற்காலை 4 1/2 — 6 மணிக்கு செய்யும் தி—ருமணத்திற்கு திதி தோஷம் இல்லை.

**நட்சத்திர தோஷம் :** பகல் 12 மணிக்கு செய்யும் திருமணத்திற்கு நட்சத்திர தோஷம் இல்லை. மேலும் மணமகன், மணமகள் இருவருடைய 27வது நட்சத்திரம்.

| | | |
|---|---|---|
| **22** | **நட்சத்திரம்** | **வைதவ்யம்** |
| **3** | **நட்சத்திரம்** | **விபத்து** |
| **7** | **நட்சத்திரம்** | **வதம்** |
| **5** | **நட்சத்திரம்** | **பிரத்தியாகு** |

திருமணம் செய்யக்கூடாது என்பது விதி. ஆனால் இவர்கள் சுவாதி, மிருக சீரிஷம், மகம், அனுசம், நட்சத்திரத்தில் திருமணம் செய்யலாம் என்கிறது காலவிதான பத்ததி 140 பாடல்

**சகல தோஷங்களையும் போக்கும் நிலைகள்**

திதியை விட கிழமையும், கிழமையை விட நட்சத்திரமும், நட்சத்திரத்தை விட இலக்கினமும் பலமானது. எனவே இலக்கினத்தில் குரு அல்லது சுக்கிரன் இருந்தால் சகல தோஷமும் போகும்.

இலக்கினத்தில் சுக்கிரன் 1000 தோஷங்களையும் இலக்கினத்தில் புதன் 1000 தோஷங்களையும் போக்கும். இலக்கினத்தில் குரு 3 இலட்சம் தோஷங்களையும் போக்கும்.

குரு 1,4,7,10இல் இருந்தால் எல்லா தோஷமும் போகும். (145 காலப்பிரபத்தாதி)

கேந்திரத்தில் குரு (அ) புதன் (அ) சுக்கிரன் இருந்தால் சகல தோஷமும் போகும். (146 காலப்பிரத்தாதி)

திரிகோணங்களில் 1,5,9இல் குரு (அ) புதன் (அ) சுக்கிரன் இருந்தால் சகல தோஷமும் போக்கும்.

அபிஜித் முகூர்த்தம் நண்பகல் 12 மணிக்கு தாலி கட்டுவது திதி—வாரம்—நட்சத்திரம் —யோகம்— கர்ணம்—கிரக நிலைகள் ஆகிய தோஷங்களை போக்கும்.

**கோதூளி இலக்கினம் :** சூரியன் உதயமாகும் (அ) மறையும் காலமாகிய விடியல், மாலை நேரங்களில் செய்யும் திருமணத்திற்கு தோஷம் இல்லை.

**பலமணம்:** ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர்களுக்கு ஒரே நேரத்தில் திருமணம் செய்யக்கூடாது. ஒருவருக்கு திருமணம் நடந்து 90 நாட்களுக்குப் பிறகு மற்றவருக்கு திருமணம் செய்யலாம்.

சில சமயங்களில் ஒருவர் இறக்கும் நிலையில் இருக்கும் பொழுதும் ஒருவருக்கு ஒரு வீட்டிலும் மற்றவருக்கு மற்ற வீட்டிலும் தனித்தனி புரோகிதரை வைத்து திருமணம் செய்யலாம். (210 கால விதான பத்தாதி)

மகன், மகள் திருமணம் ஒரே நேரத்தில் செய்தால் குலநாசமாகும். எனவே மகன் (அ) மகளுக்கு திருமணம் நடத்தி 6 மாதத்திற்கு பிறகு மற்றவர்களுக்கு திருமணம் செய்ய வேண்டும். (246)

**பஞ்சகம் பார்த்தல்:** திருமண நாள் குறிக்கும். பொழுது பஞ்சகம் பார்க்கும் முறை உண்டு. அதை கீழ்கண்டபடி பார்க்க வேண்டும்.

**நாள்:** முதலில் ஞாயிறு முதல் திருமணம் செய்யும் நாள் வரை உள்ள இடைப்பட்ட நாளின் எண்ணிக்கையை குறித்துக் கொள்ள வேண்டும்.

**திதி:** பிரதமை திதி முதல் திருமண திதி வரையிலுள்ள எண்ணிக்கையை குறித்து கொள்ள வேண்டும்.

**நட்சத்திரம்:** அசுவணி முதல் திருமண நட்சத்திரம் வரையிலுள்ள எண்ணிக்கையை குறித்துக் கொள்ள வேண்டும்.

**இலக்கின துருவம்: திருமண இலக்கினம்**

மேஷம்: 5, ரிஷபம்: 7, மகரம்: 2, கும்பம்: 4, மீனம்: 6 என்ற எண்களை பிரதியிட்டு கொள்ள வேண்டும்.

பிறகு நாள், திதி, நட்சத்திரம், இலக்கினம், இலக்கின துருவ எண் ஆகியவைகளின் மொத்த எண்ணிக்கைகளை கூட்டிக் கொள்ள வேண்டும். அந்த மொத்த தொகையை 9ஆல் வகுக்க வேண்டும். வரும் மீதி

1 எனில் மிருத்யூ பஞ்சகம் ஆகும்.
2 எனில் அக்னி பஞ்சகம் ஆகும்.
3. எனில் எல்லா செயலுக்கும் உரிய பஞ்சகம்.
4 எனில் இராஜ பஞ்சகம்.
5 எனில் எல்லா செயலுக்கும் உரியது.
7 எனில் எல்லா செயலுக்கும் உரியது.
6 எனில் சோர பஞ்சகம்.
8 எனில் ரோக பஞ்சகம்.

இதில் பகலில் செய்யும் காரியங்களுக்கு அக்னி, இராஜ பஞ்சகமும், இரவில் ரோக பஞ்சகமும் ஆகாது. மேஷம் திருமணம் செய்ய மிருத்யு பஞ்சகமும், விரு சம்பந்தப்பட்டத்திற்கு அக்னி சகமும், விடுராஜபஞ்சகமும், பயணத்திற்கு சோர பஞ்சகமும் ஆகாது. மேற்படி கருத்தின்படி எடுத்துக்காட்டு திருமண நாட்குறிப்பு தவறானது என்று அறியப்படுகிறது.

**விதிவிலக்கு:** சில சமயங்களில் இந்த பஞ்சகங்களில் அச்செயலை செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டால் கீழ்க்கண்ட பரிகாரங்களை செய்த பின்பு அச்செயலை செய்யலாம்.

| | |
|---|---|
| **அக்னி பஞ்சகம்** | **: சந்தன குழம்பு தானம்** |
| **இராஜ பஞ்சகம்** | **: எலுமிச்சபழம் தானம்** |
| **சோர பஞ்சகம்** | **: தீப விளக்கு தானம்** |
| **ரோக பஞ்சகம்** | **: தானியம் தானம்** |

எனவே திருமண நாள் குறிக்கும் பொழுது விதி, மதி, கதி எனக் குறிக்கப்படும் இலக்கினம் தாரா பலன், சூரியன் நிலை, சூரியன் சந்திரனின் நிலைகளால் ஏற்படும் நாள், யோகம், திதி போன்றவைகளையும் அதற்கான விதிவிலக்குகளும் பஞ்சகமும் பார்த்து இலக்கினம் குறிக்கலாம். இதுபோன்ற முத்தான வழிமுறைகள் மூலநூல்களில் இருந்து தேர்வு செய்து நடைமுறையில் செயல்படுத்தி பார்த்தால் தீர்க்கமான முடிவுகளை திறம்பட உணரமுடியும். ■

# மன்மத வருஷத்திய திருவருள் **சக்தி** சுத்த திருக்கணித பஞ்சாங்கம்

| தமிழ் தேதி | ஆங்கில தேதி | கிழமை | திதி | மணி | நிமிடம் | ◈ | நட்சத்திரம் | மணி | நிமிடம் | ◈ | நாமயோகம் | மணி | நிமிடம் | ◈ | கரணம் | மணி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | செப் 1 | செ | திரு | 1 | 25 | ப | உதி | 7 | 13 | ப | சூல | 5 | 49 | அ | வணி | 3 |
| 16 | 2 | பு | சது | 10 | 48 | ப | ரே | 4 | 48 | அ | கண்<br>விரு | 2<br>10 | 03<br>37 | அ<br>இ | பால | 10 |
| 17 | 3 | வி | பஞ் | 7 | 37 | ப | அசு | 2 | 48 | அ | துரு | 7 | 37 | இ | தை | 7 |
| 18 | 4 | வெ | சஷ் | 5 | 29 | அ | பர | 1 | 19 | அ | வியா | 5 | 01 | ப | வணி | 5 |
| 19 | 5 | சனி | சப் | 3 | 56 | அ | கிரு ✶ | 12 | 25 | அ | ஹர் | 2 | 58 | ப | பவ | 3 |
| 20 | 6 | ஞா | அஷ் | 3 | 03 | அ | ரோ | 12 | 09 | அ | வஜ் | 1 | 26 | ப | கௌ | 3 |
| 21 | 7 | தி | நவ | 2 | 48 | அ | மிரு | 12 | 32 | அ | சித் | 12 | 25 | ப | கர | 2 |
| 22 | 8 | செ | தச | 3 | 11 | அ | திரை | 1 | 31 | அ | விய | 11 | 52 | ப | பத் | 3 |
| 23 | 9 | பு | ஏகா | 4 | 09 | அ | புன | 3 | 04 | அ | வரீ | 11 | 44 | ப | பால | 4 |
| 24 | 10 | வி | துவா | 5 | 36 | அ | பூச | 5 | 06 | அ | பரி | 11 | 59 | ப | தை | 5 |
| 25 | 11 | வெ | திர | 7 | 30 | ப | ஆயி | 7 | 33 | ப | சிவ | 12 | 32 | ப | வணி | 7 |
| 26 | 12 | சனி | சசி | 9 | 43 | ப | மக | 10 | 20 | ப | சித் | 1 | 20 | ப | சகு | 9 |
| 27 | 13 | ஞா | அமா ● | 12 | 12 | ப | பூர | 1 | 20 | ப | சாத் | 2 | 18 | ப | நா | 12 |
| 28 | 14 | தி | பிர | 2 | 49 | ப | உத் | 4 | 29 | ப | சுப | 3 | 22 | ப | கிம் | 1 |
| 29 | 15 | செ | துதி | 5 | 29 | ப | அஸ் | 7 | 38 | இ | சுப் | 4 | 28 | ப | பால | 4 |
| 30 | 16 | பு | திரு | 8 | 02 | இ | சித் | 10 | 42 | இ | பிரா | 5 | 29 | ப | தை | 6 |
| 31 | 17 | வி | சது | 10 | 21 | இ | – | – | – | – | ஐந்<br>விஷ் | 6<br>11 | 20<br>44 | இ<br>இ | வணி | 9 |
| 1 | செப் 18 | வெ | – | – | – | – | சுவா | 1 | 31 | அ | வை | 6 | 54 | இ | பவ | 11 |
| 2 | 19 | சனி | பஞ் | 12 | 17 | அ | விசா | 3 | 56 | அ | விஷ் | 7 | 05 | இ | பால | 12 |
| 3 | 20 | ஞா | சஷ் | 1 | 40 | அ | அனு | 5 | 49 | அ | பிரீ | 6 | 47 | இ | தை | 1 |
| 4 | 21 | தி | சப் | 2 | 24 | அ | கே | 7 | 03 | ப | ஆயு | 5 | 55 | ப | வணி | 2 |
| 5 | 22 | செ | அஷ் | 2 | 24 | அ | மூல | 7 | 33 | ப | சௌ | 4 | 26 | ப | பவ | 2 |
| 6 | 23 | பு | நவ | 1 | 37 | அ | பூரா | 7 | 18 | ப | சோ | 2 | 21 | ப | கௌ | 1 |
| 7 | 24 | வி | தச | 12 | 05 | அ | உத் | 6 | 18 | ப | அதி | 11 | 41 | ப | கர | 12 |
| – | – | – | ஏகா | 9 | 51 | இ | – | – | – | – | – | – | – | – | – | – |
| 8 | 25 | வெ | துவா | 7 | 01 | இ | திஒ | 4 | 38 | அ | சுக | 8 | 29 | ப | பவ | 8 |
| 9 | 26 | சனி | திர | 3 | 44 | ப | அவி | 2 | 25 | அ | திரு | 4 | 50 | அ | கௌ | 5 |
| – | – | – | – | – | – | – | சத | 11 | 47 | இ | – | – | – | – | – | – |
| 10 | 27 | ஞா | சசி | 12 | 07 | ப | பூதி | 8 | 53 | இ | சூல | 12 | 52 | அ | கர | 1 |
| – | – | – | – | – | – | – | – | – | – | – | கண் | 8 | 41 | இ | – | – |
| 11 | 28 | தி | பௌ○ | 8 | 21 | ப | உதி | 5 | 54 | ப | விரு | 4 | 25 | ப | பவ | 8 |
| 12 | 29 | செ | பிர | 4 | 35 | அ | ரே | 3 | 00 | ப | துரு | 12 | 13 | ப | கௌ | 4 |
| 13 | 30 | பு | துதி | 1 | 00 | அ | அசு | 12 | 21 | ப | வியா | 8 | 13 | ப | கர | 1 |
| – | – | – | திரு | 9 | 44 | இ | – | – | – | – | – | – | – | – | – | – |

◈ அ = நள்ளிரவு மணி 12.01 முதல் அதிகாலை மணி 6.00 வரை; ப = காலை மணி 6.01 முதல் மாலை மணி 6.00 வரை; இ = இரவு மணி 6.00 முதல் நள்ளிரவு மணி 12.00 வரை என பொருள்படும். திதி, நட்சத்திரம், யோகம், கரணம் போன்றவை மேலே குறித்துள்ள நேரம் வரை இருக்கும்.

# 2015 செப்டம்பர் மாதம் திருக்கணித பஞ்சாங்கம்

| நிமிடம் | ◈ | கரணம் | மணி | நிமிடம் | ◈ | நேத்திரம் | ஜீவன் | அமிர்தாதி யோகம் | இலக்கின இருப்பு மணி | இலக்கின இருப்பு நிமி | சிரார்த்த திதி |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 06 | அ | பத்<br>பவ | 1<br>11 | 25<br>48 | ப<br>இ | 2 | 1 | அ/சி | 1 | 04 | திரு<br>சது |
| 18 | ப | கௌ | 8 | 54 | இ | 2 | 1 | ம/சி | 1 | 00 | பஞ் |
| 37 | ப | கர | 6 | 28 | இ | 2 | 0 | சி/ம | 0 | 56 | சஷ் |
| 29 | அ | பத் | 4 | 38 | ப | 2 | 1/2 | சி/ம | 0 | 52 | சப் |
| 56 | அ | பால | 3 | 25 | ப | 1 | 1/2 | அ/சி | 0 | 48 | அஷ் |
| 03 | அ | தை | 2 | 51 | ப | 1 | 1/2 | சி | 0 | 45 | நவ |
| 48 | அ | வணி | 2 | 55 | ப | 1 | 1/2 | சி/அ | 0 | 41 | தச |
| 11 | அ | பவ | 3 | 36 | ப | 1 | 1/2 | சி | 0 | 37 | ஏகா |
| 09 | அ | கௌ | 4 | 49 | ப | 0 | 1/2 | சி | 0 | 33 | துவா |
| 36 | அ | கர | 6 | 30 | இ | 0 | 1/2 | சி | 0 | 29 | திர |
| 30 | ப | பத் | 8 | 34 | இ | 0 | 1/2 | ம | 0 | 25 | சசி |
| 43 | ப | சது | 10 | 56 | இ | 0 | 0 | அ/சி | 0 | 21 | அமா |
| 12 | ப | – | – | – | – | 0 | 0 | சி/அ | 0 | 17 | பிர |
| 30 | அ | பவ | 2 | 49 | ப | 0 | 0 | சி | 0 | 13 | – |
| 09 | அ | கௌ | 5 | 29 | ப | 0 | 0 | சி | 0 | 09 | துவி |
| 47 | ப | கர | 8 | 02 | இ | 0 | 1/2 | சி | 0 | 05 | திரு |
| 14 | ப | பத் | 10 | 21 | இ | 0 | 1/2 | அ/சி | 0 | 01 | – |
| 23 | ப | – | – | – | – | 1 | 1/2 | சி | 1 | 59 | – |
| 17 | அ | கௌ | 1 | 03 | ப | 1 | 1/2 | சி | 1 | 55 | சஷ் |
| 40 | அ | கர | 2 | 08 | ப | 1 | 1/2 | ம | 1 | 51 | சப் |
| 24 | அ | பத் | 2 | 30 | ப | 1 | 1/2 | சி | 1 | 47 | அஷ் |
| 24 | அ | பால | 2 | 06 | ப | 1 | 1/2 | அ/சி | 1 | 43 | நவ |
| 37 | அ | தை | 12 | 56 | ப | 2 | 1/2 | அ | 1 | 39 | தச |
| 05 | அ | வணி | 11 | 03 | ப | 2 | 0 | சி | 1 | 35 | ஏகா |
| – | – | பத் | 9 | 51 | இ | – | – | – | – | – | – |
| 30 | ப | பால | 7 | 01 | இ | 2 | 1 | சி | 1 | 31 | துவா |
| 25 | அ | தை | 3 | 44 | ப | 2 | 1 | அ/ம | 1 | 27 | திர |
| – | – | – | – | – | – | – | – | — | – | – | சசி |
| 57 | அ | வணி | 12 | 07 | ப | 2 | 1 | சி/அ | 1 | 24 | பௌ○ |
| – | – | பத் | 10 | 15 | இ | – | – | – | – | – | – |
| 21 | ப | பால | 6 | 28 | இ | 2 | 1 | சி | 1 | 20 | பிர |
| 35 | அ | தை | 2 | 46 | ப | 2 | 1 | சி | 1 | 16 | துவி |
| 00 | அ | வணி | 11 | 19 | ப | 2 | 1 | ம/சி | 1 | 12 | திரு |
| – | – | பத் | 9 | 44 | இ | – | – | – | – | – | – |

## செப்டம்பர் மாத விரத தினங்கள்

31 கி.சதுர்த்தி
3 கி.சஷ்டி
4 கிருத்திகை
8 கி.ஏகாதசி
10 கி.பிரதோசம்
11 மாத சிவராத்திரி
12 அமாவாசை
14 சந்திர தரிசனம்
17 சு.சதுர்த்தி
19 சு.சஷ்டி
24 சு.ஏகாதசி. சிரவண விரதம்
25 சு.பிரதோசம்
27 பௌர்ணமி

## செப்டம்பர் மாத சுப முகூர்த்த தினங்கள்

9 புதன் கி.பட்சம் துவாதசி பூசம்
16 புதன் சு.பட்சம் திருதியை சித்திரை

| | | | |
|---|---|---|---|
| கேது சந் | | | |
| | 15 சிம் செ<br>17 கன் சூரி | | சு செவ் |
| | | | சூரி குரு |
| | சனி | | ரா பு |

கணித்தவர்: பஞ்சாங்க கணிதர், ஜோதிடர் **இரா.அருள்வேல்** Ph.D - செல்: 98428 41497

# வேதனையை அனுபவிக்க வைத்திட்ட ஜாதகத்தின் சதி சோதனையைத் தாங்கிட வைத்திடும் ஜோதிட விதி




**Dr. E. சரவணன்**
**Cell : 91769 26027 | 94441 59680.**


ஜோதிடம் எனக்கு தினம் தினம் புதுப்புது அனுபவங்களை தருகிறது. எத்தனை விதமான மக்கள். எந்த மதமாக இருந்தாலும் தன்னுடைய மக்களின் நல்வாழ்க்கையின் பொருட்டு நம்மிடம் வந்து திருமணம், தொழில், மணவாழ்க்கையின் பிரச்சனைகள், குழந்தைக்கு என்ன பெயர் வைப்பது, இத்தியாதி பற்றி விவரமாக தெரிந்துக் கொண்டு போகும் அவர்களின் பாசத்திற்கு முன் மதங்களெல்லாம் கண்ணுக்கு தெரிவதில்லை என்பது தான் உண்மை.

ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்சினை. சிலவற்றை ஜோதிடம் மூலமாக தீர்த்து வைத்திட முடியும்போது எனக்கே சந்தோஷமாக இருக்கிறது. சிலருடைய பிரச்சினைகளை ஜோதிடம் மூலமாக தீர்த்து வைக்க முடியாதபோது மனோதத்துவம் வந்து கை கொடுக்கிறது. பாதி பேருக்கு நம்மிடம் வந்து பேசுவதே சமாதானமாகி விடுகிறது.

வாழக்கையில் வெற்றி அடைய எல்லோரும் ஏதோ ஒரு விலை கொடுக்க வேண்டி இருக்கிறது. ஒரு சிலருக்கு தாங்கள் நினைத்தது எல்லாம் தானாகவே நடக்கிறது. தானாகவே நடப்பதால் அவர்களுக்கு ஜோதிடம் அவசியமில்லாமல் இருக்கிறது. திடீரென்று ஒரு நாள் ஏதோ ஒரு சின்ன பிரச்சினை வர, அதை சமாளிக்க முடியாமல் போகும்போது நம்மிடம் வருவார்கள். அவர்களுக்கு நாம் லேசாக கோடு போட்டு கொடுத்தால் போதுமானது.

ஒரு சிலருக்கு தங்கள் வாழ்க்கையை நடத்திச் செல்லவே ஜோதிடர் தேவைப்படுகிறது. எந்த திசையில் போகிறது என்றே தெரியாமல் நம்மிடம் வருகிறார்கள். வழி தெரியாமல் இருப்பவர்களுக்கு நாம் வழிகாட்டியாக இருப்பதும், இந்த மாதிரி தொழில் தொடங்க, இருக்குமிடத்திலேயே வேலையை தக்க வைத்துக் கொள்ள, வேலையை விட, புது வேலைக்குப் போக, இப்படி வாழ்க்கையின் முக்கியமாக முடிவெடுக்க வேண்டிய தருணங்களில் அவர்களை வழி நடத்திச் செல்ல ஜோதிடம் தேவைப்படுகிறது.

வாழ்க்கையை சிக்கலாக்கிக் கொண்டு அதிலிருந்து எப்படி தப்பிப்பது என்று கேட்டு வருபவர்களும் இருக்கிறார்கள். அதிகமாக கடன் வாங்கி விட்டு அதிலிருந்து மீளமுடியாமல் சொத்தை விற்க வேண்டிய நிலையில் வருவோர், கணவனின் (அ) மனைவியிடமிருந்து விடுதலை கிடைக்குமா (அ) மீண்டும் சேருவோமா என்று கேட்டு வருவோர், இவர்களுக்கெல்லாம் தீர்வு கிடைக்க ஜோதிடம் உதவுகிறது.

ஒரு சிலர் வாழ்க்கையை தொலைத்து விட்டு வந்து நம்மிடம் ஜோதிடம் கேட்கும்போது பரிதாபமாக இருக்கிறது. எப்படி ஆறுதல் சொல்லுவது. சரியான ஜோதிடரிடம் போய் ஜாதகப் பொருத்தங்கள் பார்க்காமல் வெறும் 10 பொருத்தங்கள் மட்டும் பார்த்து திருமணம் செய்து வைத்த பெற்றோர்களை குற்றம் சொல்லுவதா? (அ) ஜாதகத்தில் குறைகள் உள்ளதை பார்க்காமல் திருமணம் செய்யச் சொன்ன ஜோதிடரை குறை சொல்லுவதா? யோசிக்க வேண்டும்.

ஒரு திருமணத்திற்கு நிறைய பொருள் செலவு செய்து நடத்த நினைக்கும் பெண் வீட்டுகாரர்களும், பையன் வீட்டுகாரர்களும், ஒரு நல்ல ஜோதிடரிடம் போய் அவருக்கு தேவையான பொற்காசுகள் (இது எனக்காக சொல்லவில்லை) கொடுத்து சரியாகப் பார்த்து (10 பொருத்தங்கள் மற்றும் ஜாதகப் பொருத்தங்கள்) செய்யாமல், ஏதோ பொருத்தங்கள் என்ற பெயரில் பார்த்து வைத்து விடுகிறார்களே???

ஒவ்வொரு பெண்ணும் திருமணத்திற்கு பிறகு வந்து சொல்லும் விதத்திலிருந்து அவர்களது வாழ்க்கை தடம் புரண்ட கதை மனத்திற்கு பெரும் வேதனையை தருகிறது. இது ஏன் இந்த பெண் மற்றும் பிள்ளை வீட்டாருக்கு புரிவதில்லை.

ஒரு பெண் வீட்டார் திருமணத்திற்கு முன்னால் அற்ப காரணத்திற்காக திருமணத்தை நிறுத்தி விட்டனர். கல்யாணப் பெண்ணின் ஜாதகமிது.

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | 1993 பெண் | | |
| சனி ல/ | | | |
| | சந் | | |

மகர இலக்கினக்காரர்களுண்டான பலன்களை பார்த்துக் கொள்ளுங்கள். பையன் உயர்ந்த வேலையில் இருக்க வேண்டும், வசதியாக இருக்க வேண்டும், கார், பங்களா, அப்படி, இப்படி என்று தன்னுடைய வாழ்க்கை தரத்திற்கு மேல் உள்ளவர்களைப் போல இருக்கும் ஆசையும், அதை அடையும் இலட்சியமும் இந்த பெண்மணிக்கும் உண்டு.

பையன் பார்க்கும் வேலை நிரந்தரமில்லை என்று எவனோ சொல்லியதை நம்பி நடக்கவிருந்த திருமணத்தையே நிறுத்தி விட்ட பெண் இவள். பையன் வீட்டிலிருப்பவர்களுக்கு காரணம் தெரிய வந்தபோது ஒன்றுமே புரியவில்லை. இது சரியான காரணமில்லை. தங்கள் தரப்பில் ஏதாவது குற்றமிருக்கிறதா என்று தெரிந்துக் கொள்ள வந்தவர்கள் பெண்ணின் ஜாதகத்தை தந்தவுடன் பார்த்துவிட்டு திருப்பி தந்து விட்டேன். 10 பொருத்தங்கள் மட்டும் பார்த்து விட்டு முடித்த திருமணமிது.

பெண்ணிற்கு 7-ஆம் அதிபதியான சந்திரன் நீச்சமாக இருக்கிறதே. திருமணமானால் கூட ஏதாவது காரணத்திற்காக

பிரிவோ, மணமுறிவோ, ஏற்படக்கூடுமே. இப்போதே நின்று போனது, பெண்ணின் ஜாதகப்படி தான் நடந்திருக்கிறது என்று அவர்களுக்கு புரிய வைத்தப்பிறகு தான் நிம்மதியடைந்தார்கள்.

இப்படி ஜாதகத்தை தீர அலசாமல், பெண்ணுக்கு 10 பொருத்தங்கள் பார்த்து திருமணம் நடத்திவிட துடிக்கும் ஒரு பெற்றோர் தங்களுடைய பெண்ணிற்கு காலதாமதம் ஏன்னென்று தெரிந்துக் கொள்ள வந்திருந்தனர். உங்களுக்கு புரிவதற்காக ஜாதகத்தை அலசி விடுவோம்.

| | | | |
|---|---|---|---|
| | ராகு | ல/ | |
| | 1995 பெண் | | |
| குரு | | | சந் |
| சூரி சுக் | புதன் சனி | செவ் கேது | |

விதி 1:- ரிஷப இலக்கினக்காரரின் பிடிவாத குணம் பற்றி ஏற்கனவே சொல்லி இருப்பதை நினைவு கொள்ளுங்கள்.

விதி 2:- இலக்கினாதிபதி இலக்கின வீட்டிலிருந்து 8-இல் இருக்கிறது. ஜாதகர் கடும் உழைப்பிற்குப் பிறகே வெற்றிகளை காண முடியும்.

விதி 3:- 9-ஆம் வீட்டை சனி மற்றும் செவ்வாய் பார்ப்பதும், நீச்ச குரு 9-ஆம் வீட்டிலேயே இருப்பதும் காண்க, சனி மற்றும் செவ்வாயின் கூட்டுப் பார்வை தீராத இடும்பை தருமல்லவா.

வுதி 4:- அதே சனி மற்றும் செவ்வாய் இலக்கின வீட்டை பார்ப்பதும் கெடுதல் தானே.

விதி 5:- 7-ஆம் அதிபதியான செவ்வாய், 6-ஆம் வீட்டிலிருப்பது பிரிவினையை உண்டு பண்ணுமல்லவா.

விதி 6:- 7-ஆம் அதிபதியான செவ்வாய் தன் வீட்டிற்கு 12-இல் போய் அமர்ந்திருப்பதும் தவறல்லவா.

விதி 7:- 7-ஆம் வீட்டில் சனி இருப்பது பிரிவினையை உண்டுபண்ணும்.

விதி 8:- 5-ஆம் அதிபதியான புதன் 7-இல் இருப்பது காதலை சொல்லுமோ?

விதி 9:- 6-ஆம் அதிபதி 8-இல் இருப்பதும், 8-ஆம் அதிபதி 9-இல் இருப்பதும், 12-ஆம் அதிபதி 6-இல் இருப்பதும், அவர் 8-ஆம் அதிபதியை 4-ஆம் பார்வையாக பார்ப்பதும், ஜாதகருக்கு வீபரித இராஜயோகத்தை தந்து இருக்கிறது. ஆனால் திருமணம் இதுவரை நடைபெறவில்லை. காரணம் மேலே சொல்லபட்டவைகளாகும்.

இது கூட பரவாயில்லை. திருமணம் காலதாமதமாகிறது. என்னை பார்க்க வந்த பெண்மனி, அழகான சுடிதாரில், நெற்றில் ஒரு சின்ன பொட்டு வைத்துக் கொண்டு இருந்தார். வந்தது தனது தொழிலைப் பற்றி கேட்கத் தான்.

வந்தவரை பற்றிய சிறு அறிமுகம். இதிலுள்ள 4 வரிகளில் அவரது வாழ்க்கைப் பயணம் அடங்கி விட்டது. 1975-இல் பிறந்து 1995-இல் திருமணமாகி 2 குழந்தைகள் பெற்று கிடைத்த வேலையை கடந்த 20 வருடங்களாக செய்துக் கொண்டு, குடும்பம், வரவுக்கு ஏற்ற செலவு செய்துக் கொண்டு, குழந்தைகள், கணவன், மாமியார், மாமனார் என்ற கூட்டு குடும்பத்திலிருப்பவர்.

வந்தவருக்கு சொந்தமாக ஏதாவது தொழில் தொடங்க முடியுமா? என்பது தான் கேள்வி.

| | | | |
|---|---|---|---|
| சுக் சந் குரு | | கேது | சனி |
| சூரி புதன் | 1975 பெண் | | |
| செவ் ல/ | | | |
| | ராகு | | |

விதி 1:- 10-ஆம் வீடு ஜாதகருக்கு சொந்த தொழிலைப் பற்றிச் சொல்லும். 10-ம் வீடான துலா இராசியில் எந்த கிரகமுமில்லை. துலா இராசியை எந்த கிரகமும் பார்க்கவில்லை.

விதி 2:- மேஷத்திலோ, அல்லது துலாத்திலோ ஏதாவது கிரகம் இருந்தால் ஜாதகர் சுயதொழில் செய்யக்கூடும். இவருக்கு சுயதொழில் செய்ய வாய்ப்பில்லை. நான் சொன்னேன், நீங்கள் ஏற்கனவே இதற்கான முயற்சிகள் செய்து அது நஷ்டத்திலோ, அல்லது தோல்வியிலோ முடிந்து இருக்க வேண்டும், என்றேன்.

இந்த பெண்மனி சுடிதார் வீட்டில் தயார் செய்து அது நன்றாக விற்பனையாக, உடனே ஒரு கடை பார்த்து நடத்தலாம் என்ற முடிவிற்கு பெருத்த எதிர்ப்பு மாமியாரிடமிருந்து கிளம்பி மருமகள் வியாபாரம் செய்யக் கூடாது என்று நிறுத்திவிட்டாராம். நானும் பலன் சொல்லும் வேலை முடிந்தது என்று நினைத்து இருந்த போது...

நம்முடைய வாயை கிளறி பார்க்க அவருக்கு தோன்றி இருக்க வேண்டும். ஜாதகர், சாமி, என்னுடைய எதிர்காலத்தை பற்றி சொல்லமுடியுமா???." விதி வலியது.

விதி 3:- மகர இலக்கினக்காரர் பற்றிய குணாதிசயங்களை ஏற்கனவே சொல்லி இருக்கிறோம். படித்ததை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். செவ்வாய் உச்சமாக இலக்கினத்திலேயே இருக்கவே,


உங்கள் பேராதரவுடன் மீண்டும்
ஒரு புயல் கரையை கடக்கப் போகிறது

ஜோதிட ரகசியங்களின் திறவுகோல்

1. திருமண யோகம் தரும்
ஜோதிட சூட்சுமங்கள்

2. தொழிலில் வெற்றிபெற
ஜோதிட சூட்சமங்கள்

ஆகிய ஜோதிட நூல்களை அடுத்து 16.08.2015
அன்று வெளிவந்துள்ள 3வது வெளியீடு

இலக்கினம் சொல்லும்
ஜோதிட சூட்சுமங்கள்

முன் பதிவு செய்து கொள்ள தபாலில் பெற
E.சரவணன் - 91769 26027

ஜாதகர் மிகவும் தைரியசாலியாகவும், அதே நேரத்தில் பிடிவாதம் கொண்டவராகவும் இருக்ககூடும்.

விதி *4* :- ஜாதகருக்கு 3-ஆம் இடத்தில் சந்திரன். அது உத்திரட்டாதி நட்சத்திர சாரத்தில் இருக்கிறது. சந்திரன் சனியின் சாரத்தில் இருந்தாலும், சனி சந்திரன் சாரத்திலிருந்தாலும், சனி சந்திரனின் வீட்டிலிருந்தாலும், சந்திரன் சனி வீட்டிலிருந்தாலும் ஜாதகருக்கு வாழ்க்கையில் எப்போதும் ஒரு துக்கம் இழையோடிக் கொண்டே இருக்கும். ஆக, இந்த ஜாதகருக்கு பிரச்சனைகள் நிரந்தரமாக இருக்ககூடும். என்ன பிரச்சினை???

விதி *5* :- சந்திரன் 3-ஆம் வீட்டிலிருக்க ஜாதகர் தனக்கு வேண்டியது கிடைக்கவில்லையென்றால் சில சமயங்களில் மனஉளைச்சலுக்கும், பெரிய பிரச்சினை என்றால் அதுவே மனோவியாதியாகவும் மாறக்கூடும். இவர்களுக்கு யாராவது ஒருவர் பக்கபலமாக இருப்பதும் இவர்களை நல்வழியில் வழிநடத்துவதும் நல்லது.

விதி *6* :- 7-ஆம் அதிபதியான சந்திரன் 3-ஆம் வீட்டிலிருப்பது ஜாதகர் தான் விரும்பிய, வேற்று மதத்தினரை மணந்துக் கொள்ள சந்தாப்பங்கள் அதிகம்.

விதி *7* :- இந்த ஜாதகத்தில் சந்திரன் (7-ஆம் அதிபதி) கணவனையும், சுக்கிரன் (*10*-ஆம் அதிபதி) மாமியாரையும் குறிக்கும்.

விதி *8* :- இந்த ஜாதகத்திற்கு 5-ஆம் அதிபதியான சுக்கிரன்(காதலைச் சொல்லும்) 7-ஆம் அதிபதியுடன் சேர்ந்திருப்பது ஜாதகர் காதல் திருமணம் செய்து இருக்கக் கூடும்.

விதி *9* :- சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்திருக்க ஜாதகருக்கும் மாமியாருக்கும் உள்ள உறவு முறையில் நிச்சயமான விரிசலும், ஒருவருக்கொருவர் ஒத்துபோக முடியாத நிலை ஏற்படும்

விதி *10* :- சந்திரனும் சுக்கிரனும் சேர்ந்திருக்க ஜாதகருக்கு இரண்டாவது திருமணம் பற்றியும் குறிப்பாக உணரலாம். இவர் நமது வாயிலிருந்து வார்த்தைகளை பிடுங்கப் பார்க்கிறார்.

விதி *11* :- கேது 5-லிலும் இராகு *11*-லிலுமிருக்க ஜாதகருக்கு மனமுறிவு ஏற்பட எல்லா வாய்ப்புக்களும் உண்டு.

விதி *12* :- 7-ஆம் வீட்டை செவ்வாய், இராகு, மற்றும் குருவின் பார்வையால் ஜாதகருக்கு களத்திர ஸ்தானம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. குரு பார்க்க கோடி நன்மை என்பதால் 7-ஆம் வீடு, *9*-ஆம் வீடு, மற்றும் *11*-ஆம் வீடுகளை பார்ப்பதால் ஜாதகருக்கு நன்மையே. பாபர்களான சனி மற்றும் செவ்வாயின் பார்வையின் தாக்கம் 7-ஆம் வீட்டிற்கு இருப்பதால் விளைவுகள் கடுமையாக இருக்கும்.

விதி *13*:- இராகு *11*-ஆம் வீட்டிலிருப்பது ஜாதகருக்கு ஏதாவது ஒரு துறையில் புகழ் பெற உதவும்.

விதி *14* :- இலக்கினாதிபதியான சனி 7-ஆம் அதிபதியான சந்திரனை *10*-ஆம் பார்வையாக பார்ப்பதும், அதோடு குருவும் சுக்கிரனும் பார்க்கப்படுவதால் ஜாதகருக்கு கடுமையான பாதிப்புகளை உண்டுபண்ணும்.

விதி *15*:- சுக்கிரன் உச்சமாக இருப்பது, இந்த ஜாதகரை பொறுத்தவரை இவருடைய மாமியாரின் (*10*-ஆம் அதிபதி) ஆதிக்கம் அதிகமாக இருப்பதும், அதற்கு உறுதுணையாக ஜாதகரின் கணவன் (சந்திரன்) இருப்பதும், இவர்களுக்கு உறுதுணையாக மாமனார் (7-க்கு *9*-ஆம் வீடு = 3-ஆம் வீடு அதிபதி = குரு) தன்னுடைய சொந்த வீட்டிலிருந்துக் கொண்டு, ஜாதகரின் *12*-ம் வீடாகிய சயனசுகத்தை பறித்துக் கொண்டு இருக்கக் கூடும்.

நடந்தது என்ன ??? விதி *15* அப்படியே மாறாமல் பிசகாமல் நடந்திருக்கிறது. ஜாகருக்கு கணவனிடமிருந்து விவாகரத்து கேட்டு நோட்டீஸ் வந்து இருக்கிறது.

இதை வெளிக்காட்டாமல், ஏதோ வெகு இயல்பாக இருப்பது போல நடித்துக் கொண்டு, வெகு தைரியசாலி போல பேசிய நமது ஜாதகர் நாம் பேசி முடித்த பிறகு மெதுவாக அழத் தொடங்கி அதை அடக்க முடியாமல், அழுது முடித்தபிறகு, சாமி, எனக்கு இனிமேல் என்ன நடக்கும்??? இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி வேலை செய்துக் கொண்டு இருப்பது??. இரண்டு பிள்ளைகளை எப்படி காப்பாற்றுவது?? நீதி மன்றத்தில் நிலுவையிலிருக்கும் எங்கள் வழக்கு எப்போது முடியும்?? என் பிள்ளைகளுக்கு தந்தையின் சொத்து கிடைக்குமா??

ஏன் இந்த பெண்ணுக்கு இத்தனை துன்பம்???. அழுத பெண்ணை எப்படி சமாதானப்படுத்துவது. மனேதத்துவம் உதவுமோ?

நான் சொன்னேன், இதோ பாருங்கம்மா. நாம் அழுவது என்றால் கூட அதற்கு அந்த நபர் தகுதியானவர் தானா என்று உணர்ந்தால் மட்டுமே அவருடைய பிரிவிற்க்காக அழலாம். உங்களை இந்த நிலைக்கு கொண்டு வந்த ஓர் அயோக்கியனுக்காக உங்களுடைய கண்ணீரை வீணாக்குவது, உங்களுக்கு அவமான விஷயமாகும். உங்களுக்கு இந்த மாதிரியான கணவன் வருவதற்கு உமது ஜாதகத்தில் உள்ள கிரக அமைப்புகள் தான் காரணம். திருமணம் உங்கள் இஷ்டத்திற்கு செய்யாமல் உங்கள் வீட்டில் பார்த்து இருந்து, அவர்களும் உங்கள் ஜாதகத்தை நல்ல ஜோதிடரிடம் காட்டி கிரக விஷயங்களையும் பார்த்து இருந்தால் உங்களுடைய இலக்கினத்திலுள்ள குறைபாடுகளுக்கு தக்கவாறு மாமியார் இல்லாத ஒரு வீட்டில் உங்களுக்கு மாப்பிள்ளை அமைத்துக் கொடுத்து இருக்கலாம்.

அப்படி செய்து இருந்தால் 50 விழுக்காடுகள் உங்களுடைய துன்பங்கள் குறைந்து இருக்கலாம். ஆனால் விதி வலியது. இனி வரும் ஒரு வருடத்தில் கோச்சார குரு உங்கள் இலக்கினத்திற்கு 8-ஆம் வீட்டில் வரப்போகிறார். அவர் 8-ஆம் வீடான மாங்கல்ய ஸ்தானத்தை பாதிக்கும். 8-ஆம் வீட்டிலிருந்து *12*-ஆம் வீடான சயனசுகத்தையும், 2-ஆம் வீடான குடும்பத்தையும், 4-ஆம் வீடான நிம்மதியை பார்ப்பது, அந்த வீடுகளின் காரகத்துவத்தை விருத்தி செய்யும். *12*-ஆம் வீட்டிலும், 4-ஆம் வீட்டிலும் கிரகங்கள் இல்லை. ஆனால் 2-ஆம் வீடான கும்பத்தில் 8-ஆம் அதிபதியான சூரியனும், 6-க்கும் 9-க்கும் அதிபதியான புதனை பார்க்கிறது. மாங்கல்ய ஸ்தானாதிபதி தன் வீட்டை பார்ப்பது சிக்கலுக்கு வழி வகுக்கும். 6-ஆம் வீடு என்பது மறைமுக எதிரியைக் குறிக்கும். கோச்சார இராகுவும் ஜனவரியில் சிம்மத்திற்கு வரப்போகிறது. உங்கள் தொழிலை விட்டுவிடாதீர்கள். சனி தனியாக கேது / இராகுவின் ஒரு பக்கமாக இருப்பதால் இருக்கும் வேலையை விடவேண்டாம். அமைதியாக இருப்பதும், கடவுளை சரணாகதி அடைவதும் தான் இதற்கு தீர்வாக இருக்கும். பொறுமையாக இருங்கள். எதையும் தாங்கும் உறுதியுடன் வாழ்க்கையை எதிர்கொள்ளுங்கள்.

யாருடைய குற்றம் மேலொங்கி இருக்கிறது என்று யோசிக்கத் தோன்றியது.



உ
ஓம் ஆதி சத்குரு துணை
நற்பவி



# ஆதிசக்தி வராஹி ஆன்மீக மையம் வழங்கும்

## மக்கள் நலவாழ்வு பயிற்சி

1. **குல தெய்வ** அழைப்பு பூஜை முறை.
2. **அஷ்ட (8) கணபதி** சித்தி பூஜை முறையும், அதன்மூலம் நம் துன்பம் நீக்கும் அஷ்ட கர்ம முறை.
3. **பஞ்சாட் சார** அஷ்ட கர்ம எந்திரம் வரைந்து அதை பிரயோகிக்கும் முறை.
4. துன்பம், கஷ்டங்கள், மூலிகை விருட்சத்தின் மூலம் தீர்க்கும் முறை.
5. **எண்ணெய் தீபத்தின்** மூலம் வீட்டில் உள்ள தரித்திரத்தை சரி செய்யும் முறை.
6. அடிப்படையான தெய்வீக மாந்ரீகத்தின் முறையான விவரங்கள், அதன் நன்மை தீமை விளக்கம்.
7. **மயான காளி** மாதாவை தரிசிக்கும் முறை, இதன் மூலம் விபூதி, குங்குமம், தண்ணீர், எலுமிச்சம் பழம் மந்திரிக்கும் முறை.
8. **காளி தாயின்** அனுக்கிரகத்தின் மூலம் சகல தோஷ பரிகாரம் செய்யும் முறை.
9. **அஞ்சன மையின்** பயன்பாடு, செய்யும் முறை, உயிர் உண்டாக்கி உபயோகிக்கும் ரகசிய முறை.
10. **ஆண் பெண்** வசியத்தை உண்டாக்கும் மூலிகை வசிய மருந்து செய்யும் முறை.
11. நம் துன்பத்தை போக்கி, செல்வ செழிப்புடன், தெய்வ ஆற்றலுடன் வாழ வைக்கும், **வாலை பரமேஸ்வரி** பூஜை முறை.
12. நமக்கு சதா தொல்லை கொடுக்கும் எதிரியை **மாடன் தெய்வம்** மூலம் விரட்டும் எளிய முறை.
13. நாம் நினைத்தவரையும், விரும்புபவரையும் வசியம் செய்ய **மோகினி** தேவதா சித்தி பூஜை முறை.
14. **தூமா தேவி** சித்தியுடன் தகாத உறவுடையவரை உடன் பிரிக்கவும், நிறுத்தவும் எளிய பூஜை, சித்தி முறை.
15. எதிரியை ஜெயிக்க **சுப்பிரமணிய** மந்திர பூஜை முறை.
16. விற்காத வீடு, நிலம் விற்க **வராஹியின்** கூழாங்கல் வாழைப்பழம் உச்சாடணம்.
17. கணவன் மனைவி ஒற்றுமை, அன்யோன்யத்தை உண்டாக்கும் **ரதி மன்மத** பூஜை முறை.
18. தேகத்தில் உண்டாகும் சகல நோய்களும் விலக **விபூதி** போடும் முறை.
19. நமக்கு கெடுதல் செய்யும் எதிரியையும், மந்திரவாதியையும் முடக்கும் **இருளப்பசுவாமி** பூஜை முறை.
20. புத்திர சந்தானம் உண்டாக்கும் **மோகனா தேவி** பூஜை யந்திர முறை.
21. திருமணத் தடை நீங்க நமக்கு நாமே செய்து கொள்ளும் எளிய பரிகார முறை.
22. நாகதோஷம், கால சர்ப்பதோஷம் நீங்க எளிய **ஹோம பரிகார** முறை.
23. **பிதுர் தோஷத்தால்** விருத்தியடையாத குடும்பம் அதிலிருந்து நிவர்த்தியாகி சுபிட்சம் அடைய வழி முறை.
24. **செவ்வாய் தோஷம்** நிவராண பரிகார பூஜை முறை.
25. **மாங்கல்ய தோஷம்** நீங்க பரிகார பூஜை முறை.
26. **புத்திர தோஷம்** நீங்க பரிகார பூஜை முறை.
27. **கிரக தோஷம்** நீங்க பரிகார பூஜை முறை.
28. **தாம்பத்ய தோஷம், பட்சி தோஷம்** நீங்க பரிகார பூஜை முறை.
29. **துஷ்ட சக்தியின்** பாதிப்பு, ஏவல், காத்து கருப்பால் பாதிக்கப்பட்டவர்களை சரி செய்யும் முறை.
30. எளிமையாக கழிப்பு, திருஷ்டி கழிக்கும் முறை.

**பயிற்சி கட்டணம் ₹1600/-**

❋ *இக்கலை அனைத்தும் மக்கள் நலனுக்கே.* ❋ *பயிற்சியில் பல அரிய விஷயங்கள் கூறப்படும்.*

## (பயிற்சியில் ஆண், பெண் இருபாலரும் கலந்து கொள்ளலாம்)

**இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படுபவை:**

1. கணவன் மனைவி பிரிவை தடுக்கும் மோகனி அஞ்சன மை 1 இலவசம்.
2. மந்த நிலையில் உள்ள குழந்தைகளுக்கு சிறந்த கல்வியை தரவல்ல ஞானம்பிகா தாயத்து 1 இலவசம்.
3. பாக்கெட் செல்வ வசிய ஸ்ரீசக்கரம் 1 இலவசம்.
4. பயிற்சி கையேடு, மதிய உணவு, தேநீர் இலவசம்.

## பயிற்சி நடைபெறும் இடங்கள்

| | |
|---|---|
| **கோபால் திருமண மண்டபம்**<br>வடக்கு வீதி, வடபழனி முருகன் கோவில், **சென்னை.** | **பயிற்சி நாள் : 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை**<br>**பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை** |
| **சாந்தாஸ்ரமம் மீனாட்சி ரங்கநாதன் ஹால்**<br>செரி ரோடு, மத்திய கூட்டுறவு வங்கி எதிரில், முள்ளுவாடி கேட், **சேலம்.** | **பயிற்சி நாள் : 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை**<br>**பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை** |
| **M.P.C. லாசாலே மீட்டிங் ஹால்**<br>2-வது தளம், 52 TB ரோடு, ESI ஆஸ்பத்திரி எதிரில், மாபாளையம், **மதுரை** | **பயிற்சி நாள் : 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை**<br>**பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 4.30 வரை** |

பயிற்சி ஆசிரியர்: வராஹி உபாசகர், மாந்ரீக, தாந்ரீக ரத்தின சிந்தாமணி, ஆன்மீக ஆசான், ரசவாத வைத்தியர்

***வாசியோகி, தவத்திரு. முருகன் அண்ணாச்சி சுவாமி ஜி***

(3 தலைமுறை ஆன்மீகம், மருத்துவம், மாந்ரீகம், தாந்ரீகம், ரசவாதம் அனுபவம்) 7/632, குமாரசாமி ராஜ தெரு, நாகமலை புதுக்கோட்டை, மதுரை - 19

**முன்பதிவுக்கு: 8489140765, 9842686840, 9842686940**

# எட்டவன் கெட்டிடில் கிட்டிடும் இராஜ யோகம்



கொடிக்கம்பம் ஜோதிடர்
எஸ்.பி. சோமசுந்தரம்
செல் 94421 27251

நம்பிக்கை இல்லாதவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் துன்பத்தையே தழுவுகிறான் நம்பிக்கை உள்ளவன் ஒவ்வொரு துன்பத்திலும் இன்பத்தைப் பெறுகிறான் யோகம் இல்லாதவன் ஒவ்வொரு செயலிலும் தோல்வியைக் காண்கிறான். யோகம் உள்ளவன் ஒவ்வொரு செயலிலும் வெற்றியைப் பெறுகிறான்.

சுபகிரகங்கள் சில நேரங்களில் அசுப பலன்களை தந்துவிடுகிறது. அசுப கிரகங்கள் சில நேரங்களில் நன்மையை செய்து விடுகிறது. சுப ஆதிபத்யம் பெற்ற கிரகங்கள் மறைவு ஸ்தானம் ஏறும் போதும், அசுப கிரகங்கள் மறைவு ஸ்தானம் ஏறும் போதும் இந்த அசம்பாவிதம் நிகழ்வதுண்டு.

எட்டாமிடத்து அதிபதி சில நேரங்களில் எதிர்பாராத விபரீதமான இராஜ யோகங்களை அள்ளித் தந்து விடுகிறார். அதற்கு எட்டவன் கெட்டிட வேண்டும். அஷ்டமாதிபதி மறைவுஸ்தானஸ்களில் பலம் பெற்றுவிட்டால் இந்த யோகம் மிக சிறப்பாகச் செயல்படும்.

அஷ்டமாதிபதி எப்படி இருந்தால் எந்தந்த விதத்தில் துன்பங்களைத் தருவார் எனவும் எப்படி அமைந்தால் யோகத்தை தருவார் என்றும் ஒவ்வொன்றாய் பார்ப்போம். எதிர்பாராத துன்பங்களை எளிதில் வழங்குவதில் 8ஆம் இடத்து அதிபதிக்கு ஏகபோக உரிமை எந்நாளும் உண்டு. அவர் தரும் துயரங்களை பட்டியலிட்டால் எந்த மனமும் கஷ்டப்படும். அஷ்டம ஸ்தானம் என்று அழைக்கப்படும் 8ஆம் இடத்தைக் கொண்டு ஒருவருக்கு தீர்க்காயுளா? மத்திம ஆயுளா? அல்லது அற்பாயுளா? என்று அறியலாம்.

மேலும் ஆயுத ரணம், தீராத சண்டை, ஆறாத புண், காரிய விக்கினம், மாறாத கவலை, இரத்தத்தை சுண்ட வைக்கும் அவமானம், விரயங்களால் ஏற்படும் விசனம், நீங்காத விரோதம், வீண் அலைச்சல், மன உளைச்சல் பாவச்சுமை, தீராத பழிச் சொல், அபராதம் கட்டுதல், முன் ஜென்ம வினை, மாளாத வட்டிக் கட்டுதல், அவமானத்தை பெற்றுத்தரும் வாழ்க்கை துணைவி, மேலே இருந்து கீழே வீழ்தல், தூக்குமாட்டிக் கொள்ளுதல் வாகன விபத்து, பரதேச வாழ்க்கை பட்டியல் தொடரும்....



அஷ்டமாதிபதியால் கிடைக்கும் நன்மைகளை விட தீமைகளே அதிகம் எனலாம். இன்பம் தரும் நிகழ்ச்சிகளை விட துன்பம் பெறும் சம்பவங்களே எப்போதும் கூடுதலாக இருக்கும். என்பது நடைமுறை உண்மையாக நாளும் இருக்கிறது.

அஷ்டமாதிபதி எங்கு அமர்ந்து உள்ளாரோ அந்த வீட்டின் அதிபதி பலம் பெற்றுவிட்டால் அஷ்டமாதிபதியால் கிடைக்கும் தீய பலன்கள் குறைந்துவிடும். எட்டவன் நின்ற வீட்டோன் கெட்டு விட்டால் அவர் அமர்ந்த வீட்டின் ஆதிபத்தியத்தாலும், கிரக காரகத்தாலும் ஜாதகன் படும் துயர் கணக்கிலடங்கா.

இலக்கினாதிபதி பலம் இழந்து இலக்கினத்தில் அஷ்டமாதிபதி அமர்ந்து விட்டால் எட்டவன் திசையில் ஜாதகன் சிந்தனையும், செயலும் வில்லங்கம் நிறைந்ததாகவே இருக்கும். பிறரை துன்புறுத்தி அதன் மூலம் இன்பம் பெறும் ஈனப்பிறவியாக மாற நேரிடும். முரட்டுத்தனமான பிடிவாதமும், முட்டாள் தனமான செயல்பாடும் கூட்டணி அமைத்து ஜாதகனை அவமானப்படவைக்கும். முரண்பாடு நிறைந்த கருத்துக்களைச் சுமந்துக் கொண்டு உடனிருப்பவர்களால் உதாசீனப்பட வைக்கும்.

2ஆம் அதிபதி பலம் இழந்து 2ஆம் வீட்டில் அஷ்டமாதிபதி அமர்ந்து எட்டவன் திசை நடைமுறைக்கு வந்து விட்டால் இளமையில்

திருமணம் எளிதில் நடக்காது. நடந்தாலும் அதில் நன்மையும் மகிழ்ச்சியும் நிலைக்காது. சொல்லும் சொல்லில் உண்மையிருக்காது. உண்மையே இருந்தாலும் அது நன்மையில் முடியாது. அநியாய வட்டி கட்டுவதை யாராலும் தடுக்க முடியாது. சொத்துக்கள் வாங்கும்போது வில்லங்கமும் விவகாரமும் போனஸாக கிடைக்கும். தவறான வழியில் பணம் வருவதை தவிர்க்க இயலாது. அது தண்டச் செலவாய் முடிவதை தடுக்கவும் முடியாது.

4ஆம் அதிபதி பலம் இழந்து 4இல் அஷ்டமாதிபதி அமர்ந்து எட்டவன் திசை நடைமுறைக்கு வந்துவிட்டால் கட்டிய மனை பகையாகும். கெட்டு பட்டணம் போவான். கெட்டிக் காரனாக மாறுவான். திரும்புவான். நகர வாழ்க்கை அமையும். ஆனாலும் அது நரக வாழ்க்கையாக மாறும். இளமையில் தாயை இழக்கச் செய்திடுவான். வீட்டின் தென்மேற்கு பகுதியின் சுவரில் விரிசல் விலாசம் எழுதும். ஆடம்பரமான ஆடை அணிகலன் இவனை அலங்கரிக்காது. பந்துக்கள் எண்ணிக்கை பல மடங்கு குறையும் வாகன பழுது வாழ்க்கை முழுவதும் இருக்கும்.

5ஆம் அதிபதி பலம் இழந்து 5ஆம் இடத்தில் அஷ்டமாதிபதி அமர்ந்து எட்டவன் திசை நடைமுறைக்கு வந்து விட்டால் குற்றமுள்ள குழந்தை குறை பிரசவமாக வந்து பிறக்கும். பின் இறக்கும் குறுக்கு புத்தியும் கோணல்நிறைந்த சிந்தனையும் வார்த்தையில் வழக்கமாய் வெளிப்படும். பூர்வீக சொத்தில் தீராத பகையும், மாறாத வில்லங்கமும் எந்நாளும் இருக்கும். புத்திரர்களால் கவலை தொடரும். அடி வயிற்றில் அறுவை சிகிச்சை என்பது நடைமுறை உண்மை. அரசாங்கம் தன் சொத்தை அபகரிக்கும். அரசு வழக்கு அத்தியாவசியமாக வரும்.

7ஆம் அதிபதி பலம் இழந்து 7ஆம் இடத்தில் அஷ்டமாதிபதி அமர்ந்து எட்டவன் திசை நடைமுறைக்கு வந்து விட்டால் வாழ்க்கைத்துணை வழிமாறும். வாழ்நாள் பழிவந்து சேரும். குலாசாரத்துக்கு மாறுபட்ட வாழ்க்கை நேரும். மறுமண முயற்சியால் பெருமை சேரும். நட்பு வட்டம் நாளும் குறையும். நம்பிக்கை துரோக செயலால் நல்ல நட்பு மறையும். கூட்டுத் தொழிலால் செல்வம் கரையும். கூட்டாளியால் அவமானமும் அபாரதமும் விரயமும் நாளுக்கு நாள் கூடும். வயல் வெளியில் வழித்தடங்களுக்காக வழக்காட நேரிடும். வாகனத் தொழில் தேய்பிறை நிலவாய் குறையும். அரசு வழி ஒப்பந்தத்தால் விரயமும் நஷ்டமும் வரும். பயணங்களால் வழக்கும். அவமானம் விரயம் நிச்சயம் உண்டு. உறுதி செய்த திருமணம் நின்று போகும் நிச்சயிக்கப்பட்ட பெண் ஓடிப்போகும். அதனால் அவமானம் பிடுங்கி தின்னும்.

9ஆம் அதிபதி பலம் இழந்து 9ஆம் இடத்தில் அஷ்டமாதிபதி அமர்ந்து எட்டவன் திசை நடைமுறைக்கு வந்து விட்டால் இளமையில் தந்தைக்கு இன்னல் வந்து சேரும். ஆதிச்சொத்தில் அடங்காத எதிரியால் மடங்காத சிக்கல் எந்நாளும் இருக்கும். அப்பாவால் தப்பாமல் குடும்பத்துக்கு தலைக்குனிவு வந்துவிடும். பொறுப்பற்ற தந்தை என பெயர் எடுக்க நேரிடும். எதிர்பாராமல் எந்த விதத்திலாவது அரசு வழக்கு வந்து அமர்ந்து கொள்ளும். பதவி உயர்வை எதிர்பார்க்கும் நேரத்தில் எதிர்பாராமல் பதவி இழக்க நேரிடும். அரசாங்கத்தின் புதிய சட்டத்தால், அல்லது திட்டத்தால், வர வேண்டிய பணம் நின்று போகும். கௌரவ பதவி பறிக்கப்படும். பொது வாழ்வு என்பது பொல்லாப்பில் முடியும். ஊர் கூடி அவமானப்படுத்தும், அபராதம் கட்ட வேண்டிய நிர்பந்தம் நிச்சயம் ஏற்படும். குலப்பகை என்பது கூட்டணி அமைத்துக் கொண்டு துரத்தும் வாழ்நாள் ஏமாற்றத்தை நாளும் பார்க்க நேரிடும்.

10ஆம் அதிபதி பலம் இழந்து 10ஆம் வீட்டில் அஷ்டமாதிபதி அமர்ந்து எட்டவன் திசை நடைமுறைக்கு வந்துவிட்டால் நிரந்தர பணி இருக்காது. இருந்தாலும் நிம்மதி பிறக்காது. நிலையான வருமானம் இருக்காது வந்தாலும் நிலைக்காது. தொழிலில் இடம் மாற்றம் என்பது தொடர்கதையாகும். தொழில் கூடத்தில் அவமானம் என்பது அடிக்கடி நிகழும். கௌரவமான தொழில் என்பது கனவாக மாறும். சீருடை பணி என்பது சிறப்பாகும். சுயதொழில் ஆசை சுண்டிப்போகும் மீறி தொடங்கிவிட்டால் அதனால் அடிபப்டைச் சொத்து மங்கிப்போகும். சேமிப்பு தொகை சேதாரமாகும்.

11ஆம் வீட்டதிபதி பலம் இழந்து 11இல் அஷ்டமாதிபதி அமர்ந்து எட்டவன் திசை நடைமுறைக்கு வந்துவிட்டால் காணும் கனவு யாவும் கானல் நீராய் போகும். மூத்தவர்களால் அவமானம் அடுக்கடுக்காய் வரும் இலாபத்தில் நஷ்டம் தவிர்க்க இயலாது. திட்டம் போட்டு கட்டம் கட்டி காய் நகர்த்த முடியாது. காரியம் வெல்ல முடியாது. வட்டித் தொழிலில் கொடிகட்டி பறக்க முடியாது. விவசாயத்தில் பணத்தை அள்ள முடியாது. ஆனாலும் விவசாயத்தை தள்ள முடியாது.

ஒருவரின் வாழ்வில் ஏற்படும் சின்ன அவமானம் முதல் பெரிய தலை குனிவு வரை சிறிய அபராதம் முதல் பெரிய தண்டனை வரை குறைந்த தண்டனை முதல் பெரிய தண்டனை வரை மெலிந்த துன்பம் முதல் கனத்த துன்பம் வரை சிறிய விபத்து முதல் பெரிய விபத்து வரை ஆரம்ப வட்டி முதல் அநியாய வட்டி வரை சிறிய காயம் முதல் படுகாயம் வரை ஒருவர் சந்திக்க வேண்டுமானால் 8ஆம் இடமும், 8ஆம் அதிபதியும், 8ஆம் இடத்தில் அமர்ந்த கிரகமும், அவருடன் சம்பந்தப்பட்ட கிரகத்திற்கும்

முழு உரிமையுண்டு என்பதை அனுபவத்தில் பார்த்தவர்களால் மட்டுமே உணர முடியும் என்பது உண்மையிலும் உண்மை.

இனி அஷ்டமாதி எங்கு இருந்தால் எப்படி அமர்ந்தால் அவர் யோகமான பலன்களை வழங்குவார் என்று பார்ப்போம். அஷ்டமாதிபதிக்கு வீடு தந்தவர்கள். அஷ்டமாதியை பார்க்கும் சுப கிரகங்கள் அஷ்டமாதிபதிக்கு சாரம் தந்தவர்கள் இவர்கள் இலக்கின யோகராக அமைந்து விட்டாலும் அவர்களின் தொடர்பும் (அ) இணைவும் இருந்து விட்டால் நன்மை தரும் பலன்களை குறைத்து தருவார். மேலும் விரிவாக ஒவ்வொன்றாய் காண்போம்.

8ஆம் இடத்து அதிபதி 3இல் ஆட்சி (அ) உச்சம், மற்றும் நட்பு பெற்று அமர்ந்து அந்த வீட்டோன் கேந்திர கோணங்களில் அமர்ந்து 3ஆம் இடத்தை சுப கிரகங்கள் பார்த்துவிட்டால் ஆளடிமை இடம் பொருள் ஏவல் எளிதில் கிட்டும். புகழ்பெறும் செயலில் மிகுந்த நாட்டம் இருக்கும். தீர்க்கமான ஆயுளை பெற்ற திடமான சரீரத்துடன் வாழ்வான். போக விஷயங்களில் மிகுந்த நாட்டமுண்டாகும். எடுக்கும் முயற்சிகளில் தடுக்கும் சக்தி இருந்தாலும் ஜெயிக்காமல் தூங்க மாட்டான்.

8ஆம் இடத்து அதிபதி 6ஆம் இடத்தில் ஆட்சி (அ) உச்சம் மற்றும் நட்பு பெற்று அமர்ந்து அந்த வீட்டோன் கேந்திர கோணங்களில் அமர்ந்து 6ஆம் இடத்தை சுப கிரகங்கள் பார்த்துவிட்டால் எதிர்பாராத வருமானம் ஏராளமாய் வரும். பெண் வழிச் சொத்து பெரிதாக கிடைக்கும். குறுக்கு வழி வருமானம் குவியும். பொது வாழ்வில் நுழைந்து பெரும் புகழைச் சம்பாதிப்பார். ஆனால் சிலருக்கு புத்ர சோகம் ஏற்பட்டு புலம்ப வைக்கும்.

8ஆம் இடத்து அதிபதி 8ஆம் இடத்தில் ஆட்சி (அ) உச்சம் பெற்று சுபர்களின் பார்வையும் இருந்து விட்டால் அவர் திசை நடைமுறைக்கும் வந்துவிட்டால் தீர்க்காயுள் உண்டாகும். பர தேச வாழ்க்கை அமையும். அதாவது வெளிநாடு பயணம், பணி, பணம் அனைத்தும் கிட்டும். பெண்கள் மீது பெரும் விருப்பம் இருக்கும். முடியாத செயல்களில் கூட முயன்று வெற்றி கொடி கட்டுவார். உயில் சொத்து கிடைக்கும் என்று உத்திரவாதம் தரலாம். இலக்கினாதிபதியும் வலுத்துவிட்டால் ஒரு வீரனுக்குரிய இலட்சணம் இலட்சியத்தோடு, வெற்றியோடும் புகழோடும் வாழத் தகுதி பெற்றவனாவான்.

8ஆம் இடத்து அதிபதி 12இல் மறைந்து அவர்நின்ற வீட்டோன் ஆட்சி உச்சம் பெற்று கேந்திர கோணங்களில் நின்று 12ஆம் வீட்டை சுபக் கிரகங்கள் பார்த்து விட்டால் விபரீமான ராஜயோகம் உண்டாகும் எட்டோன் திசை நடைமுறைக்கு வந்துவிட்டால் நீண்ட நாட்களாக நடந்து வரும் வழக்கு வெற்றியில் முடியும் வராத பணம் வந்து சேரும். அத்தை வழிச் சொத்து அதிகபட்சமாக கிடைக்கும். முன்னோர்கள் எழுதி வைத்த உயில் சொத்துக்கே உயிர் கிடைக்கும்.

அஷ்டமாதிபதி 6இல் அல்லது 12இல் இருந்து அவர் நின்ற வீட்டதிபதி கேந்திர கோணத்தில் அமர்ந்து சுபர்களுடன் கூடினாலும், பார்த்தாலும், அஷ்டமாதிபதிக்கு சுபர்களின் நண்பர்களின் தொடர்பும் பார்வையும் இருந்து விட்டால் அஷ்டமாதிபதி திசை பலமான யோகத்தை தந்துவிடும்.

இந்த கருத்து எனது அனுபவத்திற்கும் ஆய்வுக்கும் சரியாக வருகிறது. இதை ஓர் உதாரண ஜாதகத்தின் மூலம் பார்ப்போம்.

பிறந்த தேதி = 1—7—1965

பிறந்த நேரம் = 8.30Pm

பிறந்த நக்ஷ்த்திரம் = ஆயில்யம்

ஜனன கால புதன்திசை பாக்கி 12—07—20

| | | | |
|---|---|---|---|
| | | குரு ராகு | சூரி |
| சனி | இராசி | | புத சுக் சந் |
| ல | | | |
| | கேது | | செவ் |

| | | | |
|---|---|---|---|
| செவ் | ல | சனி | ராகு |
| சூரி | அம்சம் | | குரு |
| சந் | | | புத |
| கேது | | | சுக் |

இந்த ஜாதகர் ஆயில்யம் நக்ஷத்திரம் கடக இராசி, மகர இலக்கினத்தில் பிறந்துள்ளார்.

இலக்கினாதிபதி சனிபகவான் ஆட்சி பெற்றுள்ளார் முயற்சி ஸ்தானாதிபதியான குரு பகவான் சாரத்தில் அமர்ந்துள்ளார். குரு பகவான் இலக்கினத்தைப் பார்ப்பது சிறப்பே. சிறுவயது முதல் பெரியவர்களிடத்தில் மதிப்பும் மரியாதையும் கொண்டவர்.

இவருக்கு சுக்கிர மகாதிசையில் குரு புத்தியில் சுயமாக தொழில் தொடங்கினார் சுக்கிரபகவான் நூல் துறையில் நுழைய வைத்து படிபடியான பொருளாதார வளர்ச்சியை தந்தார். சூரிய மகாதிசை தொடங்கியவுடன் வெளிநாடு நிறுவனத்திடம் இருந்து வாய்ப்பை பெற்று இன்று கோடிக்கணக்கில் சம்பாதித்துள்ளார்.

முக்கியமாக அஷ்டமாதிபதி 6இல் (அ) 12இல் மறைந்து அவருக்கு வீடு தந்தவர் இலக்கினத்திற்கோ, இராசிக்கோ கேந்திரத்தில் பலம் பெற்று இலக்கின சுபர்களை கூடினாலும், நண்பர்களை கூடினாலும் தனது திசாபுத்தி காலங்களில் வலிமையான இராஜயோகத்தை வாரி வழங்குவார் என்கிற எனது அனுபவ கருத்தை ஆதாரத்துடன் வழங்குகிறேன். ■

# குமார சுவாமியம்
# ஒரு புதியக் கண்ணோட்டம்



P. இராஜசேகரன் M.Sc.,
M.A (Astro)., M.Phil (Astro)
Cell: 94430 70426

## நூல் காப்பு

**போதிடம் ஆகிய வேதியன் நாத புராதனன் மால் முதலோர்**
**ஈதிடமாய் வருவார் எனில் யாவும் விடாது இயல்பாக நவில்**
**சோதிடமே திடமாக நடாவு குமார சுவாமியம்யான்**
**ஓதிடவே என்ஓர் அகம் வாழ்பவன் ஆனை சகோதரனே**

பொருள்: தாமரை மலரின் கண் வீற்று இருக்கும் படைக்கும் கடவுளானப் பிரம்ம தேவனும், சப்த மூலப் பரம்பொருளான சங்கர கடவுள் சிவபெருமானும், காக்கும் கடவுளானத் திருமால் ஆகிய மும்மூர்த்திகளும் இப்பூமியில் மனித பிறவி எடுக்கிறபோது, அவர்களுக்கு உரிய ஜாதகப் பலன்களை முழுமையாக (எதையும் விடாது) திடமுடன் இயல்பாகக் கூறுகிற, (உண்மைத் தகுதி உடைய) ஒரே கலை ஜோதிடக்கலை ஆகும்.



குமாரசுவாமியம் என்னும் இந்நூல் ஆசிரியர் ஆகிய நான் (எழுதும்) சொல்லும் பொருட்டு, எனது இதய வீட்டினில் வாழ்பவன் ஆகிய விநாயக் கடவுளின் சகோதரனும் ஓரகத்துச் செல்வனுமாகிய குமரக் கடவுள் ஆகிய முருகப் பெருமானை வணங்குகிறேன்.

இந்நூலாசிரியர், வீரைமாநகர் வீரவநல்லூரில் (பாண்டிய நாட்டில் பொருநை நதிக்கரையில் அமைந்து உள்ளது) வீரை மாநகரத்தில் வாழ்ந்த மாறியாடும் பெருமாள் என்று பெயா கொண்ட, வணிகரின் புதல்வர் ஆவார்.

தமிழுக்கும் சோதிடத்திற்கும் தலைவனாகப் (இறைவன்) போற்றப்படும் குமரப் பெருமானின் அருளால் "குமாரசுவாமியம்" என்னும் இந்நூல் எழுதுவதாக ஆசிரியர் குறிப்பால் உணர்த்துகிறார். நூல் காப்பில் & குமரப் பெருமான் ஆகிய இறைவன் அவரது இதய வீட்டில் எழுந்தருளி என்றும் அருள் செய்ய வேண்டும் என வேண்டுகிறார்.

### பாயிரம்

**ஆதி முதற்கு உபதேச சற்குரு தேசிகன் முன்**
**அகத்தியனுக்கு உரைத்த அருள் சோதிடத்து இயல்பு அந்நாளில்**
**ஓதினவராய் இனர் வசிட்டர் கற்கர் யவன(ர்)**
**ரோமசர் பராசரர் மநு நாரதர் வியாசர்**
**போதகரங்கி ராமர் அத்ரி மரீசி பிருகுச் சர்**
**புகர் சவுனர் சவுனகர் காசி (ய) பரி வர் புத்தியினால்**
**ஏதெனினும் இவர்கள் தங்கள் தங்களுக்கியன்ற மாத்திரம் கற்று**
**இவ்வுலகில் இவர் முதலோர் சொன்ன(து) அபரிதமே**

ஆதி மூலப் பரம்பொருள் ஆனவன் சிவபெருமான். சிவபெருமானுக்கே பிரணவ மந்திரத்தை குருவான நின்று உபதேசித்தவர் முருகப் பெருமான். அதனால் தகப்பன் சுவாமியான (சத்குரு தேசிகனான) குமரப் பெருமான், சோதிடக் கலையை அகத்திய முனிவருக்கு உணர்த்தினார். அகத்தியருக்குப் பின் சோதிட தீப ஒளியை பலர் ஏற்றினர். அவர்களில்.

| | | |
|---|---|---|
| 1. இனர் | 2. வசிட்டர் | 3. கர்க்கர் |
| 4. யவனர் | 5. ரோமேசர் | 6. பராசரர் |
| 7. மநு | 8. நாரதர் | 9. வியாசர் |
| 10. போதகர் | 11. அங்கீரஸர் | 12. அத்(தி)ர் |
| 13. மரீசி | 14. பிருகுச்சர் | 15. புகர் |

| 16. சவுனர் | 17. சவுனகர் | 18. காசியபர் |
|---|---|---|

*மேற்கண்ட பதினெட்டுப் பேர்கள், பல்வேறு சோதிட நூல்களை அருளி உள்ளனர். இதையே சற்று மாற்றி, சாதக அலங்காரம் கீழ்க்கண்ட பாடலில் கூறுகிறது.*

**ஆதவன் புங்கவன் வியாசர் பராசர் அத்திரி**
**ரோமசன் வசிட்டன் அணி மரீசி தானும்**
**போத பவுலகன் யவனன் செவனன் மனுபிருகு**
**புகழ் சௌனகன் ஆங்கீரன் காசிய கார்க்கியரும்**
**ஓதிய நாரதர் முதலீ ரொன்பதின்மர் கூடி**
**உரைசெய்த நான்கி(லில்)க்கத் னதம் பதினாயிரமாம்**
**நீதி பெருஞ் சோதிடத்தில் தெரிந் தெழுந்த வுண்மை**
**நிறைந்த பொருளதனைக் கருத்தில் நிறைந்துதானே**

| | குமாரசுவாமியம் | சாதகாலங்காரம் | |
|---|---|---|---|
| 1. | இனர் | ஆதவன் | - சூரிய சித்தாந்தம் |
| 2. | வசிட்டர் | வசிட்டர் | - வசிஷ்ட சித்தாந்தம் |
| 3. | கர்க்கர் | கார்க்கியர் | - கர்க்க சித்தாந்தம் |
| 4. | யவனர் | யவனர் | - யவன சித்தாந்தம் |
| 5. | ரோமேசர் | ரோமேசன் | - ரோம சித்தாந்தம் |
| 6. | பராசரர் | பராசர் | - பராசர சித்தாந்தம் |
| 7. | மநு | மனு | - மனு சித்தாந்தம் |
| 8. | நாரதர் | நாரதர் | - நாரத சித்தாந்தம் |
| 9. | வியாசர் | வியாசர் | - வியாச சித்தாந்தம் |
| 10. | போதகர் | புங்கவன் | - பிரம்ம சித்தாந்தம் |
| 11. | அங்கீரசர் | ஆங்கீரன் | - ஆங்கிரச சித்தாந்தம் |
| 12. | அத்திரி | அத்திரி | - அத்திரி சித்தாந்தம் |
| 13. | மரீசி | மரீசி | - மரீசி சித்தாந்தம் |
| 14. | பிருகுச்சர் | பவுலகண் | - புவுலகுத்ச சித்தாந்தம் |
| 15. | புகர் | பிருகு | - பிருகு சித்தாந்தம் |
| 16. | சவுனர் | சியவனன் | - சியவன சித்தாந்தம் |
| 17. | சவுனகர் | சௌனனன் | - சௌன்க சித்தாந்தம் |
| 18. | காசியபர் | காசியர் | - காஸ்யப சித்தாந்தம் |

*18. சித்தாந்தங்களை எழுதிய அனைவருமே இந்திய நாட்டைச் சேர்ந்தவர்களா? என்பதில் மாற்றுக் கருத்துக்கள் பல உண்டு. உதாரணமாக — உரோமேசர் — உரோம நாடு, கர்க்கர் — கிரேக்க நாடு, சியவனர் —சீன நாட்டைச் சேர்ந்தவர் என்று, இவர்களைப் பற்றியக் கருத்துக்கள் உண்டு.*

*பௌலகன் என்பவர் பைபிளில் பழைய ஏற்பாட்டில் கூறப்படும். பவுல் (paul) என்ற தீர்க்க தரிசியையும் யவனர் என்பது பொதுவாக உரோம, கிரேக்கர்களையும் குறிக்கும் சொல்லாக உள்ளன. பாரம்பரியம் மிக்க இந்திய சோதிடத்தில், அந்நிய நாட்டவரின் தாக்கம் கலந்து இருப்பது அறிய முடிகிறது.*

*மேலும், சப்த ரிஷிகளில் கௌசிகரைத் தவிர, ஏனைய ஆறு ரிஷிகளின் பெயர்களில் 1.அத்திரி, 2.வசிஷ்டர், 3.மரீசி, 4.ஆங்கிரசர், 5.காஸ்யபர், 6.குத்ஸர் சித்தாந்தங்கள் இருப்பதும் குறிப்பிடத்தக்கதாம்.*

**இவர்கள் உரைத்தன ஓரா சாரம் ரத்ன கோசம்**
**இந்து வணியோரை மெய்ஞ்ஞான ப்ருத்வி யோக**
**வுவரி சதமஞ்சரி லீலாவதி சாதக கற்**
**போதனம் எண்வர்க்கம் எமச்சக்கர மெய்க்குதயம்**
**நவநிதியம் அரிட்ட நவநீதம் வார மோரை**
**கயவல் கிஷ்டனை சித்தாந்தம் வாக்கிய மின்னன வெஞ்**
**சவுரிய பராகிரமங் கேரளிலம்பகந்**
**த(ா)ற்காலத் தறிவது ப்ரகாசிச் சீபதியே**
**பதிப் பலசேகரம் புவனப் பிருத்வி கற்பல(த்)தை**
**பராசிருவாசாரியம் ஆர்ய (ஸ்)புடம் பலதா**
**வித் ப்ரபல முகூர்த்த விதானத் துள மாதவியம்**
**விதிலபிதஞ் சாந்திபடாம் விகணிதங் குட்டு ணவஞ்**
**சிதப் படத்தி யல்புட வித்திர மைப்புட் சரமத்**
**திரிமல மனோ மன்னர் தினமு கூர்த்தந் திரைய**
**மதத்துளது தரிசனஞ் சொப்பனஞ் சகுனங் காத(ல்)ன்**
*மற்றவை முன்னாளுள விந்நாளினு மற்றவை*

*18 பேர்கள் அருளிய சித்தாந்தங்கள் தவிர, மேலும் நம் தவப் பயனாய்ப் பல சித்தாந்தங்கள் மலர்ந்தன. அவைகளில்,*

| | |
|---|---|
| 1. ஓரா சாரம் | 24. ஶ்ரீபதி பத்ததி |
| 2. இரத்ன கோசம் | 25. பாவகப் பல சேகரம் |
| 3. சந்திராபரண ஓரை | 26. புவனப் ப்ருத்வி |
| 4. மெய்ஞ்ஞான பிருத்வி | 27. கர்ப்பலத்தை |
| 5. யோகார்ணவம் | 28. பூர்வ பராசரியம் |
| 6. யோக சத மஞ்சரி | 29. உத்தர பராசரியம் |
| 7. லீலாவதி | 30. ஆரிய(ஸ்)புடம் |
| 8. சாதன பாரிஜாதம் | 31. பலதாவித பிரபலம் |
| 9. அட்டவர்க்கம் | 32. முகூர்த்த எனும் விதானம் |
| 10. காலச் (எம்) சக்கரம் | 33. மாதவியம் |
| 11. நரச் சக்கரம் | 34. சாந்தி படாம் |
| 12. நவ நிதியம் | 35. அவி கணிதம் |
| 13. அரிட்ட நவநீதம் | 36. குட்டா காரம் |
| 14. வாரமோரை(அல்) வராகர் ஓரை | 37. அண்ட கோள பகுதி |
| | 38. பூகோளகை |
| 15. கயவல்லியம்(அல்) சாராவளி | 39. பஞ்சபட்சி |
| 16. கிருஷ்ணீயம் | 40. சரநூல் |
| 17. சித்தாந்தம் | 41. திரிமல சம்பிரதாயம் |
| 18. வாக்கிய கணிதம் | 42. மனோ மாண்டவ்யம் |
| 19. பரகித கணிதம் | 43. தின முகூர்த்த திரையம் |
| 20. சவுரிய பராக்கிரம் | 44. மதத்துள்ளது (முஷ்டி) |
| 21. கோளிலம்பகம் (அல்) கேரளீயம் | 45. தரிசன பலன் |
| | 46. சொப்பன சாஸ்திரம் |
| 22. காலமறிதல் | 47. சகுண சாஸ்திரம் |
| 23. காலப்ரகாசிகா | 48. காதல் சாஸ்திரம் |



இத்தனை (சித்தாந்தங்களும்) நூல்களும் அக்காலத்தில் வழங்கி வந்து உள்ளன. நாம் இவற்றை எல்லாம் இன்று முழுமையாக அடைய முடியாமல் போயிற்று. ஆம், பல கால வெள்ளத்திற்குப் பலியாயின. ஆயினும் இவற்றின் சாரத்தை குமாரசாமியத்தின் (தொகுத்துத் தரும்) படலங்களைப் படிக்கிற போது ஆறுதல் அடைகிறோம்.

**மற்றுள நீறகழுத்தான் சர்வார்த்த சிந்தாமணியிவ்**
**வகைப் பேர் பத்திரிகை சம்பு வாஞ்சியிரு நாதம்**
**உற்றபல கற்றொழில் சாதகத் துனதயம் வேம்பத்**
**தூரருள்ள முடையான் கேசவிய தன் மெட்டுளதுங்**
**கற்றிவரிப்படிப் பலவாய்த் தங்கடங்கட்குடைய**
**கருத்துள தெய்வுள தவ்வளவு கணிப்பதனாற்**
**சொற்றிட லெப்படியெனில் இப்பேர் பல சேகரமாய்ச்**
**சொல்வது அதிசயமுள குமாரசுவாமியமே**

குமார சுவாமியம் நூல் இயற்றப்பட்ட, சமகாலத்தில் மேலும் பல நூல்கள் வழங்கி வந்ததாக அறிகிறோம். அவை.

1. நீலகண்ட தாஜிகம்
2. சர்வார்த்த சிந்தாமணி
3. சர்வதோ பத்ரிகா
4. சம்புநாதவ்யம்
5. வாஞ்சி நாதவ்யம்
6. சாதக பல ரத்னம்
7. சாதக சீவனம்
8. சினேந்திர மாலை
9. வேம்பத்தூரார் உள்ளமுடையான்
10. கேசவியம்
11. அட்டைஸ்வரியம்

மேற்கண்ட நூல்கள் தத்தம் வழியில் ஜோதிடப் பலன்களைக் கூறியிருந்தாலும், இவற்றுள் கூறப்பட்டு உள்ள, சோதிடக் கருத்துக்களை எல்லாம் ஒன்று திரட்டி, அவற்றின் பலன்களைச் சேகரித்து குமார சுவாமிய நூலில் சொல்லப்பட்டு உள்ளது.

**இயல்புளவிப் பலமுழுதுஞ் சேகரித் தொன்றாக**
**வியம்பு மதிசய முள குமார சுவாமியமும்**
**புயனெழுதும் எழுத்தும் அவன் எழுத்தும் இயல்பாகப்**
**புகல்வது கண்டு இதனியல்பு இப்புவியலுளோர் அறிய**
**வயமுள சந்தாசலச் செந்தூர்க் கதிபன் வீரை**
**வருமாறியாடும் பெருமாள் புதல்வனான்**
**செயமிகு பிரபல கமுக குமார சுவாமிக் கோர்**
**தெய்வம வனுளத்திருந்து திருவுளம் பற்றயதே**

படைப்புக் கடவுளான பிரம்ம தேவன் மனிதர்களின் தலையில் எழுதும் எழுத்துக்கும், இன்னும் சற்று கூடுதலாக கூறினால், பிரம்ம தேவனின் தலையில் எழுதப்பட்டு உள்ள தலை எழுத்துக்கும் கூட இயல்பாக சோதிடப் பலனைக் கூறக் கூடிய அளவுக்கு தொகுக்கப்பட்டு உள்ளது இந்நூல்.

இந்நூலை இவ்வுலகில் உள்ளோர் நன்கு அறியும்படியாக, வீரை மாநகர் மாறியாடும் பெருமாளின் புதல்வராகப் பிறந்த இந்நூலாசிரியர் குமாரசாமி தனது இதயத்தில் சந்தன மாலையைக் கொண்ட திருச்செந்தூர் பதிக்கு அதிபனான செந்தில் வேலவன் குடி இருந்து அருள் பாலித்ததாக கூறுகிறார்.

**அவ்வை யவட் கிளையவ ணென் ணெழுத்திற்கு கண்**
**தெய்வத் தாலாக**
**தெனினு மெய்த் தொண்டதற்குள தெய்வுளவுண்டு**
**இவ்வுலகர்க்கு உரைத்ததுசத் தியமெனும் மார்க்கண்டர்க்கு**
**இறப்பிறப்பென் றைக்கும் ஒன்றென்றி சைத்துக்கேட்**
**டிருந்தும்**
**கவ்வையில்பாக் கியகாலத் தயத்தவனா கிலுந்துர்**
**காலமறிந்து அதைக்கடத்தக் கடவுளர்க்குங் கடவாத்**
**தெவ்வடி வேலாயுத தற்பல குரு தேசிகனைச்**
**சிந்தை செயிலவ னெமனாந்தகன் ஜெகதிந்திரனே**

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என ஔவை பிராட்டிக் கூறினாள். ஔவையின் சகோதரனாகக் கருதப்படும் தெய்வப்புலவர் வள்ளுவர் "தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்" என்றார்.

எண்ணும் எழுத்துமாக 16 வயது என்ற ஆயுளைப் பரமன் மார்க்கண்டேயருக்கு விதித்து இருந்தான். வள்ளுவரின் குறளை ஒட்டி மார்க்கண்டேயர் செய்தத் தன் தவ முயற்சியால், பிறப்பு, இறப்பு இல்லா சிரஞ்சீவி நிலையை அடைந்த முனிவர் ஆனார் என்பது சத்தியமான உண்மை ஆகும்.

ஒருவன் வாழ்க்கையின் பாக்கிய (யோகமான) மான காலத்தில் அசட்டையாக வாழ்கிறான். தனக்கு கஷ்ட காலம் வருகிற போது தான் வருந்துகிறான். வருத்தம் நீங்க வழி தேடுகிறான். அவன் இந்நூலில் கூறப்பட்டு உள்ள சோதிட நுணுக்கங்களை செய்திகளை முழுமையாகக் கற்று அறிய வேண்டும்.

அப்படி முழுமையாகக் கற்று அறிந்தவற்றை தம் வாழ்நாளில் அவற்றைக் கடைபிடித்து வர வேண்டும். மேலும் வடிவேல் ஆயுதத்தை ஏந்திய முருகப் பெருமானை நாளும் மனதில் தியானித்து வருவான் ஆகில் எமனையும் வெல்லுவான் இப்பூவுலகில் இந்திரனாக வாழ்வான் என்பதே இந்நூலின் பயன் ஆகும் என்று ஆசிரியர் கூறுகிறார்.

தொடரும்...

# ஜோதிடச் சுரங்கம்



S.R.அருள்வேல் (Ph.D) ஜோதிடம்
செல்: 98428 41497

குருவருள் ஜோதிட நண்பர்களுக்கு வணக்கம். இந்த ஜோதிட சுரங்கம் எனும் கட்டுரை தொடரில் வானியலுக்கும் ஜோதிடத்திற்கும் உள்ளத் தொடர்புகளைத் தொடர்ச்சியாகத் தர விரும்புகிறேன். மேலும் ஜோதிடத்திற்கும் — வேதத்திற்கும் உள்ளத் தொடர்புகளையும் இனியும் விளக்க உள்ளேன்.

இந்த தொடர் அள்ள அள்ளக் குறையாத அறிவுச் சுரங்கம் ஆகும். தொழில் முறை ஜோதிடர்களுக்கும், ஜோதிட அபிமானிகளுக்கும் ஓர் அற்புத விருந்தாக அமையும். இது சம்பந்தமான சந்தேகங்களுக்கு என்னுடன் தொடர்பு கொண்டால் தெளிவு பெறலாம்.

இராசி மண்டலத்தை 12 வீடுகளாகப் பிரித்து, ஒவ்வொரு வீடும், ஜாதகரின் வாழ்க்கையில் குறிப்பிட்ட விஷயம் பற்றித் தெரிந்துக் கொள்ள பயன்படும் என்கிறோம். உதாரணமாக இலக்கினம் எனும் முதல் வீடு, ஜாதகரின் பொது விஷயங்கள், 4ஆம் வீடு தாய், மண், மனை, வாகனம், 7ஆம் வீடு, மனைவி, கூட்டாளி, 10ஆம் வீடு தொழில், உத்யோகம் ஆகும்.

இதனை எந்த அடிப்படையில் பிரித்துள்ளார்கள். ஏன் 4ஆம் வீட்டை தாய்க்கும், மண், மனை, வாகனத்திற்கும் கொடுத்தார்கள்? ஏன் 10ஆம் வீட்டை கொடுத்தால் என்ன? நியாயமான கேள்வி தானே? உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளும் கேள்வி தானே? இதோ பதில், படத்தைக் கவனிக்கவும்.




நாம் கிழக்கு முகமாக நின்றுக் கொண்டு, கிழக்கு அடி வானத்தை பார்க்கின்றோம். அந்தக் கீழ் வானத்தில் உதயமாகும் இராசிப்புள்ளியை இலக்கினம் என்கிறோம்.

வானியல்படி ஜாதகன் தான் இருக்கும் பகுதியில் இருந்துக் கொண்டு, கிழக்குப் பகுதியில் ஓர் இராசியின் புள்ளியை பார்க்கின்றான்.

இவனது பார்வையும், இராசி மண்டலத்தின் ஓர் இராசிப்புள்ளியும் இணைகின்றன. இலக்கினம் என்றாலே இணைதல் என்று தான் பொருள். இந்த இடத்தில் ஜாதகன் அந்த இராசியுடன் இணைவதால் அந்த இராசியின் தன்மையே, ஜாதகனின் தன்மையாக இருக்கும் எனக் கருதி, அந்த இராசியையே ஜாதகனாகப் பாவனை செய்து, ஜாதகனைப் பற்றியப் பொது விஷயங்கள் அறிய பயன்படுத்துகிறோம்.

4ஆம் வீடு நமது பாதத்திற்கு கீழும், 10ஆம் வீடு தலை உச்சிக்கு நேர்மேலேயும் உள்ளது. 4ஆம் வீடு, நமது பாதத்திற்கு கீழ் உள்ளது என்றால் நிலமாகிய மண், நம் பாதத்திற்கு கீழ் தானே உள்ளது. எனவே 4ஆம் பாவத்தை நிலம், வீடு, வாகனம் ஆகியவற்றை குறிக்கிறது.

அதே போல் விதை முளைத்து செடியாகி, மரமாக வளர நிலம் ஆதரமாக இருப்பது போல், மனிதன் கருவாக உருவாகி, குழந்தையாக வளர தாய்த் தேவைபடுகிறார். எனவே எப்படி 4ஆம் பாவகத்தை நிலத்திற்கு ஒப்பிட்டார்களே, அதே போல் 4ஆம் பாவகத்தையும் தாய்க்கும் ஒப்பிட்டார்கள்.

10ஆம் பாவகம், ஒருவர் வாழ்க்கையின் உச்சக்கட்டத் தகுதி, அதிகாரம், கௌரவம், தொழில் இவற்றை அறியப் பயன்படுகிறது. இன்னும் தெளிவாகச் சொல்வது என்றால், ஒரு நபர், எந்த வகையில் இந்த உலகிற்கு காட்சியளிப்பார்? என்பதை அறிய இந்த வீட்டை ஆராய வேண்டும்.

உதாரணமாக ஒருவர் மருத்துவரா, இன்ஜீனியரா, வழக்கறிஞரா, மதபோதகரா, இப்படி எவ்வாறு இந்த உலகிற்கு தெரிவார்? என்பதை இந்த 10ஆம் வீட்டைக் கொண்டு தான் அறிய முடியும் என்று சொன்னார்கள்.

ஏனென்றால் அடிவானத்தில் உள்ள சூரியன் ஒளி குறைந்தும், சிறு மரம், கட்டடங்கள் போன்றவற்றால் கூட மறைக்கப்பட வாய்ப்பு உண்டு. ஆனால் நம் தலைக்கு மேலே சூரியன் உச்சமாக இருக்கும் பொழுது எப்பொருளாலும் சூரியனை மறைக்க முடியாது. அப்பொழுது சூரியனின் ஒளிக்கதிர் அதிகமாகப் பூமியின் அந்தக் குறிப்பிட்டப் பகுதியில் விழும்.

அதாவது சூரியன் உச்சமாக இருப்பது போல் மனிதனின் உச்சத் தன்மையை, இந்த 10ஆம் பாவகத்தைக் கொண்டு அறியலாம். 7ஆம் பாவகம் வாழ்க்கைத் துணைவர், தொழில் கூட்டாளிகளைப் பற்றி அறிய பயன்படும். ஏன் என்றால் 1ஆம் பாவகமும், 7ஆம் பாவகமும் ஒரே நேர்கோட்டில் உடையவை. அதனால் இலக்கினம் உதயமாகும் பொழுது 7ஆம் பாவகம் மறையத் தொடங்கும்.

அதாவது ஒருமித்த இயக்கம் இருக்கும்.

வாழ்க்கைப் பயணத்தில் ஜாதகருடன் ஒருமித்த கருத்துடன் இயங்க வேண்டியவர். அவருடைய வாழ்க்கைத் துணை தானே? ஆண் என்றால் மனைவி தேவை. பெண் என்றால் கணவர் தேவை அல்லவா? அதே போல் ஒரு தொழில் செய்கிறோம். அதில் கூட்டாளி ஒருவரைச் சேர்க்கின்றோம் என்றால் நீங்களும் அவரும் ஒருமித்த கருத்துடன் இயங்கினால் தானே வெற்றி கிடைக்கும்.

அதனால் தான 7ஆம் பாவகம் வாழ்க்கைத் துணைவரையும், தொழில் கூட்டாளிகளையும் பற்றி அறியப் பயன்படுகிறது. ஆக இதுவரை 1,4.7.10 பாவத்திற்கு கொடுக்கப்பட்ட ஆதிபத்தியங்களுக்கான காரணங்களை அறிந்துக் கொண்டோம். இந்த 4வீடுகளுமே ஜாதகத்தில் முக்கிய வீடுகள் ஆகும். அதனால் தான் மையம் (center) எனும் பொருள் தரும்படி கேந்திரம் என்றனர். மேலும் கேந்திரம் என்றால் நான்கு என்றும், சதுரம் என்றும் பொருள் உண்டு. ஜாதகத்தில் 1,4,7,10ஆம் வீடுகளை இணைத்தால் சதுரம் கிடைக்கும். இந்த நான்கு வீடுகளுக்கு துணை செய்வதற்கே மற்ற 2,3,5,6,8,9,11,12ஆம் வீடுகள் பயன்படுகின்றன. அதிலும் ஓர் ஒற்றுமை உள்ளன. அதையும் தெரிந்துக் கொள்வோம்.

1ஆம் வீட்டிற்கு 5,9ஆம் வீடுகளும், 4ஆம் வீட்டிற்கு 8,12ஆம் வீடுகளும், 7ஆம் வீட்டிற்கு 11,3 ஆம் வீடுகளும், 10ஆம் வீட்டிற்கு 2,6ஆம் வீடுகளும் உதவி செய்கின்றன.

இதில் ஒவ்வொரு வீட்டிற்கும் துணை புரியும் வீடுகள் ஒன்றுக்கொன்று 5ஆம் வீடாய் வருவதை அறியவும். 1 முதல் 5ஆம் வீடாக வருவது 5ஆம் பாவகம். 5ஆம் பாவகம் முதல் 5ஆம் வீடாக தள்ளி வருவது 9ஆம் பாவகம். எனவே 1,5,9 இதனை இணைத்துப் பாருங்கள் முக்கோணம் வரும்.

அதே போல 4ஆம் வீட்டிற்கு 5 வீடாக உள்ள வீடு 8ஆம் வீடு. (4ஆம் வீட்டையும்ட சேர்த்து எண்ணுதல் வேண்டும்) 8ஆம் வீடு முதல் 5 வீடாக வருவது 12ஆம் வீடு. எனவே 4,8,12 ஆம் வீடுகளை இணைத்தாலும் முக்கோணம் வரும். இதே போல் 7ஆம் பாவகத்திற்கும் 10—ஆம் பாவகத்திற்கும் பார்க்கலாம்.



**கேந்திரம் (சதுரம்)**







**திரிகோணங்கள் (முக்கோணம்)**

மேலே உள்ள படத்தில் முக்கிய வீடுகள் எனப்படும் கேந்திரங்களான 1,4,7,10ஆம் வீடுகளையும், அதற்கு கீழே கேந்திரங்களுக்குத் துணை புரியும் வீடுகளைக் குறிப்பிட்டு அவை முக்கோண வடிவில் இயங்குவதை வரைபடம் மூலம் விளக்கியுள்ளேன்.

ஒவ்வொரு முக்கோணத்திலும் முக்கிய வீடுகளை 1,4,7,10ஆம் வீடுகள் முக்கோணத்தின் தலை பகுதியில் வட்டமிட்டுக் காண்பிக்கப்பட்டு உள்ளன.

எனவே 1,5,9ஆம் வீடுகள் ஜாதகனைக் குறிக்கும். குறிப்பாக ஜாதகரின் தர்ம சிந்தனையைக் குறிக்கும். 9ஆம் வீடு, ஜாதகனின் முற்பிறவி, முதல் வீடு ஜாதகனின் இப்பிறவு 5ஆம் வீடு ஜாதகனின் அடுத்த பிறவியையும் குறிக்கும்.

முற்பிறவி, மறுபிறவி பற்றிப் பேசும் அளவிற்கு நாமும், அறிவியலும் முன்னேறவில்லை என்பதால் ஆன்மீக அளவில் ஏற்றுக் கொள்ள வேண்டும். முற்பிறவி, மறுபிறவி பற்றி ஆன்மீக வழியில் அறிவியல் கண் கொண்டு கண்டிப்பாய் இக்கட்டுரை தொடரில் விளக்கப்படும். இனி விஷயத்திற்கு வருவோம்.

4,8,12ஆம் வீடுகள் மண், மனை, வாகன யோகத்தைக் குறிக்கும். அதாவது சுகஸ்தானத்தை குறிக்கும். இந்த அடிப்படையில் தான் 12ஆம் பாவகத்தை அயன, சயன ஸ்தானம் தூங்குதல், அலைதல் பாவகம் என்றனர். இத்துடன் ஏற்கனவே சொன்னது போல 4ஆம் வீடு தாயைக் குறிக்கும்.

இனி 3,7,11 ஆம் வீடுகளைப் பார்ப்போம் 7ஆம் வீடு வாழ்க்கைத் துணைவரைக் குறிக்கும் எனப் பார்த்தோம். தொழில் கூட்டாளியைக் குறிக்கும் எனப் பார்த்தோம். அதே போல் 3,11ஆம் வீடுகள் நமது நண்பர்களை, அண்ணன் தம்பிகளை, உறவினரைக் குறிக்கிறது.

குறிப்பாக 3ஆம் வீடு நம்மை விட வயது, வசதி, வாய்ப்பில் குறைந்தவர்களையும், 11ஆம் வீடு நம்மை விட வயது மற்றும் வசதி வாய்ப்புகளில் உயர்ந்தவர்களைக் குறிக்கும். உறவினர்கள், நண்பர்களுடன் நாம் கருத்துப் பரிமாற்றம்,

தொடர்பு வைத்துக் கொள்ள முடியும்.

எனவே 3ஆம் இடம் கருத்துப் பரிமாற்றம், தொலைத் தொடர்பு பற்றி அறியப் பயன்படும். இனி உள்ளது 2,6,10ஆம் வீடுகள் ஆகும். ஏற்கனவே சொன்னது போல் 10ஆம் வீட்டை வைத்து, ஒருவரின் தொழில் அறியலாம் என்றாலும், அவருடைய வசதி வாய்ப்பை 2ஆம் வீட்டை வைத்து தான் அறிய வேண்டும். உடல் உழைப்பு மூலமானத் தொழில்களை 6ஆம் வீட்டை வைத்து அறிய வேண்டும்.

இந்த இடத்தில் ஒரு கருத்தை சொல்ல விரும்புகிறேன். 1,5,9இல் முதல் பாவகம் ஜாதகனையும், 5ஆம் வீடு, ஜாதகனின் முதல் வாரிசையும், 9ஆம் வீடு ஜாதகனின் தந்தையும் குறிக்கும் என்பது மரபு. ஒரு முறையில் பார்த்தால் இது சரியாக வரும். அதாவது 9ஆம் வீடு ஜாதகனின் தகப்பா என்றால் 9க்கு ஐந்தாம் வீடான இலக்கினம் ஜாதகனை குறிக்கிறது.

ஜாதகன் எனும் இலக்கினத்திற்கு 5ஆம் வீடு ஜாதகனின் வாரிசை குறிக்கும். இந்த முக்கோணத்தில் தாத்தா, மகன், பேரன் என்ற முக்கோணம் சரியாக வந்தாலும் 10ஆம் இடமே தகப்பனை பற்றி அறிய நன்றாகப் பயன்படுகிறது. ஒத்து வருகிறது. அது பற்றி இனி பின்னால் பார்ப்போம்.

இந்த இடத்தில் ஒரு சந்தேகம் வந்திருக்க வேண்டும். ஜாதகனை பற்றியும் (1) பூர்வீக புண்ணியம்(5) பற்றியும், சுகம் (4,8,12) பற்றியும், உறவுமுறை 3,7,11பற்றியும், தொழில் 2,6,10பற்றியும் நல்ல விசயமாக சொல்லி விட்டீர்கள். இந்த உலகை வாட்டி வதைக்கும் நோய் பற்றியும், கோர்ட் — வம்பு — வழக்கு பற்றியும், கடன் பற்றியும் மரணம் பற்றியும் ஏன் ஒன்றுமே சொல்லவில்லையே...

அவை பற்றி ஜாதகத்தில் எந்த வீடுகளைக் கொண்டு ஆராய்வது? நாங்கள் பார்த்து மிரளும் 6,8,12ஆம் வீடுகள் சுக ஸ்தானங்களா? என்று கேட்கத் தோன்றும். அதற்கான விளக்கம் பெறுவோம். முதலில் நோய் பற்றி பார்ப்போம். நோய் என்றால் என்ன? ஜாதகன் உடல் ரீதியாக சுககேடு அடைதல் ஆகும். எனவே 4,8,12ஆம் வீடுகள் நன்றாக இருந்தால் ஜாதகன் நல்ல ஆரோக்கியமும், சுகமும் அடைவான்.

4,8,12ஆம் வீடுகள் கெட்டுவிட்டால் சுககேடு எழும். நோய் வாய்ப்படுவான். அடுத்து வம்பு, வழக்கு, கடன் போன்றவை ஏன் வருகிறது? பணப்பிரச்சனையால் தானே வருகிறது. பணம் 2,6,10ஆம் வீடுகள் தானே. எனவே 2,6,10ஆம் வீடுகள் நன்றாக இருந்தால் வம்பு — வழக்கே வராது. 2,6,10ஆம் வீடுகள் கெட்டுவிட்டால் வம்பு, வழக்கே ஜாதகனின் வாழ்க்கை என ஆகிவிடும்.

இத்துடன் 4,8,12ஆம் வீடுகளும் கெட்டு விட்டதாக என வைத்துக் கொள்ளுங்கள். நான் சொல்ல விரும்பவில்லை. நீங்களே யூகம் செய்து கொள்ளுங்கள். சுருக்கமாகச் சொன்னால், வம்பு வழக்கால் சுகத்தை, மண் மனையை இழப்பான் அல்லது வம்பு வழக்கைச் சந்திப்பான்.

இறுதியாக, அடுத்து மரணம் பற்றி பார்ப்போம். மரணம் என்பது என்ன? உடல் நலக்கேட்டின் உச்சம்,அல்லது சுகம் எனப்படும் மண், மனை வாகனத்தால் ஏற்படும் விபத்து ஆகும்.

சரி 2,6,10 நன்றாய் இருந்தால் வம்பு வழக்கே வராது. 4,8,12 நன்றாய் இருந்தால் மண், மனை, வாகன யோகம் உடையவன் என்றும், மேற்படி வீடுகள் கெட்டுவிட்டால், எதிர் மறையானப் பலன்கள் நடைபெறும் என்றும் சொல்கிறீர்கள்.

அப்படி என்றால், ஒரு வீடு நன்றாய் உள்ளது அல்லது கெட்டு விட்டது என்பதை எப்படி நாம் அறிவது, என்றக் கேள்வியை உங்கள் மனது இந்நேரம் கேட்டிருக்க வேண்டும். சரிதானே அதனை அறிவது மிகவும் எளிதான முறைதான்.


## அன்பு வாசகர்களுக்கு முக்கிய அறிவிப்பு

**உங்கள் ஆர்வத்திற்கு ஏற்ப, "குருவருள் ஜோதிடம்" 3,4 மற்றும் 5ஆம் ஆண்டு இதழ்கள் எங்களிடம் விற்பனைக்கு கிடைக்கும். மேலும் தேவைப்படுவோர் எங்களிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். இனி வரும் இதழ்களும் தடைபடாமல் உங்கள் இல்லம் தேடி வர சந்தா தொகையை மட்டும் எங்களுக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.**

**3ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.230/-**
**4ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.300/-**
**5ஆம் ஆண்டு 12 இதழ்: ரூ.300/-**

கூரியர் செலவு உட்பட (தமிழ்நாடு மட்டும்) மற்ற மாநிலங்களுக்கு கூரியர் செலவு மாறுபடும்

கீழ்கண்ட எமது வங்கி கணக்கில் பணம் செலுத்தி எங்களுக்கு தெரியப்படுத்தினால் உடன் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

**R.RADHA - C. RAJU, Indian Bank (Chennai, Royapettah)**
**SB A/c. No. 426681768**

ஆசிரியர், செல் : 97104 21880

# சன்னியாசி யோகம்



எம்.சாமிநாதன் – செல்: 98426 91783

வாழ்க்கையில் சில காலம் கஷ்டமும், நஷ்டமும் ஏற்படுவது உண்டு. சில காலம் வாழ்க்கையில், சந்தோசம், மகிழ்ச்சியும், ஏற்படுவது உண்டு. இதோ இந்த ஜாதகத்தைப் பாருங்கள். இந்த ஜாதகரின் வயது 32ஆகிறது. இவருக்கு இதுவரைத் திருமணம் நடைபெறவில்லை. தாய் தந்தையை 19 வயதில் இழந்தவர்.

சகோதரர் சகோதரி பாக்கியம் இல்லாதவர். தனது 19வயதில் உடல் நலம் பாதிபபிற்கு உள்ளாகி. ஒன்றுவிட்ட உறவினர் இவரை காப்பாற்றி, தன் வீட்டிலேயே இருக்க வைத்து, அவர் வீட்டில் உள்ள வேலையை செய்துக் கொண்டு காலத்தைத் தள்ளினார்.

| | | | |
|---|---|---|---|
| கேது | | | குரு |
| | காத்து இராசி | | சூரி |
| ல / சந் | | | சனி சுக் செவ் புத |
| | | | ராகு |

அங்கேயும் பகைத்துக் கொண்டு தற்சமயம் கூலி வேலை செய்துக் கொணடு இருக்கிறார். தானே சமைத்து சாப்பிடுகிறார். எனக்கு எப்பொழுது நல்ல காலம் பிறக்கும்? எப்போது திருமணம் நடைபெறும். என்று கேட்டார்.

பிறந்த தேதி 21—7—1978 பிறந்த நேரம் மாலை 6,55 பிறந்த இடம் சேலம், மாவட்டம், மகர இலக்கினம் அவிட்டம் நட்சத்திரம், ஜனன காலத்தில் செவ்வாய்த் திசை இருப்பு 5—11—25

**பாதசாரநிலை வியம்**

| | கிராம் | பாதம் | இராசி | அம்சம் |
|---|---|---|---|---|
| 1 | சூரியன் | 1 | கடகம் | சிம்மம் பூசம் நட்சத்திரம் |
| 2 | சந்திரன் | 1 | மகரம் | சிம்மம் அவிட்டம் நட்சத்திரம் |
| 3 | செவ்வாய் | 1 | சிம்மம் | தனுசு உத்திரம் நட்சத்திரம் |
| 4 | புதன் | 1 | சிம்மம் | தனுசு மகம் நட்சத்திரம் |
| 5 | குரு | 3 | மிதுனம் | மிதுனம் புனர்பூசம் |
| 6 | சுக்கிரன் | 2 | சிம்மம் | கன்னி பூரம் |
| 7 | சனி | 2 | சிம்மம் | ரிசபம் மகம் |
| 8 | இராகு | 3 | கன்னி | கும்பம் உத்திரம் |
| 9 | கேது | 1 | மீனம் | சிம்மம் உத்திரட்டாதி |

இந்த ஜாதகத்தில் இலக்கினாதிபதியும், குடும்ப ஸ்தானாதிபதியும். சனி பகவான் 8இல் மறைவு பெற்று உள்ளார். இது மிகப் பெரியத் தவறாகும்.

| | | | |
|---|---|---|---|
| ல / | புத | சனி | குரு |
| ராகு | காத்து இராசி | | |
| | | | சூரி சந் கேது |
| செவ் | | | சுக் |

இலக்கினம் என்பது உயிர், இராசி என்பது உடல் ஆகவே இலக்கினாதிபதியும், ஆயுள் காரனும்மாகிய சனி பகவான் 8இல் மறைந்தது அற்ப ஆயுளை தரும் என்பது விதி. குடும்பத்ததிபதியும், சனியாக இருப்பதால் பணப்பிரச்சனை இவருக்கு

புத்திரகாரகன் குருபகவான் ஆகிறார். ஆகவே தான் இவருக்கு. சகோதரப் பாக்கியத்தை இழந்தார் அதே போல புத்திர பாக்கியத்தையும் இழக்கிறார். பெரிய மனிதரின் செல்வாக்கு உதவி இல்லாதவர்.

4—11க்குடைய செவ்வாய் ஆகிறார். 4ஆம் இடம் என்பது உடல் ஆரோக்கியத்திற்குரியது. தாயாருக்குச் சொந்தமான ஸதானமாகும். வண்டி வாகனத்திற்கும், சொகுசான வீட்டிற்கு சொந்தக்காரகனும் 4இடம் ஆகும்.

ஆகவே செவ்வாய் 8இல் மறைவு பெற்றதால் இளமையில் தாயை இழந்தார். உடல் சுகத்தை இழந்தார். தன் சுய வீட்டில் இல்லாமல் அங்கும் இங்குமாகக் காலத்தை ஓட்டுகிறார்.

5—10க்கு அதிபதி சுக்கிரன் 8இல் மறைவு பெற்றது குற்றமே 5ஆம் இடம் என்பது நல்ல புத்தி (அறிவு) சொந்தக்காரர் புத்திர ஸ்தானத்திற்கு அதிபதியும். களத்திர காரகனும் அவரே.

ஆகவே இதுவே திருமணத்தடை ஏற்படுத்துகிறது.

புத்திர பாக்கியம் இல்லாமல் போகிறது. நிலையான பணி இல்லாமல் அரைகுறை வேலை செய்து ஜீவனம் செய்கின்ற நிலைக்கு ஆளாகிறார்.

6—9க்கு அதிபதி புதன் 8இல் மறைவு பெற்றதும் தவறுதான். 6ஆம் இடம் என்பது கடன் நோய். பகை எதிர்ப்பு இவற்றிற்கு சொந்தக்கார் 9ஆம் இடம் என்பது பாக்கிய ஸ்தானமாகும். பாக்கியம் என்பது கவுரவம் கண்ணியம், கட்டுப்பாடு.

வாழ்க்கையில், இல்லாதவர் அது மட்டும் அல்ல, வாழ்க்கையில் தனம், சுகம், பணசுகம், புத்திரசுகம், மனைவி சுகம் இது போன்றப் பாக்கியத்தை இழந்து வறுமையல் வாழ்க்கை நடத்துகிறார்.

5,7க்குடைய சந்திரன் (களத்திரஸ்தானாதிபதி) இலக்கினத்திலேயே இருப்பதும் அஷ்டமாதிபதி சூரியன் 7இல் இருந்து சந்திரனை 7ஆம் பார்வையாகக் களத்திர தோஷம், மாங்கல்ய தோசத்தைப் பெறுகிறது.

இந்த ஜாதகருக்கு மனைவி சுகம் இல்லாமல் வறுமையில் வாழ்ந்து அவயோகத்தையும் சன்யாசி யோகத்தையும் பெற்றுவாழ்க்கையில் சுகம் என்பதே இல்லாமல் வாழ்ந்து வருகிறார்.

இந்த ஜாதகத்தை நான்பார்த்து விட்டு உங்களுக்கு குடும்ப வாழ்க்கை சரிவராது. ஆன்மிக வழிவில் செல்வது சிறப்பு என்று கூறி அவரை அனுப்பினேன்.

# சூரிய சந்திர இலக்கின சூட்சுமம்



சின்னாளப்பட்டி
ஆர்.தங்கவேலு D.A., ICAS
செல்: 99441 28281

**பூமியின் தற்சுழற்சியில் இருந்து கணிப்பது ஜன்ம இலக்கினம் சந்திரன் பூமியைச் சுற்றுவதில் இருந்து கணிப்பது ஜன்ம இராசி. சூரியனைப் பூமி சுற்றுவதில் இருந்து கணிப்பது சூரிய இராசி.**

மேற்கூறிய 3 வகையான வானயில் தத்துவங்களை முக்கிய ஆதாரமாகக் கொண்டது ஜோதிட சாஸ்திரம்.

புவன மத்திய ரேகைக்கு தெற்கிலும், வடக்கிலும் 8 பாகைகள் வரை இராசி மண்டலம் வியாபித்து உள்ளது.

பூமி சூரியனைச் சுற்றி வரும் ஒரு வருடத்தில் இராசி மண்டலத்தையும் சுற்றுகிறது. வானவெளியில் சூரிய வருடபாதை, இந்த இராசி மண்டலத்தைச் சூரியனை, பூமி சுற்றி வரும் ஒரு வருட காலத்தில் அமைகிறது. இறைவனின் கருவியாக, ஆன்மாவைப் பிரதிபலிப்பதாக இராசி மண்டலம் உள்ளது.

உணர்தலும், அறிதலும் ஆகிய மனம் இராசி மண்டலக் கட்டுப்பாட்டில் உள்ளது. அமாவாசை முதல் அமாவாசை வரை, சந்திரனின் பயணம் பூமியை ஒரு மாதத்தில் சந்திரன் சுற்றும் அளவுக்கு உட்பட்டது ஆகிறது.

பூமியின் தற்சுழற்சி ஒரு நாளில் அமைகிறது. பிறந்த நேரம், பிறந்த இடம் பூமியைச் சூரியன் சுற்றுவது போலத் தென்படும் மாயத் தோற்றப் பாதையில் பூமியைச் சார்ந்த அட்ச தீர்க்க ரேகைத் தொடர்பு உடைய இடத்திற்கு ஏற்ப இலக்கினம் அமைகிறது.

**இலக்கினம்ம் உடலைக் குறிப்பது**
**சந்திரன் மனதைக் குறிப்பது**
**சூரியன் உயிரை (ஆன்மா)க்குறிப்பது**
**கடிகாரத்தில் மணியைக் குறிக்கும் முள் – சூரியன்**
**கடிகாரத்தில் நிமிடத்தைக் குறிக்கும் முள் – சந்திரன்**
**கடிகாரத்தில் விநாடியைக் குறிக்கும் முள் –இலக்கினம்**

என்பது போல நினைவில் கொள்ளலாம்.

வாழ்வில் நிகழும் முழுமையான செயல்களின் வரையறைக்கு உட்பட்ட நிலையின் அளவை வரையறைக்கு உட்படுத்துவது இலக்கினத்தின் நிலையாகும்.

ஆன்மா (உயிர்)மனம் உடல், தன்மைகளை முழுமையாகப் பிரதிபலிக்கிறது, முழுமை பெற்ற நுண்மையாக இலக்கினம் உள்ளது. முழுமையையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கதாக இலக்கினம் திகழ்கிறது.

இலக்கின உதயமாகும் இராசி, ஜாதகனின் வாழ்க்கைப் பரிணாமம் பெற்றுள்ளத் தகுதியைக் குறிக்கிறது. இது மரபு நிலையாக வெளிப்படுகிறது. பிறந்த சில வாரங்களில், மாதங்களில் குழந்தையின் உடல் வளர்ச்சிக்கு ஆதாரமாக இலக்கினம் அமைகிறது.

உடல் வெளிப்பாடாக இலக்கினம் இருந்தாலும், உடலுக்கு ஆதாரமான மனம் (சந்திரன்) மனதிற்கு ஆதாரமான உயிர் (ஆன்மா — சூரியன்) தொடர்புடைய செயல்களால் வாழ்வை வடிவமைக்கிறது. சிருஷ்டிக் ஆதாரமாக உள்ள பஞ்சபூதங்களுக்கும், ஜாதக ஆதிபத்தியத்தை வழங்கி ஆதாரக் கணிதமாக இலக்கினம் உள்ளது.

ஆதிபத்தியத் தகுதி அமைவதே இலக்கின அமைவில் இருந்து தான் என்பது எல்லாரும் அறிந்ததே. எனவே கிரகங்கள் அதிர்ஷ்டம் தருவதோ, அரிஷ்டம் தருவதோ ஆதிபத்தியத்தைப் பொறுத்ததே.

சந்திரன் அமையும் நட்சத்திர நிலையால் திசை நிர்ணயிக்கப்படுகிறது.

சூரியன் அமையும் இராசி நிலையில் சந்திரனுக்கும், இலக்கினத்திற்கும் ஆற்றல் கிடைக்கிறது.

பூமியைச் சுற்றும் சந்திரன், பூமியுடன் சேர்ந்து சூரியனையும் சுற்றி வருவதால், இராசி மண்டல வான்வெளி, பிற கிரக நிலைகளின் தன்மைகளைச் சந்திரன் கிரகித்துப் பூமிக்கு அளிக்கிறது. எனவே பிற கிரகங்களை விட சந்திரன் முக்கியத் துவமான தன்மையைப் பெறுகிறது.



இலக்கினம் உடல் வாழ்வுத் தொடர்புக்கு அச்சாணி இதனை வாழ்வின் பல்வேறு அம்சங்களை அளவிட் 16 வகை நுட்ப கணிதங்களுக்கு உரிய, சோடச வர்க்கச் சக்கரங்ங்ள் மற்றும் 300 வகை நாடி அம்சங்கள் வரை ஒரு இராசியில் அமையும் இலக்கினத்தை நுணுகி வகைப்படுத்தப்பட்டு உள்ளது.

எடுத்துக்காட்டாக இலக்கின இராசியை 2 பிரிவாக ஓரை இலக்கினம் ஆரோக்கியம் பற்றியது. 3 பிரிவாக திரேக்காண இலக்கினம் உறவினர்களுக்கு உள்ளத்தொடர்பு

7 பிரிவாக சப்தாம்ச இலக்கினம் — ஜாதகர், சகோதரர், புத்திர இயல்புகள், 9 பிரிவாக நவாம்ச இலக்கினம் வாழ்க்கை தொழில், துணைவர் நிலை, 12 பிரிவாக துவாதசாம்ச இலக்கினம் பெற்றோர்களின் தன்மை. இது போன்ற வாழ்வியல் தொடர்புடைய பல செய்திகளையும் ஆய்வு செய்ய ஜாதக கணித நுட்பம் உரியதாகிறது.

சூரிய சக்தியைக் கிரகித்து, சந்திரன் அதனைப் பூமிக்கு தொடர்புப் படுத்துகிறது. பூமியில் உள்ள தாது, மூல ஜீவர்களின் பரிணாமத்திற்கு உதவுகிறது. பூமியைச் சுற்றி வரும் ஒரு மாத காலத்திற்கு உள்ளே.

பிற கிரக சக்தியையும் கிரகித்துப் பூமிக்குத் தொடர்புப் படுத்துவதும் சந்திரனே. எனவே சந்திரன் அமர்ந்து உள்ள இராசி மிக முக்கியத்துவமானது.

உலகியல் வாழ்விற்குப் பிரதிநிதியாக சந்திரன் உள்ளார். வெளி உலக வாழ்வியல் செயல்முறைகளில் உன்னத நிலை பெறுவதோ, பெற முயற்சிப்பதோ, பெற முடியாமையோ கடந்த பிறவிகளின் கர்ம வினைத் தொடர்புகளோடு கலந்தும், அவற்றின் தன்மைகளில் இருந்து விலக முயன்றும், போராடுவதற்கும், ஆதாரமாக இருப்பதும் சந்திரனே.

அகத்தன்மை இதயத் தொடர்பில் சூரிய பலம் புறத்தன்மை மூளையின் தொடர்பில் சந்திரபலம் அகமும் — புறமும் சுவாச முறையில் இதயமாவது நுரையீரல் இதய இணைவுச் செயல் முறைகள் ஆகின்றன.

விதியும், தன்னம்பிக்கையும், உறுதியும், விருப்ப மும், அக ஆற்றல் — புற ஆற்றல், உடலழகு, அறிவழகு, ஆண்மை — பெண்மை ஜீவாதார சக்தி ஜீவாதமுத சக்தி இப்படி வாழ்வியலில் ஒளி, கிரகக் கலப்பு சக்திகள் செயல்படுகின்றன. பெறப்போகிற அனுபவங்களுக்கு, பெற்று உள்ள அனுபவங்களைத் துணையாக்குவது சந்திரனே.

பிற கிரகத் தொடர்புகளில் சந்திரன் அமைந்துள்ள நிலையே சாதகமான, சாதகமற்ற சூழ் நிலைகள் அமைவதைத் தெரிவிக்கிறது.

ஜனன காலத்தில் பாபக் கிரகங்களின் பாதிப்பில் சிக்கிய சந்திரன் அமையப் பெற்றவர்களுக்கு, வாழ்வில் உயர்வதற்கான சூழல்கள் அமைவதும் கடினமே. மாறாக சுபக்கிரக சம்பந்தம் பெறும் சந்திரன் அமைவு உள்ளவர்களுக்கு வாழ்வில் முன்னேற சாதகமான சூழ்நிலைகள் அமைகிறது.

சூரியனுக்கும் — சந்திரனுக்கும் முறையே குரு, சுக்கிரசம்பந்தம் கிடைக்க, இலக்கினத்திற்கும், குரு, சுக்கிர சம்பந்தம் அமைந்திட, பிற கிரகப் பாதிப்புகள் எல்லாம் மறைந்து ஒழிந்து போகின்றன.

சந்திரன் சொந்த, நட்புக்கிரக திரேக்காணங்களில் வீற்றிருக்க நலம் தரும் ஆற்றல் பெறுகிறது. சர்ப்பத்திரேக்காணம், ஆயுதத் திரேக்காணம், சதுஷ்பாத திரேக்காணம், பட்சி திரேக்காணம், இவற்றில் சந்திரன் அமையப் பாதிப்பாகின்றது.

பஞ்சபூதங்களுக்கு அதிகாரம் பெறுகின்றக் கிரகங்கள் எல்லாம் பலன் அளிப்பதில் பலம் சந்திரனின் பலத்திற்கு ஏற்பவே வழங்குகிறது.

எனவே பிற கிரகபலம் இருந்தும் சந்திரனின் பல வீனம் ஜாதகரை பலவீனப்படுத்தி விடும்.

சர்ப்பாதி திரேக்காண விபரங்களை பிருகத் ஜாதகம் வராக ஓரா சாத்திரம் சாராவளி சரி வார்த்த சிந்தாமணி பெரிய ஜாதக அலங்காரம் வேலு நாயக்கர் உரை போன்ற நூல்களைப் பார்த்து தெளிவு பெறுக.

பூமி — சந்திரன் சூரியன் இம்மூன்றின் வானயில் ரீதியான சுழற்சியில் உருவாகும்.

பௌர்ணமி, அமாவாசை, சூரிய கிரகணம், சந்திர கிரகணம் போன்ற அமைவுகளில் ஏற்படும் கிரகப் கோணங்கள் மனிதனின் வாழ்வை உருவாக்குகிறது.

கடந்த கால ஊழ்வினையை இலக்கினம் குறிக்கிறது. எதிர்கால ஊழ்வினையை சந்திரன் செயலாற்றுகிறது. எனவே ஜாதகத்தில் இராசி அமைவை விட, வீட்டு (பாவகம்) அமைவிற்கே சந்திரனின் நிலையில் உயர்ந்த முக்கியத்துவம் தரப்பட வேண்டும்.

சுப பார்வையில் கேந்திரத்தில் உள்ள சந்திரன் வெற்றிகரமான வாழ்வு அமைக்க அதிகாரம் பெறுகின்றது. மிகவும் துரதிருஷ்டமான அமைப்பு என்று சொல்வதானால் சந்திரனுக்குச் சனியின் அமைவு கேந்திரமாகவோ அல்லது சம சப்தமமாகவோ அமைவதாகும். என ஆலன் லியோ என்ற மேற்கத்திய ஜோதிடர்கூறியுள்ளார்.

கீழ்வானம் மேல்வானம் என்பதில் சந்திரன் ஒரு புறத்திலும், பிற கிரகங்கள் மறு புறத்திலும் அமைந்து சந்திரன் பார்க்கப்பட்டால் ஜாதகர் செயல்திறன் மிக்கவர். வளர்பிறை சந்திரனும் பிற சுபக் கிரகங்களும் பலம் பெற்ற ஜாதகர் அருள் உண்மை படைத்தவர் எனலாம்.

தேய்பிறை சந்திரனும், பிற பாபக்கிரகங்களும் பலம் பெற்ற ஜாதகர் பொருள் சேர்க்கும் உள்ளம் படைத்தவர் எனலாம். சூரியனைத் தந்தையாகவும், சந்திரனைக் தாயாவும், இந்த பெற்றோரின் குழந்தையாக இலக்கினமும் அமைவதால் இம்மூன்று நிலைகளில் பலம் பெறுமளவு வாழ்வு பெறும் எனலாம்.

# முழுமை அற்ற நட்சத்திரங்கள்

புலவர் நவமணி **சண்முககவேலு**
**செல்: 94431 46912**

**காலற்றன உடலற்றன தலையற்ற நாளில்**
**கோலக்குய மடவார் தமைக்கூடின மலடாவார்**
**மாலுக்கொரு மனைமாளிகை கோலீனது பாழாம்**
**ஞாலத்தவர் வழிபோக நலம் எய்திடாரே**




மேற்படி நட்சத்திரம் நடக்கிற நாளினில் மனை முகூர்த்தம் கூடாது. யாத்திரைப் போவதைத் தவிர்க்க வேண்டும். இந்த நட்சத்திர நாளில் மாதரைக் கூடினால் அவள் மலடி ஆக (அதாவது கருதங்காது) இருப்பாள். ஆக, யாத்திரைப் போனாலும், மனைகோலினாலும் சாந்தி முகூர்த்தம் ஆயினும் அதற்கு உரிய பலன் நலம் பெற்றிட மாட்டார்கள் என்பது பாடலின் பொருள்.

ஜாதகத்தில் இந்த 9 நட்சத்திரங்களை முழுமை அற்ற நட்சத்திரங்கள் என்று அழைக்கிறோம். விதி —1 முழுமை அற்ற நட்சத்திரப் பாதங்களில் பெரும் பாலானக் கிரகங்கள் அமர்கிற போது, ஜாதகரின் பிரகாசம் (வாழ்நாளினில்) போகப் போகக்குடத்தில் இட்டவிளக்கு ஆகக் குன்றுகிறது. மறைகிறது.

விதி 2 அதேபோல் முழுமை அற்ற நட்சத்திரப் பாதங்களில் பெரும்பாலானக் கிரகங்கள் சஞ் சாரம் செய்கிற போதும், நாட்டில் குழப்பமான சூழ்நிலைகள், வன்முறை, இயற்கைச் சீற்றங்கள், அரசியல் ஆட்சி மாற்றங்கள் நிகழ்கின்றன. அரசியல் மதத்தலைவர்கள், திடீர் மரணங்களும் ஏற்படுகின்றன. என்பதுதான் ஆய்வின் முடிவு.

2009 ஜுலை இதழ், குருவருள் ஜோதிடத்தில், ஜோதிடப் பேராசிரியர், வணக்கத்திற்கு உரியப் பெரியவர். திரு.இராம.பழநியப்பன் இவ்விதம் எழுதினார். திரு. B.V.இராமன் அவர்கள் தம் அஸ்ட்ரோலாஜிகல் மெகஸினில் இராகு கேது சனி உடன் சேரும். அப்போது சூரியன் உடன்குருவும் சேரும்.

சந்திரன் — புதன் இணை ஆனாலும், குருவுக்கு கேந்திரத்தில் செவ்வாய் அமர்கிற போதும், பயங்கர நிலநடுக்கம் உண்டாகும் என்று எழுதினார். குறிப்பாக இது 21.6.1990க்கு மேல் நடக்கும் என்றார். அம்மாதிரியே 27.06.1890 புதன் அன்று, அஸ்ஸாம், சீனா, மெக்சிகோ, நாடுகளில் நிலநடுக்கம் பேரழிவுகள் உண்டாகின

| | | | |
|---|---|---|---|
| செவ் | | சுக் | சூரி புத குரு |
| | பேரழிவு நாள் 27.6.1990 | | கேது |
| ல / ராகு சனி | | | சந் |
| | | | |

**மிருகசீரிடம் - 4இல் புதன்**
**புனர்பூசம் - 2இல் குரு**
**கார்த்திகை - 4இல் சுக்கிரன்**
**உத்திராடம் - 1இல் சனி (வ)**
**உத்திராடம் - 3இல் இலக்கினம்**
*திருவாதிரை — 2இல் சூரியன்*
*பூரம் — 1இல் சந்திரன்*
*ரேவதி — 2இல் செவ்வாய்*
*திருவோணம் — 2இல் இராகு*
*பூசம் — 4இல் கேது*

நிலநடுக்கம் — பேரழிவு நடந்த நாளில் உள்ளக் கிரக நிலைகளைக் கவனியுங்கள் 1. புதன், 2. குரு, 3. சுக்கிரன், 4. சனி, 5. இலக்கினம் உள்பட உடைப்பட்ட நட்சத்திரக்காலில் அமர்ந்து உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| | | | கேது |
| ல / செவ் | 26:11:54 வெள்ளி காலை 11:52::45 மணி யாழ்பாணம் | | குரு |
| | | | |
| ராகு | சூரி சந் | புத சுக் சனி | |

பேரழிவுகள் ஓய்கிற போது சந்திரனும் உடைப்பட்ட நட்சத்திரக்காலுக்கு வந்து விட்டான். பேரழிவில் எத்தனை உயிர்கள் மீண்டதோ? எத்தனை உயிர்கள் மாண்டதோ? இது இறைவனின் எண்ணமா...? இல்லை இயற்கையில் விளையாட்டா?

**அவிட்டம் 3இல் செவ்வாய்**
**விசாகம் 2இல் புதன்**
**விசாகம் 2இல் இலக்கினம் சுக்(வக்)**
**விசாகம் 1இல் சனி**
**அவிட்டம் 3இல் இலக்கினம்**
*அனுஷம் 3இல் சூரியன்*
*கேட்டை 1இல் சந்திரன்*
*பூசம் 1இல் குரு*
*பூராடம் 1இல் இராகு*
*திருவாதிரை 3இல் கேது*

இவர் பெயரைச் சொன்னால் அகிலமே அறியும் யார் அவர்? அவர்தான் திரு.வேலுப் பிரபாகரன். அப்பாவித் தமிழ் இனம் அழிகிறதே என்ற ஆதங்கம். இவரோ, அகிம்சைப் பாதை சரிபட்டு வராது. என்று துப்பாக்கித் தூக்கியப் போராளி. கால் நூற்றாண்டாக, அதிகமாக ஈழத்தில் குண்டு சத்தங்கள் ஓயவில்லை.

தமிழர்களைக் கொன்று குவிக்கும் கொடூரப் பணியும் ஓயவில்லை. இவர் உயிருடன் இருக்கிறதாரா...? இல்லையா...? இருந்தால் இவரின் எதிர்காலம் என்னவாக ஆகும்..? என்பதை எல்லாம் வாசர்களின் ஆராய்ச்சிக்கே விட்டு விடுகிறேன். என் நோக்கம்... இவரின் எதிர் காலத்தை ஆராய்வது அல்ல. இவர் ஜாதகத்தில் 4 கிரகங்களும், இலக்கினமும் முழுமை அற்ற நட்சத்திரக் காலில் அமர்ந்து உள்ளதை உற்று நோக்கவும்.

இளமைக் காலம் தொட்டு, இன்று வரை வசந்த காலன் சுகத்தில் வாழ முடியவில்லை. இளமையின் கனவுப் பூக்கள் போர்க் களத்தில் கருகின. கண்ணுக்கு இனிய மனையாள், மனதுக்கு இனிய பிள்ளைகள் உடன் உல்லாசமாக, சுதந்திரமாக வாழ முடியாத நிலை. தனக்குத்தானே அமைத்துக் கொண்ட இராணுவ வளையம். வளையத்தை விட்டு வெளியேற முடியாத சூழ்நிலை. இதுதான் இவரின் கடந்த வாழ்க்கை நிலை. இந்நிலை இன்றும் தொடர்கிறது.

பெரும்பாலானக் கிரகங்கள் முழுமை அற்ற நட்சத்திரக்காலில் சிக்கின. அதனால் தான் இன்று வரை இவரின் கனவுகள் ஏன்? இலட்சியங்கள் கூட நொறுங்கின. எண்ணிய இலட்சியப் பயணமோ... ஒரு முடிவுக்கு இன்றும் வரவில்லை என்பதுதான் உண்மை. ஈழப் போராட்டமோ உயிருடன் தொடர்கதையாகத் தொடர்கிறது. மேலும் இவர் இருக்கிறாரா? என்று மர்ம முடிச்சு அவிழாமல் அல்லாடுகிறது. அத்தனைக்கும் கால கணிதமாம் கிரகங்கள் தான் பதில் கூற முடியும்.

நடந்து முடிந்த சுனாமி முதற் கொண்டு, உலகினில் பல இடங்களில் நடந்த புயல்கள் நில நடுக்கங்கள், இயற்கைச் சீற்றங்கள், பேரழிவுகள் எல்லாம் பட்டியல் இட்டபோது, நான் அறிந்து கொண்டக் கிரக நிலைக் குறிப்பிடுகிறேன்.

விதி 1 சந்திரன் அல்லது இலக்கினமும் முழுமை அற்றக் கிரக சாரமதில் சஞ்சாரம் செய்கின்றன.

விதி 2 செவ்வாய் — சுக்கிரன் ஒரே பாகை — கலையினில் அல்லது செவ்வாய் — சனி ஒரே பாகையினில் இருக்கின்றன.

விதி 3 செவ்வாய் கிரக யுத்தம், அல்லது சுக்கிரன் அஸ்தங்கத் தோஷம் இதில் ஏதாவது ஒன்று வக்கிரம் அல்லது அதிகாரம் பெறுகிற போதும்

விதி 4 செவ்வாய் — சுக்கிரன் முழுமை அற்ற கிரகத்தில் சஞ்சாரம் அல்லது கால புருஷ தோஷத்தில் பெரும்பாலான கிரகங்கள் சஞ்சாரம் செய்கிற போதும்

விதி 5 கிரணங்கள் ஏற்படுகிற காலத்தில் பெரும்பாலானக் கிரகங்கள் முழுமை அற்ற கிரகக் காலில் சஞ்சாரம் செய்கிறபோதும்.

இது பற்றிய ஆய்வை மேலும் தொடர்கிறேன்.

# இராஜயோக ஜாதக ஆய்வு

கே.ஐங்கரன் குருஜி – 94431 67110

திரைப்பட நடிகை சிம்ரன் அவர்கள் ஜெனன ஜாதகம் தமிழ் — விரோதி கிருதி ஆண்டு சித்திரை மாதம் 15ஆம் தேதி புதன் கிழமை ஆங்கில தேதி 28.4.1971 மிருகசீரிடம் நட்சத்திரத்தில் சுப ஜெனனம். இலக்கினம் தனுசு இராசி ரிஷபம். இரவு 10.35 பிறப்பு.

இலக்கினம் தனுசு ஆகி இலக்கினாதிபதியாக குரு இருக்கின்றார். இலக்கினாதிபதி குரு விருட்சிக இராசியில் 12ஆம் வீட்டினில் வக்ரம் பெற்று அமர்ந்து உள்ளார்.

ஆனால் இலக்கினாதிபதிக்கு வீடு கொடுத்த செவ்வாய் உச்சம் பெற்று அமர்ந்து உள்ள நிலை கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும் ஒன்று.

இலக்கினாதிபதி குரு அனுஷம் நட்சத்திர சாரம் அதாவது 2க்குடைய தனாதிபதியின் நட்சத்திர சாரம் பெற்று அமர்ந்துள்ளார்.

சந்திரன் நின்ற வீட்டு அதிபதி சுக்கிரன் உச்ச பலம் பெற்று அமர்ந்துள்ளது கவனத்தில் கொள்ள வேண்டியது. அதே நேரத்தில் சந்திரனுக்கு 7ஆம் வீட்டில் குரு நின்று ஜாதகிக்கு கெஜ கேசரி யோகத்தைத் தந்து உள்ளது. மேலும் சந்திர ஆதி யோகத்தையும் தந்து உள்ளது. 7,10ஆம் வீட்டுக்கு அதிபதி புதன் உச்சம் பெற்ற சுக்கிரனுடன் சேர்க்கை பெற்று அமர்ந்து புதன் நீச பங்கம் பெற்றுள்ளதும் மிக முக்கியமான ஒன்று. சுக்கிரன் இலக்கின கேந்திரம் பெற்று அமைந்தபடியால் புதன் 10ஆம் வீட்டு அதிபதி நீச பங்க இராஜ யோகத்தைப் பெற்று அமர்ந்துள்ளார்.

9க்குடைய பாக்யாதிபதியான சூரியன் உச்ச பலம் பெற்று 2க்குடைய தனாதிபதி சனியுடன் சேர்க்கை பெற்றுள்ளார். 2ஆம் வீட்டு அதிபதி சனியும் 5ஆம் வீட்டு அதிபதி செவ்வாயும் பரிவர்த்தனை யோகம் பெற்று அமர்ந்துள்ளதும் மகா பாக்ய யோகம் ஆகும்.

9க்குடைய பாக்யாதிபதியான 5க்குடைய செவ்வாய உச்சம் பெற்று தன்னுடைய 5ஆம் வீட்டைப் பார்ப்பதனால் 5ஆம் வீடான பூர்வ புண்ணியஸ்தானமும், 5ஆம் வீட்டு அதிபதி செவ்வாயும் உச்ச பலம் பெற்று உள்ளார்.

செவ்வாய் 12ஆம் வீட்டிற்கும் அதிபதி ஆகின்றார். அயன, சயன போக, பாக்ய ஸ்தானாதிபதி செவ்வாய் உச்ச பலம் பெற்ற, போக காரகன் இராகுவுடன் இணைவு பெற்றுள்ளதால் 12ஆம் வீடும், 12ஆம் வீட்டு ஆதிபத்தியங்களும், 12ஆம் வீட்டு அதிபதி செவ்வாயும் அதீத பலம் பெற்று இராகுவுடன் இணைவு பெற்றமர்ந்த நிலை அயன, சயன, போக பாக்யங்களை விருத்தி செய்து ஒன்றுக்கு 10 மடங்காக இராஜயோக பாக்யங்களை ஜாதகியை அனுபவிக்கச் செய்துள்ளது.

12ஆம் வீட்டினில் குரு அமர்ந்த நிலை அயன, சயன, போக பாக்யங்களை விருத்தியடைச் செய்து ஜாதகியை பெயர், புகழ், அந்தஸ்து, கௌரவம், பட்டம் என அனைத்தையும் தந்து தனது குரு திசாவில் இராஜ யோகத்தை ஜாதகியை அனுபவிக்கச் செய்தார். குரு தனது 5ஆம்



| | | | |
|---|---|---|---|
| சுக் புத | சூரி சனி | சந் | |
| | இராசி | | கேது |
| ராகு செவ் | | | |
| ல | குரு (வ) | | |

பார்வையால் தனது 4ஆம் வீட்டையும், உச்சம் பெற்ற சுக்கிரனையும், நீசம் பெற்ற புதனையும், பார்வை செய்து புதனுக்கு நீச பங்கத்தைத் தந்துள்ள நிலையையும் கவனிக்க வேண்டும்.

10க்குரிய தொழில் ஸ்தானாதிபதி புதனுடன் கலைக் காரகன் சுக்கிரன் உச்சம் பெற்று சேர்ந்த நிலையானது கலா இராஜ யோகத்தை வாரி வழங்கி திரைப்படத்துறையில் வக்கிரம் பெற்ற குரு திசாவில் மிகப் பெரிய சாதனையாளராகவும், அகில இந்தியஅளவில் பெயர், புகழ், செல்வம், செல்வாக்கு, போன்ற அனைத்தையும் தந்து இராஜ யோகத்தை பரிபூரணமாக அனுபவிக்கச் செய்தார்.

கலைக்காரகன் சுக்கிரன் இலாபாதிபதியாகி இலக்கின கேந்திரத்தில் உச்ச பலம் பெற்று அமர்ந்து 10ஆம் வீட்டை பார்வை செய்வதால் திரைப்படத் துறையில் கதாநாயகி அந்தஸ்துடன், முன்னணி நட்சத்திர அந்தஸ்து பெற்று பல ஆண்டு காலம் சிறந்த சாதனை யாளராக்கி சிகப்பு கம்பளம் விரித்து வெற்றி நடை போடச் செய்தது.

இலாபாதிபதி சுக்கிரன் உச்சம் பெற்று அமர்ந்த நிலையும் 10ஆம் வீட்டு அதிபதி புதனுடன் இணைந்து புதனுக்கு நீச பங்கமும், குருவின் பார்வை பலமும் 4ஆம் வீட்டை, 4ஆம் விட்டு ஆதிபத்தியத்தை பலம் பெறச்செய்து, வீடு, சொத்து, மகிழ்ச்சி, சுகம், சௌகரியம், வாகனம், உயர்ந்த

அந்தஸ்து, வற்றாத புகழ், என அனைத்தையும் பெற்றுத் தந்தது.

சந்திரன் 5க்குடைய பூர்வ புண்ணிய ஸ்தானாதிபதி செவ்வாயின் நட்சத்திர சாரம் பெற்றமர்ந்தது கவனிக்கத் தக்க அமைப்பு ஆகும். இலக்கினாதிபதி பூரண சுபக் கிரகமான குரு ஆகின்றார். இராசி அதிபதி அசுர குருவான சுக்கிரன் உச்ச பலம் பெற்று அவரும் சுபகிரகமாக ஆகின்றார்.

இலக்கினாதிபதியும், இராசி அதிபதியும் பூரண சுபகிரகமாக அமைவது சுக, சௌகரியங்களை தங்கு, தடையின்றி ஜாதகி பெற்று வாழ்வில் உயர்வுகளைச் சந்திக்கச் செய்யும் அதி உன்னதமான அமைப்பு ஆகும். எந்த ஒரு ஜாதகத்திலும் 3 உச்சம் பெற்ற கிரகங்கள் அமைந்தாலே ஜாதகி தன் சொந்த முயற்சியினால் முன்னேற்றம் பல அடைந்து, இராஜயோக பாக்யங்களை வாரி வழங்கும் என்பது ஜோதிடம் சொல்லும் அனுபவ உண்மை ஆகும். ஜாதகி ஒரு மகாராணி போன்ற அந்தஸ்தையும், இராஜ யோகங்களையும், பாக்யங்களையும், அனுபவிப்பார். இந்த ஜாதகிக்கு 4 கிரகங்கள சூரியன், செவ்வாய், சந்திரன், சுக்கிரன் உச்சம் பெற்று அமர்ந்துள்ளது கவனிக்க வேண்டிய முக்கிய அமைப்பு ஆகும்.

8ஆம் வீட்டு அதிபதி சந்திரன் உச்ச பலன் தனாதிபதி சனி பரிவர்த்தனை யோக பலம், 5ஆம் வீட்டு அதிபதி செவ்வாய் உச்ச பலம், 11ஆம் வீட்டு இலாபாதிபதி சுக்கிரன் — உச்ச பலம். இவை எல்லாமே ஜாதகிக்கு தோற்றப் பொலிவு, ஆரோக்யமான, அழகான உடல் அமைப்பு, கவர்ச்சியான கண்கள், திடீர் அதிர்ஷ்டம், நல்ல கட்டு உடல், நல்ல சுறுசுறுப்பான அயராத உழைப்பு, குன்றாத இளமை, ஆடம்பரமான வாழ்க்கை, எதிலும், தலைமையாக முன் நிற்கும் தகுதி பெற்று உள்ளார். தீர்காயுள், முதல்நிலை பெற்று உயர்ந்த அந்தஸ்து பெறுதல், எதிரிகளை ஜெயித்து முன்னிலை பெற்று, தனக்கு நிகர் தான் தவிர வேறொருவர் இல்லை என்ற அளவில் நிமிர்ந்து நிற்கச் செய்த கெஜ கேசரி யோகம்.

கோடீஸ்வர அந்தஸ்து, பேச்சினில் இனிமை, அழகிய பல்வரிசை, போன்ற அனைத்து வகையிலும் யோகங்களை அள்ளித் தந்து கிரகங்கள் இவரை அகில இந்திய சாதனை படைக்கச் செய்ய முன்னணி நட்சத்திர அந்தஸ்து பெற்று, வெற்றி கொடி நாட்டி, பவனி வரச் செய்தது. இப்போது 4வது திசாவாக சனி திசாவில் சனி புத்தி நடைபெறுகின்றது. மிகவும் கவனிக்க வேண்டிய முக்கிய அமைப்பு ஆகும். குரு திசா இவருக்கு இராஜ யோக திசாவாக நடைபெற்று அனைத்து யோகங்களையும் வாரி வழங்கியது. இராஜயோக ஜாதகத்துக்கு சிம்ரன் அவர்களின் ஜாதகம் மிகச் சிறந்த உதாரண ஜாதகமாகத் திகழ்கின்றது.

4 கிரகங்கள் உச்சம் பெற்று அமர்ந்த அதி உன்னத இராஜயோக ஜாதகம் எந்தளவில் இராஜ யோகங்களை சிம்ரன் அவர்களுக்கு வழங்கியது என்பது அனைவரும் அறிந்த ஒன்று.


## பாப, தோஷ சாபநிவர்த்திக்கு உடனடி தீர்வு பலன் அளித்திடும் பரிகார மூலிகை இரக்ஷை

வாசகர்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பு ஏற்றம் பெறும் வகையில், கர்ம பலன்களைக் நல்ல மாற்றம் தரும் நிலையில், விதியை மதியால் வெல்லக்கூடிய சூட்சும இரகசியங்களை "தமிழ் புத்தாண்டு" மற்றும் "ஆங்கிலப் புத்தாண்டு" "குருப்பெயர்ச்சி" ஆகிய பலன்களில் வெளியிடப்பட்ட ஸ்ரீ ஸ்கந்த ஜீவநாடி மூலம் அந்தந்த இராசியினருக்கு ஜீவநாடியில் சொல்லப்பட்ட பரிகார மூலிகை இரக்ஷை முன்பதிவு செய்பவர்களுக்கு குறுகிய கால இடைவெளியில் கிடைக்கும்.



ஒரு மண்டலம் பூஜை செய்யப்பட்டு உருவேற்றி, உயிரோட்டத்துடன் வழங்கப்படுகிறது. "அப்ஸரா பப்ளிகேஷன்ஸ்" நிறுவனத்தின் ஆதரவுடன் அனுபவம் வாய்ந்தோரால் வழங்கப்படுவதால் 100% பலன் கிடைக்கும் என்பது உறுதி. ஜீவநாடிப் பரிகாரங்களைக் கடைபிடித்து பலன் பெற்றோர் ஏராளம். இந்த இரக்ஷை சகலவிதமான பாப, தோஷ, சாபநிவர்த்திக்கும், உடனடி பலனுக்கும், இரக்ஷையுடன் "தமிழ் புத்தாண்டு" மற்றும் "ஆங்கிலப் புத்தாண்டு" "குரு பெயர்ச்சி"யில் வெளிவந்துள்ள ஜீவநாடி ஆலய பரிகாரங்களையும் கண்டிப்பாக தொடர்ந்து கடைபிடித்தால் வாழ்வில் மாற்றம் காண்பது உறுதி. சந்திரன் நின்ற இராசியை உறுதி செய்துக் கொள்வது அவசியமாகும். குறைந்த அளவிலே ஜீவநாடி பரிகார யந்திர இரக்ஷைகள் செய்யப்பட்டுள்ளதால் பாக்கியம் செய்தோர்க்கே கிடைக்கும் பிராப்தம் ஏற்படும். இதுவரை பதிவு செய்தவர்களுக்கு தொடர்ந்து வரிசைப்படி அனுப்பப்பட்டு வருகிறது

**தொடர்பு கொள்க - 94445-41239**



# 14 கைரேகைக் கலை காலத்தால் அழியாத நிலை

## விரல்களின் நிலைகள்



ஜோதிட ரத்னா
**பி.ராஜராஜன்** M.Com., M.A., (Astro)
cell: 94436 02265

### சனி விரலின் அமைப்பு (நுனி)

சனிவிரலின் நுனி அமைப்பைக் கொண்டு நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. கூர்மையான நுனி
2. சதுர முனையுடைய நுனி
3. துடுப்பு போன்ற நுனி
4. கூம்பு பொன்ற நுனி

### கூர்மையான நுனி



சனிவிரல் கூர்மையான நுனி பெற்று இருப்பவர்கள்

1. நிதான சிந்தனைகளில், நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள்.
2. அர்த்தமற்ற மனோ பிராந்திகளும் ஏற்படும்.
3. பேராசை நிறைந்தவர்
4. ஏராளமாகச் செல்வம் சேர்க்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்
5. செல்வம் சேர்க்க சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்யத் தவறமாட்டார்கள்.

### சனிவிரல் சதுரமுனை



சிலரின் சனிவிரல் நுனிசதுரம் போன்ற அமைப்புடன் காணப்படும். இதனை சதுரமுனை பெற்றே சனி விரல் எனப்படும். இதுபோன்று காணப்பட்டால் கீழ்கண்ட பலன்கள் கூறலாம்.

1. இவர்களிடம் அவசரம் என்பதை காணமுடியாது.
2. எதிலும் நிதானமாக நடந்துக் கொள்வார்கள்.
3. எந்த காரியத்தையும் தைரியமாக ஒப்படைக்கலாம்.
4. எதையும் பொறுப்பாகச் செய்து முடிப்பார்கள்.

### துடுப்பு போன்ற சனிவிரல் நுனி



சனிவிரல் துடுப்பு முனை கொண்டிருப்பின்

1. ஒழுங்கும், கண்டிப்பும் நிறைந்த கடும் உழைப்பாளியாக இருப்பார்கள்.
2. புகழ் பெறக்கூடிய சாதனைகளைச் செய்வார்கள்.
3. வாழ்க்கையில் முன்னேறி உயர்நிலை அடையவேண்டும் ஏற்ற நோக்கம்.
4. கடுமையான முறையில் உழைப்பார்
5. பலரும் பாராட்டக் கூடிய பிரமிப்பூட்டும் சாதனைகளைப் புரிந்து தன் இலட்சியத்தை நிறைவேற்றிக் கொள்ளவார்கள்.

### கூம்புமுனை கொண்ட சனிவிரல்



1. நன்னடவடிக்கை உள்ளவர்
2. சாமர்த்தியமும் உடையவர்கள்
3. பலவகையான திறமை உண்டு
4. எதையும் வெற்றிகரமாக செய்து முடிப்பார்
5. காரியத்தை சுலபமாக முடிப்பார்.

### சனி விரல் உயரம்

சனிவிரல் நீளம் (அ) உயரம் குருவிரல் உயரம் மற்றும் சூரியவிரல் நீளம் (அ) உயரத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படவேண்டும்.

இதன் அடிப்படையில் சனிவிரலை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

1. இயல்பான நீளம் கொண்ட சனிவிரல்

2. அதிக நீளமான சனிவிரல்

3. குட்டை நீளமான சனிவிரல்

**இயல்பான நீளம் கொண்ட சனிவிரல் பலன்கள்**

1. நிதானமான செயல்கள்

2. ஆத்திரம் வராது

3. விவேகம் உண்டு

4. மனசாட்சி உண்டு

5. பொருளாதாரம் வசதி உண்டு.



இயல்பான நீளம் கொண்ட சனிவிரல் உள்ளவர்கள் மேற்கண்ட பலனை பெற்று இருப்பார்கள்.

**அதிகமான நீளமான சனிவிரல் பெற்றவர்களின் பலன்கள்**

1. கோபம், முன்கோபம் அதிகமாகக் காணப்படும்.

2. எதற்கு எடுத்தாலும் எரிந்து விழுவார்கள்



3. ஆத்திரம், வந்துவிட்டால் காட்டுத் தனமாகக் கத்துவார்கள்.

4. தனக்கு பிடிக்காதவர்களிடம் மிகக் கடுமையாக நடந்துக் கொள்வார்கள்.

5. இவர்கள் சற்று அழுத்தமான மன இயல்பு கொண்டவர்கள்.

6. காரியவாதிகளாக இருப்பார்கள்

7. கடுமை நிறைந்தவராகக் காணப்படுவார்கள்.

**குட்டையான சனிவிரல் குட்டையான சனிவிரல் பெற்று இருப்பவர்கள்**

1. இவர்கள் பொறுப்பற்ற வகையில் நடந்துக் கொள்வார்கள்.



2. வெற்றி பெறும் ரகசியத்தை அறியாதவராக இருப்பார்கள்.

3. இவர்கள் விவசாயம், வியாபாரம் வகையில் இலாபம் கிடைக்காது.

4. வெற்றிகளைக் கை நழுவ விடுவார்கள்.

5. பொறுப்பற்ற முறையில் பேசி பல நண்பர்களை இழப்பார். சில விரோதிகளைத் தேடிக் கொள்வார்

**சனி விரல் அங்குலாஸ்த்தி**

சனிவிரல் அங்குலாஸ்த்திகளை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. நுனிபகுதி முதல் அங்குலாஸ்த்தி



2. மேட்டை இருப்பிடமாக கொண்டு மேலே உள்ளது மூன்றாம் அங்கலாஸ்த்தி

3. இடைப்பட்ட பகுதி இரண்டாம் அங்குலாஸ்த்தி

**அங்குலாஸ்த்தியின் உட்பிரிவுகள்**

சனிவிரல் அங்குலாஸ்த்திகளின் பரப்பளவுகளின் அடிப்படையிலும், நீளத்தின் அடிப்படையிலும் ஏழு (அ) வகையாகப் பிரிக்கலாம். (அவை)

1. இயல்பான அளவு உள்ள அங்குலாஸ்த்திகள்

2. நீளமான அளவுயுள்ள முதல் அங்குலாஸ்த்தி

3. குட்டையான அளவுயுள்ள முதல் அங்குலாஸ்த்தி

4. நீளமான அறையுள்ள இரண்டாம் அங்குலாஸ்த்தி

5. குட்டையான அளவுயுள்ள இரண்டாம் அங்குலாஸ்த்தி

6. நீளமான அளவுயுள்ள மூன்றாம் அங்குலாஸ்த்தி

7. குட்டையான அளவுயுள்ள மூன்றாம் அங்குலாஸ்த்தி

**1 .இயல்பான அளவு உள்ள முதல் அங்குலாஸ்த்தியின் பலன்கள்**

1. இவர்கள் எதிலும் வெகு நிதானமாக செயல்படுவார்கள்



2. இவர் எதற்கும் ஆத்திரப்படமாட்டார்கள்.

3. இவர்கள் சுதந்திர உணர்வு தேவை என நினைப்பவர்கள்.

4. அதிகாரத்திற்கு அடிபனியமாட்டார்கள்.

5. நல்ல விவேகம் இவரிடம் உண்டு

6. சூட்சுமபுத்தி என்பது இவரிடம் இருக்காது

7. சகித்துக் கொள்ளும் தன்மை உண்டு.

**2. சனிவிரலின் இரண்டாம் அங்குலாஸ்த்தி இயல்பான அளவு இருப்பின் அவர்கள் கீழ்கண்ட பலன் பெற்று இருப்பார்கள்.**

1. ஆராய்ச்சி மனப்பான்மை கொண்டவர்

2. கணித சாஸ்திரம் அறிந்தவர்

3. உத்திரவிடும் பதவியில் இருப்பார்

4. முறையாக செயல்படுவார்கள்

5. படிப்பில் அக்கரை உண்டு

6. இரகசியம் தெரிந்துக் கொள்வார்கள்

7. மனசாட்சியோடு செயல்படுவார்.

**3. சனிவிரலின் மூன்றாம் அங்குலாஸ்த்தி இயல்பான**

**அளவு இருப்பின் கீழ்கண்ட பலன் பெற்று இருப்பார்கள்.**

1. நல்ல பொருளாதாரம் உண்டு.
2. தனிமையை விரும்புவார்கள்.
3. ஆண்கள் பெண்களை வெறுப்பார்கள்
4. பெண்கள் ஆண்களை வெறுப்பார்கள்
5. மன குளிர்ச்சி இருக்கும்
6. மன உணர்ச்சி இருக்கும்.
7. எதற்கும் துன்பப் படமாட்டார்
8. தகுதியின்மை இல்லாமல் இருப்பார்.



**2. சனி விரல் முதல் அங்குலாஸ்த்தி நீளமாக இருப்பின்**

சனி விரலின் முதல் அங்குலாஸ்த்தி மட்டும் நீளமாக இருப்பின் இவர்கள்

தத்துவவாதியாகவும், சிந்தனையாளராகவும் இருப்பார்கள்



2. தனிமையை விரும்புவார்கள்

3. எச்சரிக்கையாக நடந்துக் கொள்வார்கள்

4. மனபீதி இவர்களுக்கு உண்டு.

5. இவரின் தத்துவங்கள் இவருக்கு புகழைத் தேடி தரும்.

6. நிதானமாக செயல்படுவார்கள்

7. இவர்களுக்கு அதிகமான சுதந்திர உணர்வு இருக்கும்.

8. சகித்துக் கொள்ளும் தன்மை இவருக்கு உண்டு

9. விவேகமாக செயல்படுவார். ஆனால் ஆத்திரப்படமாட்டார்கள்.

**3. குட்டையான முதல் அங்குலாஸ்த்தி பலன்கள்**



★ அநாகரிகமாக நடந்துக் கொள்வார்கள்
★ உள்ளத்தில் சுயசிந்தனைகள் தலைதூக்கும்
★ மூட நம்பிக்கை உண்டு
★ துக்கம் விசனத்துடன் காணப்படுவார்கள்
★ நிதானம் இல்லாமல் நடந்துக் கொள்வார்கள்
★ ஆத்திர உணர்வு அதிகம் உண்டு
★ அதிகாரம் செய்வார்கள்
★ சகித்துக் கொள்ளும் தன்மை இருக்காது
★ சூட்சம புத்தி இருக்கும்

**4. நீளமான அளவுயுள்ள இரண்டாம் அங்குலாஸ்த்தின் பலன்கள்**



- பல துறையில் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று விரும்புவார்கள்
- எல்லா துறைகளிலும் புகழ்பெற்று விளங்குவார்கள்
- தொழில் விவசாயம் போன்ற துறைகளில் பெரும் ஈடுபாடு கொள்வார்கள்
- எதிலும் வெற்றி பெறுவார்கள்
- படிப்பில் அக்கறை இருக்கும்.
- இரகசியகலை அறிவார்கள்
- மனசாட்சியுடன் முறையாக செயல்படுவார்கள்
- புறம் கூறமாட்டார்கள்
- இரகசியத்தை வெளியிடமாட்டார்கள்
- துரோகம், பொறாமை படமாட்டார்கள்
- கீழ்படிந்து நடப்பார்கள்

**5. குட்டையான அளவுயுள்ள இரண்டாம் அங்குலாஸ்த்தி**



- சனிவிரலின் இரண்டாம் அங்குலாஸ்த்தி குட்டையாக இருப்பின் பலன்கள்
- இவர்கள் மந்திரம் ஜோதிடம், ரேகை சாஸ்திரம், மெஸ்மெரிசம் ஹிப்பனாடிசம் செய்து புகழ் பெறுவார்கள்.
- ஆராய்ச்சி எந்த துறையிலாவது மேற்கொள்வார்கள்
- இரகசிய கலை அறிந்து இருப்பார்கள்
- மிகவும் இரகசியங்களை அறிந்து முறையாக செயல்படுவார்கள்
- இவர்களுக்கு துரோகம், பொறாமை குணம் உண்டு
- புறம் கூறுவார்கள்

**6. நீளமான அளவுயுள்ள மூன்றாம் அங்குலாஸ்த்தியின் பலன்கள்**

1. பேராசை நிறைந்தவர்
2. சுயநலம் கொண்டவர்கள்
3. எப்போதும் தன்னைப் பற்றியும், தன் காரியங்களைப் பற்றியுமே அதிகமாக சிந்திப்பார்
4. பேராசை கொண்டு பல தவறான செயல்களை செய்வார்கள்
5. யாரிடமும் அதிகம் பழக மாட்டார்கள்
6. தனிமையை விரும்புவார்கள்
7. பொருளாதார எண்ணம் அதிகம் காணப்படும்
8. மன குளிர்ச்சி என்பது கிடையாது
9. ஆண்கள் பெண்களை வெறுப்பார்கள்
10. பெண்கள் ஆண்களை வெறுப்பார்கள்.

தொடரும்...

# கனகதாரா வெல்த் கிரியேட்டர்ஸ்

பெருமையுடன் வழங்கும்

# செல்வ வளம் பெருக்கும் ரகசிய சூட்சும பயிற்சி

**( இதுவரை வெளிவராத புத்தம் புது செய்திகளுடன் )**

1. செல்வத் திருமகளின் அருளை பூரணமாக பெற செய்ய வேண்டிய பூஜை முறை மற்றும் ஸ்தலம் (ஆலயம்) பற்றிய அபூர்வ செய்திகள்
2. நிகரிலா செல்வம் பெற்று இந்திரனாய் வாழ அகத்தியர் அருளிய செல்வமணிமாலை எனும் திருமகள் ஸ்தோத்திரம் பிறந்த இடமும், பூஜை முறையும் பற்றிய செய்திகள்.
3. என்றும் நிலைத்த செல்வ வளம் பெற, செய்ய வேண்டிய குபேரலஷ்மி பூஜை பற்றிய அபூர்வ ரகசிய புது செய்திகள்.
4. செல்வ வளம் பெருக்கும் தனாகர்ஷன சக்கரம் அருளிய கொங்கண சித்தர் பெருமானை உங்கள் இல்லத்திலேயே எழுந்தருளச் செய்யும் ரகசிய பூஜை முறை
5. அலைமகளாம், திருமகளை நிலையாக உங்கள் இல்லத்தில் கொலுவிருக்கச் செய்யும் ஐந்துவித சூட்சும ரகசிய செய்திகள்
6. அன்னையர் அனைவரும் ஒரே இடத்தில் எழுந்தருளி, நமது அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றித் தரும் அபூர்வ ஆலயம் மற்றும் பூஜை முறைகள் பற்றிய ரகசிய தகவல்கள்.
7. பல நூறு வருடங்கள் வாழ்ந்து (ஆயுள்பலத்தினை அதிகரித்து) செல்வவளம் அனைத்தும் பெற செய்ய வேண்டிய அபூர்வ, ரகசிய பயிற்சி மற்றும் பூஜை பற்றிய செய்திகள்
8. சப்தமாதாக்களில் உங்களோடு இருந்து உங்களுக்கு அனைத்து வித அருளாசிகளும் தருவது யார் என கண்டறியும் ரகசிய பூஜை முறை பற்றிய செய்திகள்.

என இன்னும் ஏராளமான அபூர்வ, ரகசிய செய்திகளுடன். ஒரு வருட கால அவகாசத்திற்குள் பொருளாதாரத் தன்னிறைவை அடைய விரும்புவோர் அவசியம் தவறாது இப்பயிற்சியில் கலந்து நிச்சயம் பலன் காணலாம்.

பயிற்சி அளிப்பவர்: Dr. **பிருகு. பிரபாகரன்**

| அவினாசி | சென்னை |
|---|---|
| **27.09.2015 (ஞாயிறு)**<br>குலாளர் திருமண மண்டபம்,<br>அவினாசி, திருப்பூர் மாவட்டம்<br>**பயிற்சி கட்டணம் : ரூ.1,203/-** | **4.10.2015 (ஞாயிறு)**<br>சுகநிவாஸ், 5,6 லஸ் சர்ச் ரோடு,<br>மயிலாப்பூர், சென்னை- 4<br>**பயிற்சி கட்டணம்: ரூ.1,500/-** |

★ பயிற்சி நேரம்: காலை 9.30 முதல் மாலை 5.30 வரை

★ (பயிற்சி குறிப்பேடு, இருவேளை தேநீர், மதிய உணவு உட்பட)

★ அவினாசியில் நிகழ்ச்சிக்கு முதல்நாள் இரவு தங்கும் வசதி உண்டு

**மிகக் குறைந்த இருக்கைகளே இருப்பதால் அவசியம் முன்பதிவு செய்தல் நலம் தரும்**

தொடர்புக்கு : ஒருங்கிணைப்பாளர் **திரு. எஸ். சுந்தரராஜன்**

**97894 52737, 81900 90015**

**குறிப்பு: (15 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு பயிற்சிக்கு அனுமதியில்லை)**

# அல்லல் பல தரும் ஐடியல் ஜோன் (IDEAL ZONE) குரு




ஜோதிட ரத்னா

Dr. பிருகு பிரபாகரன்

செல்: 89259 26234


பிருகு நந்தி நாடி அடிப்படையில் ஒரு ஜாதகத்திற்கு திருமணம் நடைபெறும் காலம் அறிதல் என்ற தலைப்பில் கடந்த ஐந்து மாதங்களுக்கு முன்பு ஒரு கட்டுரை தந்திருந்தேன். அதேபோல் இங்கே ஐடியல் ஜோனில் (Ideal zone) பயணம் செய்யும் குரு தரும் அசுப பலன் பற்றி அறிவோம்.

பொதுவாக ஒரு ஜாதகத்தில் இராகு கேதுவிற்குள் அனைத்து கிரகங்களும் அடைபட்டு நிற்க, அதற்கு எதிர் திசையில் கிரகங்களே இல்லாமல் காலி இடங்களாகவே (இராசிகள்) இருக்குமேயானால் அந்த பகுதி ஐடியல் ஜோன் (Ideal Zone) எனப்படும் அத்தகைய ஐடியல் ஜோனில் பயணம் செய்யும் கோட்சார குருவானவர், பிருகு நந்தி நாடி விதிப்படி ஒரு குறிப்பிட்ட ஜாதகத்திற்கு தரவேண்டிய பலனை மாறுபடாமல் தந்து விட்டாலும் அந்த ஐடியல் ஜோனை கடக்கும் சமயம் ஒரு பெரிய விபரீதத்தினையும் தப்பாமல் தருகிறார் என்பதே இந்தக் கட்டுரையின் கரு. இந்த அமைப்பில் என்னிடம் வந்த ஒரு ஜாதகத்தினை ஆய்வு செய்வோம்.




கொடுக்கப்பட்டுள்ள உதாரண ஜாதகம் திருமணம் சம்பந்தமாக ஜாதகர் என்னை நவம்பர் 2009இல் அணுகியபோது கோட்சார குரு மகரத்தில் இருந்து கும்பஇராசிக்கு பிரவேசம் செய்யும் காலகட்டம். அதாவது (18.12.2009)ஆம் நாளன்று குரு கும்பஇராசிக்கு பெயர்ச்சி ஆகி வந்து அங்கிருந்து பிருகு நந்தி நாடி விதிப்படி தனது எதிர்பார்வையால் (7ஆம் பார்வை) சிம்மத்தில் உள்ள ஜனன கால திருமணகாரக கிரகங்களாகிய சனி, சுக் மற்றும் செவ்வாயை பார்வை செய்வதால் கும்ப கோட்சார குரு ஜாதகருக்கு நிச்சயம் திருமணம் செய்து தருவார் என்பது உறுதி செய்யப்பட்டது. எனினும் அந்த குருவானவர் ஜனன ஜாதக இராகுவினை (கன்னிஇராசி) கடந்து வந்து மீனத்தில் உள்ள ஜனன கேதுவினை கடக்கும் வரையில் அவர்



ஐடியல் ஜோனில் பயணப்பட்டு வருகின்றார் என்பதை கணக்கில் கொண்டும் அவர் அந்த ஐடியல் ஜோனில் இறுதியாக மீனத்தில் உள்ள ஜனன கேதுவினைத் தொட்டு கடக்க வேண்டும் என்பதையும் கருத்தில் கொண்டு, தற்சமயம் கும்பம் இராசிக்கு வரும் கோட்சார குருவானவர் பிருகு நந்தி நாடி முறைப்படி தப்பாமல் ஜாதகருக்கு திருமணம் செய்து தருவார். ஆனால் அதே குரு மறுவருடம் கும்பத்தில் இருந்து மீனத்திற்கு பெயர்ச்சி ஆகிச் சென்று அங்குள்ள ஜனன கால கேதுவோடு சேரும்பொழுது பல பிரச்சனைகளை ஏற்படுத்தி திருமணமுறிவு (Divorsion) ஏற்பட்டு விடும்.

எனவே கோட்சார குரு மீனம் இராசியினையும் கடந்து மேஷம் இராசிக்கு வரும்பொழுது சிம்ம இராசியில் உள்ள ஜனன காலஜாதக திருமண கிரகங்களோடு (செவ்+சனி+சுக்) தொடர்பு ஏற்படும் பொழுது திருமணத்தைப் பற்றி பேசலாம். அதற்கு ஏறக்குறைய ஒன்றரை முதல் இரண்டு வருடங்கள் ஆகும். அதுவரை காத்திருப்பதுவே நன்மை தரும் எனக்கூறி அனுப்பப்பட்டது.

மீண்டும் அதே ஜாதகர் ஒரு வருடம் கழித்து நவம்பர் 2010இல் வந்து என்னை சந்தித்து நீங்கள் கூறியது 100 சதவிகிதம் எனது வாழ்வில் உண்மையாகி விட்டது. 2010 ஜனவரி மாதம் எனக்குத் திருமணம் ஆகி பல பிரச்சனைகள் உருவாகி அதே 2010 டிசம்பர் மாதம் எங்கள் இருவீட்டு பெரியோரும் (ஜாதகர் மற்றும் ஜாதகரது மனைவி வீடு) சேர்ந்து பேசி எழுத்து மூலமாக செட்டில் செய்ய வேண்டியதை செய்து விவகாரத்து வாங்கி விட்டோம். எனது எதிர் காலம் தற்போது கேள்விக்குறியாகிவிட்டது எனக்கூறி அழுதார்.

நான் அவருக்கு ஆறுதல் கூறி மீனத்தில் உள்ள தற்சமய குரு (கோட்சாரம்) மேஷம் இராசிக்கு செல்லும்பொழுது மறுமணம் ஏற்பட்டு இல்லறம் சிறக்கும் எனக்கூறி அனுப்பி வைத்தேன். அதேபோல் மேஷத்தில் வந்து கோட்சார குரு (2011 ஜுன் மாதம்) ஜாதகருக்கு மறுமணம் செய்து வைக்க, தற்சமயம் ஜாதகருக்கு ஓர் ஆண் குழந்தையும் பிறந்துள்ளது. இல்லறம் இனிதாக நடந்த வருகிறது.

எனவே கோட்சார குரு ஒரு செயல்பாட்டினை நிகழ்த்தித் தரும் காரக கிரகங்களோடு (ஜனன ஜாதகத்தில்) தொடர்பில் வந்தாலும் அவர் ஐடியல் ஜோனில் பயணப்படும் பொழுதில் நிச்சயம் அந்த நிகழ்வு தவறாகவே முடியும் என்பதை கவனிக்க வேண்டும். எனவே ஐடியல் ஜோனில் பயணப்படும் கோட்சார குரு தனது பயணத்தின் இறுதியில் கேதுவை சந்திக்கும் பொழுது பிரச்சனைகள் மற்றும் பிரிவினைகளையும், இராகுவினை சந்திக்கும் பொழுது சில சமயங்களில் உயிர் ஆபத்துக்களையும் தருகிறது என்பதையும் கவனிக்க வேண்டுகிறேன்.

இதையெல்லாம் கவனமாக கருத்தில் கொண்டு ஜோதிடர்கள் தன்னை நாடி வருபவர்களுக்கு நல்வழி காட்ட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 19 வயது நிரம்பிய ஒரு பெண்ணின் வாழ்வில் ஐடியல் ஜோன் குரு ஏற்படுத்தித் தந்த அவல நிலையினை அடுத்தக் கட்டுரையில் காண்போம்.






# செப்டம்பர் 2015 மாத

**15.9.2015 இரவு மணி 7.29க்கு ஸ்ரீபுதன் பகவான் கன்னிஇராசியிலிருந்து சிம்மம் இராசிக்கு வக்ரப் பெயர்ச்சியாகிறார்.**
**17.9.2015 பகல் மணி 11.27க்கு ஸ்ரீசெவ்வாய் பகவான் கடகஇராசியிலிருந்து சிம்மம் இராசிக்கு பெயர்ச்சியாகிறார்.**

**Astro தெய்வீகன் மாரிமுத்து** செல் : 98425 21669 / 92446 21669

## மேஷம்

நட்சத்திரம்: அசுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்



சுகஸ்தானத்தில் உங்கள் இராசியதிபதி ஸ்ரீ செவ்வாய் பகவான் நீசபலத்துடன் திக்பலம் பெற்ற சுக்கிரனுடன் இணைந்து நீசபங்கம் பெறுகிறார். ஆனந்தமான மாதம். குடியிருக்க சொந்தமாக வீடு இல்லை என ஏங்கியவர்களுக்கு புதிய வீடு அமையும். கப்பல் விமான பயணம் மேற்கொள்ளலாம். அன்பு காதலாக மலரும். பெண்களின் அன்பும் உதவியும் கிடைக்கும். தாய்வழி சொத்துக்கள் வந்துசேரும். வெளிநாட்டில் இருந்து நல்ல தகவலும் பணமும் வந்துசேரும். விலையுயர்ந்த செல்போன் வாங்குவீர்கள். அஷ்டமத்து சனீஸ்வரால் கஷ்டப்பட்டு வந்த உங்களுக்கு அஷ்டமத்து சனீஸ்வரரின் கஷ்டங்கள் குறைக்க பஞ் சமம் எனினும் தெய்வ ஸ்தானத்தில் ஸ்ரீகுருபகவான் அமர்ந்து வியாழ நோக்கம் குருபலத்தை அருள்கிறார். மேலும் ஸ்ரீசூரியன் பகவான் ஆட்சிபலம் பெறுவதால் திருமண யோகம் கூடிவரும் திருமணமாகி குழந்தையில்லாமல் கஷ்டப்படும் தம்பதியினருக்கு ஆண்குழந்தை பாக்கியம் கிட்டும். நல்ல எண்ணங்கள், ஆன்மிக பெரியோர்களின் அன்பு கிட்டும் ஆலயம் கட்டி கும்பாபிஷேகம் செய்வீர்கள். தந்தையின் பரிபூரண அன்பும் ஒத்துழைப்பும் கிடைக்கும். பூர்வீக சொந்தங்கள் ஒன்றிணையும். ஸ்ரீபுதன் பகவான் 6இல் உச்சம் அடைவதால் மாணவர்கள் படிப்பில் அக்கறை தேவை. அறிவாளிகள் போல் நடந்துக் கொள்வீர்கள். எனினும் பெரியோர் சொல்வதை கேட்க தவறாதீர்கள். போட்டி பந்தயங்களில் கலந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள். எனினும் பெரியோர் செல்வதை கேட்க தவறாதீர்கள். போட்டி பந்தயங்களில் கலந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள். எனினும் 15ஆம் தேதி வக்ரமாக கலந்து கொண்டு வெற்றி பெறுவீர்கள். எனினும் 15ஆம் தேதி வக்ரமாக ஸ்ரீபுதன் பகவான் பஞ்சமத்திற்கு வருகையால் திருப்பதி வெங்கடாசலபதி அருள்கிட்டும். பணம் வரும். வங்கி சேமிப்பு கூடும்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 18ஆம் தேதி இரவு மணி 7.28 முதல் 21ஆம் தேதி அதிகாலை மணி 3.26 வரை சந்திராஷ்டமம் இந்நாட்களில் மனதில் இருந்த தைரியம் குறையும். ஒருவித பயம் உருவாகும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: மஞ்சள், சிவப்பு, அதிர்ஷ்ட எண்கள் : 3, 6

**வழிபட வேண்டிய தெய்வம்:** ஸ்ரீ புதன் காயத்ரி
ஓம் ஆத்ரேயாய வித்மஹே இந்து புத்ராய தீமஹி

தந்நோ புத: ப்ரசோதயாத் ஸ்ரீபுதன் பகவான் மந்திரத்தை தினமும் 23 தடவை பாராயணம் செய்யுங்கள். கல்வி சிறப்பாக அமையும்.

கொடுமுடி வன்னிமரத்தடி ஸ்ரீ பிரம்மாவை திங்கட்கிழமை 12 சுற்று வழிபடுங்கள். பிதுர் தோஷங்கள் விலகும்.

## ரிஷபம்

நட்சத்திரம்: கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருக சிரிஷம் 1,2 பாதம்



தைரிய ஸ்தானத்தில் உங்கள் இராசியாதிபதி ஸ்ரீசுக்கிர பகவான் நீசபலம் பெற்ற ஸ்ரீசெவ்வாய் பகவானுடன் இணைவு. எந்த முடிவு எடுக்கவும் தயங்க மாட்டீர்கள். உங்கள் மேல் ஒரு குற்றம் வருகிறது என்றால் அதற்கு முன் குற்றம் சுமத்தக் கூடியவர்களை எப்படி சமாளிப்பது என திட்டம்போட்டு சமாளித்து எதிரியை இழுக்க வேண்டும். நீங்கள் செய்வதுதான் சரி என நினைப்பீர்கள். பெண்கள் தாராளமாக செலவு செய்வார்கள். சுற்றுலா சென்று மகிழ்வார்கள். நட்புக்காக ஆதரவு கரம் நீட்டுவார்கள். சுகஸ்தானத்தில் ஸ்ரீசூரியன் பகவான் ஸ்ரீ குருபகவான் சேர்க்கை. பல மாற்றங்களை உருவாக்குவீர்கள். அரசியலில் நுழைவீர்கள். தக்க சமயத்தில் மேலிட தலைவர்களின் செல்வாக்கை பெற்று பதவிகளை பெற்று பெயர் புகழ் சம்பாதிப்பீர்கள். அரசு ஊழியர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் அமையும். நல்ல வருமானம் கிடைக்கும். விஐபிக்களின் நட்பால் எந்தகாரியத்தையும் எளிதில் செய்துவிடுவீர்கள். 17ஆம் தேதி ஸ்ரீ செவ்வாய் பகவானும் சுகஸ்தானத்திற்கு வருகிறார். காவல்துறையினர்க்கு பதவிஉயர்வு சம்பள உயர்வு கிடைக்கும். வழக்குரைஞர்கள் திறமைகளை காட்ட சரியான சந்தர்ப்பம் கிட்டும். அரசு பதவிகள் கிடைக்கும். உடல்நலத்தில் அக்கறை தேவை. யோக தியானம் மேற்கொள்ளுங்கள். ஆயுர்வேத முறை சிகிக்சைகள் செய்து கொள்ளலாம். சிலருக்கு இடைவிடாத பயணம் உருவாகும். பஞ்சமத்தில் ஸ்ரீபுதன் பகவான் உச்ச பலத்துடன் ஸ்ரீராகு பகவானுடன் இணைகிறார். 108 திவ்விய தேசங்களுக்கு ஸ்தல யாத்திரையை தொடங்கலாம். பெருமாளின் பேரருளை பெறலாம். பிறவிப் பயனை அடையலாம்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 21ஆம் தேதி அதிகாலை மணி 3.47 முதல் 23ஆம் தேதி காலை மணி 9.35 வரை சந்திரஷ்டமம். இந்நாட்களில் விட்டில் குழந்தைகளுடன் பிரச்சனைகள் உருவாகும் மதிப்பு குறையும்

**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஆரஞ்சு, பச்சை

**அதிர்ஷ்ட எண்கள்:** 1,5

**வழிபட வேண்டிய தெய்வம்:** ஸ்ரீ கணேச காயத்ரி

ஓம் தத்புருஷாய வித்மஹே வக்ரதுண்டாய தீமஹி

தந்நோ தந்தி ப்ரசோதயாத் தினமும் 1085 முறை பாராயணம் செய்யுங்கள். இலாபஸ்தான ஸ்ரீகேதுபகவான் இலாபத்தை அள்ளி வழங்குவார்.

2. ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதரை தரிசியுங்கள் திருமண யோகம் கூடி வரும்.

# இராசிப் பலன்கள்

| | | | |
|---|---|---|---|
| சந் கேது | | | |
| | செப்டம்பர் மாத கிரஹ நிலைகள் 1.9.2015 | | செவ் சுக் |
| | | | சூரி குரு |
| | சனி | | புத (வ) ராகு |

**17.9.2015 இரவு மணி 10.38க்கு ஸ்ரீசூரியன் பகவான் சிம்மம் இராசியிலிருந்து கன்னிஇராசிக்கு பெயர்ச்சியாகிறார்.**
**29.9.2015 அதிகாலை மணி 3.12க்கு ஸ்ரீசுக்கிரன் பகவான் கடகம் இராசியிலிருந்து சிம்மம் இராசிக்கு பெயர்ச்சியாகிறார்.**

## மிதுனம்

நட்சத்திரம் : மிருகசீரீஷம் 3,4 பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 பாதம்



குடும்ப ஸ்தானத்தில் யோகதிபதி ஸ்ரீசுக்கிரபகவானுடன் நீசபலத்துடன் செவ்வாய் பகவான் இணைகிறார். குடும்பத்தில் தேவையில்லாத வாக்குவாதம் உருவாகும். வாக்குஸ்தானத்தில் நீங்கள் பங்கெடுத்துக் கொள்வீர்கள். பெண்களின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைக்க சில முன்னேற்பாடுகளை செய்வீர்கள். உங்கள் மகன் மகளுக்கு திருமணம் யோகம் கூடிவரும். ஆன்மிகம், அரசியல், இலக்கிய பேச்சுப் போட்டியில் கலந்து பரிசுகள் பெறுவார்கள். திரைப்படம், தொலைக்காட்சி என கலைத்துறை வாய்ப்புகள் பிரகாசமாக அமையும். முயற்சி ஸ்தானத்தில் ஸ்ரீகுருபகவானுடன் ஆட்சி பலமிக்க ஸ்ரீசூரியன் பணிகளை குறித்த காலத்தில் செய்து முடிப்பீர்கள். அரசு வேலைவாய்ப்பு கிடைக்கும். வங்கி தேர்வுகள் எழுதலாம். தொழில் செய்பவர்கள், தங்கள் தொழிலில் புதிய மாற்றங்கள் செய்துக் கொள்ளலாம். வாணிகம் பெருகும். இலாபம் கூடும் 17ஆம் தேதி முதல் செவ்வாய் பகவான் தைரியஸ்தானத்திற்கு வருகை தருவதால் வங்கிலோன் வாங்கி வீடு கட்டுமான பணிகளை ஆரம்பிக்கலாம். கட்டுமான பணிகள் தங்கு தடையின்றி நடைபெறும். ரியல்எஸ்டேட் தொழில் இலாபம்கரமாக அமையும். பழைய வாகனத்தை விற்றுவிட்டு புதிய வாகனம் வாங்கலாம். சுகஸ்தானத்தில் உங்கள் இராசியாதிபதி உச்சபலத்துடன் ஸ்ரீபுதன் பகவான் இராகு பகவானுடன் இணைகிறார். கல்வியில் வல்லவர்களாக திகழ்வீர்கள். பல்வேறு வகையான கலைஞர்கள், வித்தைகள், மொழிகள் கற்றுக் கொள்வீர்கள். பல நாட்டினருடன் நேரில் அமர்ந்து பேசி வியாபார ஒப்பந்தங்கள் செய்வீர்கள். ஏற்றுமதி இறக்குமதி தொழிலில் புதிய முதலீடு செய்வீர்கள். பலநாடு சென்று வர விசா வாங்குவீர்கள்.

**சந்திராஷ்டமம்:** இம்மாதம் 23ஆம் தேதி காலை மணி 9.36 முதல் 25ஆம் தேதி பகல் மணி 1.26 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் வெளியூர் பயணங்கள் செய்யவேண்டாம். பயணம் கஷ்டங்கள் உருவாகும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: ஆரஞ்சு, பச்சை, அதிர்ஷ்ட எண்கள்: 1,5

**வழிபட வேண்டி தெய்வம்:** வேத வியாசர் மந்திரம்

ஓம் சர்வ சாஸ்த்ராய வித்மஹே முனிஸ்ரேஷ்டாய தீமஹி

தந்நோ வியாஸ ப்ரசோதயாத்: வியாச முனிவர் மந்திரத்தை தினமும் 24 தடவை பாராயணம் செய்யுங்கள். கல்வியில் நல்ல மதிப்பெண் கிட்டும்.

2. வெள்ளிக்கிழமை மஹாலட்சுமி அஷ்டோத்திரம் சொல்லி குங்குமம் அர்ச்சனை செய்யுங்கள். திருமண யோகம் கூடி வரும்.

## கடகம்

நட்சத்திரம் : புனர்பூசம் 4 பாதம், பூசம், ஆயில்யம்



ஜென்ம இராசியில் ஸ்ரீசுக்கிரன் பகவானுடன் நீசபலத்துடன் ஸ்ரீசெவ்வாய் பகவான் இணைவு. வாழ்க்கையில் எல்லா விஷயங்களை காமடியாக எடுத்துக் கொள்வீர்கள். ஆசைகள், ஆடம்பரங்கள் கூடும். எதிர்பாராத புதிய செலவுகள் தோன்றும். பெண்கள் நவீன ஆடைகள் வாங்கி மகிழ்வார்கள். இந்த செலவுக்கு வருமானத்தில் பெரும்பங்கு காலியாகும். ஆடம்பரத்தைக் குறைத்தால் வாழ்க்கையில் முன்னேறலாம். தன்னிடம் உள்ள குறைகளை மறைப்பதற்காக அடுத்தவர்கள் குறைகளை வரலாறாக பேசுவார்கள். இதனால் சிலரின் எதிர்ப்புகளை சம்பாதிப்பார்கள். பெண்களிடம் எச்சரிக்கையாக பழக வேண்டும். வாக்குஸ்தானத்தில் ஸ்ரீசூரியன் ஆட்சிபலத்துடன் ஸ்ரீகுருபகவான் இணைந்து வியாழ நோக்கத்தை அருள்கிறார். குடும்பத்தில் நிச்சயதார்த்தம், திருமணம், வளைகாப்பு, குழந்தைபிறப்பு பெயர் சூட்டுவதல் என சுபநிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக வரும். குடும்ப கௌரவம், அந்தஸ்து உயரும். குடும்ப தலைவருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். சிறிய வீட்டை விற்றுவிட்டு பெரிய வீடு வாங்கலாம். தைரிய ஸ்தானத்தில் ஸ்ரீபுதன் பகவானுடன் ஸ்ரீஇராகு பத்திரிகை துறை அன்பர்களுக்கு புதிய பணிகள் கிடைக்கும். சம்பள உயர்வு கிடைக்கும். தொலைக்காட்சியில் செய்தி வாசிக்கும் பணி கிகைக்கும். கனவில் கண்ட ஆசைகள் அனைத்தும் நிறைவேறும். செய்தி சேகரிக்க வெளிநாடு செல்லலாம். புதிய மனிதர்களை சந்தீப்பீர்கள். நட்புக் கொள்வீர்கள். பல இயற்கை எழில் கொஞ்சும் மலை பிரதேசங்களுக்கு சுற்றுலா சென்று குடும்பத்துடன் மகிழ்வீர்கள். எதிர்பாராத அற்புதமான வாய்ப்பு கிட்டும் மாதம்.

**சந்திராரிஷ்டமம்:** இம்மாதம் 25ஆம் தேதி பகல்மணி 1.27 முதல் 27ஆம் தேதி மாலை மணி 4 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் பக்கத்து வீட்டினருடன் பகை உருவாகும். பேச்சை குறையுங்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள்: பச்சை, நீலம் அதிர்ஷ்ட எண்கள்: 4.5

**வழிபட வேண்டிய தெய்வம்:** 1. "ஸர்பராஜாய வித்மஹே மஹோ ரோசனாய தீமஹி

தந்நோ ஆச்லேஷ ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 40 முறை பாராயணம் செய்யுங்ககள். வெளிநாடு வேலைவாய்ப்பு கிட்டும்.

2.புதன்கிழமை திருப்பதி வெங்கடாசலபதியை தரிசியுங்கள். வருமானம் பெருகும். தொழில் சிறக்கும்.

## சிம்மம்

நட்சத்திரம் : மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்.

உங்கள் இராசியதிபதி ஸ்ரீசூரியன் பகவான் ஆட்சிபலத்துடன் ஜென்மத்தில் ஸ்ரீகுரு பகவான் இணைகிறார். வாழ்க்கையில் மதிப்பு மரியாதை அந்தஸ்து, சிறப்புகள் அனைத்தும் கிடைக்கும். விஜபி மனிதர் பலரை சந்திப்பீர்கள். புதிய நட்புகள் நட்புக்களால் ஆதாயமும் கிடைக்கும். அரசியல் பதவிகள் அந்தஸ்து கிடைக்கும். இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் அரசு துறை வேலைவாய்ப்பு கிடைக்கும். அரசு துறையினர் பதவிஉயர்வு எதிர்பார்த்த இடமாற்றங்கள் கிடைக்கும். தியானம், யோகம் மூலம் உடல் ஆரோக்கியம் அமையும். யோக ஆசிரியர்களுக்கு அரசு பணி கிடைக்கும். ஆசிரியர் பணி செய்பவர்களுக்கு உயரிய விருதுகள் நல்லாசிரியர் பட்டம் கிடைக்கும். ஸ்ரீபுதன் பகவானும் ஸ்ரீராகு பகவானும் வாக்கினிலே சேர்க்கை. குழந்தைகளுக்கு கல்வி வளர்ச்சி நன்றாக அமையும். கல்வி சம்பந்தப்பட்ட போட்டி பந்தயங்களில் கலந்து பரிசுகள் பெறுவார்கள். ஆடிட்டர், ஜோதிடர், வழக்குரைஞர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகை துறையினர் பல ஏற்றங்களையும், ஆதாயங்களையும் பெறுவார்கள். பெண்கள் சினிமா தொலைக்காட்சி வாய்ப்புகள் கிடைக்கும். கிடைத்த வாய்ப்புகளை செம்மையாக பயன்படுத்தி முன்னேறுவார்கள். 17ஆம் தேதி ஸ்ரீசூரியன் பகவான் வாக்கில் வருவதால் குடும்பத்தில் உங்கள் அதிகாரம் மேலோங்கும். எடுத்த காரியத்தை சிறப்பாக நடத்தி முடிப்பீர்கள். குடும்ப பெருமைகளை உலகறிய செய்வீர்கள். 15ஆம் தேதி முதல் ஸ்ரீபுதன் பகவான் ஜென்மஇராசிக்கு வக்ரமாக வருவதால் புதிய தொழிலை ஆரம்பிப்பீர்கள். கல்வி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்கள் நடத்துபவர்களுக்கு வெளிநாடு முதலீடு கிடைக்கும். விரையஸ்தானத்தில் ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீசுக்கிரன் பகவான் இணைவு. எதிர்பாராத செலவுகள் தோன்றும். காதல் முயற்சிகள் கைகூடும். சுற்றுலா செல்வீர்கள். பெண்களின் கனவுகள் நிறைவேறும்.

**சந்திராஷ்டரிமம்:** இம்மாதம் 1ஆம் தேதி முழுவதும் 2ஆம் தேதி காலை மமணி 10.25 வரையும் 29ஆம் தேதி மாலை மணி 6.26 வரை சந்திராஷ்டரிமம். இந்நாட்களில் எதிர்பாராத செலவுகள் உருவாகும். பணத் தட்டுப்பாடு தோன்றும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: ஆரஞ்சு, பச்சை

அதிர்ஷ்ட எண்கள்: 1,5

**வழிபட வேண்டிய தெய்வம்:**

1. ஸ்ரீசுப்பிரமணியர் காயத்ரி

"ஓம் கார்த்திகேயாய வித்மமேஹ சக்தி ஸ்ரீஸ்தாய தீமஹி தந்நோ ஸ்கந்த ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 27 தடவை பாராயணம் செய்யுங்கள். சொந்த வீடு வாங்கலாம்.

2. சங்கரன் கோவில் ஸ்ரீ கோமதிதாயாரை புதன்கிழமை தரிசியுங்கள். திருமணம் யோகம் கிட்டும்.



## கன்னி



நட்சத்திரம் : உத்திரம் 2,3,4 பாதங்கள், அஸ்தம், சித்திரை 1, 2 பாதம்

உச்சம் பலத்துடன் உங்கள் இராசி நாதன் ஸ்ரீபுதன் பகவான் ஸ்ரீஇராகு பகவானுடன் ஜென்மத்தில் இணைகிறார். பாஸ்போர்ட் எடுப்பது போன்ற கனவு கண்ட வெளி நாடு பயண வாய்ப்புகள் உங்கள் வீட்டுக் கதவைத் தட்டும். இளைஞர்கள் இளம் பெண்களுக்கும் உங்கள் படிப்பிற்கேற்ற வேலைவாய்ப்பு கிட்டும். வேலைகிடைத்த நாட்டில் குடியுரிமை கிடைக்கும். திருமணம் முடித்து தம்பதி சகிதமாக வெளிநாடு செல்லலாம். எனக்கு பல திறமைகள் இருக்கிறது. எனினும் என் திறமைக்கு மரியாதையில்லை என் திறமைக்கேற்ற சம்பளம் இல்லை என மனவருத்தம் அடைந்தவர்களுக்கும், உங்கள் திறமைகளை முழுமையாக பயன்படுத்த ஒரு நிறுவனம் அழைப்பு விடுக்கும். நல்ல சம்பளம். எதிர்காலம் சிறப்பாக அமையும். இப்போது தான் உங்கள் மீது உங்களுக்கே நம்பிக்கை வரும். 17ஆம் தேதி ஸ்ரீசூரியன் பகவான் ஜென்மத்திற்கு வருகிறார். அரசாங்க வேலைவாய்ப்பு கிடைக்கும். அரசியலில் நல்ல பதவிகள் கிடைக்கும். புதிய மனிதர்களை சந்திக்கலாம். உதவிகள் பெறலாம். இலாபஸ்தானத்தில் பல இனிமையான ஸ்ரீசுக்கிரன் பகவான் இணைவு. வாழ்க்கையில் பல இனிமையான சம்பவங்கள் நடைபெறும். 40வயது வரை திருமணமே வேண்டாம் என வாழ்ந்தவர்கள்

## துலாம்



நட்சத்திரம் : சித்திரை 3,4 பாதம், சுவாதி, விசாகம் 1,2,3 பாதங்கள்

உங்கள் இராசியதிபதி ஸ்ரீசுக்கிரன் பகவான் தொழில் ஸ்தானத்தில் திக்பலம் பெற்று நீச பலத்துடன் கூடிய ஸ்ரீசெவ்வாய் பகவானுடன் இணைகிறார். தொழில் ஆரம்பிக்கலாம். தொழில் வளம் பெற கணவன் மனைவி சேர்ந்து உழைக்கலாம். நீங்கள் உழைப்பால் முன்னேறுவீர்கள். டிபார்ட்மெண்டல் ஸ்டோர், பேன்ஸி ஷாப், செல் ரீசார்ஜ், ஷாப், கூல்டிரிங்ஸ் ஷாப், ஹோட்டல் போன்ற தொழில்கள் நல்ல ஆதாயத்தைக் கொடுக்கும். கிராமத்தில் வாழ்பவர்கள் நகரத்தில் மக்கள் கூடும் இடத்தில் வாடகைக்கு இடம் பிடித்து தொழில் ஆரம்பிக்கலாம். தொழில் ஆரம்பிக்க வங்கி உதவிகள் கிடைக்கும். இலாபஸ்தானத்தில் ஸ்ரீகுருபகவானுடன் ஆட்சி பலம் பெற்ற ஸ்ரீசூரியன் பகவான் இணைகிறார். செய்கின்ற தொழில் எதுவானாலும் நல்ல இலாபம் கிடைக்கும். உங்கள் இராசிக்கு ஸ்ரீசூரியன் பகவான் பாதகதிபதியாக அமைவதால் அரசுக்கு எதிரான தொழில்கள் அதிக இலாபம் வந்தாலும் செய்யாதீர்கள். எப்போதும் தொழில்வகையான ஆவணங்களை பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள். தொழில் விஷயமாக யாரையும் பகைக்காதீர்கள். போட்டி, பொறாமைகளை கண்டு அஞ்சாதீர்கள். உங்களுக்கு தீங்கு செய்தால் அவர்களுக்கு சில கஷ்டங்கள் உண்டாகும். பொறுமை அவசியம். 17ஆம்

## விருச்சிகம்



நட்சத்திரம் : விசாகம் 4 பாதம், அனுஷம், கேட்டை

பாக்கிய ஸ்தானத்தில் உங்கள் இராசியத்திபதி ஸ்ரீ செவ்வாய் பகவான் நீசபலத்துடன் ஸ்ரீசுக்கிரன் பகவானுடன் இணைகிறார். பல புதிய முற்சிகளை செய்வீர்கள். சாண் ஏறினால் முழம் சறுக்கும் என்பார்கள். சில சோதனைகளையும் சந்தீப்பீர்கள். எனினும் இடைவிடாத முயற்சியில் ஈடுபடுவீர்கள். எதிர்காலம் சிறப்பாக அமையும். உங்களை விட வயது குறைந்தவர்களுக்கெல்லாம் திருமணமாகி குழந்தை பெற்றுவிட்டார்கள். நமக்குத்தான் இன்னும் திருமணயோகம் வரமால் இருக்கிறது. பல குருப்பெயர்ச்சி குரு பலம் கடந்து விட்டோம். எனினும் கவலைப்பட வேண்டாம் சிறப்பான திருமண வாழ்க்கை கூடிவரும். வேலையில்லை, தொழிலும் இல்லை என்று செல்வாக்கு தொழில் ஸ்தானத்தில் ஆட்சி பலம் ஏறிய ஸ்ரீசூரியன் பகவான் நல்ல வேலையை அமைத்து தருவார். இலாபத்தில் உச்சம் பலத்துடன் ஸ்ரீபுதன் பகவான் ஸ்ரீராகு பகவான் இணைகிறார். எதிர்பாராத வேலைவாய்ப்பு கிடைத்து நல்ல சம்பளம் என வாழ்க்கை நிலையை மாற்றும். வேலையில் ஏற்படும் மாற்றங்கள் உயர்வைத்

கூட தற்போது சிறந்த வாழ்க்கைத் துணை அமைந்து திருமணம் நடக்கக்கூடிய காலம். மாற்றுத்திறனாளிகளுக்கு நல்ல வரன் கிடைக்கும். திருமணம் நடப்பதின் மூலம் உடலில் ஏற்பட்ட ஊனம் மறைந்து மனதில் தெம்பும் தைரியமும் கிடைக்கும். காதல் திருமணத்தில் முடியும் மனைவி வந்த நேரம் நல்ல வேலைவாய்ப்பு அமையும். புத்திரபாக்கியம் கிட்டும் எதிர்கால வாழ்க்கைக்காக பல திட்டமிடுதல்கள் செய்வீர்கள். விரையஸ்தானத்தில் ஸ்ரீகுரு பகவான் அமர்வதால் சுப விரையங்கள் ஆலய தரிசம் கிட்டும்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 2ஆம் தேதி காலை மணி 10.25 முதல் 4ஆம் தேதி பகல் மணி 1.28 வரையும், மேலும் 29ஆம் தேதி மாலை மணி 6.27 முதல் 31ஆம் தேதி முழுவதும் சந்திராஷ்டமம். இந்நாட்களில் எதிர்பாராத லாபம் வரும். வந்த பணம் கண்முன்னே செலவாகிவிடும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: அதிர்ஷ்ட எண்கள்:

வழிபட வேண்டிய தெய்வங்கள்: 1. கௌமாரி மந்திரம் "ஓம் சக்தி தாராயை வித்மஹே காமருவாலை தீமஹி

தந்நோ கௌமாரி ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 24 முறை பாராயணம் செய்யுங்கள். தாம்பத்தியம் ஒற்றுமை உருவாகும்.

2. சிதம்பர நடராஜரை பௌர்ணமி அன்று தரிசியுங்கள். கலைகள் பல கற்கலாம்.

தேதி செவ்வாய் பகவானும் இலாபஸ்தானத்தில் இணைகிறார். காவல், ராணுவத் துறையினருக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். பெண்களுக்கு காவல்துறை வேலை கிடைக்கும். மாணவர்களுக்கு எலக்ட்ரானிக்ஸ், கம்ப்யூட்டர் துறை படிப்பு வாய்ப்புகள் கிடைக்கும். சகோதரர்களின் அன்பும் ஒத்துழைப்பும் கிடைக்கும். சொத்துக்கள் பாகபிரிவினையாகும். தந்தையின் உடல்நலத்தில் அக்கறை தேவை. விரையஸ்தானத்தில் ஸ்ரீபுதன் பகவான் உச்ச பலத்துடன் ஸ்ரீஇராகுபகவானுடன் சேர்க்கை. கல்விவகை செலவினங்கள் அதிகரிக்கும். கல்வி கடன் வாங்குவீர்கள்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 4ஆம் தேதி பகல் மணி 1.29 முதல் 6ஆம் தேதி மாலை மணி 6.02 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் வாக்கு நாணயம், தொழில் நாணயம் காப்பாற்ற அதிகம். சிரமப்படுவீர்கள்.

அதிர்ஷ்ட எண்கள்: நீலம், கருப்பு அதிர்ஷ்ட எண்கள்: 4,8

வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி காயத்ரி "ஓம் தத்புரஷாய வித்மஹே சக்ரதுண்டாய தீமஹி

தந்நோ நந்தி ப்ரசோதயாத்" தினமும் 21 முறை பாராயணம் செய்யுங்கள். கால்நடைகள் செல்வத்தை தரும்.

2. சிவபிரதோசம் தோறும் சிவபெருமானுக்கும் வில்வ மாலையிட்டு தரிசியுங்கள். சகல தோஷம் நிவர்த்தியாகும்.

தரும். சிலருக்கு உயர்பதவியை பெற புதிய படிப்பு படித்து தேர்வும் எழுதுவார்கள். தேர்வில் வெற்றி பெறுவார்கள். எனினும் 15ஆம் தேதிக்கு மேல் ஸ்ரீபுதன் பகவான் வக்ரமாக இலாபஸ்தானத்தில் இருந்து மீண்டும் தொழில் ஸ்தானத்திற்கு வருவதால் சில நேரங்களில் நாம் கஷ்டப்பட்டு உழைத்த உழைப்பு வீணாகி போனதாக உணருவோம் கவலைப்பட வேண்டாம். நன்மைக்குத்தான் இலாபத்தில் இராகு இருப்பதால் பணம் பல வழிகளில் வரும்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 6ஆம் தேதி மாலை மணி 6.03க்கு மேல் 8ஆம் தேதி இரவு 6 மணி 12.47 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் நல்ல காரியத்தை முடிக்க பல தடைகளை சந்திக்க நேரிடும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: ஆரஞ்சு, பச்சை

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதட்சணாமூர்த்தி மந்திரம்

"ஓம் தட்சணாமூர்த்தியே வித்மஹே தயா நஹஸ்தாய தீமஹி

தந்நோ தீச ப்ரசோதயாத் என்ற மந்திரத்தை 30 முறை பாராயணம் செய்யுங்கள் 10ஆம் இட குரு நன்மை தரும்.

2. புளியரை ஸ்ரீதட்சணாமூர்த்தி வியாழக்கிழமை தரிசியுங்கள். திருமண யோகம் கூடிவரும்.

## தனுசு

நட்சத்திரம் : மூலம், பூராடம், உத்திராடம் 1 பாதம்

உங்கள் இராசியதிபதி ஸ்ரீகுருபகவான் பாக்கியத்தில் ஆட்சிபலம் பெற்ற ஸ்ரீசூரியன்பகவானுடன் இணைகிறார். புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கலாம். பழைய சோதனைகளைக் கலைந்து வெற்றிநடை போடலாம். உங்களுக்கு நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும். கையில் பணம் புரளும். பணம் இல்லாத காலத்தில் இழந்த சொந்த பந்தங்களில் இப்போது உங்கள் உதவியை நாடி வரும். அரசு துறையினருக்கு உயர்ந்த பதவிகள் தேடிவரும். அரசு கார், அரசு வீடு கிடைக்கும். 17ஆம் தேதி முதல் ஸ்ரீசெவ்வாய் பகவானும் பாக்கிய ஸ்தானத்தில் அமருவதால் குழந்தையில்லாமல் இருந்த தம்பதிகளுக்கு புத்திர வரம் கிடைக்கும். குழந்தைகள் கல்வியில் சிறப்பு தேர்ச்சி பெறுவார்கள். குழந்தைகள் பெற்றோர்கள் எல்லோரும் இணைந்து ஆன்மிக ஸ்தலங்கள், இயற்கை வாழ் இடங்களுக்கு சுற்றுலா சென்று மகிழலாம். பெண்களுக்கு ஆடைகள், ஆபரணங்கள் சேரும். தொழில் ஸ்தானத்தில் ஸ்ரீபுதன் பகவான் ஆட்சி உச்சபலத்துடன், ஸ்ரீஇராகுவுடன் சேருகிறார். ஏற்றுமதி, இறக்குமதி தொழில் நல்ல ஆதாயத்தை கொடுக்கும். மாணவ, மாணவிகள் வெளிநாடு சென்று படிக்கலாம். படித்த கல்விக்கேற்ற வேலையில் அமரலாம். வேலையில் பதவி உயர்வுக்காக தேர்வுகள் எழுதி வெற்றி பெறலாம். அரசாங்கத்துடன் தொழில் ஒப்பந்தங்கள் செய்துக் கொள்ளலாம். வெற்றி பெறுவீர்கள். தந்தையின் சொத்து தமையனுக்கு வந்து சேரும்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 8ஆம் தேதி இரவு மணி 12.48 முதல் 11ஆம் தேதி காலை மணி 10.02 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் மருத்துவரை பார்க்க அதிக நேரம் காத்திருப்பீர்கள்.

அதிர்ஷ்ட நிறங்கள்: ஆரஞ்சு. மஞ்சள் அதிர்ஷ்ட எண்கள்: 1,3

வழிபட வேண்டிய தெய்வம்: விஸ்வாமித்ரர் மந்திரம்

ஓம் தநுர்தராய வித்மஹே ஜடாஜிடாய தீமஹி

தந்நோ விஸ்வாமித்ர ப்ரசோதயாத் என்ற விஸ்வாமித்ரர் மந்திரத்தை தினமும் 30 முறை பாராயணம் செய்யுங்கள். கல்வி எதிர்காலம் சிறக்கும்.



## மகரம்

நடசத்திரம் : உத்திராடம் 2,3,4 பாதம், திருவோணம் அவிட்டம் 1,2 பாதம்

நட்பு ஸ்தானத்தில் யோகதிபதி ஸ்ரீசுக்கிரன் பகவான் நீசபலத்துடன் ஸ்ரீசெவ்வாய் பகவான் இணைகிறார் யாரிடமும் எளிதில் பழகி விடுவீர்கள். சில நேரங்களில் கூடா நட்பு உருவாகும். கவனம் தேவை. காதல் வயப்பட்டவர்கள் மனதில் தேவையில்லாத குழப்பங்கள் உருவாகும். பழகியவர் நல்லவரா கெட்டவரா என குழம்புவீர்கள். புதிய புதிய சந்தேக குணங்கள் உருவாகும். தியானத்தை மேற்கொள்ளுங்கள். இறைவழிபாட்டால் ஸ்ரீசூரியன் பகவான் சேர்க்கை வர இருந்த பல பெரிய பிரச்சனைகள் தெய்வ அனுகிரகத்தால் கடைசி நேரத்தில் உங்களை தாக்கமால் விலகிச் செல்லும். பல ஆண்டுகளாக ஊர்சுற்றி வேலையில்லாமல் அலைந்த உங்களுக்கு எதிர்பாராமல் நல்ல வேலை கிடைக்கும். இதனால் வாழ்க்கை நிலை மாறும். உயர்ந்த மனிதர்களை சந்தீப்பீர்கள். பல பொறுப்புகளை கையில் எடுப்பீர்கள். 17ஆம் தேதி முதல் ஸ்ரீ செவ்வாய் பகவானும் அஷ்டமத்தில் வாகனம் ஓட்டும்போது மிகுந்த கவனம் தேவை. உடலை மருத்துவ பரிசோதனை செய்து கொள்ளலாம். இரத்ததானம் செய்யலாம். பாக்கியஸ்தானத்தில் ஆட்சி உச்சம் பலம் பெற்ற புதன் பகவானுடன் ஸ்ரீஇராகு பகவான் சேர்க்கை மாணவ, மாணவிகள் நன்றாக படிப்பார்கள். தேர்வில் முதலிடம் பெறுவார்கள். வினாடிவினா போட்டிகளில் பதக்கம் பெறுவார்கள். வேலை கிடைத்தும் நாம் படித்த படிப்புக்குரிய வேலை அமையவில்லையே என கவலைப்பட்டவர்கள் இப்போது படிப்புக்கேற்ற வேலை நல்ல உத்தியோகம் அமையும். பிறகு என்ன திருமணம் தான் அழகான படித்த குணமுள்ள மணமகள் அமைவாள். இல்லறம் நல்லறமாகும்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 11ஆம் தேதி காலை மணி 10.03 முதல் 13ஆம் தேதி இரவு மணி 9.14 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் கணவன், மனைவியிடையே சண்டை சச்சரவுகள் தோன்றும்.

அதிர்ஷ்ட நிறங்கள்: பச்சை, நீலம். அதிர்ஷ்ட எண்கள்: 4,5

வழிபட வேண்டிய தெய்வ வழிபாடு: ஸ்ரீபிரம்ம காயத்ரி

ஓம் வேதாத்மாநாய வித்மஹே ஹிரண்யகர்பாய தீமஹிக்ஷ

தந்நோ பிரம்ம ப்ரசோதயாத் என்ற மந்திரத்தை தினமும் 5 முறை பாராயணம் செய்யுங்கள். உங்களுக்கு வரக்கூடிய தடைகளை விளக்கலாம்.

2. மலேசியா பத்து குடைமலை ஸ்ரீமுருகன் பெருமானை ஒருமுறை தரிசியுங்கள். வாழ்க்கையில் கஷ்டங்கள் மறையும்.

## கும்பம்

நடசத்திரம் : அவிட்டம் 3,4 பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 பாதம்

நட்பு ஸ்தானத்தில் ஆட்சி பலம் பெற்ற ஸ்ரீசூரியன் பகவானுடன் ஸ்ரீகுரு பகவான் இணைந்து வியாழ நோக்கத்தில் அருள்கிறார். குருபலம் நிறைந்த மாதம். பெண் பார்க்கலாம். மாப்பிள்ளை பார்க்கலாம். உறவுகள் ஒன்று கூடி மனம் விட்டு பேசலாம். இரண்டு விட்ட உறவுகள் மனம் ஒன்றுபட்டு திருமணம் என்ற பந்தம் உருவாகும். தாம்பத்திய வாழ்க்கை புதிய அத்தியாத்தை படைக்கும். திருமணம் முடிந்த நேரம் மாப்பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ அரசு உத்தியோகம் கிடைக்கும். வாழ்க்கை தரம் உயரும். அரசியல்வாதிகளுக்கு உயர்ந்த பதவிகள் கிட்டும். இதன்மூலம் தொண்டர்களில் பேராதரவு கிடைக்கும். வழக்குரைஞர்கள், நீதிபதிகளுக்கு அரசு உயர், பதவிகள் இல்லம் தேடிவரும். 17ஆம் தேதிமுதல் ஸ்ரீ செவ்வாய் பகவான் நட்புஸ்தானத்தில் இணைகிறார். சொத்து பாகபரிவினைகள் செய்து உங்கள் பெயரில் பத்திரபதிவுகள் நடக்கும். ரியல் எஸ்டேட் தொழில் சிறப்பாக அமையும். இடம் வாங்கி வாங்கி லோன் பெற்று வீடு கட்டலாம். கிரகபிரவேசம் செய்யலாம். அஷ்டமத்தில் உச்சம் பலம் பெற்றஸ்ரீபுதன் பகவானுடன் ஸ்ரீராகு பகவான் இணைகிறார். கல்வியில் சாதனை செய்யலாம். புதிய படிப்புகளில் சேர்ந்து பயன்அடையலாம். ஆராய்ச்சி துறை படிப்பவர்கள் சிறப்பான ஆராய்ச்சிகளை பல்கலைக்கழகத்தில் சமர்ப்பித்து டாக்டர் பட்டம் பெறலாம். வாழ்நாள், கல்வி, வித்தை ஆசைகள் நிறைவேறும். ஜோதிடம் படிக்கலாம். வெளிநாடு சென்று ஜோதிடம் பார்தது பெயர் புகழ் பெறலாம். 17ஆம் தேதி முதல் ஸ்ரீசூரியன் பகவானும் அஷ்டமத்தில் வருவதால் அரசாங்க முக்கிய ஆவணங்கள் சரிபார்த்துக் கொள்ளுங்கள்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 13ஆம் தேதி இரவுணமணி 9.15 முதல் 16ஆம் தேதி காலை மணி 8.53 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் வெகு நாட்கள் அடைபடாத கடன்கள் அடைபடும்.

அதிர்ஷ்ட எண்கள்: 3,4 அதிர்ஷ்ட நிறங்கள்: மஞ்சள், நீலம்.

வழிபட வேண்டிய தெய்வ வழிபாடு: ஹனுமான் மந்திரம்

"ஓம் வாயு புத்ராய வித்மஹே ராம பக்தாய தீமஹி

தந்நோ ஹனுமத் ப்ரசோதயாத்" என்ற மந்திரத்தை தினமும் 27 தடவை பாராயணம் செய்யுங்கள். நல்லொழுக்கம், உடல் ஆரோக்கியம் உருவாகும்.

2. மயிலாடுதுறை அருகே திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரர் திருக்கோவிலில் நடராஜர் சன்னதிக்கு வலது புறம் ஸ்ரீமுருகனை இடுப்பில் ஏந்திய பார்வதி தேவியை தரிசியுங்கள். நெடுநாள் குழந்தை இல்லாதவர்களுக்கு புத்திரபாக்கிய கிட்டும்.

## மீனம்

நடசத்திரம் : பூரட்டாதி 4 பாதம் வரை, உத்திரட்டாதி, ரேவதி

பஞ்சமத்தில் ஸ்ரீ செவ்வாய் பகவான் ஸ்ரீசுக்கிரன் பகவான் இணைவு ஸ்ரீ துர்க்கையின் அருள்கடாட்சம் கிடைக்கும். பெண் குழந்தை பாக்கியம் கிடைக்கும். குழந்தைகளின் எதிர்காலத்திற்கு சில பண சேமிப்புகள் செய்வீர்கள். பூர்வீக சொத்தில் இருந்த பிரச்சனைகள் தீர்ந்து பாகபிரிவினைக்கு வரும். சொந்த ஊரில் எல்லா வசதிகளுடன் கூடிய வீட்டை கட்டுவீர்கள். சொந்த ஊர் கோவிலை தலைமையேற்று புனரமைத்து கும்பாபிஷேகம் செய்வீர்கள். ருனரோக சத்ரு ஸ்தானத்தில் ஆட்சி பலத்துடன் ஸ்ரீசூரியன் பகவான் ஸ்ரீகுரு பகவான் இணைகிறார். இதனால் உடல்நலத்தில் அதிக அக்கறை தேவை. எலும்புகள் சம்பந்தப்பட்ட உடல்நல கோளாறுகள் தோன்றும். தந்தையின் எதிர்ப்புகள் தோன்றும். எனினும் நட்புஸ்தானத்தில் ஆட்சி உச்சபலத்தடன் ஸ்ரீபுதன் பகவான் ஸ்ரீஇராகுவுடன் இணைகிறார். கூட்டுத் தொழிலில் ஈடுபடுவீர்கள். எனினும் கூட்டுத் தொழில் பார்ட்னர்களிடம் கவனமாக இருப்பது நலம். வெளிநாட்டு தொடர்புகள் உருவாகும். ஏற்றுமதி இறக்குமதி தொழில் நல்ல ஆதாயத்துடன் நடைபெறும். இதுவரை வெளிநாடு செல்லாதவர்கள் முதல்முறையாக வெளிநாடு செல்லும் யோகம் கிட்டும். 17ஆம் தேதி முதல் நட்புஸ்தானத்தில் ஸ்ரீசூரியன் பகவானும் இணைகிறார். எதிர்ப்புகளை கண்டு கவலைப்பட மாட்டீர்கள். உங்களுக்கு பிரச்சனை கொடுத்தவர்களுக்கு புதிய பிரச்சனைகள் தோன்றும். அதனால் பகைத்துக் கொண்டு சென்றவர்கள் மீண்டும் வந்து நட்பு பாராட்டுவார்கள். போலியான, நட்பைக் கண்டு ஏமாற வேண்டாம். கணவன், மனைவி ஒருவருக்குக்கொருவர் விட்டுக் கொடுத்து செயல்படுவது உத்தமம்.

சந்திராஷ்டமம்: இம்மாதம் 16ஆம் தேதி காலை மணி 8.54 முதல் 18ஆம் தேதி இரவு மணி 7.27 வரை சந்திராஷ்டமம். இந்நாட்களில் ஆலயம் செல்வது தடைப்படு. மனவருத்தம் ஏற்படும்.

அதிர்ஷ்ட எண்கள் : 2,8 அதிர்ஷ்ட நிறங்கள் : வெண்மை, நீலம்

வழிபட வேண்டிய தெய்வம்: "ஸர்வரோக பரசமநீ ஸ்ர்வபாப விமோசநீ

ஸமத்ருஷ்டி ஸமகுணா ஸர்வகோப்த்ரீ ஸமாயிநீ" என்ற மந்திரத்தை தினமும் 6 முறை பாராயணம் செய்தால் வியாதி, எதிர்ப்பு பாவம் நீங்கும்.

2. கோவை மாவட்டம் சூலூரில் உள்ள திருவேங்கட நாதப் பெருமானை தரிசியுங்கள் திருமண யோகம் கிட்டும்.



உ

ஓம்

எல்லாம் வல்ல இறைவனடி போற்றி, அன்னை ஆதிபராசக்தி திருவடிகள் போற்றி
ஆதிமுதல் 18 சித்தர்கள் திருவடிகள் போற்றி, குருநாதர் சுப்பிரமணியம் சுவாமிகள் திருவடிகள் போற்றி

# ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையம் வழங்கும்

## மகா மாந்திரீக, மந்திர,எந்திர, தந்திர, தாந்திரீக, ஆன்மீக சூட்சம ரகசிய பிரயோக பயிற்சி



**தொட்டதெல்லாம் துலங்கும் ஸ்ரீ சர்வேஸ்வர சக்தி மையத்தின் தொழிற்முறை மாந்திரீக கல்வியின் முதுநிலை மாந்திரீக பயிற்சி வகுப்பில் இம்மாதம் சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. சகல நன்மைகளும் தந்து அஷ்டகர்ம சித்தியும், மாந்திரீக பலமும் தந்து என்றும் இம்மாந்திரீகக் கலையில் எவராலும் எளிதில் வெல்ல முடியாத மாந்திரீக பிரயோக பலமும், மாந்திரீக சித்தியையும் தந்து வாழ்க்கையையே வளமாக்க கூடிய 21 மாந்திரீக அதிதேவதைகளில் ஒன்றான மகா சக்தி வாய்ந்த தேவிஸ்ரீ மகா சாமுண்டியின் அனுபவ மந்திர சித்தியும், அஷ்டகர்ம மகா மாந்திரீக பிரயோக முறைகளும் மற்றும் தேவிக்கான மிக ரகசியமான அனுபவ யாகப் பிரயோக ஆகூதி அளிக்கும் முறைகளும் மற்றும் மிக அதிரகசிய சக்தி வாய்ந்த மாந்திரீக வித்தையான ஸ்ரீ மகா முனீஸ்வரர் கைவல்யம் எனும் மகா மாந்திரீக பிரயோக ஏவல் தேவதா மாந்திரீக அனுபவ முறைகளும், தொடர்ந்து நம் பயிற்சியில் கலந்து கொண்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, இம்மாந்திரீகக் கலையால் அனைவரும் பயன்பெற வேண்டுமென்ற நோக்கத்தில் எந்த ஒளிவு மறைவுமின்றி கற்றுத்தருகிறார் தேவதா பிரயோக மாந்திரீகக் கலையில் கைதேர்ந்த சக்கரவர்த்தியான மாந்திரீக ஆசான் சித்தர் அடியார் சுவாமிகள் அவர்கள்.**

ஜோதிடர்கள், குறிசொல்பவர்கள், பூசாரிகள் மற்றும் இயல்பானவர்கள் மேலும் இக்கலையில் ஆர்வம் உள்ளவர்களும் மற்றும் மாந்திரீகத்தில் முறையான குரு வழி கல்வியாக கற்று மாந்திரீகத்தில் தலைசிறந்து விளங்கி மாந்திரீகத்தைத் தொழிலாக செய்ய நினைப்பவர்களும் இதில் கலந்து கொண்டு இம் முறையான அரிய மாந்திரீக அனுபவ முறைகளை கற்று தாங்களும் பயன்பெற்று தங்களை நாடி வரும் மக்களின் பிரச்சனைகளைத் தீர்த்து இம்மாந்திரீகக் கலையில் சக்கரவர்த்தி ஆகலாம். ஆகையால் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் அருள்பெற்று வளமோடு வாழுங்கள்.

**1.** குடும்பம் சுபிட்சம் பெற்று, தொழிலிலும் மேன்மை பெற்று, செய்தொழிலில் தன அதிர்ஷ்டமும், லாபமும் பெற்று மேலும் மேலும் முன்னேறி நல்ல நிலையைப் பெற்று வாழ்க்கை வளமாக தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் தன ஆகர்ஷன மாந்திரீக பிரயோக முறைகளும், சுட்சம ரகசிய யாக முறைகளும் தாங்களும் தங்களை நாடி வரும் மக்களும் பயன் பெற வேண்டுமென்ற நோக்கத்தில் எந்த ஒரு ஒளிவு மறைவும் இல்லாமல் கற்றுத் தரப்படுகிறது. **2.** மேலும் குடும்பத்திலுள்ள சண்டைச் சச்சரவுகள் விலகி, கணவன் மனைவி இடையே பரஸ்பர அன்பு உண்டாக ஒருவருக்கொருவர் வசியமாகி ஒற்றுமையாய் வாழ தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் வசிய மாந்திரீக பிரயோக முறை. **3.** மற்றும் கணவன் மனைவி இடையே அன்யோன்யம் பிறக்க தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் மோகன மாந்திரீக பிரயோக முறைகளும். **4.** மேலும் கணவன்-மனைவி வசியத்திற்கான மிக ரகசியமான சக்தி வாய்ந்த தொடு வசிய மை முறைகளும். **5.** மற்றும் நன்மைக்காக வசிய மருந்து கொடுக்கும் முறைகளும். **6.** மற்றும் வசிய மருந்து முறிக்கும் முறைகளும் எந்தவித ஒளிவு மறைவுமின்றி கற்றுத்தரப்படும் நன்மைக்காக மட்டும் பயன்படுத்துங்கள். **7.** துஷ்ட சக்திகள் விலக, பேய் பிசாசுகள் விலக செய்வினை பாதிப்புகள் விலகி குணமாக. **8.** மற்றும் வீட்டிற்கு எதிரிகளால் செய்யப்பட்ட எப்பேற்பட்ட செய்வினை பாதிப்புகளையும் விலக்கி சதுருவிற்கே திருப்பி சத்ருக்களை ஒடுக்க தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் உச்சாடன மாந்திரீக பிரயோக முறைகளும். **9.** மற்றும் தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் சத்ரு ஏவல் மாரண மகா மாந்திரீக பிரயோக முறைகளும் நன்மைக்காக கற்றுத்தரப்படுகிறது. **10.** நன்மைக்காக தவறான நட்பு, பிள்ளைகளின் தவறான சேர்க்கை, தகாத உறவுகள் இவைகளை நன்மைக்காக பிரித்து அவர்களை நல்வழிப்படுத்த தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் வித்வேசன மாந்திரீக பிரயோக முறைகளும் நன்மைக்காக கற்றுத்தரப்படுகிறது. **11.** தொழில் போட்டி விலக. **12.** தொழிலில் எதிரிகளால் எந்த தொல்லைகளும் வராமல் இருக்க. **13.** மேலும் அதிகமாக தொல்லை கொடுக்கும் எதிரிகள் இருந்த இடமே தெரியாமல் ஆகி என்றென்றும் தங்கள் வழியில் குறிக்கிடாமல் செய்யக்கூடிய தேவி ஸ்ரீ மகா சாமுண்டியின் சத்ரு நாச, சத்ரு ஸ்தம்பன, சத்ரு பேதன மாந்திரீக முறைகளும். **14.** மேலும் சில சூட்சம பிரயோக சத்ரு நாச முறைகளும் எந்த ஒரு ஒளிவு மறைவுமின்றி கற்றுத்தரப்படும். நன்மைக்காக மட்டும் பயன்படுத்துங்கள்.

**15.** மேலும் தேவி ஸ்ரீ மகா சாமுண்டிக்கு மாந்திரீக யாகம் வளர்க்கும் வழிமுறைகளும் மற்றும் யாகம் வளர்த்து பிரயோகம் செய்யக் கூடிய அனுபவ வழிமுறைகளும் கற்றுத்தரப்படும்.

**16.** மேலும் பிரயோக ஏவல் தேவதா மாந்திரீக முறையான மகா சக்தி வாய்ந்த அஷ்டகர்ம பிரயோக ஸ்ரீ மகா முனீஸ்வரர் கைவல்ய மாந்திரிக பிரயோக முறைக்கான மந்திர சித்தி முறையும். **17.** முனிஸ்வரர் கைவல்ய மாந்திரீகத்தை பிரயோகப்படுத்தக் கூடிய குரு வழி ரகசிய அனுபவ முறையை அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் கற்றுத்தரப்படுகிறது. **18.** இம்முனீஸ்வரர் கைவல்ய பிரயோகத்தின் மூலம் சகல நன்மைகளையும் சாதித்துக் கொள்ளலாம். **19** வெற்றிகள் தேடிவரும், தொட்டதெல்லாம் சாதகமாக ஜெயம் அடையும். **20.** எப்பேற்பட்ட எதிரியையும் தும்சம் ஆக்கிவிடலாம். **21.** குலதெய்வத்தின் அருள் முழுமையாக வீட்டிற்கு கிடைக்கும். **22.** சுபகாரியங்கள் அனைத்தும் தடையில்லாமல் நடைபெறும். **23.** இருக்கும் இடத்தில் மரியாதையும் மதிப்பும் பெற்று சுகஜீவியாக வாழலாம். **24.** இம் முனீஸ்வரர் கைவல்ய மாந்திரீகத்தை கொண்டு பல்வேறு பட்ட அஷ்டகர்ம மாந்திரீக பிரயோகங்கள் செய்து பயன்பெறலாம். ஆனால் அவைகள் அனைத்தையும் இதில் கூற இடமில்லை. நேரில் வருபவர்களுக்கு இன்னும் இதில் கூறமுடியாத பல்வேறுபட்ட மாந்திரீக பிரயோக ரகசியங்களும் வெளிப்படையாக கற்றுத்தரப்படும்.

**இப்பயிற்சியில் கலந்து கொள்பவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும் பொருட்கள் :-**

**1.** மகாசக்தி சக்தி வாய்ந்த மிக அரிய மூலிகைகளைக் கொண்டு தயார் செய்து உருயேற்றப்பட்ட தெய்வ வசிய தேவதா வசிய மூலிகைத்திரி ஒன்று இலவசம். இந்த அரிய தெய்வ மூலிகைத்திரியை விளக்கில் போட்டு தீபம் ஏற்ற அந்த இடமே தெய்வ கடாட்சமும், லெட்சுமி கடாட்சமும் நிறைந்து அந்த இடமே சுபிட்சம் அடையும். **2.** மதிய உணவு, இருவேளைத் தேனீர், பயிற்சி கையேடு முதல் நாள் இரவு தங்கும் இடவசதி உட்பட இவையனைத்தும் இலவசம்.

**பயிற்சி அளிப்பவர் மற்றும் தலைமை பொறுப்பாளர் :** 102 நகார, மகார, மந்திர பீஜாட்சரம் மற்றும் வாலை மனோன்மணி உபாசகர் மாந்திரீக ரத்தின சிந்தாமணி மாந்திரீக ஆசான். **சித்தர் அடியார் சுவாமிகள்.**

பயிற்சி நாள் : **20-09-2015 ஞாயிற்றுக்கிழமை நேரம் : காலை 9-15 மணிமுதல் மாலை 5-30 மணிவரை**

இடம்: **நாகலட்சுமி கல்யாண மகால்** (ராம் ஆட்டோ பெட்ரோல் பங்க் அருகிலுள்ள சந்து)

கண்ணா பால்பண்ணை தெரு, பழனி ரோடு, திண்டுக்கல்.

அனைவரும் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தில் குறைந்த சேவைக் கட்டணத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

# பயிற்சி சேவைக் கட்டணம் ரூ. 2400/- மட்டும்.

நிகழ்ச்சி ஏற்பாடு : **I.C.V. பாஸ்கரன்,** (ஜோதிட, மாந்திரீக, தாந்திரீக நுண்ணியல், நுட்பவியல் வல்லுநர்.)

# முன்பதிவிற்கு : 94898 68978, 99445 51378

# தாம்பத்திய உறவுக்குத் தகுதியான கிரகப் பொருத்தம்

# தம்பதியரைப் பிரித்திட்ட கிரகநிலை தந்திடும் வருத்தம்

பெற்றோர்கள் தம்பிள்ளைகளின் திருமணத்திற்காக, ஓடி, ஓடி அலைந்து, படிப்பு, அழகு, வரதட்சணை, உத்தியோகம் தகுதி (status) எல்லாவற்றையும் பார்த்து, ஜாதகப்பொருத்தம் காண ஐந்தாறு ஜோதிடர்களை அணுகி, பொருத்தம் எப்படி உள்ளது என்று தெரிந்துக் கொண்டு, நிச்சயிக்கின்றனர்.

ஒரு சிலர் ஆண் வாரிசு இல்லாத இடமாகப் பார்த்தால் சொத்து கிடைக்கும் என்ற பேராசையால் தேடிக்கொண்டே இருக்கிறார்கள். இன்னும் சிலர் மைத்துணன் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆண் வாரிசு இல்லாத இடத்தில் பெண் எடுக்க விரும்புவதில்லை.

இன்னும் சிலர் எது எப்படி இருந்தாலும் குடும்பத்தில் எல்லாரையும் அனுசரித்துப்போகும் பெண்ணாக இருக்க வேண்டும் என்று நினைக்கின்றனர்.

ஆண் குழந்தை கட்டாயம் வேண்டும். இருக்குமா? என்று பலமுறை ஜோதிடர்களிடம் கேட்டு உறுதிசெய்துக் கொண்டு திருமண ஏற்பாடு செய்ய நினைக்கிறார்கள்.

அழகில்லை என்பதற்காகவும், அதிக சம்பளம் இல்லை என்பதற்காகவும் ஒதுக்குகிறார்கள். உடல் பருமனாக உள்ளது. உடல் மெலிந்துள்ளது. ஒரு வயதுக்குமேல் வயது வித்தியாசம் உள்ளது. 2 அங்குலத்திற்குமேல் உயரம் வித்தியாசம் உள்ளது நெற்றி அகலமாக உள்ளது என்பதற்காகவெல்லாம் ஒதுக்கும் பெண்கள் தான் ஆண்களை விட மிகவும் அதிகமாக இருக்கிறார்கள்.




ஜோதிட ஆய்வாளர்

புலவர் **வி.இளங்கோவன்**

**செல்: 94433 10477**


வயது வித்தியாசமும், உயரமும் தோற்றப் பொலிவும், அதிக சம்பளமும் மகிழ்ச்சியான வாழ்வைத் தந்துவிடும் என்ற கனவு எல்லோருக்கும் பலிப்பதில்லை. அது பகல்கனவாகும் போது தான் புத்தி தடுமாறுகிறது.

ஒருவரையொருவர் புரிந்துக்கொள்ளாமை, ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இல்லாமை, ஏற்றத் தாழ்வைப் பார்க்காமல் அனுசரித்துப் போதல் இல்லாமை, எண்ணங்கள் பரிமாற்றம் சரியாக அமையாமை, இவைதான் திருமண வாழ்வில் பிரச்சனைகளை உண்டாக்கும் என்பதை பற்றிச் சிந்திப்பதே இல்லை.

திருமணத்திற்காக பெண்பார்க்கப் போகும்போது, ஆணும் பெண்ணும் சில மணித்துளிகள், தனிமையில் உரையாடி முடிவெடுக்கும் நிகழ்ச்சி இப்போது எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அது இனக் கவர்ச்சியின் விளைவே தவிர, வாழ்வின் அடித்தளம் அல்ல, என்பதைப் புரிந்துக் கொள்ளாமல், சிந்தையை மயங்கவைக்கும், ஒப்புதலை உணர்த்த வைக்கும் முயற்சி என்றுதான் சொல்ல வேண்டும்.

நேசித்தல் என்பது மனத்தளவில் இருக்க



வேண்டுமே தவிர, பார்வை அளவில் இருப்பது கானல் நீர் தான் என்பதையும் உணர வேண்டும். அடித்தளம் சரியாக இல்லாத கட்டடம் சரிந்து விழுவது போல, கவர்ச்சியாலும், காசாலும் நிச்சயிக்கப்படும் திருமண வாழ்வும் சிதையத்தான் செய்யும். இதனால்தான், எதிர்பார்த்தது இல்லாத ஏக்கத்தால் ஏற்பட்ட விளைவுதான் விவாகரத்து ஆகும். இதுதான் ஆண்டுதோறும் பெருகி வருகிறது. இத்தகைய பிரிவுகள் ஏற்படக் காரணம் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால்,

ஆயுள் குறைபாட்டால் நிரந்தரப்பிரிவும் (இறப்பு) தோஷத்தின் கடுமையால், அல்லது தாம்பத்ய உறவில் ஏற்படும் விரிசலால் விவாகரத்து என்ற பிரிவும் ஏற்படுகின்றன. இக்குறைகள் ஏற்படாதிருப்பது ஜோதிடர்களின் கையில்தான் உள்ளது. ஆனால் இதனை எவருமே பொருட்படுத்துவதே இல்லை எனலாம். இதனை ஏற்காதவர்கள் விதியின் மீது பழி போட்டுவிடுகிறார்கள்.

திருமணப் பொருத்தம் காணவரும் பெற்றோர்களிடம், அவர்கள் கொண்டுவந்த ஆண், பெண் ஜாதகங்களில் ஒருவருக்கு ஆயுள்குறைபாடு இருந்தால், அதைச் சொல்லி பொருத்தமில்லை. என்று கூறாமல் 10க்கு 8 பொருத்தங்கள் உள்ளன. திருமணம் செய்யலாம் என்று சிவப்புக் கொடியைக் காட்டாமல் பச்சைக் கொடியைக் காட்டுவதால் தானே, அத்திருமணம் நடந்து ஒருவரை இழக்கும் நிலை ஏற்படுகிறது? ஆயுள் குறைபாட்டைப் பற்றி அந்தப் பெற்றோர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும் நம்பித்தானே வருகிறார்கள்.

அந்நியோன்யம் மிக முக்கியமானது இந்த அந்நியோன்யம் தான் பத்துப் பொருத்தங்களில் வசியப் பொருத்தம் ஆகும். இது நூற்றுக்குத் தொன்னூறு தம்பதியர்களுக்கு இருக்காது அதைச் சிந்தித்துப்பார்த்து, அதற்கு விடைகாண முயலும் நபர்கள் மிகமிகக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும்.

பத்துப்பொருத்தமே தேவை இல்லை என்பது எனது கருத்தாகும். அதன்படி அந்நியோன்யத்தைத் தரும் வசியப்பொருத்தம் இருவர் ஜாதகத்திலும் இலக்கினம் 7,12 ஆகிய மூன்று பாவங்களில் தான் உள்ளது. இவற்றோடு இருவருக்கும் களத்திரகாரகன் என்று சொல்லப்படும் சுக்கிரன், செவ்வாய் நிலைகளையும் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

இலக்கினம் எனில் இலக்கினாதிபதியையே குறிக்கும். ஆகவே, இருவரின் இலக்கினாதிபதிகளும் ஒருவராக அல்லது நட்பாக இருக்க வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். இது இருவரின் கருத்தொற்றுமைக்கு வழி வகுக்கும்.

இரண்டாவதாக, இருவரின் 7ஆம் பாவங்களின் பொருத்தமும் முக்கியமானதாகும். இது பெரும்பாலோர்க்குப் போடத்தெரியாமையால்தான் பிரச்சனை உருவாகிறது. எனில் அது மிகையல்ல. 7ஆம் பாவத்தை ஒப்பிடும்போது அதில் நாம் காண வேண்டியவை.

1. 7ஆம் பாவாதிபதி எங்குள்ளார்? எக்கிரகத்தோடு சேர்ந்துள்ளார்? அவர் நின்ற நட்சத்திர அதிபதி எங்குள்ளார் என்பது
2. 7இல் உள்ள கிரகம், அவர் எந்தப் பாவாதிபதி? அவர்நின்ற நட்சத்திர அதிபதி நிலை.
3. 7ஐப் பார்க்கும் கிரகம், அவர்நிறை நட்சத்திர அதிபதியின் தன்மை
4. 7ஆம் பாவாதிபதி அம்சத்தில் இருக்கும்நிலை.

இவற்றைப் பார்த்து இருவர் ஜாதகங்களையும் இணைப்பது தான் தோஷப் பொருத்தம் என்று சொல்லப்படுகிறது.

இவற்றைப் பார்க்காமல் 5இல் இராகு அல்லது சனி இருக்கும் நிலையையும் 9இல் இராகுவும் 10இல் சனி இருக்கும் நிலையையும் பார்வையால் தோஷம் என்று உணராமல், 7இல் உள்ள பாவகிரகங்களின் நிலையையும் உணராமல், செவ்வாய் தோஷத்தை மட்டும் கருத்தில் கொண்டு பச்சைக் கொடி காட்டினால், இந்தத் தவறான முடிவைப் பார்த்துக் கொண்டிருக்கும் (7ஐயும் பார்த்துக் கொண்டிருக்கும்) சனி, இராகு, போன்ற கிரகள் வாழ்வைச் சிதைக்காதா என்ன?

சிந்தித்துப் பாருங்கள் நண்பர்களே நாம் அமர்ந்து ஜோதிடம் சொல்லும் அந்த நாற்காலி விக்கிரமாதித்தன் நாற்காலி என்பதை மறந்துவிடக்கூடாது. தெரியாதவற்றைத் தெரிந்துக் கொள்வதும், புரியாதவற்றைப் புரிந்துக் கொள்ள முயற்சிப்பதும், புத்திசாலித் தனமாகும். அதனை விட்டுவிட்டு, திருமணப் பொருத்தத்தில் எனக்குத் தெரியாதது. என்ன இருக்கிறது என்று முடிவுக்கு வருவதுதான் தவறு. கற்றது கடுகளவு கல்லாதது உலகளவு என்று நினைத்தால் போதும், எதையும் கற்கலாம்.

சீர்திருத்தம் செய்யப்படாத பண்டைக்கால தமிழ் எழுத்துக்கள் போன்றதுதான் திருமணப்பொருத்தம் என்பது 10பொருத்தமே என்ற கருத்தும் சீர்திருத்தம் செய்யப்பட்ட தற்போதைய தமிழ் எழுத்துக்கள் போன்றதுதான் கோள்களின் அடிப்படையில் உண்டான திருமணப் பொருத்தமாகும்.எனவே 10 பொருத்தங்கள் தான் திருமணப் பொருத்தம் என்ற நிலையில் மாற்றம் வந்து விட்டது. 10 பொருத்தங்களால் வந்த பாதிப்புகளை உணர்ந்தவர்கள், அதை ஒப்புக்கு வைத்துக்கொண்டு கோள்களின் பொருத்தங்களைக் காணத் தொடங்கிவிட்டனர்.

மூன்றாவதாக 12ஆம் பாவத்தையும், செவ்வாய், சுக்கிரன் நிலையையும் காணலாம். திருமணப்

பொருத்தத்தின் அடிப்படை நன்மக்கட்பேறு எனினும் அதற்கு அடித்தளமாக உள்ளது தாம்பத்திய உறவுதான் இதை இல்லை என எவரும் மறுக்க முடியாது. எத்தகைய பிரச்சனைகள் தம்பதிகளுக்குள் வந்தாலும் இந்த உறவின் பொருத்தம் மிகச்சரியாக இருந்தால், அத்தம்பதியரைப் பிரிக்கவே முடியாது எனலாம். சில குடும்பங்களில் பகலெல்லாம் சண்டை, சச்சரவாக இருக்கும். இரவில் எந்தச் சத்தமும் கேட்காது. அங்கே தாம்பத்ய உறவு என்ற சமாதானப் புறா பறந்து கொண்டிருக்கும். இந்த அமைப்புதான் புயல்காற்றைப் புறந்தள்ளி நீர்த்துவிடச் செய்யும் தென்றல் காற்றாகும்.

இதைச் சரியாகப் புரிந்துக் கொண்டு திருமணப் பொருத்தம் அமைத்துக்கொடுத்தால், பிரிவுக்கு இடமேது? இதனை எடுத்துக் காட்டு ஜாதகங்களின் மூலம் காணலாம்.

**பெண்**

| | | | |
|---|---|---|---|
| ராகு | | சந் | |
| குரு | இராசி | | |
| | | | ல / சூரி புத |
| செவ் | சனி | | சுக் கேது |

| | | | |
|---|---|---|---|
| ராகு | | குரு சந் | புத |
| | அம்சம் | | ல / சூரி |
| | | | சனி |
| | செவ் | | சுக் கேது |

பி.தே: 28.8.1986 காலை 6.24 மணி உரோகிணி நட்சத்திரம் சந்திரதசை இருப்பு 4—8—3

**ஆண்**

| | | | |
|---|---|---|---|
| | சூரி சுக் செவ் | புத | ல / சந் |
| | இராசி | | ராகு |
| கேது | | | |
| | | | குரு சனி |

| | | | |
|---|---|---|---|
| குரு புத சனி | கேது | | ல / |
| | அம்சம் | | |
| | | | செவ் |
| சுக் | | சூரி சந் ராகு | |

பி.தே.7.5.1981 மதியம் 12.25 மணி மிருகசீரிடம் நட்சத்திரம் செவ்வாய் இருப்பு 2—0—2

10 பொருத்தங்களாவன

1. தினம் — உத்தமம்
2. கணம் — உத்தமம்
3. மகேந்திரம் — இல்லை
4. ஸ்திரிதீர்க்கம் — இல்லை
5. யோனி — உத்தமம்
6. இராசி — உத்தமம்
7. இராசியாதிபதி — உத்தமம்
8. வசியம் — இல்லை
9. இரச்சு — உத்தமம்
10. வேதை — உத்தமம்

10க்கு 7 பொருத்தங்கள் உள்ளன. முக்கியப் பொருத்தங்கள் 5க்கும் 5ம் உள்ளன. அதைவிட சிறப்பு ஏகயோனி பொருத்தமாகும். மிகப்பெரும்பாலோர்க்கு இப்படி அமையவே அமையாது.

இவ்வளவு சிறப்பான பொருத்தம் இருந்தும், திருமணமாகி ஓராண்டிற்குள்ளேயே பிரிந்துவிட்டனர் என்றால் நம்ப முடிய வில்லையல்லவா சிந்தித்துப்பார்த்து சரியாக பொருத்தம் போட்டிருந்தால் பிரிவு எப்படி வரும். ஆய்ந்து சிந்திக்காமல் பொருத்தம் போட்டதன் விளைவு, பிரிவு இதற்கு விதியின் மேல் பழிபோடுவது என்ன நியாயம்?

### பிரிவுக்கான காரணங்கள்

1. ஆணைவிட பெண்ணுக்குத்தோஷம் அதிகம் அதற்கான விளக்கம்

| பெண் | ஆண் |
|---|---|
| 1. 2இல் கேது | 1. 2இல் இராகு |
| 2. 4இல் சனி | 2. 4இல் சனி |
| 3. 8இல் இராகு | 3. 7 ஆம்மாதி குரு 4இல் |
| 4. 8ஆம் மாதிகுரு 7இல் | 4. 8இல் கேது |
| 5. 8க்குக் கேது பார்வை | 5. 2க்குச் செவ்வாய் பார்வை |
| 6. 8க்குச் செவ்வாய் பார்வை | |

ஆணைவிட பெண்ணுக்குத் தோஷம் அதிகம் இருக்கக்கூடாது

2. சயன சுகப் பொருத்தம் (தாம்பத்திய உறவு) இல்லை. அதற்கான விளக்கம்

| பெண் | ஆண் |
|---|---|
| 1. 12ஆம் அதிபதி உச்சம் | 1. 12ஆம் அதிபதி அஸ்தங்கம் |
| 2. சுக்கிரன் நீசப்பங்கம் -பலம் | 2. சுக்கிரன் அஸ்தங்கம் |
| 3. 5இல் செவ்வாய் - பலம் | 3. செவ்வாய் அஸ்தங்கம் |

இதன் மூலம் பெண்ணுக்குக் காம உணர்வு மிகவும் அதிகம் என்பதையும் ஆணுக்குக் காம உணர்வு மிகவும் குறைவு என்பதையும் அறியலாம். இதைவிடப் பிரிவுக்கு வேறு என்ன காரணம் வேண்டும்?

பொருத்தம் போடும் ஜோதிடர்கள், தோஷாப் பொருத்தம் சரியாக உள்ளதா? தாம்பத்ய உறவுக்கான கிரக அமைப்புகள் சரியாக உள்ளனவா? என்பதைக் கவனித்துப் பொருத்தம் இல்லை என்று கூறி தடுத்திருந்தால் இந்தப் பிரிவு ஏன் வரும்? 10 பொருத்தங்களுக்கு முன்னுரிமை தந்ததால் வந்தவினை தான் இது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை

பித்ருக்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று கோதானம் செய்வதால், தங்கள் வம்சத்தின் தெய்வீகத் தன்மையை உயர்த்துகிறீர்கள்

# மஹாளய அமாவாசை - 12.10.2015

## ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில்

## கோதானம் செய்து பித்ருக்களின் ஆசியினைப் பெற்று அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற்று தாங்களும் தங்கள் குடும்பத்தாரும் வேண்டுபவை எல்லாம் பெற்று வளமுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கிறோம்.

முன்னோர்களின் ஆசி வேண்டியும், அனைத்து தோஷங்களில் இருந்து விடுபடவும் மஹாளய அமாவாசை தினத்தன்று, சென்னை திருவேற்காட்டில் உள்ள பசுமடத்தில் கோதானம் நடைபெற உள்ளது. பசு தானம் யார் நினைவாக செய்யப்படுகிறதோ, அவர்கள் பசுவின் ஒவ்வொரு ரோமத்திற்கும் ஒரு ஆண்டு வீதம், பல ஆயிரம் ஆண்டுகள் கோ-லோகத்தில் கிருஷ்ண பகவானுடன் சேர்ந்திருக்கும் பேரு பெறுகிறார்கள். யாகங்கள் செய்து, யோகங்கள் சேர்ப்பதில் வல்லவரும், ஹோமங்கள் செய்து ஷேமங்கள் குவிப்பதில் தேர்ச்சி பெற்றவரும், பித்ரு தோஷ நிவர்த்திக்கு விருட்ச பரிகாரம் சொல்பவருமான ஜோதிட சிம்மம் ஸ்ரீயோக ஆஞ்சநேய சக்தி பீடாதிபதி விருட்ச சாஸ்திர வித்வான் பூஜ்ய **ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா** தமது வேத வித்வான்களின் குழுவுடன் கோதான பூஜை, செய்ய உள்ளார். அனைவரும் கலந்து கொண்டு அனைத்து தோஷங்களில் இருந்தும் நிவர்த்தி பெற அன்புடன் அழைக்கிறோம்.



கடந்த வருடம் ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யா தலைமையில் பசுமடத்தில் நடைபெற்ற கோதானம்

நமக்கு நல்வாழ்வு அளித்து சென்ற முன்னோர்கள் நினைவாக மஹாளய அமாவாசை அன்று... நாட்டுப் பசுவும் கன்றும், காறாம் பசுவும் கன்றும், எருமையும் கன்றும் (மகிஷ தானம்) தங்கள் சார்பாக கோதானம் செய்யப்படும். யார் பெயரில் கோதானம் செய்ய விரும்புகிறீர்களோ அவரின் பெயர், திதி, கோத்திரம் போன்ற விவரங்களை தெரிவிக்கவும். கோதானம் செய்பவர்களுக்கு வெள்ளியிலான சிவன் பார்வதி விளக்கும், பித்தளையிலான கோமாதா விக்ரஹமும், வெள்ளியிலான காசி ஸ்ரீ அன்னபூரணி விக்ரஹமும் அனுப்பி வைக்கப்படும்.

நாட்டுப் பசுவும் கன்றும் தானம் செய்தால்... ஜாதக ரீதியான தோஷம், தலைமுறை தோஷம், செய்வினை தோஷம், மாத்ரு, பித்ரு தோஷம், குல தோஷம், திருஷ்டி தோஷம், பூர்வ ஜென்ம தோஷம், களத்திர தோஷம், பிரம்மஹத்தி தோஷம், பெரும் நஷ்டங்கள் மற்றும் சங்கடங்கள் விலகி, தீர்க்க சுமங்கலி பாக்கியம், கணவன்-மனைவி ஒற்றுமை, புத்ர பாக்கியம், தடைப்பட்ட திருமணம் கைகூடல், மறுமணம், குடும்பத்தில் குபேர சம்பத்து உண்டாகி மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும். **கோதானம் செய்ய ரூ.12,000/-**

காறாம் பசுவும் கன்றும் தானம் செய்தால்... 7½ ஆண்டு சனி, அஷ்டம சனி, அர்த்தாஷ்டம சனி விலகும். நவக்கிரஹ தோஷம், ருண ரோக தோஷம், நாக தோஷம், ராகு-கேது, சந்திர தோஷம், அபிசார தோஷம், வாஸ்து தோஷம், எதிரிகள் தொல்லை, பணம் மற்றும் தேவையற்ற பிரச்னைகள் விலகி, கிரஹங்களின் பாதிப்பு விலகி, வீடு, நிலம், பொன், பொருள், புகழ், கல்வி, நிகரற்ற செல்வம் பெற்று சந்தான அபிவிருத்தியுடன் மகாலட்சுமி அருள் உண்டாகும். **காறாம் பசு தானம் செய்ய ரூ.12,500/-**

மகிஷ தானம் (எருமையும் கன்றும்) செய்தால்... நோய் பாதிப்பால் பயம், வாகன விபத்து, தீய சக்தியால் மன உளைச்சல், வியாபார நஷ்டம், உத்யோகத் தடை நீங்கும். கால ஸர்ப்ப தோஷம், பாப தோஷம் விலகி, வாழ்க்கை வளம், பதவி உயர்வு, சகல கார்ய சித்தி, குலவிருத்தி, கோத்ர விருத்தி, வம்ச விருத்தி, குடும்ப விருத்தி, ஆயுள் விருத்தி, உடல் ஆரோக்கியம், குடும்ப ஒற்றுமை, மனசாந்தி, ஆத்ம ஞானம் உண்டாகும். **மகிஷ தானம் செய்ய ரூ.13,500/-**

- மஹாளய அமாவாசை அன்று முன்னோர்கள் நினைவாக, கோதானம் செய்பவர் கயிலாயத்தில் சிவகணங்களுடன் சிவதரிசனம் செய்யும் பலனை அடைவார்
- ஜென்ம லாபங்கள் பெறவும் குடும்பம் வாழையடி வாழையாக செல்வச் செழிப்புடன் திகழவும் தீர்க்காயுள் பெறவும் கோ தானம் செய்வீர்
- கோதானத்திற்கு மிஞ்சிய புண்ணியம் இல்லை. பரிகாரத்துக்கு அதுவே பெரிய மருந்து
- கோதானம் செய்வது ஓராயிரம் அஸ்வமேத யாகம் செய்த பலனை கொடுக்கும்



**குடும்ப சந்தோஷத்தின் திறவுகோலான வலம்புரி சங்கு அதிர்ஷ்டத்தை உண்டாக்கி வாழ்வை வளமாக்கும். மன இருளையும் வாழ்க்கை இருளையும் அகற்றி தங்கள் வாழ்வை பிரகாசமாக்கித் தருவதும் வலம்புரி சங்கே!**

வாழ்வில் நல்ல துணையை பெறவும், பிரிந்தவர்கள் ஒன்றுசேர, மாணவர்களின் ஞாபக சக்தி, கல்வியறிவு பெருகவும், குழந்தைகளுக்கு அடிக்கடி வரும்நோய்களை தடுக்கவும், வாஸ்து குறைகள் நீங்கவும், ரியல் எஸ்டேட்மற்றும் பங்குவியாபாரத்தில் யோகம் பெறவும், வாடிக்கையாளர்களை ஈர்க்கும் சக்தி கிடைக்கவும், நினைத்த காரியம் வெற்றி பெறவும், குடிப்பழக்கம், தீயபழக்கம், தீயசக்தியை நெருங்கவிடாமல் தடுக்கவும், செல்வ வளம் பெருகவும், அமைதியான வாழ்வு, ஆரோக்கியமான ஆயுள் பெறவும், ராஜயோக பலன் பெறவும் வலம்புரி சங்கை வழிபடுவீர்

**முன்னோர்கள் நினைவாக ஒரு பசுவை ஒரு வருடத்திற்கு தத்தெடுத்து வளர்க்க ரூ. 6,600 அனுப்புவோருக்கு ஸ்ரீ ஸ்வாமி கண்ணன் பட்டாச்சார்யாவால் மஹாளய அமாவாசை அன்று பசுவிற்கு அபிஷேகம் செய்யப்பட்ட மனத வளமாக்கும் வலம்புரி சங்கு ஒன்று அனுப்பி வைக்கப்படும்**

கோதானத்திற்கும் வலம்புரி சங்கிற்கும் நன்கொடை அனுப்பும் அன்பர்கள் தங்களின் பெயர், முகவரி, தொலைபேசி எண்ணை தெளிவாக குறிப்பிட வேண்டுகிறோம். ரசீதும், மேற்கண்ட பிரசாதங்களும், சுத்தமான நாட்டு பசுஞ்சாணத்தில் சைவ முறைப்படி பசுமடத்தில் விராஜ ஹோமம் செய்து தயாரிக்கப்பட்ட விபூதியும் மஹாளயபக்ஷம் முடிந்த பிறகு தங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்

**தாங்கள் விரும்பும் விசேஷ நாட்கள் மற்றும் முன்னோர் நினைவு நாட்களில் தங்கள் சார்பாக மேற்கண்ட கோதானங்கள் செய்யப்படும்**



தங்கள் நன்கொடையை **CHEQUE /D.D/M.O** ஆக **SHRI GHOSALA SEVA TRUST, CHENNAI** என்ற பெயரில் கீழ்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம். நன்கொடைகளுக்கு **80G** பிரிவின்படி வரி விலக்கு உண்டு

# பசுமடம்

**(RECOGNISED BY ANIMAL WELFARE BOARD OF INDIA)**

● வயதான பசுக்களை பராமரிக்கும் இல்லம் ● ஆதரவற்ற பசுக்களை பாதுகாக்கும் இல்லம் ● ஊனமுற்ற, நோயுற்ற பசுக்களை பேணும் இல்லம்

பெருமாளகரம், திருவேற்காடு (PO), சென்னை-77. ✆ **044-3299 9888, 8754 555 555**



**கோதானம் செய்வதால் ஒருவர் தனது முன் ஏழு, பின் ஏழு தலைமுறையினர் மோட்சத்திற்கு போக வழி செய்கிறார்**

# அரசாளும், செல்வம், செல்வாக்கு தரும் யோகங்கள்



கோட்டையூர்
**என். சிவசுப்பிரமணியம்**
செல்: 94431 37989 / 95005 96309

பஞ்சமகா புருஷ யோகங்களில் ஒன்று (அம்ச யோகம், மாளவிய யோகம், பத்ரயோகம், ருசக யோகம், சசயோகம்) இவற்றில் ஏதேனும் ஒன்று இடம் பெற வேண்டும்.

தர்ம கர்மாதிபதி (9 + 10) இணைவு. அத்துடன் ( 4+5), (7+9), (4+9) (5+4) இவர்கள் இணைவு கேந்திர திரிகோண யோகம், பவர், பதவி, பணியாட்கள் தரும்.

ஆதாய வீடு என்பது அதிர்ஷ்ட வீடு 11ஆம் இடம் இது ஜாதகத்திற்கு மிக முக்கிய இடம். சுபர், பாபர் யாராவது ஒருவர் இருக்க வேண்டும். அதில் யோகாதிபதி இருந்தால் மிக சிறப்பு.

11ஆம் வீட்டு அதிபதி ஆட்சி, உச்சம், ஆனால் பாரிஜாத யோகம் இந்த யோகம் உள்ளவர் இவ்வுலகில் ஏதேனும் ஒரு துறையில் ஆட்சி செய்து செல்வாக்கு, செல்வம் பெறுவர்.

உபஜெய வீடான 3,6,10,11இல் சுபரோ, பாபரோ தொடர்பு 4 வீடுகள் அல்லது 3 வீடுகள் இருக்க வேண்டும். இந்த அமைப்பு வசுமதி யோகமாகும். அடிப்படையில் கஷ்டம் இருந்தாலும் எப்படியும் வாழ்வில் முன்னுக்கு வரும் செல்வம் செல்வாக்கு சேரும்.

6,8,12ஆம் இடம் இதன் அதிபதி ஒன்றுக்கு ஒன்று 6,8,12ஆம் இடம் பெற்று விபரீத யோகம் இந்த யோகம் திடீர் என்று ஏதேனும் ஒரு துறையில் வந்து பணம், பதவி, பாராட்டு பெறுவார்கள்.



**அற்புத மகா பாக்கியங்களை தரும் மகாராஜா யோகங்கள்**

1,5ஆம் அதிபதிகள் பரிவர்த்தனை பெறுவது பெண் இனத்திற்கே பெருமையானவள். புகழ் பெறும் யோகம் உடையவர்கள்.

இலக்கினத்திற்கு 2,4,5இல் சுபக் கிரகம் இருந்து பலம் பெறுவதும் அரசாளும் யோகம் தரும். இலக்கினத்திற்கு 1,2,4இல் சுபர்களும் 3இல் பாவியும் இருப்பது அரசாளும் யோகம் தரும்.

சந்திரன், குரு, சுக்கிரன், புதன் 2ஆம் பாவத்தில் இருந்து அவர்களின் ஒருவர் உச்சம் பெறுவது செல்வம், புகழ் பெறும் யோகமாகம்.

3, 6,8இல் நீச்சம் பெற்ற கிரகம் இருந்து இலக்கினாதிபதி உச்சம் பெறுவதும் இராஜயோகமாகும்.

10ஆம் அதிபதி ஆட்சி, உச்சம் பெற்று இலக்கினத்தைப் பார்ப்பது இராஜயோகம் தரும் 4ஆம் அதிபதி 10இல் 10ஆம் அதிபதி 4இல் இருந்து 5,9ஆம் அதிபதிகளின் சம்பந்தம் பெறுவது

பரிவர்த்தனை யோகங்களில் மகா பரிவர்த்தனை யோகங்களுக்குள் ஏதேனும் ஒரு யோகம் அமைவது.

பஞ்சமகா புருஷ யோகங்கள் என்று சொல்லக்கூடிய (குரு, சுக்கிரன், புதன், சனி, செவ்வாய்) இந்த கிரகங்களின் ஆட்சி உச்சத்தால்

| | | | |
|---|---|---|---|
| சுக் | ராகு | | ல |
| சூரி புத | மகம் தமிழக முதல்வர் அம்மா ஜெயலலிதா 24.2.48 | | சனி |
| | | | செவ் சந் |
| குரு | | கேது | |

மகத்தில் பிறந்து ஜெகத்தை ஆள்வது யோக கிரகமாகிய சுக்கிரன் உச்சம் பூர்வ புண்ணிய அதிர்ஷ்ட கிரகம் கேந்திரத்தில் மாளவிய யோகம் ஜீவனாதிபதி (இராஜ்ஜிய தானாதிபதி) ஆட்சி பெற்று இலக்கினத்தை பார்ப்பது பாக்கியத்தில் சுபர் 11இல் இராகு இத்திசையில் யோகங்கள் கலை, அரசியல் இத்துறையில் மக்கள் மத்தியில் அரசாண்டு செல்வமும், செல்வாக்கு பெற்று இருக்கக் கூடியவர்.



அருட்பெருஞ்ஜோதி சிவாய நம | உ | குரு பிரம்மா குரு விஷ்ணு போற்றி ஓம் கம் கணபதியே நமஹ



**ஆண், பெண்ணின் திருமணப் பொருத்தமும் யோகமும்**
**சகல தோஷ நிவர்த்திகளுக்கு எளிய பரிகாரம், ஆலயம்**

அதிர்ஷ்ட வரன் மூலம் அற்புத வாழ்க்கையை அமைத்துக்க ஒருநாள் வகுப்பு
**நாள்: 13.9.2015 ஞாயிறு நேரம்: 9.30 am- 6.00pm கட்டணம் ரூ.501/-**
இடம்: ஸ்ரீவாசவி மகளிர் மேல்நிலைப்பள்ளி, வி.எம்.சந்து மெயின்ரோடு, திண்டுக்கல்.
ஒருநாள் வகுப்பில் இடம் பெறும் சிறப்பு அம்சங்கள் (Marriage Highlights)

★ ஆண், பெண் இருவருக்கும் திருமணம் எப்படி, எப்போது, எத்திசையில் அமையும்
★ செவ்வாய், சர்ப்ப, களத்திர, நட்சத்திர, தசாபுக்தி, தோஷங்கள் தக்க பரிகாரங்கள்
★ உடல் பொருத்தம், உயிர் பொருத்தம், மேட்சிங் சிஸ்டம்
★ மகிழ்ச்சி தரும் திருமணம் நாள், நேரம், குருபலம், எதிர்காலம், புத்திர அம்சங்கள்
★ எவரும் தராத எளிய வழியில் பரிகாரங்கள், விரதம், வழிபாடு, ஆலயங்கள்
★ ரூ.48/- மதிப்புள்ள திருமண விசயங்கள், பொருத்தங்கள், பரிகாரம், படம், பாராயணங்கள்

முன்னிலை: புரோஹிதர், ஜோதிடம், யாகவிற்பன்னர் திரு.எஸ்.ஹரிஹரன் ஸர்மா செல்: 99523-54602
அரி சிவா அஸ்ட்ராலஜி சென்டர், 94/107, மெயின் ரோடு, தில்லை ஜூவல்லரி மாடியில், திண்டுக்கல்.



நடத்துபவர்: ஜோதிடப் பேராசிரியர், நூல் ஆசிரியர், ஜோதிட நேத்ரா, ஜூனியர் நேத்ரா சிறப்பாசிரியர்
**திரு.கோட்டையூர்.என்.சிவசுப்பிரமணியம்**
**தொடர்புக்கு: 94431-37989, 95005-96309**

குறிப்பு:- வரன் பார்த்து கொண்டு இருப்பவர்கள், ஜோதிடர்கள், திருமணப் பொருத்தம் மேட்சிங் நிறுவனங்கள் கலந்து கொள்ளலாம்.


| | | | |
|---|---|---|---|
| செவ் | | | |
| | ராசி 25.2.24 கேட்டை | | ராகு |
| கேது | | | |
| சூரி புத குரு | சந் சுக் | சனி | ல |

கேட்டையில் பிறந்து கோட்டை கட்டி ஆள்வது இவரது இலக்கினத்திற்கு யோகக் கிரகம் உச்சம். 4,5ஆம் தொடர்பு கிரகம் குறிப்பாக 4இல் சுபர்கள் ஆதாயத்தில் இராகு இவை யாவும் மூத்த கட்சியின் (பாரதிய ஜனதா) தலைவர் முன்னாள் பிரதமர் தற்சமயம் இவருக்கு பாரத ரத்னா விருது தரப்பட்டுள்ளது. மாமனிதர் கட்சிகளிடமிருந்து, மக்களிடம் இருந்து செல்வாக்கு உடையவர்.

| | | | |
|---|---|---|---|
| | | சுக் கேது | சூரி புத சனி |
| குரு | ராசி 22.6.74 பூரம் 1ம் பாதம் | | ல சந் செவ் |
| | | | |
| | ராகு | | |

இளைய தளபதி விஜய்

மகுடம் சூடும் நட்சத்திரம் பூசம் இதுல பிறந்து கர்கடக யோகம் கடக இலக்கினம் சந்தின் ஆட்சி இவரையும் இலக்கினத்தையும் சுற்றி கிரகங்களின் ஆதாயத்தில் கிரக பாரிஜாதக யோகம் இளம் வயதிலேயே இளையவர்களை கவரப்பட்டவர். இளைய தளபதி 60 படங்கள் வரை இதுவரை நடித்து பெரியவர் முதல் சிறியவர் வரை மக்கள் மத்தியில் செல்வமும், செல்வாக்கும் பெற்றுள்ளார்.



அமையும் யோகங்களில் ஏதேனும் ஒன்று இடம் பெறுவது.

ஒளி கிரகங்கள் என்று சொல்லக்கூடிய சூரிய, சந்திரர்களால் அதாவது சூரியனுக்கு முன்னோ, பின்னோ அல்லது இரு இடங்களில் இராகு கேதுவை தவிர இதர கிரகங்கள் இருப்பது, சந்திரனுக்கு முன்னோ பின்னோ அல்லது இரு இடங்களில் இராகு கேதுவை தவிர இதர கிரகக்ங்ள் இருப்பது அல்லது சூரியனுக்கு நேர் 7,6,8ஆம் பாவங்களில் தொடர்ந்து, கிரகங்கள் இருப்பது இராகு, கேது நீங்கலாக இதேபோல் சந்திரனுக்கு 6,7,8இல் கிரகங்கள் தொடர்ந்து இருப்பது இராகு, கேது நீங்கலாக அல்லது உங்க



| | | | |
|---|---|---|---|
| | | குரு ராகு | |
| சனி | ராசி 12.1.66 உத்திரம் | | |
| செவ் சுக் | | | |
| ல / சூரி புத | கேது | | சந் |

இவர் ஒரு பிரபல பத்திரிக்கை நடத்தி வந்த அதிபர். உத்திரம் நட்சத்திரத்தில் உதித்தவர். தர்ம கர்மாதிபதி யோகமும் 1,2,3 இடங்கள் தொடர்ந்து கிரகங்கள் அத்துடன் 3,6,12 இடங்கள் பாபர்கள் இது ஒரு வகையில் மகாயோகம் பிறப்பிலே செல்வந்தர் பின் பத்திரிக்கை துறைக்கு அதிபர் பல ஆயிரக்கணக்கான குடும்பத்தை வாழ வைத்தவர் மக்கள் மத்தியில் செல்வாக்கு செல்வமும் பெற்றவர்.

ஜென்ம இலக்கினத்திற்கு 6,7,8ஆம் பாவங்களில் தொடர்ந்து கிரகங்கள் இருப்பது இப்படி விதி, மதி, கதி மூன்று ரீதியிலும் முன்னோ, பின்னோ அல்லது இவர்களுக்கு 6,7,8ஆம் இடங்களில் தொடர்ந்து கிரக நிலைகளிலோ ஏதேனும் இந்த யோக அமைப்புகளில் ஒன்றோ இரண்டோ இடம் பெற வேண்டும். விதி, மதி, கதியை ஒட்டி யோகங்கள் செயல்படும்.

இந்த தலைப்பில் முன்னால் தரப்பட்டுள்ள பஞ்ச அங்கங்களில் ஏதேனும் ஒரு சில அம்சங்கள் உங்கள் பிறப்பு காலத்தில் இடம் பெற வேண்டும் அல்லது உங்கள் பிறப்பு நேரமாவது முன் சொல்லப்பட்டுள்ள அம்சங்களுக்குள் அமைந்திருக்க வேண்டும். ஜாதகத்திற்கு முக்கிய யோக கிரகங்கள் (1,5,9க்குடையவர்கள்) மூவரில் யாரேனும் ஒருவரோ இருவரோ பலம் பெற வேண்டும். அல்லது இயற்கை இராஜ யோக கிரகங்களான குரு, சூரியன், செவ்வாய், சனி, இந்த நான்கு மாஸ்டர் கிரகங்களில் இருவரோ அல்லது மூவரோ பலமாக ஒரு ஜாதகத்தில் இருப்பது பலம் வாய்ந்த யோக ஜாதகமாகும்.

மேலே சொன்ன விதிமுறைகளுக்குள் ஆண், பெண் யாராக இருந்தாலும், அவர்களுக்கு எந்த வகையிலாவது யோக அமைப்புகளுக்குள் நீங்கள் இருக்கிறீர்கள் என்பதை உங்கள் பிறப்பு ஜாதகம் கொண்டு இந்த கணிப்பையும் அறிந்து நீங்கள் அதிர்ஷ்டசாலியா? என்று தேர்வு செய்யவும்.

| | | | |
|---|---|---|---|
| சனி | | ல / கேது | சூரி செவ் |
| குரு | ராசி 3.7.38 பூரம் | | புத சுக் |
| | | | சந் |
| | ராகு | | |

வசுமதி யோகம் தன்னையும், தன்னை சேர்ந்தவர்களையும் பிரபல்யமாக்கும் இயக்குனர். தயாரிப்பாளர் திரு.சந்திரசேகர். இவரது ஜாதகம் வசுமதி யோகம் 3,6,10,11இல் கிரகம் இருக்கும் அடிப்படையில் கஷ்டப்பட்டு பின்னாடி தான் ஈடுபட்ட துறை எதுவோ அதில் அரசாண்டு செல்வம், செல்வாக்கும் திகழ்வார். அந்த வகையில் இவரது ஜாதகம் நமக்கு இளைய தளபதியை பெற்று தந்தவர் (புரட்சி இயக்குனர்) மக்கள் மத்தியில் புகழ், பல கலைஞர்கள் இவர் முலம் பிரல்பயம் ஆகி இருக்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| ராகு | | | |
| குரு | சூப்பர் ஸ்டார் ரஜினி 12.12.50 திருவோணம் | | |
| சந் செவ் | | | ல |
| புத சுக் | சூரி | | சனி கேது |

அபிஜிர் நட்சத்திரம் திருவோணத்தில் தோன்றியவர். சிம்ம இலக்கினத்தின் முக்கிய யோகக் கிரகமான செவ்வாய் உச்சம், ருசக யோகம் பஞ்சமகா புருஷ யோகங்களில் ஒன்று 4,5,7ஆம் இடங்களில் சுபர், யோகங்கள் இவரும் 30 வயதுக்கு மேல் குரு திசை வந்த ஜாதகர் சினிமா உலகில் சூப்பர் ஸ்டாராக திகழ்ந்தார். செல்வமும், செல்வாக்கும், மக்களிடம் இவருக்கு ஓர் அபிமானமும் உண்டு. குறுகிய காலத்தில் திரைப்பட துறையில் ஒரு சிறந்த இடத்தை தக்க வைத்தார்.



திருவருள் சக்தி
குருவருள் ஜோதிடம்
அப்ஸரா நாவல்
திருவருள் சக்தி
சுத்த திருக்கணித பஞ்சாங்கம்
உலகம் முழுவதும் உலா வருகின்றன
நீங்களும் இதில் வலம் வாருங்கள்..!
INTERNET
eBOOK
100 % Absolutely FREE!
Get Instant Access Now!
APSARA PUBLICATIONS
Lesson of time - KARMA
So be good and do good"
www.apsaraepublications.com

# ஜாதக கணிதம்

4




**S.R.அருள்வேல் (Ph.D) ஜோதிடம்**

**செல்: 98428 41497**


ஜோதிட அன்பர்களுக்கு, வணக்கம், கடந்த ஆகஸ்ட் மாத இதழில் மேஷ இலக்கின ஜாதகருக்கு ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய கிரகங்கள் மற்றும் பார்க்க வேண்டிய கிரகங்களை அறிந்துக் கொண்டோம். கட்டுரை பயனுடையதாக இருந்ததாக, பலர் பாராட்டியதுடன் எனது நீ இராஜ ஜேதிடம் நூலையும் அனுப்பும் படி கேட்டுக் கொண்டனர். இந்த இதழில் ரிஷப இலக்கின ஜாதகருக்கு ஒவ்வொரு வீட்டிலும் அமர வேண்டிய கிரகங்கள் பற்றி காண்போம்.

1ஆம் வீடு சூரியன், புதன், சுக்கிரன், சனி, இராகு, கேது, முதலிய கிரகங்கள் அமரலாம். பார்க்கலாம். நல்லது நடக்கும்.

2ஆம் வீடு: சனி அமரலாம். பார்க்கலாம் ஜாதகத்தில் சூரியன், புதன் சேர்ந்திருந்தால் மட்டும் இராகு, கேது அமரலாம்.

3ஆம் வீடு: சூரியன், வளர்பிறை, சந்திரன், செவ்வாய், குரு, இராகு, கேது அமரலாம். பார்க்கலாம்.

4ஆம் வீடு: தேய்பிறை சந்திரன், செவ்வாய், இராகு, கேது அமரலாம் பார்க்கலாம்.

5ஆம் வீடு: புதன், சுக்கிரன், அமரலாம். பார்க்கலாம். சூரியனுடன் சேராமல் புதன் தனியாக இருந்தால் மட்டும் இராகு, கேது அமரலாம்.

6ஆம் வீடு: சூரியன், புதன், சனி அமரலாம். பார்க்கலாம்.

7ஆம் வீடு: சூரியன், தேய்பிறை சந்திரன், இராகு, கேது

8ஆம் வீடு: சூரியன், தேய்பிறை சந்திரன், செவ்வாய், அமரலாம். பார்க்கலாம்.

9ஆம் வீடு : சூரியனுடன் சேராத தனித்த புதன், சுக்கிரன் அமரலாம் பார்க்கலாம்

10ஆம் வீடு: சூரியன், புதன், இராகு, கேது அமரலாம். பார்க்கலாம்.

11ஆம் வீடு: சூரியன், சந்திரன், செவ்வாய், குரு, இராகு, கேது, அமரலாம், பார்க்கலாம்.

12ஆம் வீடு: சூரியன், தேய்பிறை சந்திரன், இராகு, கேது அமரலாம் பார்க்கலாம்.

மேற்கண்ட விளக்கத்தில் ஒவ்வொரு வீட்டிலும் அமர வேண்டிய பார்க்க வேண்டிய கிரகங்கள் பற்றி பார்த்தோம். ஆனால் ஒவ்வொரு வீட்டு அதிபதியும் எந்த வீட்டில் அமர வேண்டுமென கூறவில்லை. ஏனெனில் அதை விளக்குவது சிரமமாகும். இதுபற்றிய விளக்கமும், நன்மை தரும் கிரகம் எவ்வகையில் நன்மை தரும் என்பதையும் 6,8,12ம் வீடுகள் மறைவு வீடுகள் என்பதற்கான காரணமும், வாஸ்து சம்பந்தமான அதிசூட்சமமும் எனது ஸ்ரீ ராஜ ஜோதிடம் நூலில் உள்ளது.



விலை ரூ.500/— மட்டுமே. எனது 9842841497எண்ணில் தொடர்பு கொண்டு முகவரியை தெரிவித்தால் புத்தகத்தை அனுப்பி வைக்கிறேன். தபால் காரரிடம் பணம் கொடுத்து பெற்றுக் கொள்ளலாம். புத்தகத்தில் திருப்தி இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்

ஸ்ரீ விஷ்ணு பகவான் துணை

# அற்புத வசிய மூலிகைகள்

## ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல்' மூலிகை சித்தர் ஞானகுரு

**அனைத்து மூலிகைகளும் சித்தர் முறைப்படி உயிருடன் எடுத்து உங்களுக்காக 48 நாட்கள் அதற்குண்டான உரு ஏற்றி உயிரோட்டமாக உங்களது ஆயுட்காலம் வரையில் பலன் பயன் அளிக்கக்கூடியது.**

**1. தெய்வீக மூலிகை ரூ.15,000/–** உங்களது குலதெய்வம் அல்லது இஷ்ட தெய்வம் எது வேண்டுமோ இந்த மூலிகையை சிவப்பு பட்டுத்துணியில் சுற்றி மரப்பலகை மேல் வைத்து தினமும் தெய்வத்தின் யந்திரம் வைத்து அதற்குண்டான மந்திரங்கள் தினமும் காலை, மாலை முழு நம்பிக்கையுடன் ஊதுவத்தி காண்பித்து வந்தால் அந்த தெய்வம் உங்களுக்கு காட்சி தந்து உங்களுடனே இருந்து உங்களது எல்லாக் காரியத்தையும் வெற்றி அடையச் செய்யும்.

**2. வெள்ளை விஷ்ணுகிராந்தி மூலிகை தாயத்து ரூ.10,000/–** சகல ஐஸ்வர்யமும், சகல வசியம், எடுத்த காரியம் அனைத்து ஜெயம் உண்டாக்கி கடைசி காலம் வரையில் சகல செல்வாக்கு, செல்வம் உண்டாக்கும். தொழில் வெற்றி, குடும்பத்தில் ஒற்றுமை.

**3. சகலரும் வசியமாகும் தொட்டாற்வாடி மூலிகை தாயத்து ரூ.5000/–** ஆண், பெண் வசியமாக்கும் மிகச்சிறந்த மூலிகை

**4. பகைவரையும் நண்பனாக்கும் சங்கிலிக்கொடி மூலிகை தாயத்து ரூ.5000/–** உங்களது பகைவர்கள, எதிரிகள், உங்கள் மேல் பாசம் உண்டாக்கி நீங்கள் சந்தோஷமாக இருப்பீர்கள்.

**5. அதிர்ஷ்ட ரக்ஷிணி மூலிகை தாயத்து ரூ.5000/–** திடீர் காரியசித்தி உண்டாக்கும் புத்ரதோஷம், அனைத்து துன்பங்களையும் விரட்டி அடிக்கும் வல்லமை உள்ளது.

**6. செய்வினை, தீயசக்தி குடும்பத்தில் ஒற்றுமை குடும்பத்தில் சந்தோஷம் உண்டாக்கும் மூலிகை பவுடர் ரூ.10,000/–** இந்த மூலிகை பவுடரை பூஜையில் சாம்பிராணி போல் தினமும் 2 வேளை மனமுறுக போடவும்.

**7. கணவன் – மனைவி ஒற்றுமை மூலிகைப் பவுடர் ரூ.10,000/–** கணவன் – மனைவி ஒற்றுமை இல்லாமை, கணவன் – மனைவி பிரிந்து கோர்ட், கேஸ் விவகாரம் முற்றிலும் நீங்கும். இருவரும் சேர்ந்து சந்தோஷமாக இருப்பீர்கள்.

**8. ஏறு சிங்கி ரூ.10,000/–** 21 இன்ச் அளவுள்ளதில் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணி சுற்றி உங்களது பூஜையில் மரப்பலகையின் மேல் வைத்து ஊதுவத்தி காண்பித்து மனதார வேண்டினால் நலிவடைந்த தொழில், வியாபாரம் மீண்டுச் செழிக்கும். கடன் பிரச்சனை நீங்கி சகல ஐஸ்வர்யமும் உண்டாகும்.

**9. நினைத்ததை நடத்தும் ஸ்ரீபைரவர் யந்திரம் ரூ.7,500/–** தீயசக்தி, செய்வினைகள், காரியத்தடை, அப குணங்கள், பங்காளிகள் பிரச்சனை, வழக்கு, திருமணத் தடை, குழந்தை பாக்கியம், எதிர்பார்த்த உத்யோகம், உத்யோக உயர்வு, வெளிநாட்டுப் பயணம், எதிர்பார்த்த காரியங்கள் அனைத்தும் லாபம் தரும் மகாசக்தி பைரவர் யந்திரம் சித்தர் முறைப்படி 6X6 கடினமான செப்புத் தகட்டினால் கையினால் எழுதி உங்களது பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். இத்துடன் பைரவர் வழிபாட்டு முறை வழங்கப்படும்.

**10. தொழில் வியாபாரம், பணவரவு சிறக்கும் ஸ்ரீகாமதேனு யந்திரம் ரூ.7,500/–** தொழில் மந்தம், வியாபாரத் தடை, ஊழியர் பிரச்சனை, கடன் தொல்லை அனைத்தும் விலகி எதிர்பார்த்தபடியே தொழில் சிறப்பாக நடக்கும். வியாபராம் செழிப்பாக மாறும். எதிர்ப்பார்த்தபடியே தொழிலாளர் பிரச்சனை விலகும். கடன் தொல்லைகள் விலகி எதிர்பார்த்த பணவரவு, ஐஸ்வர்யம் உண்டாக்கும் மகாசக்தி ஸ்ரீ காமதேனு யந்திரம் சித்தர் முறைப்படி 6x6 கடினமான செப்புத் தகட்டில் கையினால் எழுதி உங்கள் பெயர், இராசி, நட்சத்திரத்துடன் 7 நாட்கள் சக்தியூட்டப்பட்டு வசிய மூலிகை உள்ளே வைத்து பிரேம் செய்து தரப்படும். ஸ்ரீகாமதேனு வழிபாட்டுமுறை கட்டுரை வழங்கப்படும்.

**11. வசிய அஞ்சனம் ரூ.5,000/–** உங்களது இருபுருவத்திலும் வைத்து தினமும் 21 தடவை "ஓம் ரீம் ஐயும் கிலியும் சவ்வும் சர்வலோக வசியமாக ஸ்வாஹா" சொல்லவும். இதனால் ஆண்/பெண் வியாபாரம் வசியம் ஆகும்.

**12. வசிய மருந்து ரூ.2000/–** இந்த மூலிகை பவுடருடன் உங்களது 5 இடத்து அழுக்கு எடுத்து 4 வேளை சாப்பாடு குழம்பு, வருவலில் கலந்து உங்களது பேச்சை கேட்க வேண்டும் என்பவருக்கு கொடுக்கவும். இதனால் கணவன், மனைவி, பிள்ளைகள் உங்களது பேச்சைக் கேட்பார்கள்.

**13. வசிய எண்ணெய் ரூ.5000/** இந்த எண்ணெயுடன் உங்களது ரத்தம் 2 சொட்டு கலந்து ஒரு வாரம் வைத்து இருந்து விரும்பியவருக்கு உச்சந்தலையில் சிறிது 3 தடவை தடவும். மேலும் அவர்கள் உபயோகிக்கும் தேங்காய் எண்ணெயில் கலந்து விடவும். இந்த எண்ணெய் உபயோகிக்கும் கணவன், மனைவி, பிள்ளைகள், மாமியார், நாத்தனார், எதிரிகள், காலம் முழுவதும்ட உங்களுக்கு வசியமாவார்கள்.

**14. மூலிகைக் கட்டு ரூ.3000/–** இதன் மேல் மஞ்சள், குங்குமம் வைத்து பச்சை பட்டுத்துணியால் பூஜையில் பலகைமேல் வைப்பதால் தீயசக்திகள, வெளியேறி, செல்வச்செழிப்பு, சுபநிகழ்ச்சிகள், சந்தோஷம், பணவரவு, ஐஸ்வர்யம் பெருகும்.

**15. ஞாபக சக்தி படிப்பில் முன்னேற்றம் மூலிகைப் பவுடர் பாக்கெட் ரூ.500/–** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும். இதனால் படிப்பில் பிள்ளைகள் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**16. செய்வினை, கிரகதோஷம், தீயசக்தி, கண்திருஷ்டி, சூன்யம் நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/–** இத்துடன் 50 கிராம் சாம்பிராணி கலந்து வாரத்தில் 3 நாட்கள் வீட்டின் வெளியிலிருந்து உள்ளே தூபம் போடவும்.

17. மூட்டுவலி, மூலிகை தைலம் பாட்டில் ரூ.300/– கை, கால், இடுப்பு, மூட்டுவலி, இரத்தக்கட்டு சுளுக்கு, தொடைவலி, எலும்புமுறிவுக்கு இரவு படுக்கும்போது நன்றாக தேய்த்து உறங்கவும். ஒரே நாளில் பலன் தெரியும்.

**18. ஜன்னி, தலைவலி, சைனஸ், அலர்ஜி நீக்கும் மூலிகைப் பவுடர் ரூ.1000/–** பவுடரை நல்லெண்ணையுடன் சிறிது கலந்து சூடுபடுத்தி தலைக்கு தேய்த்து குளிக்கவும். தேய்த்து மூழ்கியவுடன் ரசம் சாதம் சாப்பிட்டு விட்டு சிறிது நேரம் தூங்கவும்.

**19. வாகன விபத்து ஆபத்து நீக்கும் வெள்ளி மோதிரம் ரூ.3500/–** எதிர்பாராதவிதமாக ஏற்படும் வாகன விபத்து, ஆபத்து மனித வாழ்க்கையில் ஏற்படும் ஆபத்துக்கள் தடுக்கும் அபூர்வ வெள்ளி மோதிரம்.

**20. வியாதி, தீயசக்தி விலக்கும் மூலிகைப் பவுடர் ரூ.500/–** ஒரு பாக்கெட்டுடன் 100 கிராம் நெய் கலந்து தினமும் பூஜையில் குறைந்தது 48 நாட்கள் தீபமேற்றவும். வியாதிகள் குணமாகி தீய சக்திகள் வெளியேறும்.

**21. அபூர்வ மூலிகைகள் DVD ரூ.1500/–** இதுவரையில் மூலிகைப் புத்தகத்தில் மூலிகையின் பெயர், புகைப்படம் மட்டும் பார்த்து இருப்பீர்கள். அனைத்து அபூர்வ மூலிகைகள், அற்புத மூலிகைகள், சஞ்சீவி மூலிகைகள் மற்றும் புல்லுருவிகள் அனைத்தும் DVD மூலம் காணும் வாய்ப்பு மூலிகைகளின் பயன் மற்றும் பலன், உபயோகிக்கும் முறை தெளிவாகச் சொல்லப்படும். DVD வீட்டில் இருந்தால் மூலிகையின் நல்ல அதிர்வுகள் மூலம் வீடே சுபிட்ஷமாக இருக்கும்.

**22. குபேர கண்ணாடி ரூ.600/–** தினம் காலையிலும், வெளியே செல்லும்போதும் குபேர கண்ணாடியை பார்த்துச் சென்றால் மேலும் குபேர மந்திரத்தை 21 முறைச் சொல்லவும். காரிய ஜெயம், அதிர்ஷ்டம், செல்வம், செல்வாக்கு, பணவரவு உண்டாகும்.

- வசிய மூலிகைகளின் மேல் நம்பிக்கையும், விருப்பம் இருந்தால் மட்டுமே போன் செய்து விட்டு நேரில் பெற்றுக் கொள்ளலாம். அல்லது தேவையான பொருட்களின் விவரம் தெளிவான விலாசத்துடன் செல் நம்பருடன் "ஞான குரு" என்ற பெயருக்கு மணிஆர்டர் அனுப்பவும். அல்லது R.GNANASEKARAN என்ற பெயருக்கு சென்னையில் மாற்றத்தக்க டி.டி. அனுப்பவும். பொருட்கள் கூரியரில் அனுப்பி வைக்கப்படும்.
- நம்பிக்கை, இல்லாமல், தேவையில்லாத கேள்வி கேட்பதை கண்டிப்பாக தவிர்க்கவும்.
- எப்படிப்பட்ட செய்வினை, ஏவல், தொழில் வியாபாரம், கல்வி, உத்யோகம் கணவன், மனைவி பிரச்சனை, விரும்பியவரை மணக்க மற்றும் அனைத்துப்பிரச்சனைக்கும் சித்தர், முறையில் பரிகாரங்கள் உத்திரவாதத்துடன் செய்யப்படும்.



முன் அனுமதிக்கும் தொடர்புக்கும் : **95002 19209**

**ஜெயா TV புகழ் 'பரிகாரச் செம்மல் சித்தர் ஞானகுரு**

**பியூட்டி மூன் லாட்ஜ், பெரம்பூர் பேரக்ஸ் ரோடு, டவ்ட்டன்**

**புரசைவாக்கம், சென்னை – 600 007. ( டவுட்டன் சிக்னல் அருகில் )**

ஜெயா டி.வி.யில் காலை மலரில் சிறப்பு விருந்தினராக நான் கலந்து கொண்ட நிகழ்ச்சியைக் காண எனது WEBSITE பார்க்கவும் www.sidharmiracleherbals.com

# நவக்கிரகங்களின் நர்த்தனம்

# நலம் நல்கிடும் பரிவர்த்தனம் 3



நாடி ஜோதிடர்

**கே. சற்குருதாசன் ராமமூர்த்தி**

செல் : 94441 13777

மேஷ செவ்வாய்க்கு அடுத்தபடியாக இடம் பிடித்த 2ஆம் வீடான ரிஷபத்தையும் கால புருஷனக்கு 7ஆம் வீடான துலாத்தின் சொந்தக்காரியான பெண் சுக்கிரனை பற்றி பார்ப்போம். ஆணுக்கு அடுத்து பெண், பெண்ணுக்கு அடுத்து ஆண் என ஆட்சி புரியும். மேஷம், ரிஷபம், எனவும் சமூகம், களத்திரம், என 7அம் வீட்டுக்கும் வாக்கு குடும்பம், தனம் என இரண்டுக்கும் அதிபதியான சுக்கிரன் முதலிலும், அதற்கு அடுத்து அவள் இசைந்தாள் சமுக அங்கீகாரத்துடன் கலந்து அறிந்தும், அறியாதலும், தெரிந்தும், தெரியாததும், புரிந்தும், புரியாததும், உலகிற்கு எடுத்து உரைக்கும் விருச்சிக ஆண் செவ்வாய் பெண்ணுக்கு அடுத்து ஆண் என்று சொந்தம் கொண்டாடும். சரி இந்த ஆண், பெண் கிரகங்கள் எப்படி நிர்ணயிக்கபட்டது. என பார்ப்போம். பொதுவாக கிரகங்களில் உள்வட்ட கிரகங்கள் என்றும், வெளிவட்ட கிரகங்கள் என்றும் இரண்டு பிரிவுகள் உண்டு. அதாவது சூரியனுக்கும் பூமிக்கும் இடையே சூரியனை சுற்றி வரும் கிரகங்கள் உள்வட்டக் கிரகங்கள் எனப்படும். பூமியின் சுற்று பாதைக்கு வெளியே நின்று சூரியன் சுற்றி வரும் கிரகங்கள் வெளிவட்டக் கிரகங்கள் எனப்படும். எனவே அவை என பார்ப்போம்.

**உள்வட்டக் கிரகங்கள்**

புதன், சுக்கிரன், சந்திரன்

**வெளிவட்டக் கிரகங்கள்**

செவ்வாய், குரு, சனி ஏனென்றால், ஆண்கள் வீட்டிற்கு வெளியே உள்ள பொறுப்புகளை கவனிப்பதற்காக வீட்டிற்கு வெளியே பெரும்பாலான காலத்தை கழிப்பதைக் காணலாம். ஆனால் பெண்கள் வீட்டிற்குள்ளேயே உள்ள பொறுப்புகளை கவனிப்பதற்காக பெரும்பாலான காலத்தை வீட்டிற்குள்ளேயே செலவிடுவதையும் காணலாம். இதன் காரணத்தினாலேயே ஜோதிடத்தில் உள் வட்ட கிரகங்களான புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய மூன்று கிரகங்களிலும் பெண் கிரகங்கள் என்று அழைக்கப்படுகின்றது, கிரகங்களில் மிகவும் பிரகாசமானது சுக்கிரன் ஆகும். எனவே சுக்கிரன் இளமை ததும்பும் இளம் பெண்களை குறிக்கும். இளம் பெண்களின் உடம்பில் ஒருவித மினுமினுப்பு இருக்கும். மரங்களில் தளிர் விடும்போது அந்த புதிய இலைகளில் ஒருவித ஜொலிப்பு இருப்பதைப் பார்க்கலாம்.

இளந்தளிர்களில் காணப்படும் அத்தகைய ஜொலிப்பு இளமைக்கு ஒப்பானதாகும். இவ்வாறு காரண காரியங்களுடன் ஒவ்வொன்றுடன் ஒன்று இணைந்து சரியான வழியில் நம் முன்னோர்கள் நமக்கு கொடுத்து சென்றது தான் ஜோதிடம். அதற்கு மேலும் ஓர் உதாரணம் பார்ப்போமா.

அம்சோத்தரி தசையின் மொத்த காலமான 120 வருடங்கள் 9 கிரகங்களுக்கும் எப்படி பகிர்ந்து அளித்து இருப்பார்கள் என்று நான் கற்றுணர்ந்ததை உங்களிடம் பகிர்ந்துக் கொள்கின்றேன். சந்திரன் நின்ற பாகையை வைத்து தசை கணக்கிடப்படுவதால் சந்திரனின் ஆட்சி வீடான கடகம், உச்ச வீடான ரிஷபம் இந்த இரண்டு வீடுகளையும் மையமாகக் கொண்டு மற்ற கிரகங்கள் ஆட்சி, உச்ச வீடுகள் வரை கணக்கிட்டு தசைக்காலத்தை நிர்ணயிகலாம் அதாவது சுக்கிர தசை, 20 வருடங்கள் என தெரியும். அந்த சுக்கிரனுக்கு ஆட்சி வீடுகள் ரிஷபம், துலாம், உச்ச வீடு மீனம் நீச்ச வீடு கன்னி... சுக்கிரனுடைய ஆட்சி வீடான ரிஷபத்தில் சந்திரன் உச்சமடைகிறான். சுக்கிரன் உச்சமடையும் மீன இராசிக்கு உரிய குரு, சந்திரனின் ஆட்சி வீடான கடகத்தில் உச்சம் அடைகிறான்.



சுக்கிரனைப் பொறுத்தவரை சந்திரனுக்கு அதன் ஆட்சி உச்ச வீடுகள் இரண்டுமே வலிமையான இடங்களாகும். சுக்கிரனுடைய ஆட்சி வீடு ஒன்றை சந்திரன் தன் உச்ச வீடுகள் என எடுத்து கொண்டதால்

சுக்கிரனுக்கு அதன் உச்ச வீடே வலிமையானது. எனவே சந்திரனின் ஆட்சி, உச்ச வீடுகள் முதல் சுக்கிரனின் உச்ச வீடு வரை கணக்கிட்டால் சுக்கிரன் தசைக்காலம் கிடைக்கும். எப்படி என்றால் கடகம் முதல் மீனம் வரை 9 ரிஷபம் முதல் மீனம் வரை 11 ஆக மொத்தம் 20 சுக்கிர தசையின் அளவு 20 வருடங்களாகும். இப்படி ஒவ்வொரு கிரகத்திற்கும் கணக்கு போட்டால் சரியாக வருகிறது. இதை இனி வரும் மற்ற கிரகங்களை பற்றி எழுதும் போது அதை உங்கள் பார்வைக்கு தருகின்றேன். அடுத்ததாக சுக்கிரனின் பழமொழிகளைப் பார்ப்போம்.

1. குட்டி சுக்கிரன் குடும்பத்தை கெடுக்கும்.
2. தெற்கே போன வெள்ளி வடக்கே வந்தால் மழை
3. ஸ்வாதி சுக்கிரன் ஓயா மழை
4. கும்பத்து வெள்ளி குடம் கொண்டு சாய்க்கும்.

இனி வார நாட்களாக 7 கிழமைகளில் சுக்கிரனை குறிக்கும். வெள்ளிக்கிழமை பற்றிய பழமொழிகள் பார்ப்போம்.

1. வெள்ளி, ஞாயிறு மேற்கே சூலம்.
2. வெள்ளிக்கிழமை கொள்ளிக்கு ஆகாது.
3. அகதி பெறுவது பெண் பிள்ளை, அதுவும் வெள்ளி பூராடம்
4. வெள்ளி என்ணெய் கொள்ளிக்கு ஆகாது.
5. வெள்ளிக்கு போட்டதும் கொள்ளிக்கு போட்டதும் சரி.

அடுத்ததாக சுக்கிரனின் நட்சத்திரங்கள் ஆன பரணி, பூரம், பூராடம்

1. பரணி தரணி ஆளும்
2. பரணியாள் பாரவான்.
3. பரணி அடுப்பு பாழ போகாது
4. பரணி பேய்ந்தால் தரணி விளையும்.
5. 5. பூரம் போராடும்.
6. பூரத்தில் தாரம் இலாபம்
7. ஆரத்தின் பிள்ளை பூரத்தில் பிறக்கும்
8. அகதி பெறுவது பெண் பிள்ளை, அதுவும் வெள்ளிப்பூராடம்
9. பூராடத்தின் கழுத்தில் நூலாடாது.
10. பூராடக்காரனோடு சண்டையிடாதே.
11. பூராடக்காரனோடு சண்டையிட்டு மீள முடியாது.
12. அவதாரம் அநாதை பிறந்ததும் பூராடத்தில்
13. பூராடத்து அப்பின் ஊராடன்
14. பூராடத்திலே பிறந்தவனுக்கு நூல் ஆகாது.
15. பூராடம் நூலாடாது
16. பூராடம் போராடும்.
17. மகத்தில் மங்கை பூராடத்தில் புருஷன்

இந்த சுக்கிரனின் நட்சத்திரத்தில் பிறந்த சித்தர்கள் இருவர்கள் அவர்கள்

1. பூரம் — ராமதேவர்
2. பரணி — போகர்

இனி சுக்கிர தசாவில் நடக்கும் காரகத்துவ ரீதியான பலன்கள் என்னவென்று பார்க்கலாம்.

1. இளம் பெண்களுடன் நட்பு உருவாகும்.

2. கலைஞர்கள் கவிஞர்களுடன தொடர்பு உண்டாகும்.

3. வங்கி ஊழியர்களுடன் நட்பு உருவாகும்.

4. முக்கிய நிகழ்வுகள் எல்லாம் சுக்கிர ஓரையில் நடக்கும்.

5. ரிசப, துலா இலக்கினம், அல்லது ரிசப, துலா இராசிகளில் பிறந்தவர்களுடன் தொடர்பு ஏற்படும்.

6. இலட்சுமி அம்ச பெயர்களை கொண்டவர்களுடன் தொடர்பு உண்டாகும்.

7. விஷ்ணு அம்ச பெயர்களை கொண்டவர்களுடன் தொடர்பு உண்டாகும்.

8. அலஙகார பொருட்கள், சொகுசு பொருட்களின் சேர்க்கை உண்டாகும்.

9. வெள்ளை நிற வஸ்துக்களின் சேர்க்கை உண்டாகும்.

10. விலை உயர்ந்த உணவு வகைகளை உண்பதில் விருப்பம் உண்டாகும்.

11. விலை உயர்ந்த ஆடைகளை அணிவதில் விருப்பம் உண்டாகும்.

12. வாகன சுகத்தில் அதிக விருப்பம் உண்டாகும்.

13. ஒப்பனைக் கலைஞர்களுடன் நட்பு உருவாகும்.

14. ஆடை, நிறுவன உரிமையாளர் அல்லது தொழிலாளர்களுடன் நட்பு உண்டாகும்.

15. நகைக்கடை, உரிமையாளர்களுடன் நட்பு உருவாகும்.

இனி இந்த சுக்கிரனுக்கு சொந்தமான உறவு முறைகளும் பாவங்களுக்கு சொந்தகாரர்களையும் அடுத்த இதழில் பார்ப்போம்.

**தொடரும்...**

# திசா புத்தி பலன்கள் 8

# தேவகுரு நரகுரு என்னும்,குரு திசை, புத்தி பலன்கள்




தெய்வத்திரு
**பி. இராமசாமி**


நவக்கிரகங்கள் ஒன்பதில் குரு முக்கிய அம்சத்தைப் பெற்றுள்ளபடியால் குருவின் சஞ்சாரம். குரு பெயர்ச்சியைப் பற்றி மக்கள் பெரிதும் கூர்ந்து கவனிக்கின்றனர். எந்த ஒரு விஷயத்திற்கும் குருவின் பலம் வேண்டும். விவாஹத்திற்குக் கூட குருபலம் வந்து விட்டதா என்பதைத் தான் முதலில் கவனிக்கின்றனர். அந்த அளவுக்கு மகத்துவம் பெற்றவன் குரு சுபகிரஹங்களில் முதன்மையான சுபன் குரு என்ற போதிலும் இந்த குரு தனது திசையில் நல்ல பலன்களை கொடுப்பதில்லை என்பது தான் உண்மை. இது ஏன் எப்படி என்பதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா? குரு மகா திசையைப் பற்றிய விரிவாகப் பார்ப்போம். அதற்கு முன் குருவைப் பற்றிய பொதுவான விஷயங்களைப் பார்ப்போம். குரு இருக்கும் இடத்தை விட, குரு பார்வைக்குத்தான் அதிகமான பலம் உண்டு. ஜனன காலத்தில் குரு எந்தெந்த கிரகத்தை பார்க்கிறானோ அந்த கிரகங்களின் திசைகள் எல்லாம் நல்ல பலன்கள் ஏற்படுகின்றன. ஆனால் குரு தன் சுயதிசையில் பெரும் பகுதி நற்பலன்களைச் செய்வதில்லை, உதாரணமாக மூதறிஞர் ராஜாஜிக்கு விருச்சிக லக்கினம். தன பஞ்சமாதிபதியாகிய குரு மகரத்தில் அதாவது இலக்கினத்திற்கு மூன்றாமிடத்தில் நீச்சம் பெற்றான். எனினும் ராஜாஜி எந்தவிதமான குறைகளும் இல்லாமல் வாழ்ந்து, நல்ல பெயருடனும், புகழுடனும் இருந்தார். ஏனென்றால் மூன்றாமிடத்தில் உள்ள குரு ஏழாமிடத்தைப் பார்த்ததால் உத்தமியான மனைவி, ஒன்பதாமிடத்தை பார்த்ததால் இந்தியாவிலேயே பெரிய பதவியான "கவர்னர் ஜெனரல்" பதவியும் வகித்தார்.

பதினோராமிடத்தை பார்த்ததால் பொருளாதார நிலையும் கடைசி வரை நல்ல விதத்திலேயே இருந்தது. குரு உச்சம் பெற்றிருந்த போதும் அவன் இலக்கினத்திற்கு 3,6,8,10,12 ஆம் இடத்தின் ஆதிக்கம் பெற்றிருந்ததால் அவ்வளவாக நல்ல பலன்களைச் செய்வதில்லை. ஒருவருக்கு மகர இலக்கினம் குரு கடகத்தில் உச்சம் பெற்றிருந்தான். இவன் திசை பெரும் பகுதி அளவுக்கு மீறிய கஷ்டத்தையே கொடுத்தான். சனி திசை வந்த சில தினங்களிலேயே பெரிய லட்சாதிபதியாக முடிந்தது. ஏனென்றால் குரு தன் திசையில் பலன் செய்யாவிட்டாலும் சனியை அதே குரு ஜனன காலத்தில் பார்த்திருந்ததால் சனி திசையில் பிரபல யோகம் ஏற்பட்டது. எனவே குருவுக்கு ஸ்தான பலத்தை விட அவன் பார்வை பெற்ற கிரகங்கள் நன்மையைச் செய்கின்றன என்பது நன்கு புலனாகிறதல்லவா?

இந்த உதாரண ஜாதகத்தை நன்கு கவனியுங்கள் மீன லக்கினம், கும்பராசி, குரு எட்டில் கேதுவுடன், சனி இரண்டில் நீச்சம் ராகுவுடன், இந்த ஜாதகருக்கு எட்டில் இருந்த குரு தன் திசையில் இவருக்கு எவ்வளவு கஷ்டங்களைக் கொடுக்க முடியுமோ அவ்வளவு கஷ்டங்களைப் கொடுத்தான். ஆனால் குரு திசை முடிந்து சனி திசையில் பிரபல யோகத்தைக் கொடுத்தான்.

| | | | |
|---|---|---|---|
| ல/ | சனி ராகு | | |
| சுக் சந் | 1-2-1911 | | |
| சூரி | | | |
| செவ் புத | | கேது குரு | |

ஏனென்றால் ஜனன காலத்தில் மேஷத்தில் உள்ள சனியை குரு ஏழாம் பார்வையாகப் பார்த்தான். இதில் இன்னொரு விஷயத்தையும் கூற விரும்புகிறேன். குரு எவ்வளவுதான் கஷ்ட பலன்களை அவன் திசையில் கொடுத்த போதிலும், பெயர், புகழ், நல்ல மனிதன் என்ற பெயர் என்னமோ உண்டு. (பணம் இல்லாமல் பெயரும், புகழும் இருந்து என்ன பயன் என்று கேட்டு விடாதீர்கள்.) நான் ஏற்கனவே பல கட்டுரைகளில் எழுதியுள்ளேன். B.A., M.A., பட்டதாரிகளை விட குருதிசையை அனுபவித்த அளவுக்கு மீறிய கஷ்டங்களைக் கொடுத்து, பணம் என்றால் என்ன? எப்படி செலவு செய்ய வேண்டும். யார் உண்மையான சினேகிதர்கள். எவன் அடுத்து கெடுப்பவன் என்று தெரிந்து கொள்ளும் ஆற்றலை குருபகவான் நமக்கு அனுபவம் மூலம் அருள்கிறான். ஏனென்றால் அவன் திசையில் மனிதன் (Acid -test) ஸ்புடம் போட்டு எடுக்கப்படுகிறான். இதனால் அனுபவ ஞானம் ஏற்படுகிறது.

**1. மேஷத்தில் குரு இருந்தால்:** பூமி பொருள்

சேர்க்கை ஏற்படும், மனதிற்கிசைந்த விஷயங்களே பெரும்பாலும் நடைபெறும், உத்தியோக உயர்வு, மேலேயுள்ளவர்களின் பாராட்டுகள், மனம் சன்மார்க்கமான வழிகளில் செல்லுதல் போன்ற நல்ல விஷயங்கள் நடைபெறும்.

**2. ரிஷபத்தில் குரு இருந்தால்:** அரசாங்க விருதுகளும், அரசாங்கத்தின் அனுசரனையும், ஏற்படும். சொந்த விளைச்சல் பூமி, கறவை மாடுகள் முதலியன தானாக வந்து சேரும். தனக்கு சம அந்தஸ்த்தானவர்களின் சினேகமும் ஏற்படும். மனைவிக்கு நிறைய ஆடை ஆபரணச் சேர்க்கையும் உண்டாம். கணவன் மனைவி உறவும் நல்ல விதத்திலேயே காணப்படும்.

**3. மிதுனத்தில் குரு இருந்தால்** மனைவியின் திரேக சுகமும், பிள்ளை குட்டிகளின் திரேக சுகமும் அடிக்கடி பாதிக்கப்படும். விவசாயத்தில் பெரிய நஷ்டமும் ஏற்படுகின்றது. தண்ணீருக்காக கிணறு வெட்டுவதில் பெரும் விரையம் ஆகிறது. உத்தியோகத்தில் அடிக்கடி இடமாற்றமும் சொந்தக்காரர்களே பரம சத்ருவாதலும் உண்டாம். அடிக்கடி குடியிருக்கும் இடத்தை மாற்றவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

**4. கடகத்தில் குரு இருந்தால்** ஏராளமான விளைச்சல் நிலங்களும் பொன் பொருள் சேர்க்கையும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் சக்தியும், ஆடு மாடு வண்டி வாகன சேர்க்கையும் பெரிய பெரிய பணக்கரர்களின் சிநேகமும், அவர்களால் பல நன்மைகளும் விவசாயத்தில் நல்ல இலாபமும் ஏற்படும். கடகத்தில் குரு இருக்கும் போது விளைவிக்கப்படும், காய்கறி, தானியப் பயிர்கள் நன்கு விளைந்து நல்ல பலனைத் தரும்.

**5. சிம்மத்தில் குரு இருந்தால்** நல்ல புகழ் ஏற்படுகின்றது. சங்கீதத்தில் மிகுந்த கலை ஞானமும், சொந்த வீடு வாசல் பங்களா வாழ்க்கையும், எடுத்த காரியங்களில் பெருமளவு வெற்றியும், பேரும் புகழும் இயற்கையாகவே தேடி வருதலும் சதா தெய்வ சிந்தனையும், முருகப் பெருமானின் அருளும் ஏற்படும் பல இடங்களைச் சுற்றிப் பார்த்தலும், காடு வளம் வனாந்திரம் முதலிய இடங்களுக்கு நேரில் சென்று வரும் பாக்கியமுண்டாம்.

**6. கன்னியில் குரு இருந்தால்** அவ்வளவாக சுகப்படுவதில்லை ஏனென்றால் குருவுக்கு மீனமும், தனுசும் சொந்த வீடான படியால் கன்னியில் குருவுக்கு கேந்திராதி பத்திய தோசம் ஏற்படுகிறது. குருவுக்கும், புதனுக்கும் கேந்திராதி பத்திய தோசம் மகா கொடுமையானது. பொதுவாகவே குரு மிதுனத்திலும், கன்னியிலும் சஞ்சரிக்கும்போது எந்த இலக்கினமாயினும் சரி கெடுதலான பலன்களே நடைபெறும். இது அனுபவங்கள் கண்ட உண்மையாகும். ஆனால் பூர்வீக சொத்து சன்னஞ்சன்னமாகக் குறைத்தலும், ஆடு, மாடுகள் பறிபோதலும், மனைவியே சில சமயங்களில் சத்ருவாக மாறுதலும், இதனால் உற்றார் உறவினர்களின் பகையும், உத்தியோகத்தில் பல முட்டுக்கட்டைகளும், உடன் வேலை பார்ப்பவரின் சூழ்ச்சிக்குப் பலியாகுதலுமுண்டாம்.

**7. துலாத்தில் குரு இருந்தால்** சொந்த ஊரை விட்டு வேறு ஊருக்கு சென்று பொருள் சம்பாதித்தலும், பல கஷ்ட நஷ்டங்களை அனுபவித்த பின்னர் பொருள் சம்பாதித்தலும் உற்றார் உறவினரை இழத்தலும் ஏற்படும். பெரும்பாலானோர் கடல் கடந்த பிரதேசங்களுக்கு சென்று வாழ்க்கையின் பெரும் பகுதியை அந்நிய நாட்டிலேயே காலங்கழித்து அந்திய காலத்தில் சொந்த ஊருக்கு திரும்பி வந்து சேரும் நிலைமையும் ஏற்படுகிறது. சிலருக்கு வாழ்க்கையில் போராட்டம் இருக்கும். இவர்களுக்கு போராட்டமே வாழ்க்கையாக அமைகிறது.

**8. விருச்சிகத்தில் குரு இருந்தால்** பெரும் பொருள் சேருதலும், ஏராளமான சொத்து சுதந்திரங்களுக்கு அதிபதியாகுதலும், எடுத்த காரியங்களில் பெருமளவு வெற்றியும், மண்ணைத் தொட்டாலும் பொன்னாகும் யோகமாம்.

**9. தனுசுவில் குரு இருந்தால்** சதா கடவுள் பக்தியும், மெத்த வருமானம் பெருகுதலும, உத்தியோகத்தில் உயர்ந்த ஸ்தானத்தை எட்டிப் பிடித்தலும், நல்ல பெயரும் புகழும் அரசாங்க விருதுகளும் கிடைக்கும். உயர்ந்த வட்டாரங்களில் நல்ல செல்வாக்கும் ஏற்படும்.

**10. மகரத்தில் குரு இருந்தால்** நல்ல ஸ்திதியில் இருந்த போதிலும் வாழ்நாள் முழுதும் எதிரிகளின் தொல்லையும், சதா அவர்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டிய நிலையும், ஒருசாரர் போற்றி புகழ்தலும், மற்றொரு சாரர் இவரை நிந்த்தித்தலுமுண்டாம். ஆனால் எந்த எதிர்ப்பும் இவரை ஒன்றும் பாதித்து விடாது. ஏனென்றால் இவருடைய கொள்கையில் இவருக்கு அபார நம்பிக்கை உண்டு.

**11. கும்பத்தில் குரு இருந்தால்** சதா வறுமைப்பிணி வாட்டி வதைத்தலும் சொந்தக்காரர்களே சத்ருவாக மாறுதலும் வாழ்க்கையின் பெரும் பகுதி சொல்லொணாக் கஷ்டங்களுக்கு ஆளாகி 40 வயதுக்கு மேல் ஓர் உன்னத ஸ்தானத்தை அடைதலுமுண்டாம். கும்ப குரு அந்திம வாழ்க்கையை நிறைவாக நடத்துவான்.

**12. மீனத்தில் குரு இருந்தால்** நல்ல பெயரும் புகழும் ஏற்படும். நிறைய புத்திர பாக்கியம் ஏற்படுதலும், உத்தியோகத்தில் நல்ல பெயரும் புகழும் ஏற்பட்டு மேலதிகாரிகளின் ஊக்குவிப்பும் பாராட்டுதல்களும் மனமகிழ்ச்சியை ஏற்படுத்தும்.

இதுவரை குரு ஒவ்வொரு இராசியிலும் நின்ற பலன்களை கூறினேன். இனி குரு திசையின் புத்தி விபரங்களைப் அடுத்த இழில் பற்றி பார்ப்போம்.

**தொடரும்...**

# பெண்களின் குணநலன்களை பெரிதும் அறிந்திட உதவிடும் பிரதானமான திரிம்சாம்சம்



பொதுவாக ஆண்கள் இந்த உலகில் அனுபவிக்கும் இன்பதுன்பங்களை, அவரவர் ஜெனன ஜாதகம் ஒன்றை மட்டும் ஆதாரமாகக் கொண்டு அறுதியிட்டு உறுதிப்பட கூறலாம். ஆனால் பெண்கள் இந்த உலகில் ஆண்டு அனுபவிக்க வேண்டிய சுக துக்கங்களைப் பற்றி மூன்று ஜாதகங்களைக் கொண்டே முடிவு எடுக்க முடியும்.

இதில் பெண் பிறந்த நேரத்தை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்படும்! ஜனன ஜாதகம். 2. அப்பெண் பூப்படையும், நேரத்தை ஆதாரமாகக் கொண்டு கணிக்கப்படும் ருது ஜாதகம் 3. பூப்படைந்த பெண் தான் திருமணம் செய்துக் கொண்ட ஆணோடு முதல் முதலில் தாம்பத்தியம் கொள்ளும் நேரத்தின் அடிப்படையில் கணிக்கப்படும் நிஷேக ஜாதகம். ஒரு பெண் குழந்தை இப்பூமியில் உதித்தவுடனேயே அவள் அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு, எனும் நற்குணங்களை படைத்தவளாய்க் குடும்ப விளக்காகத் திகழ்வாளா? தாயாய், தாரமாய், ஆசானாய், அடிமையாய், தோழனாய், துணைவளாய் ஒருவரோடு பங்குகொண்டு வாழ்வாளா என்பதை அறிய துணை புரிவது ஜோதிடக்கலை.

ஒரு பெண் தன் கணவனுக்குக் கட்டுப்பட்டு வாழ்வாளா கணவன் சொல்லை மீறிச் செயல்படுவாளா? கூட்டுக் குடும்ப வாழ்வின் குலவிளக்கா? எடுப்பார் கைப்பாவையா? அன்புள்ளவளா? அகம்பாவம் படைத்தவளா? இதுப்போன்ற பல்வேறு குணநலன்களைத் தெரிந்தே பெண் ஒருத்தியைக் குடும்ப வாழ்க்கைத் துணையெனக் கொள்ள வேண்டும் என்பது சாஸ்திர நியதி. இவைகளை எல்லாம் ஜாதக ரீதியாக அறிய ஆதிகுரந்த கர்த்தாக்கள் அதி அற்பமான பலவிதிகளை வகுத்து வழங்கி உள்ளனர். இதுபோன்ற



ஜோதிடரத்னா
**S.தனபாலன்** MA, D,Co.Op, DA.
**செல்: 95003 93813.**



ஓம் ஷீரடிசாய், ஓம் விக்னேஷ்வர, ஓம் மஹாகாளி துணை



**ஸ்ரீ மஹா காளி ஆன்மீக மந்த்ராலயம்**

ஸ்ரீ அன்னை மஹாகாளியின் அருளால் தங்களின் அனைத்து வித பிரச்சனைகள் எளிய தாந்திரீக மாந்திரீக முறையிலும் மிகவும் சக்தி வாய்ந்த ஹோம யாகங்களின் மூலமாகவும் நல்ல முறையில் தீர்வு காணப்படும். கணவன் மனைவி கருத்துவேறுபாடு, குடும்ப பிரச்சனை, தொழில் அபிவிருத்தி, தீரா கடனில் இருந்து மீள வரா கடன் வசூலாக, பல விதமான கடன் பிரச்சனையிலிருந்து மீள, சொத்து பிரச்சனை தீர, வழக்கில் வெற்றி பெற, ஆண் பெண் வசியம், பிடிக்காத உறவுகளை பிரிக்க, குழந்தையின்மை பிரச்சனை போக்க, தீய பழக்கங்களிலிருந்து விடுபட, விபத்துகள் வராமல் தடுக்க செய்வினை ஏவல் பில்லி சூன்யங்களால் ஆன கோளாறுகளிலிருந்து விடுபட, மாந்திரீக தாந்திரீக கோளாறுகளால் பாதிப்பு அடையாமல் இருக்க, எதிரியிடம் இருந்து பாதுகாக்க, விற்காதை மனை வீடு விற்க, பணம், வேலை போன்ற பிரச்சனைகள் அகல, கல்வியில் மேம்பட, துஷ்ட சக்திகளை விரட்ட, வராமல் காக்க தெய்வீக சக்தியின் மூலமாக மிகவும் சக்தி வாய்ந்த யந்திரங்களாலும் புல்லுருவி மூலிகை ரக்ஷைகளாலும், அபூர்வ சக்தி வாய்ந்த அஞ்சனங்களாலும் அதிசக்தி வாய்ந்த தாயத்துகளாலும் இம்மையத்தில் தீர்த்து வைக்கப்படும்.

இஃது மட்டும் அல்லாமல் பல விதமான நோய்களுக்கு சக்தி வாய்ந்த மூலிகைகளின் மூலம் அந்நோய்கள் தீர்க்கப்படும்.

**மலையாளம் மற்றும் தமிழ் மாந்திரீகமும், தாந்திரீகமும் தெய்வ தேவதைகளின் உபாசனையும் ஆண்/பெண் இருபாலருக்கும் கற்றுத் தரப்படும்.**

அகோர மஹாகாளி உபாசகர், ப்ரசன்ன ஜோதிடர்,
ஆன்மீக செம்மல்,

**ஸ்ரீ சாய் சுரேஷ்** S.M.P.,

முன்பதிவு பெற்று வரவும்

**தொடர்புக்கு : 89395 46946**

தேவைகேற்ப அற்புத மூலிகைகள், புல்லுருவி ரட்ஷைகள் இம்மையத்தில் கிடைக்கும்.


பெண்களின் குண நலன்களை அறிந்திட பெரிதும் உதவிட பிரதானமானது திரிம்சாம்ச சக்கரம்.

திரிசாம்ச சக்கரம் என்பது, ஓர் இராசியின் 30 பாகையை, 0 பாகை முதல் 5 பாகை வரையிலும், முதல் பாகமாகவும் 5 பாகை முதல் 10 பாகை வரையிலும் இரண்டாவது பாகமாகவும் 10 பாகை முதல் 18 பாகை வரையிலும் மூன்றாவது பாகமாகவும், 18 பாகை முதல் 25 பாகை வரையிலும், நான்காம் பாகமாகவும், 25 பாகை முதல் 30 பாகை வரையிலும், ஐந்தாம் பாகமாகவும் பிரித்துக் கிரகங்களை அடைவு செய்வதாகும்.

இவற்றில் ஆட்சி புரியும் அதிபதிகள், அதாவது திரிசாம்சாதிபதிகள் ஆண்இராசிக்கும் பெண் இராசிக்கும் வேறுபடுவர்.

அதாவது ஒற்றை இராசிகள் எனப்படும் ஆண் இராசிகளான, மேஷம், மிதுனம், சிம்மம், துலாம், தனுசு, கும்பம் ஆகிய இராசிகளுள் முதல் திரிசாம்சாதிபதி — செவ்வாய், இரண்டாம் திரிம்சாம்சாதிபதி — சனி, மூன்றாம் திரிசாம்சாதிபதி — குரு, நான்காம் திரிசாம்சாதிபதி — புதன், ஐந்தாம் சாம்சாதிபதி — சுக்கிரன்

இரட்டை இராசிகள் என்று சொல்லப்படும் பெண் இராசிகளான ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய இராசிகளுள் முதல் திரிம்சாம்சாதிபதி சுக்கிரன் — இரண்டாம் திரிசாம்சாதிபதி — புதன், மூன்றாம் திரிம்சாம்சாதிபதி — குரு, நான்காம் திரிசாம்சாதிபதி — சனி, ஐந்தாம் திரிம்சாம்சாதிபதி —செவ்வாய் ஆகும்.

அரச கிரகங்களான சூரிய சந்திரர்களுக்கு திரிம்சாம்ச தொடர்பு இல்லை. அதேபோன்று சாயா கிரகங்களான இராகு கேது ஆகியவர்களுக்கும் இல்லை. இலக்கினம் நின்ற பாகை அடிப்படையில் சந்திரன் நின்ற பாகை அடிப்படையில் திரிம்சாம்சாதிபதிகளை வரையறுப்பது சிறந்தது. குறைந்தபட்சம் இலக்கின ஸ்புடத்திற்கு உரிய திரிம்சாம்சாதிபதியைக் கொண்டு பெண்களின் குணநலன்களை அறிவது அவசியமானது. இராசி மாள நாழிகையைக் கொண்டு கணக்கிடப்படும் ஜாதகத்தில் திரிம்சாம்சாதிபதியைத் துல்லியமாய் அறிவது சிரமம். இலக்கின ஸ்புடம் செய்து கணிக்கப்படும் ஜாதகத்தாலேயே திரிம்சாம்சாதிபதியைத் துல்லியமாய் அறிய முடியும்.

இலக்கின ஸ்புட ஜாதகம் உள்ளவர்கள் திரிம்சாம்சாதிபதிகளை எளிதில் அறிந்துக் கொள்ள கீழே கொடுக்கப்பட்ட அட்டவணை உதவியாக இருக்கும்.

| இராசிகள் | பாகம் | பாகை தொடக்கம் | பாகை முடிவு | திரிம்சாம்சாதிபதி |
|---|---|---|---|---|
| மேஷம் மிதுனம் | 1 | 0 | 5 | செவ்வாய் |
| சிம்மம் | 2 | 5 | 10 | சனி |
| துலாம் | 3 | 10 | 18 | குரு |
| தனுசு | 4 | 18 | 25 | புதன் |
| கும்பம் | 5 | 25 | 30 | சுக்கிரன் |
| ரிஷபம் | 1 | 0 | 5 | சுக்கிரன் |
| கடகம், கன்னி | 2 | 5 | 10 | புதன் |
| விருச்சிகம் | 3 | 10 | 18 | குரு |
| மகரம் | 4 | 18 | 25 | சனி |
| மீனம் | 5 | 25 | 30 | செவ்வாய் |

*(சூரியன், சந்திரன், இராகு—கேது இவர்களுக்கு திரிம்சாம்ச தொடர்பு இல்லை)*

*திரிம்சாம்சத்தில் கிரகங்களை அடைவு செய்யும்போது, கிரகம் ஆண் இராசியில் உள்ளதா, பெண் இராசியில் உள்ளதா என அறிந்து, அதற்கேற்றாற் போல் கிரகங்களை அடைவு செய்ய வேண்டும். கிரகங்கள் எந்த திரிம்சாம்ச இராசியில் அமைகிறதோ, அந்த இராசியின் அதிபதியே, அந்த கிரகத்தின் திரிம்சாம்சாதிபதி ஆவார்.*

*திரிம்சாம்ச சக்கரத்தைக் கொண்டு, பெண்களின் குண நலன்களை தெளிவாக அறியலாம். திருமணத்திற்காக, வரன், வதூ ஜாதகங்களை, பரிசலிக்கும் போது அவர்களின் ஜாதகத்தில் திரிம்சாம்ச சக்கரத்தை நன்கு ஆய்வு செய்ய வேண்டும். ஜாதகரின் உடல் கவர்ச்சி, காம சிந்தனை, தாம்பத்ய ஈடுபாடு ஆகியவற்றை திரிம்சாம்ச சக்கரம் தெள்ளத் தெளிவாக தெரியப்படுத்திவிடும்.*

*திரிம்சாம்சம் என்பது, ஒரு சூட்சம கணிதமாகும். எனவே, ஜாதகம் முறைப்படி கணிக்கப்படாவிட்டால், திரிம்சாம்ச பலன்கள் நன்நடத்தையுள்ளவரைக கூட தீய நடத்தையுள்ளவராக ஆக்கி விடும். முதலில், ஜாதகத்தை திருக்கணித முறைப்படி கணிக்க வேண்டும். பிறகு, இரண்டு ஜாதகங்களையும் ஒரே அயனாம்ச அடிப்படையில் கணிக்க வேண்டும். பிறகு தான் திரிம்சாம்ச பலனை அறிய வேண்டும்.*

*திரிம்சாம்ச சக்கரத்தின் மூலம் குண நலன்களை அறிய இலக்கினம் இலக்கினாதிபதி சந்திரன் — இவை பெறும் திரிம்சாம்ச அதிபதியைக் கொண்டு கணிதம் செய்ய வேண்டும். மேற்கூறிய மூன்றில் எது விலமையுடையதோ அதன் திரிம்சாதிபதி குணநலன் காண முக்கிய காரணமாகிறார்.*



*1. மேஷம், விருச்சிக இராசிகள் — இவற்றில் ஒன்று இலக்கினமாகவோ, இராசியாகவோ, அல்லது இலக்கினாதிபதியோ நிற்கும்போது ஏற்படும் திரிம்சாம்ச பலன்கள்*

செவ்வாய் - கன்னிப்பருவத்திலே புருஷ சுகத்தை அனுபவிப்பவள்

சனி - குற்றம் புரிபவள்

குரு - கற்புக்கரசி

புதன் - கலைகளை இரசிக்கும் தன்மை, சௌபாக்யவதி

சுக்கிரன் - சந்தர்ப்ப சூழ்நிலையால் கற்பை இழந்தவள்

*2. ரிஷபம், துலாம், இராசிகள் — இவற்றில் ஒன்று இலக்கினமாகவோ, இராசியாகவோ, அல்லது இலக்கினாதிபதியோ நிற்கும்போது ஏற்படும் திரிம்சாம்ச பலன்கள்*

செவ்வாய் - துஷ்ட சுபாவம், முன்கோபி

சனி - கணவன் உயிருடன் இருக்கும்போதே வேறொரு ஆடவனை முறைப்படி மணப்பாள்

குரு - தான தருமம் செய்பவள், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, போன்ற பெண்மையின் இலக்கினம் பெற்றவள்.

புதன் - கோபமில்லாதவள், விநயமாக பேசுபவள், குணக்கொழுந்து,

சுக்கிரன் - பேரும், புகழும், பெற்றவள், முகவசீகரம் கொண்டவள், கணவனுக்கு எல்லாவித சுகங்களையும் கொடுப்பவள்.

*3. மிதுனம், கன்னி, இராசிகள் — இவற்றில் ஒன்று இலக்கினமாகவோ, இராசியாகவோ, அல்லது இலக்கினாதிபதியோ நிற்கும்போது ஏற்படும் திரிம்சாம்ச பலன்கள்*

செவ்வாய் - கணவனுக்கு தெரியாமல் பல செய்யத்தகாத காரியங்களைச்

செய்வாள்.

| | |
|---|---|
| சனி | - பெண்மைக்குரிய குணங்கள் ஒன்றுகூட இல்லாதவள் |
| குரு | - நல்ல சுபாவம் உள்ளவள் |
| புதன் | - வசீகரிக்கும் தோற்றம் கொண்டவள் இசையில் ஆர்வம் உடையவள் |
| சுக்கிரன் | - கட்டுக்கடங்காத காமவெறி நிறைந்தவள். |

*4. கடகத்தில் இலக்கினம் இலக்கினாதிபதி அல்லது சந்திரன் நிற்கும்பொழுது ஏற்படும் திரிம்சாம்ச பலன்கள்*

| | |
|---|---|
| செவ்வாய் | - கோழையாக இருப்பாள் |
| சனி | - கணவனைத் துன்புறுத்துபவள், கணவனுக்கு இழுக்கு உண்டாகும் வகையில் நடந்துக் கொள்பவள் |
| குரு | - பத்தினி, ஒழுக்கத்துடன் கூடியவள் |
| புதன் | - நுண்ணறிவு கொண்டவள், மேதை |
| சுக்கிரன் | - கற்பிழந்தவள் |

*5. சிம்மத்தில் இலக்கினம், இலக்கினாதிபதி அல்லது சந்திரன் நிற்கும்பொழுது ஏற்படும் திரிம்சாம்ச பலன்கள்*

| | |
|---|---|
| செவ்வாய் | - துணிச்சலில் ஆண்களை மிஞ்சுபவள் |
| சனி | - வேசி |
| குரு | - அரசாள்பவள், இராஜகுமாரி |
| புதன் | - நடத்தைக்கு பங்கம் வராமல் நடந்துக் கொள்பவள் |
| சுக்கிரன் | - பிரயாணத்தில் அதிக ஈடுபாடு |

*6. தனுசு மற்றும் மீனத்தில் இலக்கினம் இலக்கினாதிபதி அல்லது சந்திரன் நிற்கும்பொழுது ஏற்படும் திரிம்சாம்ச பலன்கள்*

| | |
|---|---|
| செவ்வாய் | - குணவதி, அடக்கம், நாணம், அன்பு கொண்டவள் |
| சனி | - காமத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவள் |
| குரு | - மேதாவி, குணவதி |
| புதன் | - வேத சாஸ்திர, விஞ்ஞான அறிவு கொண்டவள் |
| சுக்கிரன் | - பதிவிரதை, நெருப்புக்கு சமமானவள் |

*7. மகரம் மற்றும் கும்பத்தில் இலக்கினம் இலக்கினாதிபதி, அல்லது சந்திரன் நிற்கும்பொழுது ஏற்படும் திரிம்சாம்ச பலன்கள்*

| | |
|---|---|
| செவ்வாய் | - நீசத் தொழில் செய்பவள் |
| சனி | - அடிமை, வேலையாட்கள், சமூக விரோதிகளிடம் உறவு கொள்பவள் |
| குரு | - கணவனிடம் அளவிற்கு அதிகமான அன்பு கொண்டவள் |
| புதன் | - நடத்தை கெட்டவள், வேசி |
| குரு | - சந்ததி அற்றவளாகவும், பேராசை கொண்டவளாகவும் இருப்பாள். |

*மிகச்சரியான, திரிம்சாம்ச சக்கரத்தை கணிதம் செய்த பின்பே, பலன் காண முயல வேண்டும். ஒரு பாகை, கலை மாறுபட்டு, திரிம்சாம்ச அதிபதி கிரகம் மாறும்போது பலன்களும் மாறுபட்டு விடும். எனவே, தெளிவான கணிதத்திற்குப் பின்பே பலன் காண முயல வேண்டும். தீர்க்கமான நிலையைப் பெற வேண்டும்.*

■

## செப்டம்பர் 2015 கடன் தீர்க்க உகந்த நாள், நேரம்

**2.9.2015 – 9.00 PM to 9.50 PM** (ஆவணி 16 புதன் இரவு 9.00 முதல் 9.50 வரை)

**19.9.2015 – 10.30 AM to 11.20 AM** (புரட்டாசி 2 சனி பகல் 10.30 முதல் 11.20 வரை)

**29.9.2015 – 7.15 PM to 8.05 PM** (புரட்டாசி 12 செவ்வாய் மாலை 7.15 முதல் 8.05 வரை)

**கடன் தீர்க்க:** வாங்கிய கடனை தீர்க்க முடியாமல் சிரமப்படுபவர்கள் மேலே கண்டுள்ள தேதி நேரத்தில் கடனில் ஒரு பகுதியை திருப்பிக் கொடுத்தால் (தவணை முறையில்) கடன் தொகை சிறுக சிறுக அடைபட்டு, கடன் விரைவில் தீர்ந்து விடும். அடுத்த தவணைக்கு எப்படியாவது பணம் கைக்கு வந்துவிடும்.

**கடன் வசூலிக்க:** கொடுத்தக் கடனை வசூலிக்க முடியாமல் சிரமப்படுபவர்கள் சம்மந்தப்பட்டவரிடம் மேலே கண்டுள்ள தேதி நேரத்தில் ஒரு தொகையை எப்படியாவது வாங்கினால் (தவணை முறையில்) கடன் தொகை சிறுக சிறுக வசூலாகி கடன் தொகை விரைவில் முழுவதுமாக வசூலாகிவிடும். அடுத்த தவணைக்கு எப்படியாவது அவருக்கு பணம் வந்து உங்களுக்கு கொடுத்து விடுவார்.

### கடன் கொடுக்க, கடன் வாங்கக் கூடாத நாட்கள்

அஷ்டமி, நவமி, கரி நாள், மரணயோகம், தனியநாள் பிரபாலிரிஷ்ட யோகம் உள்ள நாட்களிலும் பரணி, கிருத்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், சித்திரை, சுவாதி, விசாகம், கேட்டை, பூராடம், பூரட்டாதி. நட்சத்திர நாட்களிலும், சந்திராஷ்டம நாட்களிலும், கடன் கொடுக்கல் வாங்கல் கூடாது. கொடுக்கல், வாங்கலில் சிரமம் ஏற்படும்.

பி.இராமசாமி

காலத்தின் கோலத்தைக் கோடிட்டு காட்டிடும்

# கோட்டைச் சக்கரம்

8



● ஸ்ரீ ஸ்கந்த உபாசகர்
P.D. ஜெகதீஸ்வரன்
செல்: 96596 90395

கோட்டைச் சக்கரத்தில் ஸ்தம்ப பாகத்தில் பாவகிரகங்கள் நிற்கும் போது மனம் சார்ந்த அனைத்து விதமான கோளாறுகளும் ஏற்படுகின்றன.

**ஸ்தம்ப பாகத்தில் பாவ கிரகங்களின் சூழுகைகள்**

| | |
|---|---|
| சூரி+செவ்+சனி+இராகு | சனி+இராகு |
| சூரி+செவ்+சனி+கேது | சனி+கேது |
| சூரி+செவ் | செவ்+சனி+கேது |
| செவ்+சனி+கேது | செவ்+சனி |

ஒருவருடைய வாழ்கையில் எதிர்பாராது நிகழும் சில சம்பவங்கள், இழக்கப் படாததை இழந்ததால் ஏற்படும் துக்கம், எதிர் பார்த்த சில விஷயங்கள் நடைபெறாது போவதால் ஏற்படும் ஏமாற்றம் உதாரணமாக பரீட்சையில் வெற்றி பெற முடியாது போவது, காதலில் தோல்வியடைவது அல்லது சமூகத்திற்கு முகம் கொடுக்க முடியாத சமூக விரோத செயல்களில் ஈடுபட்டதால் ஏற்பட்ட குற்ற உணர்வு, கடன்பட்டு பின் அதனை செலுத்த முடியாது போவதால் ஏற்படும் மானநஷ்டம், பெரிய எதிபார்ப்புடன் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவர் திடீரென நோய்வாய்ப்பட்டு முடங்கிப் போவதால் ஏற்படும் திடீர் மாற்றம் என்பனவற்றால் ஒருவர் மனதை துன்புறுத்தும் மன வேதனையும், தாழ்வு உணர்வு நிலையும் தேவையற்ற யோசனையுமே மன அழுத்தம் உண்டாக காரணமாகின்றது. கோட்டைச் சக்கரத்தில் ஸ்தம்ப பாகத்தில் பாவகிரகங்கள் நிற்கும் போது இது போன்ற சம்பவங்களால் மனது கலக்கப்பட நேரிடுகிறது. குறிப்பாக கோட்சார ரீதியில் பாவ கிரகங்கள் ஸ்தம்ப பாகத்தில் சஞ்சரிக்கும்போதும், ஸ்தம்ப பாகத்தில் உள்ள பாவ கிரகங்களின் திசா புத்தி காலங்களிலும் இது போன்ற மன நிலை பாதிப்புகளைத் தருகிறது எனலாம்.

நடந்த சில சம்பவங்கள் மறக்க முடியாதவைகளே. அதற்காக என்நேரமும் அதனையே சிந்தித்துக் கொண்டு நேரத்திற்கு உண்ணாது உறங்காது மூலையில் இருப்பதனால் அதற்கு துணை போகும் சில ஹார்மோன்கள் சுரந்து வேதனையையை அதிகரிக்கச் செய்து மூளையிலும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது. அதனால் வாழ்கையில் விரக்தி அடைந்து தற்கொலை செய்தல், கொலை செய்ய முயற்சித்தல், குடிபோதைக்கு அடிமையாதல் போன்றவற்றை செய்யவும் தூண்டப்படுகிறார்கள். இது ஒரு நோயாகவே கருதப்படுகின்றது.

இந்நோயானது குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை எந்த வயதினருக்கும் ஏற்படலாம். ஒரு சிறு மன உளைச்சல் கூட பெரிய மன அழுத்தத்தைத் தூண்டி விடுகிறது. இந்த மன அழுத்தத்தின் வெளிப்பாடாகவே கவலை, தனிமை, உதவியற்ற மற்றும் நம்பிக்கையற்ற உணர்வுகள் தோன்றுகின்றன. இந்த மன அழுத்தமானது கோபம், பயம், கவலை, நம்பிக்கையின்மை, குற்ற உணர்வு, அக்கறையின்மை, துக்கம் போன்ற பலதரப்பட்ட உணர்வுகளின் கலவை. இது போன்ற கிரக பாதிப்புகளினால் மன அழுத்தம் ஏற்படும்போது பின்வரும் அறிகுறிகள் தென்படும்.

நோயாளியின் தூக்கமின்மை, கவலை, சோர்வு,

பயம், அடிக்கடி தலைவலி, மயக்கம், எரிச்சல், மன உளைச்சல், அஜீரணக் குறைபாடுகள், தனிமை, தாழ்வு மனப்பான்மை, குறைவாக அல்லது மிக அதிகமாக உண்வு அருந்துதல் போன்றவை மன அழுத்தத்தின் சாதாரணமான அறிகுறிகள். மன அழுத்தத்தின் தொடர் தாக்குதலினால் உயர் இரத்த அழுத்தம், நெஞ்சுவலி, தோல் நோய்கள், ஒற்றைத் தலைவலி, வயிற்றுப் புண், ஆஸ்துமா மூச்சுத்திணறல் போன்ற நோய்கள் உண்டாகலாம். கவலை உணர்வுடன் உடம்பின் பலமிழந்த உணர்வுகள், தன்னம்பிக்கை இழந்து தனிமை எனும் உணர்வுடன் ஒதுங்கிக் கொள்லுதல், வழக்கமாக பொழுதுபோக்குகளில் நாட்டமின்மை போன்றவை மன அழுத்தத்தின் ஆரம்ப அறிகுறிககாகும். அதுவே அதிகமாகி, அதிகாலையில் தூக்கமின்றி விழித்துக் கொள்ளுதல், வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு வாழக்கையை முடித்துக் கொள்ளலாமோ என்ற எண்ணம் அடிக்கடி மனதில் எழுதல், அதற்கான தற்கொலை முயற்சி போன்றவைகளில் ஏதோவொன்று காணப்பட்டால் தகுந்த ஜோதிட ஆலோசகரையோ அல்லது மனநல மருத்துவரையோ அணுகி ஆலோசனை வெறுவது முக்கியமாகும்..

ஒருவருடைய மன அழுத்தத்தை மூளையின் செயல்பாடு குறைவினால் ஏற்படும் சைக்காட்டிக் மன அழுத்தம் மற்றும் அவ்வப்போது வாழ்க்கையில் ஏற்படும் பாதகமான சூழலினால் ஏற்படும் நியூராட்டிக் மன அழுத்தம் என இருவகையாக பிரிக்கலாம். இவற்றுள் நியூராட்டிக் வகையே மிகவும் பரவலாகக் காணப்படுவது. கடந்த காலத்தைக் குறித்த குற்ற உணர்வு, நிகழ்காலத்தைக் குறித்த உதவியற்ற நிலை, எதிர்காலத்தைக் குறித்த நம்பிக்கையின்மை இவையே இத்தகைய மன அழுத்தத்தின் முக்கிய அடிப்படைக் காரணிகள். எனவே அத்தகைய சூழ்நிலைக்குள் ஒருவனைத் திடீரென்றோ படிப்படியாகவோ தள்ளும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையும் அவனுக்கு மனஅழுத்தத்தைக் கொண்டுவருகிறது. சரியான திட்டமிடுதல், அவசர மற்றும் அவசியப் பணிகளை முதலில் முடித்தல், வேலைப்பளுவில் அவ்வப்போது ஓய்வு எடுத்தல், மனதை தளர்வாக வைத்திருத்தல், தனிமை மற்றும் எதிர்மறை சிந்தனைகளைத் தவிர்த்து நேர்மறை சிந்தனை நண்பர்களுடன் நிறைய நேரம் செலவிடுதல், தியானம், உடற்பயிற்சிகள், பொழுதுபோக்குக் காட்சிகள் முதலானவை மன அழுத்தத்திற்கு மருந்துகளாக பலராலும் அவ்வப்போது பரிந்துரைக்கப்ப்படுகின்றன. இவைகளெல்லாம் சொல்வதற்கு எளிமையாக இருந்தாலும் இவற்றில் செயல்வடிவில் உள்ள பிரச்சினைகள் அதனை அனுபவித்தவர்களுக்கு மட்டுமே எளிதில் புரியும்.

பொதுவாக ஜோதிடத்தில் சந்திரன் இராகு கேதுவுடன் சேர்ந்து இருந்து, இலக்கினத்துக்கு 4 அல்லது 5ஆம் வீடும் ஏதோ ஒரு விதத்தில் இராகு கேதுக்களின் பாதிப்பு அடைந்து அல்லது சந்திரன் அமர்ந்த இராசி இராகு கேதுவின் பாதிப்பில் இருந்தால் மன நிலை மிகவும் மோசமாக பாதிப்படையும்.

சந்திரன் அமர்ந்த நக்ஷத்திரம் இராகு கேதுக்களின் ஆட்சியில் இருக்கும் நக்ஷத்திரமாக அமைந்து, இலக்கினத்துக்கு 4 அல்லது 5ஆம் வீடு அல்லது சந்திரன் அமர்ந்த இராசி இராகு கேதுக்களினால் ஏதோ ஒரு விதத்தில் பாதிபடைந்தால் மன நிலை மிகவும் மோசமாக பாதிப்படையும்.

இரண்டாவது பகுதியில் சொன்ன நிலைக்கு சந்திரன் இராகு கேதுக்களின் நக்ஷத்திரதில் இருந்து மேலும் இராகு கேதுக்களுடன் சேர்க்கை பெற்றிருந்தாலும் மன நிலை மோசமாக பாதிப்படையும்.

இலக்கினம் அல்லது வலுவற்ற இலக்கினாதிபதி இராகு கேதுவினால் பாதிப்படைந்து 4 அல்லது 5ஆம் வீடு இராகு கேதுக்களினால் பாதிக்கப்பட்டால் மன நிலை ஒரளவுக்கு பாதிப்படையும்.

மேலே சொன்ன நிலைகளில் மற்ற கிரகங்கள் தீய பாதிப்புடன் சேரும்போது மன நிலையில் பாதிப்பு கிரகங்களுக்கு தகுந்தாற்போல் பாதிப்படையும்.

ஆனால் சந்திரன் அமர்ந்த இராசியின் அதிபர் தீயவராக இருப்பினும் அவரது பார்வை மன நிலை பாதிப்பை சரி செய்யும். சுபர்களின் பார்வையும் சேர்க்கையும், யோககாரகனின் பார்வை அல்லது சேர்க்கையும் பாதிப்பு ஏற்படாமல் காப்பாற்றும். சனியாக இருப்பின் அவரது 3, 10ஆம் பார்வையும், செவ்வாயாக இருப்பின் அவரது 4, 8ஆம் பார்வையும் உதவும்.

இப்படி பல்வேறு விதிகள் இருந்தாலும் கோட்டைச் சக்கரத்தில் உள்ள ஸ்தம்ப பாகத்தைப் பார்த்த உடனேயே பாவ கிரகங்களை வைத்து ஒரு நொடியில் சொல்லிவிட முடியும். சரி இப்படி பாவகிரகங்கள் இருந்து மன நிலை பாதிப்பும் இருக்கிறது என்பவர்கள் பின் வரும் மூலிகைப்



பரிகாரத்தைச் செய்து உடனடி தீர்வு காணலாம். அது மன அழுத்தத்தை குறைக்கும் ரோஸ்மேரி இலை எனும் மூலிகையாகும்.

இதன் தாவரப்பெயர் rosmarinus officinalis. இது ஒரு குருஞ்செடி. இதன் இலைகள் எதிர் அடுக்கில் வேப்பிலை போன்று கூர்மையாக ஊசிபோன்றும் இருக்கும். இலையை ஐந்து நாட்கள் நிழலில் உலரவைத்து பின் எண்ணெய் எடுப்பார்கள். இதன் இலைகள் வாசனையாக இருக்கும்.

ரோஸ்மேரி மலைப்பகுதிகளில் நன்றாக வளரும். சம வெளியில் வளர்வது எண்ணெய் எடுக்கும் சதவிகிதம் மிகக்குறைவாகஇருக்கும். பயன் தரும் பாகங்கள் — இலை, தண்டு, பூ ஆகியவை. மருத்துவப்பயன்கள் — ரோஸ்மேரி இலை தண்டு, பூ, இவைகளில் இருந்து எடுக்கப்படும் வாசனை எண்ணெய் பூச்சிக் கொல்லியாகப் பயன்படுகிறது.

இலைகளில் உள்ள வாசனைப் பொருள் அழகு சாதனப் பொருட்கள் செய்யப் பயன்படுகிறது. மேலும் உணவு, உணவுப் பொருள்களைப் பதப்படுத்தவும் பயன்படுகிறது. இது சிறுநீர் சம்பந்தமான கோளாறுகளுக்கு நல்ல மருந்தாகும். கண்களுக்கு குளிர்ச்சியூட்ட, சுத்தப்படுத்திய நீருடன் கலந்தும் உபயோகப்படுத்தப்படுகிறது. இதன் இலைகளை பச்சையாகவும், காயவைத்தும் தேநீருடன் கொதிக்க வைத்து நன்கு கலந்து பருகினால் சுவையாகவும், உடலுக்குப் புத்துணச்சியையும் ஊட்டுகின்றது.

இது இரத்த ஓட்டப் பாதைகளை சீராக வைக்க பயன்படுகிறது. உடலின் மேல் பாகத்தில் தேனீக்கள் கொட்டியதைக் குணப்படுதுகிறது. வாய் நாற்றத்தையும் போக்கும், பாலுணர்வைத் தூண்டுகின்றது. நரம்பு சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துகின்றது. வயிற்று வலி, தலை வலிகளைக் குணப்படுத்துகின்றது. பெண்களுக்கு ஏற்படும் மாதவிடாய் பிரச்சனைகளைக் குணமாக்குகிறது. ரோஸ்மேரி இலையின்பொடியை மாமிசம், மீன் போன்ற உணவுப் பொருளோடு சேர்க்கும் போது விஷத்தன்மையைப் போக்குகின்றது.

தொண்டைப் புண், பல் ஈறு வலி, நாட்பட்ட ஆறாதபுண் இவைகளைக் குணப்படுத்துகின்றது. இதன் எண்ணெய் ஞாபக சத்தியை அதிகரிக்கின்றது. உடல் அறிப்பையும், தசைநார்களில் ஏற்படும் வலிகளைக் குணப்படுத்துகின்றது. மூலிகை செடிகளில் ஒன்றான ரோஸ்மேரி, சமைப்பதற்கு மட்டும் பயன்படுத்துவதில்லை மற்ற பயன்களுக்கும் பயன்படுகின்றன.

அதிலும் மன அழுத்தத்தை குறைக்கப் பெரிதும் பயன்படுகிறது. மேலும் இவை உடல் தசைகளில் ஏற்படும் வலிகளுக்கும் சிறந்தது. மேலும் இவற்றால் செய்யப்படும் எண்ணெயை தலைக்கு தேய்த்து வந்தால், மூளையில் ஏற்படும் அழுத்தம் குறைந்து ரிலாக்ஸ் ஆகிவிடும்.

அதேபோல் நேர்மறை எண்ணங்களால் பல நல்ல விஷயங்கள் ஒருவரது வாழ்வில் நடைபெறுகின்றன. நேர்மறை எண்ணங்களால் ஆயுள் காலம் அதிகரிக்கிறது. மன அழுத்தம் குறைகிறது. துன்பங்களை தாங்கும் உந்துசக்தி கிடைக்கிறது. நல்வாழ்வு அமைகிறது. இதயநோயினால் ஏற்படும் இறப்பு ஆபத்து குறைகிறது. கஷ்டமான காலங்களில் கஷ்டங்களை தாங்கி, மன அழுத்தத்தை சமாளிக்கும் திறனை அளிக்கிறது. இப்படி நேர்மறை எண்ணங்களை பற்றி பல சிறந்த விஷயங்களை கூறிக்கொண்டே போகலாம். ஸ்தம்ப பாகத்தில் உள்ள சுப கிரகங்கள் நேர்மறை எண்ணங்களை அதிகரிக்கும், பாவ கிரகங்கள் எதிர்மறை எண்ணங்களை அதிகரிக்கும். இன்னும் பல இரகசியங்களைத்தொடந்து பார்க்கலாம்.

ஓம் ஸ்ரீ ஞானஸ்கந்த மூர்த்தி புகழ் ஓங்கட்டும்!!!

**(தொடரும்...)**

## இலவச ஜோதிட கருத்தரங்கம்

ஜோதிட சாப்ட்வேர் உலகில் சிறப்பான சேவைகளில் பணியாற்றி வருகிற ஆஸ்ட்ரோவிஷன், ஜோதிடர்களுக்கும் ஜோதிட மாணவர்களுக்குமாக செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதி சனிக்கிழமையன்று காலை 9.30 முதல் மாலை 6.00 மணி வரை நாமக்கல்,வி. வி மருத்துவமனை அருகிலுள்ள ஸ்ரீ மஹால் திருமண மண்டபத்தில் வைத்து, ஒரு நாள் ஜோதிட கருத்தரங்கம் நடத்துவதாக உள்ளது.

இந்த கருத்தரங்கில் பிரபல ஜோதிடர்களான திரு. K.S. **மணி பட்டாச்சாரியார்** —(ஸ்ரீ ஹரி ஜோதிட வித்யாலயம் நிறுவனர்)ஜாதக பலன் கூறுவதில் ராகு கேது மாந்தி முக்கியத்துவம் . திரு.எம்.வி. நரநாராயணன் (நிறுவனர், ஸ்ரீனிவாசன் பஞ்சாங்கம்—சேலம்)—ஷோடச வர்க்க சக்கரம் பலன்கள் **திரு. சிவகுமார்** (ஐங்கரன் ஜோதிட பயிற்சி நிலையம் —நிறுவனர்,நாமக்கல்)—பஞ்ச பட்சி சாஸ்திரம். திரு. **கீழவளவு சுப்ரமணியன்** (ஜோதிட அரசு ஆசிரியர்)—தோஷமும் பரிகாரமும் , என்ற தலைப்பில் சொற்பொழிவாற்ற உள்ளனர்.

இந்தியாவில் அனைத்து இடங்களிலும் ஜோதிட மாநாடு நடத்தி வருகிற ஆஸ்ட்ரோவிஷன் ஜோதிடத்தின் முன்னேற்றத்திற்கும், துல்லியமான கணிப்பிற்கும் ஜோதிடத்தின் முக்கியத்துவத்தை சாதாரண மக்களுக்கும் உணர்த்தும் வகையில் இந்த கருத்தரங்கம் நடைபெற இருக்கிறது. முற்றிலும் இலவசமான, இந்த ஜோதிட கருத்தரங்கில் கலந்து கொள்வதற்கு 98410 46276, 97452 02222 இந்த எண்ணிற்கு தொடர்பு கொள்ளவும்.

# தானத்திலே சிறந்தது அன்னதானம் – அதுவே கர்ம வினைகளைக் களைந்திடும் ஜீவ தானம்

முற்பிறப்பின் கர்ம வினைகளை தீர்ப்பதற்கே இப்புவியில் ஒவ்வொரு மனிதனும் பிறவி எடுக்கிறான். அப்படி பிறவி எடுத்தவனின் கர்ம வினைகளை களைந்திடும் மூல வழி அன்னதானம் செய்வது ஒன்றே தான். ஏழ்பிறப்பு தீவினைகள் நீங்கி ஏற்றம் காண, ஏழரைச் சனி, அஷ்டமச் சனி, அர்தாஷ்டம சனி பாதிப்பில் இருந்து விடுபட, புத்திர பாக்கியத் தடை, தடைப்பட்ட மணவாழ்க்கை நீங்க, தொழில் வழி பிரச்சனைகள் தீர, பித்ரு தோஷம் நீங்கவும், தீராத நோய்கள் தீரவும் அன்னதானம் அளிப்பதை வாழ்வில் கடைபிடிக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒருவருக்காவது அன்னதானம் அளிக்க வேண்டும் என்பது சாஸ்த்திர நியதி.



ஒவ்வொருவருடைய பிறந்த நாளின் போதும், திருமண நாளின் போதும், பெரியவர்கள் மறைந்த நாளிலும், சித்தர்களின் ஜென்ம தினத்திலும், குருவின் பிறந்த நாளிலும் அன்னதானம் செய்து வந்தால் எத்தகைய பிரச்சனைகளும் நீங்கி ஏற்றம் காணலாம். பரிகாரங்கள் செய்து தங்களது எல்லாப் பிரச்சனைகளைப் போக்கிக் கொள்ள நினைப்பவர்களுக்கு அன்னதானம் செய்வது ஒன்றே கர்மாவைக் களைந்திடும் சரியான அருமருந்தாகும்.

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின். (திருக்குறள்)

உண்ணாமல் நோன்பு இருப்பது மட்டும் தவமாகாது. அப்படி செய்வதால் மட்டும் ஆண்டவனின் அருளை அடைந்து விட முடியாது. உண்ண உணவின்றி வாடும் ஏழையின் பசியை நீக்குவதே அதைவிட மேலான தவமாகிறது. அதுவே ஆண்டவன் குடியிருக்கும் ஆலயமாகிறது.

இத்தகைய அரியதொரு பணியில் ஈடுபட, கடந்த10 ஆண்டுகளாக ஆன்மிகப் பணியில் அயராது அரும் தெய்வப்பணி ஆற்றிடும் திருவருள் சக்தி தன் வாசகர்கள், பாவங்கள் நீங்கி வளமோடு எல்லா நலமும் பெறும் பொருட்டு, அன்னதானம் அளிக்கும் திட்டத்தில் தன்னை ஆட்படுத்திக் கொண்டுள்ளது. எமது வாசகர்கள், தனியாக அன்னதானம் செய்ய இயலாதவர்கள், மனம் இருந்தும் மார்க்கம் இல்லாதவர்கள் இந்தக் கூட்டுத் திட்டத்தில் பங்கேற்று தன் பாவங்களைப் போக்கும் பரிகாரம் தேடலாம்.

திருநள்ளாறு, திருவண்ணாமலை, காசி, இராமேஸ்வரம் போன்ற புண்ணிய ஸ்தலங்கள், வயதான முதியோர் காப்பகங்கள், ஆதரவற்ற அனாதைகள், உடல் ஊனமுற்றோர், கோவில் திருவிழாக்காலங்களில் கலந்துக் கொள்ளும் அடியார்கள் போன்றோர்களுக்கு அன்னதானம் அளித்திட திட்டமிடப்பட்டு உள்ளது.

இந்த அறக்கட்டளையின் பதிவு செய்யப் பட்டுள்ள 19 விதமான பரோபகார உதவிகளில் குறிப்பிட்ட சில உதவிகள் :-

- ஏழ்மையில் இருப்பவர்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் படிக்கும் பள்ளிக் குழந்தைகளின் படிப்பிற்கு உதவுதல்
- ஏழ்மை குழந்தைகளுக்கு துணிமணிகள், புத்தகங்கள், மருத்துவ உதவி போன்றவைகள் அளித்தல்
- உடல் ஊனமுற்ற உள்ளங்களுக்கு உதவுதல்
- பரோபகார நிறுவனங்களுக்கு உதவுதல்
- ஏழ்மையில் இருப்போருக்கு மண வாழ்க்கைக்கு மகிமை சேர்த்தல்
- ஆதரவற்ற வயதான முதியோர்களின் வாழ்வாதார நிலைக்கு உதவுதல் போன்ற பல பரோபகார மனித நேய உதவிகள்.

ஆன்மிகத் தொண்டு செய்வதுடன், பாவங்கள் போக்கும் பரிகாரமாக ஏழ்மையில் இருக்கும் ஜீவன்களுக்கு உதவிடும் தாய்மை குணத்தோடு, தன்னலம் பாராது உங்கள் முன் வலம் வருகிறது 'திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்'. நீங்களும் இதில் பங்கு பெற்று இந்த மண்ணில் பிறந்த கர்மாவை தீர்ப்பதற்கு வழி வகுத்துக் கொள்ளலாம். பிறவி இல்லாப் பெருவாழ்வு அடைவதற்கும் இது அடிகோலும். பிறந்தோம், வளர்ந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்ற நிலையில், என்றும் பேர் சொல்லும் பெரும் பயனை பெற்றிட வழி வகுக்கும். வருங்கால நம் சந்ததி களும் நம்மை என்றும் வாழ்த்தும். முடிந்த அளவு உதவி செய்து ஏழ்மையில் வாடும் ஜீவன்களுக்கு ஒரு வேளை உணவையாவது அளித்தோம் என்ற ஆத்ம திருப்தியில் ஆண்டவன் அருளுக்கும் பாத்திரமாகலாம்.

அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. (திருக்குறள்)

ஏழைகளின் பசித்துன்பத்தை நீக்கும் தானமே என்றும் மேன்மையை அடைகிறது. அதுவே, சேர்த்த செல்வத்தைச் சிறப்புடன் சேமித்து, அழிவுக்கு ஆட்படாமல் பாதுகாத்து வைக்கும் அரியதொரு பொக்கிஷமாகிறது. வருங்கால நம் சந்ததிக்கும் வளமான வாழ்வுக்கு வழி வகுக்கின்றது. ஏழ் பிறப்புக்கும் ஏற்றத்தைக் கொடுக்கும் கற்பக விருட்சமாகிறது.

- **பிரதி பலன் பாராது தானம் செய்வதே பிரதானம்.**
- **இறைக்கின்ற கிணறே சுரக்கும் - என்றும்! கொடுக்கின்ற மனமே வாழ்க்கையில் சிறக்கும்!**

நன்கொடை அனுப்பும் அன்பர்கள் "THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST" என்ற பெயரில் சென்னையில் மாற்றத்தக்க DD/CHEQUE/M.O. மூலமாக கீழ்க்கண்ட முகவரிக்கு உங்களது தெளிவான முகவரியுடன் தொடர்பு கொள்ளும் தொலைபேசி எண்களுடன், பெயர், பிறந்த நாள், திருமண நாள், இராசி, நட்சத்திரம் ஆகியவைகளைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்கவும். புனிதமான அன்னதான சேவையில் உங்களையும் ஈடுபடுத்தி எங்களுடன் ஒத்துழைக்க அன்புடன் வேண்டுகிறோம்.

DD/Cheque/M.O. அனுப்ப வேண்டிய முகவரி : **திருவருள் சக்தி அன்னதான சாரிடபிள் டிரஸ்ட்**

## THIRUVARUL SAKTHI ANNADHANA CHARITABLE TRUST,

(REGD. PUBLIC CHARITABLE TRUST- **No. 32/2012** ) 18/67, P.V. Koil 1st Street, Pudupet, Royapettah, Chennai - 600 014.

**Phone : 044 - 2811 6770, Cell : 0-97109 21880 Email : tsannadhanam@gmail.com**

பணமாக அளிக்கும் அன்பர்கள் கீழ்க்கண்ட வங்கி கணக்கில் பணம் செலுத்தி எங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

Mrs. **R. RADHA** - S.B.A/c. : 426681768 - INDIAN BANK (Chennai - Royapettah).

**அன்னதானம் செய்வோம் – கர்ம வினைகளைப் போக்குவோம்.**

**Mrs. R. RADHA, Founder & Managing Trustee**

A/c Details: Thiruvarul Sakthi Annadhana Charitable Trust, A/c No.12820100107660
Federal Bank, Royapettah Branch, Chennai- 600 014. IFSC: FDRL0001282

மேலும் தொடர்புக்கு
**Cell: 72999 21880**

**நன்கொடைகள் வரவேற்கப்படுகின்றன**

## பொன்னான விற்பனைக்கு பொற்பதம் தந்திட்ட எமது வாசகர்களுக்கு மனமார்ந்த நன்றி

இப்போது விற்பனையில்

# திருவருள் சக்தி




**செப்டம்பர் 2015**

**இந்த இதழில்...**

- கணபதியே சரணம்! காலமெலாம் காத்தருள வேணும்
- ஸகல சௌபாக்யம் அருளும் ஸ்ரீ அன்னையின் ஓர் அற்புத மந்திரம்
- வலிப்பு நோய் மூளை பாதிப்பு நீக்கும் சிவவழிபாடு
- சுகம் தரும் ஸ்ரீ சுக்கிர பகவான்
- வெற்றிக்கு வித்திட்டு வசியம் செய்யும் மூலிகைகள்
- அகத்தியருக்கு முருகன் காட்சி தந்த ஸ்தலம் சிவகிரி
- கடன் தொல்லைகள் நீக்கி காத்தருளும் ஸ்ரீ நரசிம்மர்
- 12 இராசிகளுக்கு பலன்தரும் மந்திரங்கள் பரிகாரங்கள்
- விநாயக நவராத்திரி வைபவம் விக்னங்களை வேரறுத்திடும் அனுபவம்

ஆன்மிகச் சுவடுடன் அறிவார்ந்த முழுமையான ஜோதிட மாத இதழ்...

## தவறாமல் படித்து தரமான வாழ்வு பெறுங்கள்